# தென்றலாக நீ வருவாயா

விஜி விக்னேஷ்



# தென்றலாக நீ வருவாயா!

# 1

அழகிய தன் மென்கரங்களை இணைத்துத் தட்டி ஒலியெழுப்பி, "யார் அங்கே? இந்தக் காற்றைச் சற்று மெல்ல வீசும்படி, நான் ஆணையிடுவதாகச் சொல்லுங்கள்.

"யாரடா அது? நான் சொல்வதைக் காதில் வாங்காமல் துணிகளை உலர்த்திக் கொண்டிருக்கும் அகம்பாவி!

"அவனை இழுத்துச் சென்று பாதாளச் சிறையில் தள்ளுங்கள். ம்... நடக்கட்டும்!" என்று வீர வசனம்

பேசிவிட்டுக் காலை நேரச் சிலுசிலு காற்றைக் கண்கள் மூடி ரசித்து அனுபவித்தாள், அந்த வீட்டின் கடைக்குட்டி சிந்து.

“ஹே...ய் சோம்பேறி! நானும், அக்காவும் துவைத்துத் தரும் துணிகளை உலர்த்திவிடக்கூட உனக்கு முடியவில்லையாக்கும். உதை படாமல், ஒழுங்காக வேலையைச் செய்!” என்று தங்கையைக் கண்டித்துவிட்டுத் தன் பாண்ட் சர்ட்டுகளைப் பிழிந்து நைலான் கயிற்றில் விரித்துப் போட்டான், பொறியியல் கல்லூரியில் மூன்றாமாண்டு படித்துக் கொண்டிருக்கும் வசந்தன்.

“என்...ன தைரியம்! தஞ்சாவூரின் இளவரசி சிந்துவைப் பார்த்து, ‘உதைபடுவாய்’ என்று சொல்ல உனக்கு எவ்வளவு திமிர் இருக்க வேண்டும்.

“வீரர்களே! இந்த மடையனுக்கு உணவிற்குச் சாப்பாடு போடாதீர்கள். குதிரைக்கு வைக்கும் கொள்ளை வேக வைத்துக் கொடுங்கள். நினைவிருக்கட்டும், அதில் உப்பிருக்கக் கூடாது. புரிந்ததா?

“அதையும், ஒரு வேளைக்கு மட்டுமே கொடுங்கள். தண்ணீரைக் கண்ணிலேயே காட்டாதீர்கள். என்னை மரியாதையின்றிப் பேசிய அகம்பாவிக்கு, இதுதான் சரியான தண்டனை.

“என்னடா முறைக்கிறாய்? ஒழுங்காக என் வீரர்களுடன் செல்கிறாயா? அல்லது, பாதாளச் சிறைக்குச் செல்லும் வழி முழுக்கக் கசையடி கொடுக்கச் சொல்லட்டுமா?” என்று, கைகளை மடக்கி இடையில் வைத்துத் தலை நிமிர்த்திக் கேட்டாள் சின்னவள்.



“பழைய கால ராஜாக்களின் வரலாற்றுக் கதைகளையெல்லாம் தேடித் தேடிப் படித்து, உனக்கு மனதிற்குள் பெரிய இளவரசி என்ற நினைப்பு வந்துவிட்டதோ? இதற்கு மேல் விட்டு வைத்தால் உன் அட்டகாசம் தாங்காது. உன்னை...” என்று கூறிச் சுற்றும் முற்றும் ஏதாவது கிடக்கிறதா எனத் தேடிக் கீழே கிடந்த துணிகளில் மாட்டும் ‘கிளிப்’புகளை எடுத்து, “என்னையா சவுக்கால் அடிக்கச் சொல்வாய்? இதோ வாங்கிக் கொள்!” என்று தங்கையை நோக்கிக் கிளிப்புகளை வீசினான்.

“இந்தத் திமிர் பிடித்த கைதி என்மீது அம்புகளை அள்ளி வீசுகிறானே... அடேய் வீரர்களே! இந்த நேரம் பார்த்து ஒருவர்கூட அருகில் இல்லாமல் எங்கேயடா போய்த் தொலைந்தீர்கள்? அடேய், நீ உண்மையில் வீரனாயிருந்தால் புறமுதுகிட்டு ஓடுபவர்கள் மீது வீசாதேடா பாவிப் பயலே!” என்றபடியே, அக்கா இருக்கும் இடத்தை நோக்கி ஓடினாள் சிந்து.

“கைதி என்றா சொல்கிறாய்? கழுதை. இன்றைக்கு உன்னை விடுவதில்லையடி!” என்று, பின்னோடே துரத்திக் கொண்டு ஓடினான் வசந்தன்.

“ஹே...ய்! பார்த்து. பார்த்துடா...! தண்ணீர் காலை வழுக்கிவிட்டு விடப் போகிறது? ஜாக்கிரதை!” என எச்சரித்தபடியே கையிலிருந்த சோப்பைக் கீழே போட்டுவிட்டு, மேலே வந்து மோதிய தம்பி, தங்கையை இழுத்துப் பிடித்து நிறுத்தினாள் ஜனார்த்தனி.

அந்த வீட்டின் இன்றையத் தலைவி!

“என்னை விடுங்கள் அக்கா. இவள் வாய் மீதே இரண்டு போட்டால்தான் அடங்குவாள்!” என்று எகிறினான் இளையவன்.

"விடுடா! அவள்தான் சின்னப் பெண் என்றால், நீயும் அவளுடன் சேர்ந்து கொண்டு குதிக்கிறாயே...!" என, முறுவலோடே தம்பியைச் சமாதானப் படுத்தினாள் ஜனார்த்தனி.

சின்னவர்கள் இருவரின் பேச்சையும், நடவடிக்கையையும், துணிகளைத் துவைத்தபடியே கேட்டுக் கொண்டிருந்தவளின் முகத்தில், மென்முறுவல் ஒன்று தோன்றி நிலைத்தது.

இவர்களின் மகிழ்ச்சி, சந்தோஷத்திற்காகத்தானே அவள் இவ்வளவு பாடுபடுவதே!

இவர்களைப் பார்த்து, அவளைவிட அதிகமாக வேறு யார் ஆனந்தமடைந்துவிடப் போகிறார்கள்!

"என்னது! சின்னப் பெண்ணா? இந்தப் பிசாசா! அட, ஆண்டவனே!" என்று, தலையில் கை வைத்துச் சலித்தான் அவன்.

"போடா மங்கி... வெவ்வெவ்வே!" என உதடுகளைக் குவித்து அழகு காட்டினாள் சிந்து.

"என்னைக் குரங்கென்று சொல்லிவிட்டு, நீதான் குரங்கு மாதிரிச் சேட்டை செய்கிறாய். கண்ணாடி முன்பாக நின்று பார். அச்சு அசலாக அப்படியே இருக்கிறாய்!" எனப் பதிலுக்குக் கேலி செய்தான் வசந்தன்.

"அக்...கா! பாருங்க இவனை...!" என்று, கொஞ்சலாக உதட்டைப் பிதுக்கினாள் சிந்து.

"நீயாகவே தானடி அவனிடம் வம்பிழுக்கிறாய். சும்மாயிருக்க மாட்டாயா?" என்று, தங்கையின் காதை மெல்லத் திருகினாள் ஜனார்த்தனி.



மீதமிருந்த துணிகளை உலர்த்துவதற்காக எடுத்துக் கொண்டு சென்ற அண்ணனின் முதுகை முறைத்துவிட்டு, "ஆமாம்! இவன் வந்து விட்டாலே, நான் உனக்கு இரண்டாம் பட்சமாகி விடுவேன். இவன் உனக்கு முக்கியமாகி விடுவான். ஹு"...ம்!" என்று கூறி, 'உம்'மென்று முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டாள் சின்னவள்.

"என்ன, புதிதாகப் பொறாமைப்படவெல்லாம் கற்றுக் கொண்டிருக்கிறாய் போலிருக்கிறது?" என்று கிண்டலாகக் கேட்டாள் பெரியவள்.

"பேச்சை மாற்றாதேக்கா. உனக்கு, என்னை ரொம்பவும் பிடிக்குமா? அவனைப் பிடிக்குமான்னு சொல்லு. இப்பவே...!" என அடம் பிடித்தாள்.

சின்னவளின் மூக்கு நுனி சிவந்து, கண்கள் கலங்குவதற்கு ரெடியாகவும், ஜனார்த்தனிக்கு நெஞ்சம் துடித்துப் போயிற்று.

அன்பிற்கான இந்தப் போட்டி, அடிக்கடி வீட்டில் நடப்பதுதான். என்ன ஒரு வித்தியாசம் என்றால், அப்போதெல்லாம் அவரவருக்கு உரிய விதமாகப் பதில் சொல்லிச் சமாதானப்படுத்தவோ... அன்றிச் சமாளிக்கவோ... அம்மா இருந்தார்கள்.

இன்றைக்கு அம்மா இல்லாமல் போனதால், இழப்பு இரட்டிப்பாகத் தோன்றி விட்டதோ?

பள்ளிக்குச் சென்ற நேரம் போகப் பெரும்பாலும் நிழல் போல அம்மாவின் பின்னோடே சுற்றித் திரிந்த சின்னக் குட்டி.

எப்போதாவது, தாயின் மடியில் மற்றப் பிள்ளைகளில் யாராவது படுத்துவிட்டால், விட்டுக் கொடுக்க மனமின்றி,

"ஏழு கழுதை வயதாகிறது. இன்னும் என்ன அம்மா மடியில் படுக்கை. இப்போது நான் தூங்கப் போகிறேன். எழுந்திருக்கப் போகிறாயா? இல்லை, அப்படியே தொப்பென்று மேலேயே விழட்டுமா?" என்று சத்தம் கூட்டிக் கத்துவாள்.

ஓரிரு தடவை ஜனார்த்தனி மீது, சொன்ன மாதிரியே விழவும் செய்திருக்கிறாள்தான்.

விழுந்த வேகத்தில் 'கிச்சுக்கிச்சு' மூட்டிச் சிரிக்கவும் வைத்து விடுவாள்.

எப்போதாவது, "ஆமாம். நமக்குத்தான் கழுதை வயதாகிறது. இவள், இப்போதுதான் தவழப் பழகும் குழந்தை. அந்தப் பால் புட்டியை எடுத்துக் கொண்டு வந்து, யாராவது வாயில் வையுங்கப்பா. பாப்பா சப்பிச் சப்பிக் குடிக்கட்டும்!" என்று நக்கலடிப்பான் வசந்தன்.

பிறகு இருவருக்குமாகச் சின்னதாக ஒரு போர் நடக்கும்.

"சண்டை போடாதீர்கள். ஆளுக்கொரு பக்கமாகப் படுத்துக் கொள்ளுங்கள்!" என்ற அம்மாவின் சமாதானத்தை லேசில் ஏற்காமல், "முடியாதும்மா... நான் மட்டும்தான் படுக்க வேண்டும். டேய், இப்போது நீ எழுந்திருக்கப் போகிறாயா, இல்லையா? இல்லையென்றால் எனக்குக் கெட்ட கோபம் வரும். ஆமாம், தெரிந்து கொள்!" என ஆவேசமாகக் கூறி எச்சரிப்பாள்.

"கெட்ட கோபமா... அடடா! இதுவரை அதை நான் பார்த்ததே இல்லையே! ஜானக்கா, கொஞ்சம் சீக்கிரமாக இங்கே வாயேன். கெட்ட கோபத்தைக் காசில்லாமல் இலவசமாகப் பார்க்கலாம். குயிக்!" என்று நக்கல் தொடரும் அவனுக்கு.

இரண்டு காதுகளையும் பொத்திக் கண்களை இறுக மூடிக் கொண்டு 'ஆ...ஆ...!' என்று இடைவெளியின்றிக் கத்த ஆரம்பிப்பாள் சிந்து.

"டைனோஸர் மாதிரி வாயைப் பிளந்து விட்டாயா? அப்படியே நடந்து போய்க் கண்ணாடி முன்னால் நின்று பார். பார்ப்பதற்கு அவ்வளவு அழகாக இருக்கிறாய்..." எனக் கேலி செய்பவன், "இன்னும் கொஞ்சம் நேரம் கேட்டால், காது செவிடாகி விடும் போலிருக்கிறதே! அம்மாடியோவ்...!" என்று கூறியபடியே வேகமாக எழுந்து விடுவான்.

"ம்... அந்தப் பயமிருக்கட்டும்..." என்ற மாதிரிப் பார்த்துவிட்டு, நிம்மதியாகப் படுத்துக் கொண்டு கலகலத்துச் சிரிப்பாள் சிந்து.

பழைய விஷயங்கள் நினைவு வரும்போது, தனக்கே தாங்க முடியாத வலி உண்டாகிறதே... வெறும் பதினைந்தே வயதான சின்னவளுக்கு எப்படியிருக்கும், பாவம்!

அதே சமயம் நேரடியான இரக்கத்தையும் இவளிடம் காட்ட முடியாது. அம்மாவின் நினைவு வந்து வருத்தப்படும் எல்லா நேரத்திலும் அருகேயிருந்து அணைத்து ஆறுதல் வார்த்தைகள் கூற இயலாதே என்பதோடு, அது மாதிரியான இரக்கத்தை எதிர்பார்ப்பவளோ விரும்புகிறவளோ கிடையாது சிந்து!

தன்னைத் தானே சமாளிக்க முயன்று, வெற்றியும் பெற்று விடுவாள்.

ஆரம்பத்தில் நடந்த மாதிரி, மடியில் படுக்க வைத்து முதுகை வருடிக் கொடுத்து, 'நானிருக்கிறேன் கண்மணி!' என்று தெம்பூட்ட வேண்டிய தேவையில்லைதான்.

அந்த நிலையிலிருந்து, தான் மீண்டு வந்தாயிற்று என்பது சிந்துவிற்கே தெரியும்.

முக்கியமாக, அக்காவை அடிக்கடி தொல்லை செய்யக் கூடாது என்பதற்காகவே, முயன்று தன்னைத் தேற்றிக் கொண்டாள் என்பதை யூகித்துத் தெரிந்து கொண்டாள் ஜனார்த்தனி.

ஆனால், இத்தனை முயற்சிகளுக்குப் பிறகும், சின்னவளின் கண்கள் தவிக்கிறது என்றால்...

சட்டெனத் தங்கையின் அருகே சென்று, அவள் முகத்தைத் தன் தோளோடு சாய்த்து வருடியபடி, 'அசடு!' என்று செல்லமாக வைதவள், "இந்தக் குட்டி இளவரசிக்கு, நொடிக்குள் ஏன் மூக்கு நுனி செண்பகப் பூ மாதிரிச் சிவந்து விட்டது?" என்றாள் சமாதான நோக்கில்.

"நீ இன்னமும் யாரை அதிகம் பிடிக்குமென்று சொல்லவில்லை!" என்று முணுமுணுத்தாள் சின்னவள்.

வலது கையினால் சின்னவளின் முகத்தை நிமிர்த்தி, "இரண்டு கண்களில், இதுதான் பிடிக்குமென்று எப்படிச் சொல்ல முடியும்?" என்று கேட்டுவிட்டு, "அவனே இரண்டு மூன்று மாதத்திற்கு ஒருமுறைதான், ஹாஸ்டலில் இருந்து வீட்டிற்கு வருகிறான், பாவம்.

"நீ ஏதாவது சாப்பிட ஆசைப்பட்டால் செய்து தரச் சொல்லியோ, நீயாகவே செய்தோ சாப்பிடலாம். நினைத்த நேரம் தூங்கலாம். டி.வி. பார்க்கலாம், குளிக்கலாம். ஆனால் அவனுக்கு அப்படியா? லேட்டாகி விட்டால் கியூவில் நிற்க வேண்டுமே என்று, விடிகாலை நான்கு மணிக்கே குளித்துவிட்டு வந்துவிடுவானாம். முன்னைவிட மோசமாக



உப்பு, உறைப்பில்லாத சாப்பாட்டைச் சாப்பிட்டு, நாக்கே மரத்துவிட்டது. டேஸ்ட்டா ஏதாவது செய்து தாக்கா என்று கேட்கிறான்.

"ஹாஸ்டல் வாழ்க்கை எப்போதடா முடியுமென்று சகித்துக் கொண்டு இருப்பவனிடம் போய்ப் போட்டிக்கு நிற்கிறாயேடி!" என்றாள் ஜனார்த்தனி.

சட்டென்று தன் வருத்தத்தைப் பின்னுக்குத் தள்ளியவளாக, "அய்...யோ! அப்படியாக்கா சொன்னான். பாவம்!" என்று தொண்டையடைக்கக் கூறியவள், "இன்றைக்கு அவனுக்குப் பிடித்த மாதிரி சமையல் செய்து தரப் போகிறேன்!" என்று கூறிவிட்டுத் துள்ளலுடன் அண்ணனைத் தேடி ஓடினாள்.

'இதுதான் சிந்து!' என்ற பூரிப்பில், மெல்ல முறுவல் தோன்றியது மூத்தவளுக்கு.

தன்னை நோக்கி ஓடிவந்த சின்னவளைப் பார்த்து, "ஹேய்... பூசணிக்காய்! மெதுவாக ஓடு. வீடு ஆடும் ஆட்டத்தில், நில நடுக்கம்தான் வந்துவிட்டதோ என்று, பக்கத்தில் இருப்பவர்கள் பயந்துவிடப் போகிறார்கள்!" எனக் கிண்டல் செய்து விட்டு, கையிலிருந்த பிளாஸ்டிக் பக்கெட்டைக் கழுவி, நீர் வடிவதற்காகக் கவிழ்த்து வைத்தான் வசந்த்.

"ச்சீ... போடா! ஒட்டடைக் குச்சி!" எனத் தலையைச் சிலுப்பிவிட்டு,

"டேய்! உனக்கு முட்டைப் பிரியாணியென்றால் ரொம்பவும் பிடிக்குமே, இன்றைக்குச் செய்து தருகிறேன். அப்புறம், ரசமலாயும் செய்யட்டுமாடா?" என்று கேட்டாள்.

“ஏதாவது ஒன்றை மட்டும் செய். அது! இதுன்னு செய்து, அக்கா பர்ஸுக்கு வேட்டு வைத்துவிடாதே!” என எச்சரித்துவிட்டு, “ஆமாம்... என்ன... திடீரென்று பாசம் அப்படியே பொங்கி வழிகிறது!” என்று கேட்டுத் தங்கையின் தலையிலே மெல்லத் தட்டினான்.

தட்டிய அவன் கையைப் பற்றிக் கொண்டு, “பேய் வசி. சா...ரிடா. உங்கிட்ட சும்மா விளையாட்டுக்குத்தான் சண்டை போட்டேன். அதை நிஜமா எடுத்துக்காதே. ஸாரிடா?” என்றாள்.

“ஹேய்! ஸாரியெல்லாம் எதுக்கு! நானும் விளையாட்டாகத்தானே திட்டினேன்!” எனச் சமாதானப்படுத்தினான் பெரியவன்.

“நிஜம்மா?” என்றாள்.

“சத்தியமா!” என்றான்.

“அப்படீன்னா, முன்னெல்லாம் என்னையும், அக்காவையும் ராட்டினம் மாதிரி சுற்றுவாயே, அது மாதிரி சுற்றுடா!”

“ஓ! எஸ்... வா!” என்று கூறித் தன் இரு கரங்களையும், பயில்வானைப் போல மேல்நோக்கி மடக்கிக் கொண்டு, கால்களை அழுந்த ஊன்றி நின்றான்.

“அக்கா! நீயும் வருகிறாயா?”

“நான் வரவில்லை. நீ நன்றாகப் பிடித்துக் கொள்!” என்று ஜனார்த்தனி எச்சரிக்க, அண்ணனின் வலது தோள் புஜத்தில், தன் இரு கைகளையும் இணைத்து இறுக்கிப் கொண்டு, “ம்... நான் ரெடி!” என்றாள் சிந்து.



நின்றிருந்த இடத்தை விட்டு அதிக தூரம் சென்று விடாமல், ‘கிர்’ரென்று ராட்டினக் குடை மாதிரிச் சுற்றினான் வசந்தன்.

“இன்னும் வேகம் வேகம்...!” எனக் கூச்சலிட்டபடி, கிண்கிணியாகச் சிரித்தாள் சிந்து.

இரண்டு முழு நிமிடங்கள் மிகவும் உற்சாகமாகச் செல்ல, அதிகரித்த வேகத்தினால் இருவருமே லேசாகத் தள்ளாடினார்கள்.

‘போதும் போதும்!’ என்று கூறியபடியே, இருவரையும் பிடித்து நிறுத்திய ஜனார்த்தனியின் முகத்தில், முழுப் புன்னகை நிறைந்து வழிந்தது.

அதே வேளையில், ‘விழுந்து விடப் போகிறீர்கள். பார்த்து விளையாடுங்கம்மா!’ என்று, அக்கறையான குரலில் கூறியவாறு, கையில் பால் பாக்கெட்டும், மடித்த பேப்பருமாக உள்ளே வந்தார் அவர்களின் தந்தை ராஜன்.

எப்போதுமே மிடுக்காக நடக்கும் தந்தை, காலில் அடிபட்ட பிறகு சற்று மெதுவாகவே நடப்பதைப் பார்க்க, உள்ளூர வருத்தமாகத்தான் இருந்தது அவளுக்கு.

இருந்தாலும் அதை வெளியே காட்டாமல் மறைத்துக் கொண்டு, தன் உடன்பிறந்தவர்களிடம் ‘மீதியிருக்கும் ஒன்றிரண்டு துணிகளையும் உலர்த்தி விடுங்கள்!’ என்று பணித்துவிட்டுக் குளிக்கச் சென்றாள் ஜனார்த்தனி.

அடுத்த அரை மணி நேரத்திற்குள் ரெடியாகி, கைப் பையுடன் அலுவலகத்திற்குக் கிளம்பி விட்டாள் அவள்.

அவளுடைய வேக நடையில், கம்பீரத்தையும் மீறிய ஒருவித எழில் கொஞ்சியது.

2

அன்றைய தினம், ஆஃபீஸ்
முக்கியமான கான்ஃபரன்ஸ் நட
விருந்ததால், வழக்கத்தை விடவே சற்
முன்னதாகச் செல்ல வேண்டுமெ
நினைத்திருந்தாள்.

வேலை நடக்கும் 'ஸைட்'டிலேயே கான்ஃபரன்
ஏற்பாடு செய்திருந்தது நிர்வாகம்.

ஆனால், பேருந்தில் மக்கள் கூட்டம், புளி மூட்டை
அடைத்தது போலப் பிதுங்கி வழியவும், அவளின் கால்க
தானாகவே பின்னடித்து நின்றுவிட்டன.

காலை நேரத்திலேயே இது மாதிரிக் கூட்
சகஜம்தான்.

ஆனாலும், இன்றைக்கு ஏறவே முடியாத அளவ
கல்லவா இருக்கிறது.

இந்த மும்பையைவிடச் சென்னையில் இருப்ப
பரவாயில்லை. சென்னையை விடவும், சொந்த மண்ணா
தஞ்சாவூரில் வாழ்வதுதான், சொர்க்...க சுகமென்றது அவ
உள்ளம்.

கொஞ்சம் பொறு மனமே!

இன்னும் சில ஆண்டுகள்தான். எந்தெந்தத் தேவை
காகப் பொருள் ஈட்ட வந்தேனோ, அதையெல்லாம் நிறை
வேற்றிக் கொண்டு, பிறகு, சொந்த இடத்திற்கே சென்
ஏகாந்தமாக வாழலாம்.

அதுவரை, இதுமாதிரியான சில, பல அசௌகரிய
களைப் பொறுத்துக் கொண்டுதான் போக வேண்டுமெ
நினைத்துக் கொண்டாள்.



சாதாரண விவசாயிகளான பெற்றோரினால், அதிகளவில் பெரிதாக எதுவும் சம்பாதித்து வைக்க முடிய வில்லை என்றாலும், கடன் பட்டாவது பிள்ளைகளைப் படிக்க வைக்கத் தயங்கவில்லை அவர்கள்.

வானம் பொய்த்து ஏமாற்றியபோது, நிலத்தின் மீதே கடன் வாங்க வேண்டிய துர்பாக்கியம்தான், அந்த விவசாயக் குடும்பத்திற்கும் ஏற்பட்டது.

துர்பாக்கியம், துயரத்தின் உச்சம் போல, பக்கத்துத் தோட்டக்காரர் கிணறு வெட்டும்போது வைத்த வெடியில், பெரும் பாறாங்கற்கள் வெடித்துச் சிதறி விழுந்ததில், ஜனார்த்தனி வீட்டு மாட்டுக் கொட்டகை அடியோடு இடிந்து விழ, அந்த விபத்தில் தாயார் மறைந்துவிட, தந்தை கிட்டத் தட்ட இறக்கும் நிலைக்கே சென்று மீண்டார்.

இரத்தம் படிந்த தன் கையினால் பிள்ளைகளை வருடிவிட்டு, 'இனி எல்லோரையும் நீதான் பார்த்துக் கொள்ள வேண்டும் ஜனாம்மா!' என்று கூறிப் பொறுப்பை ஒப்படைத்து விட்ட மாதிரி கண்களை மூடிய அம்மா மீண்டும் திறக்கவே யில்லை.

இப்போதும் தொண்டையில் அடைத்ததைச் சமாளித்துக் கொண்டு, ஒரு டேக்ஸியை நிறுத்தி, அதில் ஏறி அமர்ந்தாள்.

பழைய நினைவுகள் தொடர்ந்தன.

நேற்றுதான் நடந்ததைப் போல, அத்தனையும் கண் முன்னே தோன்றி வேதனைப்படுத்தின.

ரொம்பவுமே வருமானம் குறைவாக இருந்த நாட்களிலும்கூட, அவள் குடும்பத்தில் மகிழ்ச்சி மட்டும் குறைந்ததேயில்லை.

அதற்கு, அம்மா குடும்பம் நடத்தும் பாங்குதான் காரணம்.

தங்கள் குடும்பத்தில் என்ன இருக்கிறது, என்ன இல்லை என்பதைப் பிள்ளைகளின் மனதில் நல்ல வி மாகப் பதிய வைத்துப் புரிந்துகொள்ளச் செய்துவிட்டால் பிறகு மகிழ்ச்சிக்குக் குறை ஏது?

இருப்பதைக் கொண்டு திருப்தியுடன் வாழும் மிகப்பெரிய கலையை, மிகவும் சாதாரண முறையிலேயே பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுத்திருந்தார் தாயார் லட்சுமி

கற்றுக் கொடுப்பதென்றால், பள்ளி ஆசிரியை போல வரிசையாக உட்கார வைத்துப் பாடம் எடுத்தார் என்றில்லை

எதிர்வீட்டுப் பெண்மணி, 'நம்ம வீட்டுத் தோட்டத்திலே காய்த்தது லட்சுமியம்மா! இந்தாருங்கள்...' என்று கூறிப் பீர்க்கங்காய்களைக் கொடுத்தால், அவர்களை உட்கார வைத்துவிட்டுப் பதிலுக்குத் தக்காளியையோ, முருங்கையையோ பறித்துக் கொண்டு வந்து, இன்முகத்தோடு அம்மா கொடுப்பதைப் பார்க்கும்போதே, யாரிடமும் ஓசியாக, இலவசமாக எதையும் பெறக்கூடாது, பதிலுக்கு நாமும் எதையாவது திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென்பது பிள்ளைகளின் மனதிலே பதிந்து போனது.

வளர வளரப் பொறுப்பென்பதும் இயல்பு போல ஒன்றிப் போனது.

'ரொம்பவும் பசிக்கிறது தாயி! பழையது ஏதாவது இருந்தால் போடேன்!' என்று ஊரிலிருக்கும் வயதான சிலர் கேட்கும்போது, இருப்பதைக் கொடுக்கும் அம்மாவின் இரக்க குணம்!



வாங்கிய கடனைச் சொன்ன நேரத்திற்குள் திருப்பிக் கொடுக்கும் பெற்றோரின் நேர்மை, நாணயம்!

எப்போதாவது திருப்ப முடியாத நிலை ஏற்பட்டால், உரியவர்களைச் சந்தித்து விளக்கமளித்துவிட வேண்டுமென்ற பண்பு!

குழந்தைகள் நல்ல முறையில் வளர, இதனை விடப் பெரிதாக எதுவும் தேவையில்லை என்பதுதான் ஜனார்த்தனிக்கு!

தங்களின் குடும்பத்தைப் பற்றி நினைக்கும்போதே, உள்ளூரப் பூரிப்புத் தோன்றிவிடும் அவளுக்கு!

பாரதியாரின் பாடல்களிலே வருகிற மாதிரிக் கேணியும், தென்னையுமாக அழகான தோட்டம்தான் அவர்களுடையதும்.

தங்களின் உழைப்பின் மூலம், அதனை மேலும் செழிப்படையத்தான் செய்திருந்தார்கள் லட்சுமி - ராஜன் தம்பதியினர்.

ஆனாலும், கடந்த சில வருடங்களாகப் பருவத்திற்கு மழையின்றி, வானம் கைகளை விரித்துவிட, விவசாயம் பெருமளவில் பாதிப்படைந்தது.

நல்ல வேளையாக அப்போது ஜனார்த்தனியின் படிப்பு முடிந்து, வேலைக்குச் செல்ல ஆரம்பித்திருந்ததால் சமாளித்துக் கொண்டார்கள்.

தங்களின் தோட்டத்தின் மீது, பெற்றோருக்குப் பற்றுதல் சற்று அதிகமாகவே உண்டென்பது, ஜனார்த்தனியை அடுத்த, மற்ற இளையவர்கள் இருவருக்கும்கூடத் தெரியும்தான்.

தோட்டத்தைத் தங்களுடைய இன்னொரு பிள்ளையாக நினைத்தே நேசித்தார்கள் பெற்றோர் என்பது தெரிந்தினாலேயே, எப்படியாவது அதன்மீது வாங்கியிருக்கும் கடனை அடைத்துப் பெரியவர் சிவசுவிடமிருந்து பத்திர களை மீட்டுப் பெற்றோரிடம் கொடுத்து, அவர்களை மகிழ்ச்சியில் திக்குமுக்காடச் செய்ய வேண்டுமென்று நினை திருந்தாள் ஜனார்த்தனி.

ஆனால்... எதிர்பாராமல் என்னவெல்லாமோ நடந் விட்டதே!

கனவிலும் கண்டிராத பயங்கரம்!

குடும்பத்தையே பேரதிர்ச்சிக்குள்ளாக்கி, நிலைகுலையச் செய்துவிட்ட அம்மாவின் மறைவு!

நினைத்தால், இப்போதும் நெஞ்சு நடுங்கித்தான் போகிறது.

தன் வேதனை, வலியை உள்ளேயே வைத்து கொண்டு, இளையவர்களுக்குத் தைரியமூட்டியவாறே தந்தையின் உயிரைக் காப்பாற்ற மிகவும் சிரமப்பட்டாள் ஜனார்த்தனி.

தங்களிடமிருந்த சிறு சிறு நகைகளோ, சொற்பமான சில ஆயிரங்களோ போதாதென்பதை உணர்ந்து, சிவ மாமாவிடமே சென்றாள்.

தந்தையின் உயிரை மீட்டுக் கொடுக்க உதவிய அந்த பணம், அவளைப் பொறுத்தவரை அன்றைக்குக் கோ ரூபாய்க்குச் சமம்.

அதனால்தானோ என்னவோ, 'இதுவரை வாங் யிருக்கும் எல்லாத் தொகையையும் நீ திருப்பிக் கொடுக்கி



வரை, தோட்டம் என்னிடமிருக்க வேண்டுமம்மா!' என்ற சிவசு மாமாவின் வார்த்தைகளுக்குச் 'சரி'யென்று சம்மதித்தாள்.

உள்ளூர வருத்தமாக இருந்தபோதும், சில லட்சங்களைக் கொடுத்திருக்கும் அவர்கள், நிலத்தைப் பயன்படுத்திக் கொள்வேன் என்று சொல்வது, நடைமுறையிலிருக்கும் வழக்கம்தானே என்று, மனதைச் சமாதானப்படுத்திக் கொண்டாள்.

பிறகு, தந்தை எழுந்து நடமாடும் வரை அவரைக் கவனித்துத் தம்பி, தங்கைக்கு ஆறுதல் கூறித் தேற்றி இயல்பிற்குக் கொண்டு வருவதற்குள், ரொம்பவே சிரமப்பட்டுப் போனாள்.

இதனிடையே, ஒரே ஒரு வருமானமான வேலையையும் விட்டுவிட முடியாதே!

அக்காவின் வேலைப் பளுவைக் குறைக்கும் பொருட்டு, வீட்டிலிருக்கும் சிறுசிறு வேலைகளைத் தாமாகவே முன்வந்து செய்யலானார்கள் இளையவர்கள்.

பல மாதங்கள் மின்னல் போலக் கடந்து சென்றன!

'திரைகடல் தாண்டியும் திரவியம் தேடு' என்று எழுதி வைத்திருப்பது அவளுக்கு முற்றிலும் பொருந்தும்.

பேரிடியாகத் தலையில் இறங்கிய, தாயின் மறைவு ஏற்படுத்திய அதிர்ச்சியைத் தாங்கிக் கொண்டு, குடும்பத்தின் நிலையைத் தாழாது காப்பதும், மூத்தவளான ஜனாவின் கடமையாயிற்று.

அம்மாவைத்தான் காப்பாற்ற முடியாது போனது. அவர்களின் ஆசைப்படி தோட்டத்தின் மீதிருக்கும் கடனை

அடைத்து, அதனை மீட்டு அம்மாவின் ஆத்மாவை ம
வைக்கலாமே! செய்தே ஆக வேண்டும்!

அதற்கு நிறையச் சம்பாதிக்க வேண்டுமென்பதில
மனதில் கொண்டே, மும்பை வேலைக்குச் சம்மதித்தா

இந்த இடமாற்றம், ஓரளவிற்கு அவள் எதிர்பார்த்
போலவே, குடும்பத்தாரை மெல்ல இயல்பு வாழ்க்கைக்கு
திருப்பியதுதான்.

அது குறித்து நிம்மதிதான். ஆனாலும்...

எப்போதுமே இரைச்சலுடனிருக்கும் இம்மாநக
ஏனோ அவளின் மனதோடு ஒத்துப்போகவில்லை.

அதற்காக அவள் மும்பையை வெறுத்தாள் என்றில்லை
கட்டடத் தொழிலில் நல்ல நிலையிலிருக்கும் கம்பெ
ஒன்றில், கிட்டத்தட்ட மாதம் கால் லட்சம் சம்பளம் வாங்
- 'இண்டீரியர் டெக்கரேட்டர்'ராகப் பணிபுரிபவளுக்கு, மும்
பிடிக்காமல் போக வாய்ப்பில்லைதான்.

அதே சமயம் பிடித்தம் என்றுமில்லாமல், ஒரு
வெறுமை மனதில் இருந்து கொண்டே இருந்ததும் உண்
தான்.

தஞ்சையில் அவள் வேலை செய்த 'குபேர
பில்டர்ஸ்' கம்பெனி, வேறு ஒரு மும்பைக் கம்பெனியுட
இணைந்து, பெரிய அளவில் புராஜெக்ட் செய்தார்கள்.

இரு கம்பெனிக்கும் முதலீடு, இலாப நஷ்
எல்லாவற்றிலும் சம பங்கு.

மும்பையில் தொடங்கிய பெரிய கிளைக்கு, அனு
முள்ளவர்கள் தேவை. தமிழகத்தில் உள்ள அலுவலகத்



இருப்போரில், தனித் திறமையுள்ளவர்களுக்குச் சம்பள உயர்வு கொடுத்து, மும்பைக்கு அனுப்பி வைக்க 'குபேரன் பில்டர்ஸ்' முதலீட்டாளர்கள் ஆர்வம் காட்டினார்கள்.

விருப்பமிருப்பவர்கள் தெரிவிக்கலாம் என்றார்கள்.

ஆரம்பத்தில் துளியும் விருப்பமின்றி இருந்த ஜனார்த்தனி, பிறகு தன்னுடைய குடும்பச் சூழ்நிலைகளி னாலேயே மும்பைக்குச் செல்லச் சம்மதித்தாள்.

தமிழகத்திலிருந்து இருபது பேர் கொண்ட குழு, மும்பையில் குடியேறி ஓரிரு மாதம் ஆகப் போகிறது.

குடும்பத்தோடு வந்தவர்களுக்குக் கம்பெனியே வீடு கொடுத்து விட்டதால், வீட்டு வாடகை என்ற தொகை செல வாகாமல் சேமிப்பானது.

இன்னும் இரண்டே வருடங்கள்தான். வசந்தின் படிப்பு முடிந்துவிட்டால், திறமையான அவனுக்கு நல்ல வேலை கிடைத்துவிடும். தேவையான பணத்தைச் சேர்க்க அதிக காலமாகாது. சேர்த்துவிடலாம்.

சேர்த்து விடலாம்தானே! ஆறு லட்சமென்பது பெரிய தொகைதான் என்றாலும், அனாவசியச் செலவுகள் செய்யாத போது, அதிகபட்சமாக மூன்றாண்டுகளில் நிச்சயம் சேமித்து விடலாம் என்பதில் உறுதியாக இருந்தாள்.

'ர்ர்ர்ர்' என்ற இரைச்சலுடன் டேக்ஸி நின்றது.

ஐம்பது ரூபாயை டேக்ஸிக்காரரிடம் கொடுத்து விட்டு, அதிக ஆடம்பரமில்லை என்றாலும், இது போன்ற செலவுகளைத் தவிர்க்கப் பழக வேண்டுமென்று மனதினுள்

குதித்துக் கொண்டு, அந்த நான்கு மாடிக் கட்டடத்திற்குள் நுழைந்தாள்.

அகன்ற படிகளைக் கொண்ட காம்ப்ளெக்ஸ்!

கார் பார்க்கிங் வசதியோடு, தியேட்டர், நகைக் கடை ஆடையுலகம், வாடகைக்கு விடச் சிறிய அளவிலான கடைகள் என்று பெரிய மால் அது!

அடுத்த ஐந்தாறு மாதத்தில் ஒவ்வொரு தளத்தையும், ஒவ்வொரு விதமாக அழகுபடுத்த வேண்டுமாம்.

வேலை ஜரூராக நடக்கிறதா என்று பார்ப்பதற்காக வருகிறாராம் அந்த இன்னொரு முதலாளி.

கூடவே, பணிபுரிவோர் எல்லோரையும் கூட்டி, மீட்டிங் நடத்த ஏற்பாடு செய்யும்படியும் உத்தரவிட்டிருக்கிறாராம்!

இந்தக் கிளைக்கு வந்த, ஏற்கெனவே இருப்போருடன் இணைந்து, அவர்கள் வேலை செய்ய ஆரம்பித்து வெகு நாளாகிறது.

ஆனால், மும்பை முதலாளி துரை, கம்பெனியில் வேலை நடப்பதைப் பார்க்க இப்போதுதான் வருகிறாராம்!

அவ்...வளவு மெத்தனம்!

இது மாதிரி ஆட்கள் எல்லாம், என்ன தொழில் செய்து, எப்படித்தான் முன்னுக்கு வருகிறார்களோ தெரியவில்லை என்றெண்ணியபடி, மேலே செல்வதற்காக லிஃப்ட் பட்டனை அழுத்தினாள்.

லிஃப்ட்டில் ஏதும் பழுதோ என்னவோ? வேலை செய்யாது பாதியிலேயே நின்று கொண்டு சத்தமிடவும், அருகிலிருந்த படிகளில் ஏற ஆரம்பித்தாள் அவள்.



இன்னும் பத்து நிமிடத்தில், மூன்றாவது மாடியில் மீட்டிங் ஆரம்பித்துவிடும் என்ற நினைவில் வேகமாகப் படியேறினாள்.

பத்துப் படிகளுக்கு மேல் ஏறியிருப்பாள். அப்போது...

"சை! சமயத்தில்தான் இந்த லிஃப்ட் கழுத்தறுக்கும்!" என்று எரிச்சலாக மொழிந்துவிட்டு, தடதடவென்று படிகளில் ஏறியபோது, ஒரு திருப்பத்தில் ஜனார்த்தனியின் கை முட்டி மீது லேசாக இடித்துவிட, யார் மீது இடித்தோம் என முகத்தைக் கூடப் பாராது, உடனே 'சாரி... சாரி மேடம்!' என்று வேகமாகச் சொற்களை உதிர்த்து விட்டு, நொடியும் தாமதிக்காமல், முன்னைவிட வேகமாக, இரண்டிரண்டு படிகளாகத் தாவி ஏறிச் சென்றான் ஒரு நெடியவன்.

'ஸ்ஸ்...' என்ற மெல்லிய சத்தத்துடன், இடிபட்ட கை முட்டியைத் தேய்த்து விட்டபடியே, மறைந்து கொண்டிருந்த அவனை உற்று நோக்கியவளின் கண்கள் இடுங்கின. "இவ்வளவு அவசரமாக ஓடிச் செல்ல வேண்டுமானால், ஏன், ஒருவேளை, அன்று ஓட்டலுக்கு வந்த அதே அழகி, மேலே உங்களுக்காகக் காத்திருக்கிறாளோ?" என்று மெல்ல, ஆனால் தெளிவான குரலில் கேட்டாள் ஜனார்த்தனி.

அவனுக்குக் காதுகள் கூர்மையானவையென்றால் நிச்சயம் கேட்டிருக்கும்!

திருப்பத்தில் மறைந்தவன், சட்டென்று திரும்பி அவளைப் பார்த்துவிட்டு, "ஹல்...லோ நீங்களா?" என்று புன்னகைத்தான்.

அந்தப் புன்னகையைப் பார்த்து, முதல் தடவையைப் போலவே, இப்போதும் உள்ளூரத் திகைத்து நின்றாள் ஜனார்த்தனி.

திகைத்தது ஒரு கணமாகக்கூட இருக்காது. மறுகண நிகழ்வுக்கு வந்தவளுக்கு, இவனுக்குப் போய் இப்படியொ வசீகரமான புன்னகையா என்றும் தோன்றியது.

சிறு எரிச்சலும்கூட!

என்னவோ ரொம்பத்தான் தெரிந்தவன் மாத் எவ்வளவு இயல்பாகக் கேட்கிறான்?!

இந்த லட்சணத்தில் இப்படியொரு இளிப்பு வேறு!

பார்ப்பவர்களின் கண்களை நிலைத்து நிற்க செய்வது மாதிரி!

அன்றைக்கும் இதே மாதிரிதானே இயல்பாக இதைவிடப் பல மடங்கு இயல்பென்று சொல்வதுதா சரியாக இருக்குமோ? - பேசினானே!

அந்தச் சந்திப்பு நடந்து, ஒரு ஏழெட்டு மாதமிருக்கும இல்லை அதிகமோ?

அப்போது, சென்னையிலிருந்த அலுவலகத்திற் வேலை நிமித்தமாக, அடிக்கடி சென்று வந்து கொண்டிரு தாள் ஜனார்த்தனி.

தஞ்சைக் கிளையில் வேலை செய்த போதும், சென்ன அலுவலகத்தில் இருப்போருடனும் நல்ல நட்பிருந் அவளுக்கு.

அவள் மீதிருந்த மரியாதையின் காரணமா சென்னை ஜி.எம். தன் மகளின் திருமண வரவேற்பிற்க அழைப்பு விடுத்திருந்தார்.

உண்மையான மரியாதையுடன் விடுத்த அழைப் எனவே, ஒரு நாள் விடுப்பெடுத்துக் கொண்டு சென்னைக் சென்றாள்.



மாலை ஆறு மணிக்கெல்லாம், வரவேற்பு கோலாகலமாக ஆரம்பித்துக் கொண்டாட்டமாகச் சென்று கொண்டிருந்தது.

வாழ்த்தோடு தன் பரிசையும் அளித்துவிட்டு, அந்த நட்சத்திர ஓட்டலின், நீச்சல் குளத்தை ஒட்டியிருந்த பெரிய தோட்டத்திற்குள் சென்றாள்.

பலவித வண்ண விளக்குகளின் அலங்காரத்துடன் மின்னியது தோட்டம்.

ஆனால் அதை ரசிக்க முடியாமல், கும்பல் கும்பலாக நின்றிருந்த ஆண்களின் கையில், தவறாமல் இருந்தது மதுக் கிண்ணம்.

மதுவின் நெடி, நாசியைத் தாண்டி, உள்ளே சென்று, லேசான தலைவலியை உண்டாக்கியது.

அங்கே, பஃப்பே மாதிரி நின்று சாப்பிடப் பிடிக்காதவர்களுக்காக, ஓட்டலின் ஏ.சி. உணவறையில் டேபிள்ஸ் பதிவு செய்திருந்தார்கள்.

அந்த ஹாலுக்குள் சென்றாள். பாதி இருட்டும், பாதி மெழுகுவத்தி வெளிச்சமுமாக அமைதியாக இருந்தது.

'ஹப்பா!' என்ற நிம்மதியுடன், சுற்றியும் பார்வையைச் செலுத்தினாள்.

ஏழெட்டு ஜோடிகள் அங்குமிங்குமாக அமர்ந்து, பேசியவாறே சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

யாருமில்லாத கடைசி டேபிள் சேரை நோக்கிச் சென்றாள் ஜனார்த்தனி.

திரைச்சீலைகளை விலக்கிவிட்டுக் கண்ணாடி வழியே வெளியே தெரிந்த தோட்டத்தைப் பார்த்தாள்.

அவளின் டேபிள் மெழுகுவத்தியை ஏற்றிவி
மெனு கார்டைக் கொடுத்த பேரரிடம், ஒன்றிரண்
ஐட்டங்களை மட்டும் கூறி அனுப்பினாள்.

அந்த இருட்டறையில் மொத்தமாக இருபத்தை
டேபிள்கள்தான் இருந்திருக்கும்.

ஆனால், ஒருவர் பேசுவது மற்றவருக்குத் தொல்
தராத வகையில், எல்லோருமே மெல்லிய குரலில்தா
பேசினார்கள்.

பின்னணியில் இனிமையான சங்கீதம் ஒலி
தன்னை மறந்தபடி லயிப்போடு அமர்ந்திருந்தவ
முகத்தில், பார்க்கத் தெவிட்டாத புன்னகை ஒ
பூத்திருந்தது.

ஒரு கையினால், கன்னத்தைத் தாங்கியவா
அமர்ந்திருந்தவளை நோக்கி நடந்தபடி, 'யா... யா... ஓ
பை!' என்று புன்னகையுடன் கூறி, கண்ணாடி போ
பளபளத்த, கறுப்பு நிற செல்லை ஆஃப் செய்துவி
ஜனார்த்தனியின் எதிரே அமர்ந்து, "பரவாயில்லையே
சொன்னபடி சரியான நேரத்திற்கு வந்துவிட்டாய்!" எ
சிலாகித்துவிட்டு, "ஆனால், உன் பெயருக்கும் இந்த
காஸ்டியூமிற்கும் சம்பந்தமில்லாதது போலிருக்கிறது.
மாடர்னாக இருப்பாயென்று எதிர்பார்த்தேன். என
இதுவும் உனக்குப் பொருத்தமாயிருக்கிறது. பியூட்டிஃபு
மணி எட்டாகி விட்டதே! நம்முடைய சூட்டிற்குக் கிள
லாமா?" என்று இயல்பான வசீகர முறுவலோடு, எதி
அமர்ந்த நெடியவன் கேட்கவும், வெகுவாகத் திகைத்
விழித்தாள் ஜனார்த்தனி.



'யார் இவன்? ஏதேதோ உளறுகிறான்!' என்ற திகைப்பு அவளுக்கு.

தனியே இருப்பதைப் பார்த்துவிட்டு வந்து வம்பு பண்ணுகிறானோ? ஆளைப் பார்த்தால், பொது இடத்தில் அநாகரிகமாக நடந்து கொள்பவனாகத் தெரியவில்லையே! ஒருவேளை...

'இந்த இடத்தில் வேறு யாரையோ எதிர்பார்த்து...!' என்றவளின் எண்ணப்போக்கில் குறுக்கிட்டது அவன் குரல்.

"நேரமாகிறது, கிளம்பலாமா என்றேனே?" என்றவன், சொன்னதோடு நிற்காமல் அவளை எழச் செய்வதற்காகத் தன்னுடைய நீண்ட வலிய கையை நீட்டவும், சட்டென்று தன் கரத்தைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டு, "ஹலோ! நீங்கள் யார் சார்?" என்று கேட்டாள் ஜனார்த்தனி.

"யாரா?" என்று திகைத்தான் அவன்.

பிறகு அவள் முகத்தைப் பார்த்து, "நீ அந்த ரே...ரேஷ்மி இல்லையா?" என்று கேட்டான்.

இப்போது அவனைப் பார்க்க, கொஞ்சம் வேடிக்கையாக இருந்தது அவளுக்கு.

யார் என்னவென்று தெரிந்து கொள்ளாமல் பேசினால், இப்படித்தான் நடக்கும்.

குஷனில் வசதியாகச் சாய்ந்து கொண்டு, 'இல்லை' என்றாள் அவள்.

கொஞ்சம் ஜம்பமாகவே கூறினாளோ?

'ஓ...!' என்ற ஒற்றைச் சொல்லுடன் நெற்றியைச் சுருக்கியவன், "பிறகு ஏன் இந்தப் பதினெட்டாவது நம்பர்

டேபிளில் வந்து அமர்ந்தாய்? இது நான் பதிவு செய்திரு டேபிள்!" என்றான் ஒரு மாதிரியான குரலில்.

அவன் கண்களில், சின்ன ஏமாற்றத்தின் சாய தெரிவது போல் தோன்றியது. ஏமாற்றம் எதற்காகவோ?

"இது உங்கள் இடமென்பது எனக்கெப்படித் தெரியு மிஸ்டர்? காலியாக இருக்கவும் அமர்ந்தேன். ரிசர்வ் போர்டு வைக்காதது ஓட்டலின் தவறு!" என்றாள் சற் மிடுக்கான குரலிலேயே!

இந்தக் குரலைக் கொண்டு வர, உள்ளூர அவ என்ன பாடுபட்டாள் என்பது அவளுக்குத்தானே தெரியு

எதிரே நின்றிருந்தவனின் கண்களில் சுவாரஸ்ய தோன்றியது. நான் ரிசர்வ் செய்த இடத்தில் அமர்ந் கொண்டு, என்னிடமே என்ன தோரணை காட்டுகிறாள் என் சுவாரஸ்யம்!

அப்போது, அந்த ஏ.சி. அறையின் பெரிய கதவை திறந்து கொண்டு உள்ளே நுழைந்து, அவன்ருகே வந்து "சாரி டியர்! டிராஃபிக் ஜாமினால் சற்றுத் தாமதமாகிவிட்டது" என்று கிளி மாதிரி மிழற்றிவிட்டு, நின்றிருந்தவனின் தோளைப் பற்றித் தன்புறமாகத் திருப்பினாள் அந்த அழகு பதுமை.

அழகென்றால் அப்படியொரு அழகு!

"ஓ! நீதான் ரேஷ்மியா?" என்றான் அவன்.

ம்... இவளுக்காகத்தான் சூட் புக் செய்யப்பட்டிரு கிறதா என்றெண்ணியவாறு, எதிரே இருந்த ஜோடியை நோக்கினாள் ஜனார்த்தனி.



இப்படி வெறிப்பது நிச்சயமாக நாகரிகமில்லைதான். அது அவளுக்குமே தெரியும்தான்.

ஆனால், அவளொன்றும் யாரையும் ஒளிந்து மறைந்து பார்க்கவில்லையே!

அப்படிப் பார்க்கவில்லை என்பதோடு, இவர்களும் தான் மற்றவர்கள் இருக்கிறார்கள் என லட்சியமா செய் கிறார்கள்?

சும்மா! இது ஒரு சுவாரஸ்யமான பொழுதுபோக்கு. அவ்வளவுதானே?

எனவே, எதையும் பெரிதாக நினைக்காது, பார்க்க ானாள் ஜனார்த்தனி.

பார்ப்பதற்கு, இலவச நாடகமும் நன்றாகத்தானே இருக்கிறது.

அவனுடைய கேள்விக்குப் பதில் போல, படபடவென்று இமைகளைக் கொட்டி, "எஸ் டியர்! ரேஷ்மி நானேதான்!" எனப் பளிச்சென்று சிரித்தாள்.

"ஓ.கே. வெல். நாம் கிளம்பலாமா? நீ வந்ததே லேட்...!" என வேகமாகக் கூறினான் அவன்.

ஸ்டைலாக அவன் தோளில் சாய்ந்து, "போகலாம்!" என்றாள் ரேஷ்மி.

கிளியைத் தோளோடு பற்றிக் கொண்டு கதவை நோக்கி நடந்தவன், திரும்பி ஜனார்த்தனியைப் பார்த்து, "சாரி மேடம்!" என்று கூறிவிட்டுச் சென்றான்.

அவன் நடையில் வேகமும், முகத்தில் புன்னகையும் சற்று அதிகமானதோ?!

பின்னே இருக்காதா?

இப்படிப்பட்ட அழகியோடு, தனித்திருக்கக் கி
திருக்கும் வாய்ப்பை அனுபவிப்பதற்காக, நேர
வீணடிக்காமல் ஓடுகிறான்.

பிறகு புன்னகைக்கு ஏது பஞ்சம்!

நாடு வேண்டாத வழிகளில் மட்டும் ரொம்பவும்
முன்னேறிக் கொண்டிருக்கிறது.

இது மாதிரி விஷயமெல்லாம் இன்றைக்கு எவ்வ
சாதாரணமாகி விட்டது.

யாராவது சொல்லிக் கேள்விப்படும்போது கூட,
போப்பா! இதெல்லாம் ஒரு பெரிய மேட்டரா?' எ
அளவிற்கு!

அன்றைக்கு வெளிப்படுத்திய, அதே வசீகர
புன்னகைதான் இது!

ச்சு! என்ன இது? அவன்தான் அழகாயிருக்கிறெ
பல்லைக் காட்டுகிறான் என்றால், நாம் அதை வெ
மில்லாமல் வெறித்துப் பார்க்க வேண்டுமா என்ன?

திகைப்புக் குறைந்தபோதும், எரிச்சல் மண்
அவளுக்கு.



## 3

தான் திகைப்பிலிருந்து முழுமையாக வெளிவந்து விட்டதை உறுதிப்படுத்துவது போல, "பரவாயில்லையே! உங்களின் ஞாபக சக்தியைப் பாராட்டத்தான் வேண்டும். ஒரே ஒருமுறை, ஒரு சில நிமிடம் மட்டுமே பார்த்தவர்களைக் கூட ஞாபகம் வைத்திருக்கிறீர்களே!" எனச் சிலாகிப்பது போல மட்டம் தட்டினாள் ஜனார்த்தனி.

புரிந்து கொண்டதைப் போல, ஒற்றைப் புருவத்தை மட்டும் சற்று மேலே உயர்த்தியவன், புன்னகை விரிய, "இந்தப் பெருமை யெல்லாம் அடியேனைவிடத் தங்களைத் தானே அதிகம் சாரும். ஏனெனில், முதலில் அடையாளம் கண்டுகொண்டு, உங்களுக்குள்ளே பேசியது நீங்கள்தானே!" எனத் திருப்பிக் கொடுத்து விட்டான் அவன்.

இதற்கு வாயை மூடிக் கொண்டே இருந்திருக்கலாம் என நினைத்து, உதட்டை அழுந்த மடித்தாள் அவள்.

அவசரம் என்று ஓடியவன், இப்போது ஜம்பமாக நின்றதோடு மட்டுமல்லாது, அவள் அழுந்த மடித்த, அழகான பூவிதழ்களை ரசனையோடு பார்த்து, "அதுவுமில்லாமல், அழகான பெண்களை நான் சுலபத்தில் மறப்பதில்லை!" என்றான் உல்லாசமான குரலில்.

ஜிவ்வென்று கன்னம் சூடானது அவளுக்கு.

எவ்வளவு தைரியம்!

அவளிடம் இது மாதிரிப் பேசுபவனைச் சும்மா விடலாமா?

தன்னை என்ன அந்த ரேஷ்மியென்று நி... தானோ? அழகாயிருக்கிறாயென்று சொன்னால், அ... 'ஈ...!' என்று இளிப்பதற்கு!

பர்சனாலிட்டியாக இருந்தால், என்ன பேத்தின... கேட்டு விடுவார்களா என்ன?

நறுக்கென்று ஒரு குட்டு வைத்தால்தான் இ... கெல்லாம் உறைக்கும்.

"ஹலோ மிஸ்டர்! அளவோடு பேசுங்கள். முடியவில்... யென்றால் எவளைத் தேடி வந்தீர்களோ, அவளிடம் செ... உளறுங்கள்!" என்று கோபமுடன் படபடத்துவிட்டு, மே... செல்லப் படிகளில் ஏறினாள்.

உடன் படியேறியபடி, "அது முடியாதே! பிஃகா... இப்போது எனக்காக மேலே எந்தப் பெண்ணும் இல்... பக்கத்திலிருக்கும் உங்களைத் தவிர...!" என்றான் கண்க... தோன்றிய குறும்புடன்.

திரும்பி முறைத்தவள், "இதற்கு மேல் ஏதா... பேசினீர்கள் என்றால், அப்படியே கீழே தள்ளிவி... விடுவேன். ஆமாம்...!" என்று எரிச்சலோடு எச்சரித்துவி... மூன்றாவது மாடி வராண்டாவை அடைந்தாள்.

சிறு பிள்ளையைப் போலச் சட்டென உணர்ச்சிவ... படுபவளின் கோபத்தை, உள்ளூர ரசித்துச் சிரித்தவ... "என்னைக் கீழே தள்ளுவது இருக்கட்டும். நீங்கள் இ... ஊரில், அதுவும் இந்த இடத்தில் என்ன செய்கிறீர்க... என்று விசாரித்தான்.

"விசாரித்து என்ன செய்யப் போகிறீர்கள்?"



"சும்மா தெரிந்து கொள்ளலாமே என்றுதான்..." என்றவனின் குரலில் அவனை மீறிய ஆவல்!

"ம்... மூன்றாவது தளத்தில் இட்லிக் கடை வைக்க, இடம் கிடைக்குமா என்று பார்க்க வந்தேன். போதுமா? இப்போதாவது உங்கள் வழியே போகிறீர்களா?" என்று சிறு அலட்சியமுடன் கூறினாள்.

உடன் வருவதை விடமாட்டானா என்ற எரிச்சல் அவளுக்கு.

ஆனால் அவனோ, "என்னது இட்லிக் கடையா?" என்று கேட்டு, அடக்க மாட்டாதவனாகச் சிரித்தான்.

அவளின் இமை தட்டாத கண்களைப் பார்த்து, "இந்த மாலின் கீழ்ப் பகுதியிலே வரவிருக்கிற, நவீன ரெஸ்டாரெண்ட்டை விட்டுவிட்டா, உங்களின் கடைக்கு வரப் போகிறார்கள்? அப்படியே வந்தாலும்கூட, வியாபாரம் ஓடாதென்றுதான் நினைக்கிறேன்!" என்றான்.

"ஏனோ?" என்றாள் அவள்.

"சொல்லி விடுவேன். ஆனால், காரணத்தைக் கேட்டதும், மீண்டும் கோபப்படுவீர்களோ என்றுதான் தயக்கமாக இருக்கிறது!" என்றான்.

இவன் தயங்குகிறானாமா?

இதை அவள் அப்படியே நம்ப வேண்டியதுதானாக்கும்!

"பரவாயில்லை. சொல்லுங்கள். நான் ஒன்றும் யாரையும் கடித்து வைத்துவிட மாட்டேன்!" என்றாள் அசட்டையாக.

சற்றும் குறையாத புன்னகையுடனே, "உங்கள...
ஐந்து நிமிடம் பார்த்துக் கொண்டிருந்தாலே ...
நிறைந்துவிடும். வயிறு நிறைந்த பிறகு, யார் சாப்...
போகிறார்கள்? வியாபாரமும்தான் எப்படி நடக்கும்...
என்றான் அவன்.

உதட்டை இழுத்து நீட்டிச் சிரித்து, "உங்களின் இ...
பாராட்டில், அப்படியே உச்சி குளிர்ந்து விட்டது. இப்...
தேனும் உங்கள் வழியே போகிறீர்களா? ப்ளீஸ்!" எ...
கூறிப் பட்டென்று கைகூப்பினாள் அவள்.

அவனுக்கு எதற்கும் ஒரு மலர்ந்த புன்னகைதா...

பிடிவாதமாகப் பார்வையை வேறு பக்கம் திரு...
கொண்டாள் ஜனார்த்தனி.

"ஓ.கே. இப்போது போகிறேன், பை...!" எ...
கூறிவிட்டு, காரிடரின் கடைசியில் இருந்த அறைக்...
நுழைந்தான் அவன்.

தான் செல்ல வேண்டிய இடத்தை நோக்கி ந...
வளுக்கு, அவனைப் பற்றிய யோசனையே ஓடியது.

என்னவோ இந்தக் கட்டடத்தை வளைத்து வளைத்...
கட்டியதே, நான்தான் என்கிற மாதிரியல்லவா தோரணை...
யுடன் செல்கிறான்.

அதே சமயம், அவன் உள்ளே சென்ற அறை...
தான், ஓரிரு நாட்களாகப் பரபரப்பாக ஏதோ வேலை...
நடந்ததே என்பது ஞாபகம் வந்தபோதும் மேற்கொ...
யோசிக்க இயலாது, எல்லோரும் கூடியிருந்த அ...
வந்துவிட, உள்ளே சென்றாள் ஜனார்த்தனி.



கிட்டத்தட்ட நாற்பது பேர் தாராளமாக அமரக்கூடிய, அந்தப் பெரிய அறைக்குள் சென்றபோது, உடன் பணிபுரிவோர் கையசைத்து அழைத்தார்கள்.

காலியாக இருந்த ஐஸ்கிரீம், டீ, காஃபி கப்புகள், கோக் டின்கள், எல்லாம், அங்கே நடந்த உபசாரத்தைப் பறைசாற்ற, புது எம்.டி.யின் வருகைக்காகக் காத்திருந்தார்கள் அவர்கள்.

சற்று நேரத்திற்குப் பிறகு, ராஜ தர்பார் போலக் கதவு திறக்க, முதலில் உள்ளே நுழைந்தவன், சற்று முன்பு வரை, அவளுடன் ஜம்பமாக நின்று பேசிக் கொண்டிருந்த ஒட்டகச்சிவிங்கியே!

அவனையும், அவன் உள்ளே உரிமையோடு நுழைந்ததையும் பார்த்து, நம்ப மாட்டாது விழிகளை விரித்தாள் ஜனார்த்தனி.

எல்லோரையும் பார்த்துப் புன்னகைத்தவனின் முகம், அவளைப் பார்த்ததும், லேசாகக் கண்கள் இடுங்க, ஆச்சரியப்பட்ட மாதிரிதான் அவளுக்குத் தோன்றியது.

"குட் மார்னிங் டு எவ்ரிபடி!" என்று ஆரம்பித்துத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான், குபேரன் பில்டர்ஸின் சம பங்குதாரனான முதலாளி - மனுதர்மன்.

மனுதர்மன் - பெத்த பெயர்தான் என்று நினைத்தாள் அவள்.

கம்பெனியின் அடுத்தடுத்த புராஜெக்ட்டை, எந்த மாதிரியெல்லாம் செய்ய வேண்டும் என்பது குறித்துத் தெரிவித்தான். விவாதங்களும் நடந்தன.

"எந்த வேலையையும், அதற்குரிய கால அ
லேயே முடித்துக் கொடுக்க வேண்டும் என்பது
எப்போதும் கம்பெனியின் முதன்மைக் கொள்கையெ
உங்களுக்குத் தெரியும். அதற்கு உரிய விதமாக ந
கொள்வீர்கள் என எதிர்பார்க்கிறேன்," என்றவன்,

பிறகு, "உங்களுக்குத் தேவையான வசதிக
செய்து கொடுத்திருப்பார்கள். மேலும் ஏதாவது தே
பட்டால், மேலிடத்தில் தெரிவியுங்கள். பரிசீலிக்கப்ப
என்று கூறி, விரைவாகவே பேச்சை முடித்துக் கொண்

பழைய காலத்து மெய்க்காப்பாளர்கள் போல, ந
வயதினர் ஒருவரும், இரண்டு இளைஞரும் அவனின்
வலமாக நடந்து சென்றார்கள்.

"எதற்கு இவ்வளவு பந்தா?

பெரிய ராஜ பரம்பரை மாதிரி!" என ஏளனத்
உதட்டை வளைத்து விட்டு, மற்றவர்களைப் போலவே வெ
யேறினாள் ஜனார்த்தனி.

உடன் வந்தவர்களை அனுப்பி வைத்துவிட்டுக்
புன்னகையோடு லிஃப்ட் அருகே காத்திருந்தான் மனுஜ

பார்க்காத மாதிரிப் போய்விட வகையின்றி, அ
நடுவிலேயே நின்றிருக்கவும், "ஒரு இருபது நிமிடம்
வதற்குக்கூட உடையை மாற்றிவிட்டு, வேறு உடை
வந்திருக்கிறீர்களே! இது உங்களுக்கே கொ
அதிகப்படியாகத் தெரியவில்லை?" என்றாள் ஒரு மாதிரி

"அது மாதிரி வெட்டிப் பந்தா பண்ணும் ஆ
நானில்லை பெண்ணே! அதே சமயம், சட்டை கச
விட்டால், அதையே போட்டுச் செல்லும் பழக்கமும் எ
கில்லை!" என்றான்.



"நம்ப முடியவில்லையே! நீங்கள் அறைக்குள் சென்றபோதுகூடச் சட்டை நன்றாக இருந்ததாகத்தான் எனக்கு ஞாபகம்!" என்றாள் விட்டுவிடாமல்.

கண்கள் மின்ன அவளைப் பார்த்தவன், "அறையினுள் சென்ற பிறகு தானேம்மா கசங்கியது. என்ன அப்படி விழிக்கிறாய்! புரியவில்லையா?

கண்டபடி கட்டிப் பிடித்து முத்தம் கொடுத்தால், உடை கசங்கத்தானே செய்யும். நான் எப்படி அதே உடையில் வரமுடியும்?" என்றான் கண்களில் நிறைந்த குறும்புடன்.

குப்பென்று முகம் சிவந்து விட்டது அவளுக்கு.

தனக்காக இங்கே எந்தப் பெண்ணும் காத்திருக்கவில்லை என்று, கூசாமல் கதை விட்டுவிட்டு, இப்போது இப்படிச் சொல்கிறானே... சீச்சீ! என்ன மனிதனோ!

எதிரே இருந்தவளின் முகம் போன போக்கைப் பார்த்துவிட்டு, "வெயிட்! வெயிட். திட்டிவிடாதே! கட்டிப் பிடித்து முத்தம் கொடுத்தது, உன் கற்பனைப்படி, இருபது வயதுப் பெண்ணல்ல. என் நண்பனின் இரண்டு வயதுக் குழந்தை - மாயா!" என்றான் பளிச்சிட்ட முறுவலுடன்.

எதுவும் கூறாது வெறுமனே நின்றவளிடம், "உன்னுடன் பேசும்போது, ஒருமைதான் வசதியாயிருக்கிறது, மிஸ் ஜனார்த்தனி. என்னைவிடச் சின்னப் பெண் என்பதால், வித்தியாசமாகவும் தோன்றாது. சரிதானே?" என்றான்.

முதலாளி என்றால், வேண்டிய தகவல்கள் எல்லாம் உடனே கிடைத்துத் தொலைத்துவிடும் போலும்!

அவளையே பார்த்திருந்தவன், "அடிக்கடி என்னைப் பற்றி நினைக்கிறாயோ என்றொரு சந்தேகம் எனக்கு!" என்றான்.

"ஆமாம். எனக்கு வேறு வேலையேதும் கிடையா பாருங்கள்...!"

"நான் ஆதாரமின்றிச் சொல்லவில்லை பெண்ணே

"அப்படி என்ன ஆதாரத்தை சார் கண்டுவிட்டீர்கள்?

"நான் போட்டிருந்த உடை வரை கவனித்திருக்கிறா அதை வைத்துதான் சொல்கிறேன்!" என்றான்.

உதட்டைக் கடித்துக் கொண்டு மெல்லத் தலைகுனி தவளுக்குத் தன் மீதே கோபம் எழுந்தது. இவனிடம் நின் பேசியதுதான் முதல் தவறு என அவள் கொதித்துக் கொ டிருப்பதை அறியாமல்,

வாய் திறவாமல், நாக்கை இடது கன்னத்தில் முட்டி சிரித்து, "இதில் தவறொன்றும் இல்லை பெண்ணே! என்னை ஒரு தடவை பார்த்த பிறகு, மறுமுறை நீ கவனிப்பதி பெரிய ஆச்சரியம் ஏதுமில்லை. இது பெரும்பாலு வழக்கமாக நடப்பதுதான்!" என்றான் அவன், சற் அதிகப்படி கர்வமான குரலில்!

மார்கழி மாதக் காலை வேளைக் குளிரில் ஜில்லென்ற ஏரியினுள் தள்ளி விட்டதைப் போல, வித் விதிர்த்துப் போனாள் ஜனார்த்தனி.

என்ன கர்வம்!?

ஏதோ, இப்போது அணிந்திருக்கும் கம்பு நிற சட்டையும், முன்பு அணிந்திருந்த பாதாம் பருப்பின் தோ நிறச் சட்டையும், அவளுக்குப் பிடித்த நிறங்கள் என்பதால் மனதில் பதிந்துவிட்டது போலிருக்கிறது.

அதைச் சட்டென்று சொல்லி விட்டாள்.



அதற்குப் போய் என்னமாகக் காரணம் கற்பித்து விட்டான்!

இந்தக் கர்வத்தின் உச்சந்தலையிலேயே ஓங்கி ஒரு கொட்டு வைக்காவிட்டால், மேலும் துளிர்விட்டு ஆடாதோ? எனவே...

"இவ்வளவு தற்பெருமை கூடாது சார்! நிலைக்கவும் நிலைக்காது!" என்றாள் உதட்டை வளைத்து.

ஸ்டைலாகத் தோள்களைக் குலுக்கி, 'பாண்ட் பெல்ட்'டில் கை விரல்களை மாட்டிக் கொண்டு, "தற்பெருமை நிலைக்காதுதான். அது எனக்கும் தெரியும் ஜனார்த்தனி. ஆனால் நான் சொன்னது தற்பெருமையினால் அல்ல, உண்மைதான் என்பது உனக்கே தெரியுமே!" என்றான், பொருள் பொதிந்த முறுவலுடன்!

அந்தக் குரலில் சட்டென உசுப்பிவிட்டாற் போல் நிமிர்ந்தாள் அவள்.

'நான் சொன்னது சரிதானே?' என்பது போல, ஒற்றைப் புருவத்தை மட்டும் உயர்த்தினான் அவன்.

மேற்கொண்டு உன்னுடன் பேச விருப்பமில்லை என்பது போல, முகத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டு லிஃப்ட் பட்டனை அழுத்தினாள் அவள்.

லிஃப்ட் வந்ததும் வேகமாக உள்ளே சென்றவளைப் பார்த்து, "இப்படித்தான் திருப்பிக் கொண்டு போவாயென்று நினைத்தேன்!" என்று கேலி செய்வதுபோல் கூறிவிட்டு, மேற்கொண்டு அங்கே நிற்காமல், தன் இயல்பான வேகநடையுடன் சென்றுவிட்டான் மனுதர்மன்.

எதிலிருந்தோ விடுபட்டுவிட்டாற் போல், நிம்ம பெருமூச்சு ஒன்று வெளிப்பட்டது அவளிடம்! ஆனா உடனேயே...

ச்சே... என்ன இது?

எதற்காக இப்படியொரு சோர்வு, அயற்சி உண் வேண்டும் என்றும், தோன்றத் தவறவில்லை அவளுக்

இதுபோலவே சில கணங்கள் கடந்து போகத் தன் நினைத்து அவளுக்கே சிரிப்புகூட வந்தது.

யாரோ ஒருவனை எங்கோ எப்போதோ சந்தித்

சந்தித்த சூழ்நிலை நல்லதாக இல்லையென்றாலு சுவாரஸ்யமானதாக அமைந்து விட்டதினாலோ என்னவே மீண்டும் அவனைப் பார்த்ததும் சட்டென அடையா கண்டுகொண்டது மனது.

அவன்தான், அந்த இன்னொரு முதலாளி என்ப அறியாமல் தொடர்ந்து ஏதேதோ பேசிவிட்டாள்.

அப்படிப் பேசியதில் அவளுக்கே சற்றுக் குழப் தான்.

அவள் ஒன்றும், தொட்டால் சுருங்கி வகைய சேர்ந்தவள் அல்ல என்றாலுமே, அன்னியனான ஒ னிடம் இது மாதிரி யெல்லாம் பேசக் கூடியவளும் அல்ல

பிறகு எப்படி, என்னவோ நெடுநாளாகத் தெரி வனிடம் பேசுவதுபோலப் பேச முடிந்தது.

ஒருவேளை, எதிரே இருப்பவர்களைத் தன்னி இயல்பாகப் பேச வைத்திடும் கலையைப் பயின்றவனே இவன்?



அப்படித்தான் இருக்குமோ என நினைத்தபோது, மீண்டும் சிரிப்பு வந்துவிட்டது.

இது என்ன கிறுக்குத்தனமான சிந்தனை!

எதிரே இருக்கும் ஒருவன் வசீகரக் கலையைப் பயின்றவனாக இருந்தால், அவள் அப்படியே மயங்கி விடுவாளாக்கும்!

சுத்த மடத்தனம்!

அதுவும் அவனுடைய கடைசிப் பகுதிப் பேச்சைக் கேட்ட பிறகும், இப்படி நினைப்பதைப் பெரும் மடத்தனமென் பதைவிட வேறு என்னவென்று சொல்வது!

என்ன கர்வமுடன் தலையை அலட்சியமாக அசைத்துக் கொண்டு கூறினான்.

உடுத்தியிருந்த வேன்ஹூசன் ஆடை, கர்வத்தை மேலும் கூட்டிக் காட்டியதோ!

'ஹூம்...!' என்று தலையை உலுக்கினாள் ஜனார்த்தனி.

அவனை விட அலட்சியமான சிலுப்பல்!

இன்றைக்கு அவன் முதலாளியாகவே வந்து நின்ற போதும்கூடப் பெரிதாக மரியாதை கொடுக்க வேண்டுமென்று அவளுக்குத் தோன்றவில்லைதான்.

அதற்கு அவனுடைய பேச்சும் முக்கியக் காரணமாக இருக்கலாம். ஆனால்...

இனிப் பிடிக்கிறதோ இல்லையோ? அவனுக்கு உரிய மரியாதையைக் கொடுத்து விடுவதுதான் உசிதம். முதலாளி எனும்போது அதுதான் சரியானதும்கூட என்று முடிவு செய்தாள் ஜனார்த்தனி.

அதன் பிறகே, எந்த வித முணுமுணுப்புமின்றித் த வேலையைத் தொடர முடிந்தது அவளால்!

வேலையைத் தொடர்ந்த சில நிமிடங்களிலே வழக்கம் போலவே அவளால் அதில் ஒன்றிப்போக முடிந்தது.

# 4

மாலையில் வீடு திரும்பியபோ கமகமவென்ற கம்பு அடை வாசனை வாசலிலேயே அவளை வரவேற்றது.

அழகான புன்னகையுடன் கதவை திறந்த தங்கையின் கன்னத்தை வருடி விட்டு, முகத்தை குளிர்நீர் அடித்துக் கழுவிக் கொண்டு வந்து, ஹா சோஃபாவில் அமர்ந்தாள் ஜனார்த்தனி.

தான் செய்த சிற்றுண்டியை வட்ட வடிவமாக வைத் அதனைச் சுற்றிக் கேரட், கொத்தமல்லித் தழை, பெரி வெங்காயம் இவற்றைக் கொண்டு டிசைன் செய்து, டீபு எடுத்து வந்து டீபாய் மீது வைத்தாள் சிந்து.

நட்சத்திர வடிவத்திலிருந்த கேரட்டை எடுத்துச் சுவைத் வாறே, "பார்ப்பதற்கு அழகாக இருக்கும்போதே அடைய சாப்பிட்டு விடுக்கா. ஆறிப்போனால், வரட்டி மாதிரி வாயி வைக்கச் சகிக்கவில்லை!" என்றான் வசந்தன்.

"ஓ! அப்படியா சார். வாயில் வைக்கச் சகிக்கா தைத்தான், தண்ணி குடிக்கிறேன் என்ற சாக்கில் சென் மற்றவருக்காக எடுத்து வைத்ததைக் கூட மொக்கி களாக்கும்!" என்று பதிலுக்கு வாரினாள் சிந்து.



"அது, எப்படியும் நன்றாயில்லையென்று பாதியாவது கழுநீர்த் தொட்டிக்குத்தானே போகப் போகிறது. விலைவாசி இவ்வளவு ஏறியிருக்கிறதே, செய்ததை ஏன் வீணாக்க வேண்டுமென்றுதான்..." என்றவனை இடையிட்டு, "அதனால் தான் உன்னுடைய கழுநீர்த் தொட்டியில் கொட்டிக் கொண்டாயாக்கும்?" என்று சுட்டுவிரலை நீட்டிக் காட்டிக் கலீரென்ற சிரிப்புடன் கேட்டாள் சின்னவள்.

"அடிப்பாவி! என் வயிற்றையா அப்படிச் சொல்கிறாய்? ஹூம்... போகட்டும். உதவி செய்தவர்களிடம் இந்தக் காலத்தில் யார் நன்றியோடு நடந்து கொள்கிறார்கள்!" என்று போலியான சோகமுடன் வசந்தன் கூற,

"அடடா! ரொம்பவும் பெரிய உதவிதான் செய்து விட்டிருக்கிறாய். பிரதிபலனாக நானும் ஏதாவது செய்ய வேண்டுமே...! என்ன செய்யலாம்?" என்று பலமாக யோசிப்பதுபோலப் பாவனை காட்டினாள் சின்னவள்.

"ரொம்பவும் யோசிக்காதே சிந்து. நாளைக்கு அடை செய்யும்போது, இன்னும் கொஞ்சம் கூடுதலாகச் செய்துவிடு. அது போதும்!" என்று சிறு முறுவலோடு கூறிவிட்டு வசந்தன் கண்சிமிட்டவும், சகோதரிகள் இருவரும் கலகலவென்று சிரித்தனர்.

"கேரட்டை எடுக்கிற சாக்கிலே, நீ நைஸாக ஒரு அடையை உருவியபோதே நினைத்தேன். இப்படித்தான் கவிழ்ப்பாயென்று!" என...

"பரவாயில்லையடா அண்ணா! குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை உனக்கு!" என்று வாரினாள் சிந்து.

"அது இப்போதுதானே எட்டிப் பார்க்கவே ஆரம்பித்திருக்கிறது. அதற்குள் எப்படிம்மா ஒட்டும்? அதுவும் இந்த மொசைக் தரையில் வாய்ப்பே இல்லையே!" என்று அவர்களின் தந்தையும் புன்னகையுடனே கிண்டலில் கலந்து கொள்ள, அந்த இடத்தில் கலகலப்புத் தொடர்ந்து நீடித்தது.

கேலியும் கிண்டலுமாக நேரம் போனதே தெரியவில்லை அவர்களுக்கு.

பிறகு எட்டு மணி சுமாருக்கு, இரவு உணவாக பட்டாணி, பீன்ஸ் கலந்த ரவை உப்புமாவும், சட்னியும் செய்து, அனைவருமாக அமர்ந்து சாப்பிட்டார்கள்.

மிகவும் சாதாரண வகை உணவாகவே இருந்தாலும் அனைவருமாகச் சேர்ந்தமர்ந்து உண்டதால், உப்புமாவின் சுவை பல மடங்கு கூடித் தெரிந்தது.

சகோதரிகளுடன் சேர்ந்து, பாத்திரங்களை ஒதுக்கி வைக்க உதவி செய்துவிட்டு, உறங்கச் சென்றான் வசந்த்.

தந்தைக்கு வழக்கம்போல மாத்திரைகளைக் கொடுத்து விட்டு, வெளிப் பக்கத்துக் கதவு பூட்டப்பட்டிருக்கிறதா என்று பார்த்த பிறகே, தங்களின் அறைக்குள் வந்தாள் ஜனார்த்தனி.

தங்கையும், அவளுமாகப் பகிர்ந்து கொள்கிற, அந்த அறையின் ஒரு பக்கமாக இருந்த டேபிள் சேரை நோக்கிச் சென்றாள்.

கையோடு எடுத்து வந்திருந்த அலுவலக ஃபைலைப் பிரித்து வைத்துக் கொண்டு வேலையைத் தொடர்ந்தாள் அவள்.



கலர் பென்சிலும், ஸ்கெட்ச்சும் சில மணி நேரம் அவள் கையில் விளையாடின.

வரையும் வேலை திருப்திகரமாக முடிந்த பிறகு, அதே பேப்பரின் கீழ்ப் பகுதியில் சில குறிப்புகளையும் எழுதி வைத்தாள்.

வண்ணக் கலவைகள் குறித்த குறிப்பு அது. அவசியமென்று தோன்றும் பட்சத்தில், வண்ணங்களை மாற்றி அமைத்துக் கொள்ளும் உரிமையை நிர்வாகம் அவளுக்கு வழங்கியிருந்தது.

ஆனால், எதனால் வண்ணம் மாற்றப்படுகிறது என்பதற்கான காரணத்தைத் தெரிவிக்க வேண்டியது, அவளின் கடமை.

ஒரு சில வாடிக்கையாளர்கள், முதலில் தேர்ந்தெடுத்துப் பூசிய நிறம் வேண்டாம், பதிலாக இந்த நிறம் பூசிக் கொடுங்கள் என்று பல்ட்டி அடிப்பதும் உண்டு.

இதிலே, 'உங்களுக்கென, உரிமையாளர்கள் நாங்கள் சொல்கிறபடி செய்து கொடுப்பதுதானே உங்களுடைய வேலை. முடியாது என்றால் சொல்லி விடுங்கள். வேறு ஆட்களிடம் வேலையை ஒப்படைத்து விடுகிறோம்!' என்று அதிகாரக் கெடுபிடி காட்டுவதும் நடந்திருக்கிறது.

கம்பெனியின் பெயர் அடிபடக்கூடாது, அதே சமயம் வாடிக்கையாளர் ஒருவரை இழக்கவும் முடியாது என்ற சூழ்நிலையில், "அடடா! நீங்கள் சட்டென்று படபடக்கிறீர்களே... நாங்கள் யோசிப்பது உங்களின் பணத்தைப் பற்றிதான் சார். இப்போது, வேறு வண்ணம் அடித்தால், செலவு அப்படியே இரட்டிப்பாகி, பட்ஜெட் கூடுமே என்பதைப் பற்றித்தான்.

ஆனாலும், இதிலே உங்களின் திருப்தி
முக்கியம். உங்களின் விருப்பப்படியே மாற்றி வி
விடுங்கள் சார்!" என்று இதமாகப் பேசி அவர்களை த
வைத்துவிட்டு, "செய்ததற்கும், இனி செய்யப் போ
குமாக இரண்டு தனித்தனி பில் போட்டு, இவர்களு
கணக்கில் சேர்க்கும்படி அக்கௌண்ட் செக்ஷனில்
வித்து விடும்மா ஜனார்த்தனி!" என்று மாறாத
துடன் கூறிவிட்டுச் செல்லும், ஜி.எம். மூர்த்தி சாரிடமி
தொழில் ரீதியாகப் பல நெளிவு சுழிவுகளைக் கற்றிருக்
அவள்.

அதில் முக்கியமானதொன்றுதான், கீழ்த்தட்டு வே
செய்பவர்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து நடத்

சித்தாள் வேலை செய்பவர்களில் இருந்து மாளே
வரை, அனைவரையும் 'ங்கள்' என்று மரியாதைப் பன்
யில் அழைத்துப் பேசுவதுதான், அவளின் இயல்
இருந்தது.

அவளின் சொல்லைச் செயலாக்கிக் காட்டுவ
சிறு தயக்கமும் இன்றி விருப்பமுடனே முன்வந்தா
அவளின் கீழ் வேலை செய்பவர்கள்.

எனவே, அலுவலக வேலைகள் அனைத்தையு
இதுநாள் வரை நல்லபடியாகவே செய்து முடிக்க முடி
அவளால்.

இந்த இடமாற்றமும், பெரும்பாலும் ஹிந்தியில் பே
சக பணியாளர்களும்கூட, இப்போது பழகிப் போயிற்று.

கை விரல்களுக்குச் சொடுக்கெடுத்துவிட்டு, எழு
ந்து லேசாகச் சோம்பல் முறித்தாள் ஜனார்த்தனி.



நேரம் நள்ளிரவைத் தாண்டி விட்டிருக்க, கட்டிலை
நோக்கிச் சென்றவள், தங்கையின் கையிலிருந்து நழுவி
விட்டிருந்த 'பொன்னியின் செல்வன்' புத்தகத்தை எடுத்து
அலமாரியில் வைத்துவிட்டு, இரவு உடையுடன் குளியல
றைக்குச் சென்று, பல் துலக்கிக் குளித்து விட்டு வந்து
படுக்கையில் விழுந்தாள்.

அயர்வாக இருந்ததாலோ என்னவோ, அடுத்த சில
நிமிடங்களிலேயே நித்திரையில் ஆழ்ந்து போனாள் அவள்.

இருள் விலகாத விடியற்காலையிலே, அழகான மிக
அழகான வெட்கச் சிணுங்கலுடன் கூடிய முறுவலொன்றை
வெளிப்படுத்தியது அவளின் முகம்.

இது கனவேதான்!

இல்லை யென்றால், அவளாவது வெட்கப்படுவ
தாவது... என்று கனவிற்குள்ளேயே கேலிச் சிரிப்பு கூடத்
தோன்றியது.

தொடர்ந்து, 'எதற்காக, யாரைப் பார்த்து இந்த
மாகன வெட்க முறுவலைப் பூக்கிறேன்?' என்ற கேள்வியும்
எழுந்தது.

அவளுக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து, நனவில்
கூட வெட்கப்பட்டதில்லையே என்று, கனவினுள்ளேயே
விழிகளை உயர்த்தியபோது, ஒரு இனிய வசீகர
முறுவலோடு, ஒற்றைக் கை விரலை நீட்டி, அவளின்
முகத்தை நிமிர்த்தியபடி கண் சிமிட்டியவன் - மனுதர்மன்.

முன் தினம், யாரிடம் முகம் திருப்பிக் கொண்டு
வந்தாளோ, அதே மனுதர்மன்!

வினாடிக்குள் குப்பென்று வியர்த்துவிடச் சட்டெ
எழுந்தமர்ந்தாள் ஜனார்த்தனி.

கண்டது வெறும் கனவுதான் என்றாலும், இது எப்படி
சாத்தியமென்று, பேரதிர்ச்சி உண்டாகியதில், அவளின் இதய
வெகு வேகமாகப் படபடத்தது.

ஒரு நாளும் நடக்க முடியாத, இந்த மாதிரியொ
கனவு அவளுக்கு எப்படி வந்தது? ஏன் வந்தது?

கையெட்டும் தூரத்தில் வைக்கப்பட்டிருந்த தண்ணீ
ஜக்கை எடுத்து, வேகமாகத் தண்ணீரைக் குடித்து முடித்
வளுக்கு மூச்சு வாங்கியது.

சற்று முன்பு வரை மனதிற்குள் இருந்த இனிமையா
உணர்வு, சட்டென்று விலகியது அவளிடமிருந்து.

விரைவாகச் சென்று, முகத்தில் குளிர்நீர் அடித்
பிறகே கொஞ்சம் தெளிந்தாற் போலிருந்தது.

முடிந்த மட்டிலும் தலையைப் பலமாக ஆட்டிவிட்டு
கொண்டு, மீதமிருந்த உணர்வையும் விரட்டவென்று
துவைத்து விட்டிருந்த துணிகளை எடுத்து வந்து, கவ
முடன் அயர்ன் செய்து வைத்தவள்,

பிறகு, அன்றைய வேலைகளை வழக்கம் போலவே
செய்து முடித்துவிட்டு, அலுவலகத்திற்குச் சென்றாள்.

முன்தினம் இரவு செய்து முடித்திருந்த வேலைகளை
அதற்குரியவர்களிடம் கொடுத்து, இதில் உள்ளது போலவே
செய்து முடியுங்கள் என்று பணித்து விட்டுத் தன்னிடத்திற்கு
வந்தாள்.

அடுத்துச் செய்ய வேண்டிய வேலை என்னவென்று
பார்த்து, அதில் கவனத்தைச் செலுத்தலானாள்.



தொடர்ந்து இரண்டு மணி நேரம் விரைந்து செல்ல, அவள் கூறியிருந்தபடி மாதிரி வண்ணக் கலவைகள் வந்திருப்பதாகத் தெரிவித்தார்கள்.

பெயிண்டின் தரத்தைப் பரிசோதித்து விட்டு, உட்புறம் தாழம்பூ சந்தன நிறத்தையும், வெளிப்புறம் வெளிர்ப் பச்சை நிறத்தையும் பூசிக் காட்டச் சொல்லி, நிறங்களின் பொருத்தம் திருப்தியை உண்டாக்கிய பிறகே, மேற்கொண்டு பூசும்படி கூறினாள்.

மற்ற மாதிரி வண்ணங்களின் டப்பாவைத் திறந்து, சிறு பிரஷ்ஷைக் கொண்டு பெயிண்டைக் கோடிழுத்தபோது வெளிப்பட்ட லாவகம், அதிலும் அவளுக்கு நல்ல பரிச்சயம் என்பதை வெளிப்படுத்தியது.

"எதையும் விட்டு வைப்பதில்லை போலிருக்கிறது?" என்று, பின்புறமிருந்து கேட்டது ஒரு குரல்.

அவளின் கணிப்பு சரியே என்பது போல, அந்தக் குரலுக்கு உரியவன் மனுதர்மனே!

அவனுடைய குரலில் இருந்தது, நிச்சயமாகப் பாராட்டுதலே என்றபோதும், அதனை ஏற்றுக் கொள்ளத் துளியும் விருப்பமில்லை அவளுக்கு.

எதையும் விட்டு வைப்பதில்லையென்று சொல்கிறான் என்றால், ஒரே நாளில், அவளுக்கு வேறு என்னென்ன வேலைகள் எல்லாம் தெரியும் என்பதைப் பற்றி, அலசியிருக்கிறான் என்றுதானே அர்த்தம்.

அதனாலேயே, அவளின் மனம் எரிச்சலுற்றது எனலாம்.

"என்னுடைய நிறுவனத்தில் பணி புரிபவர்களி...
தனித்திறமைகளைப் பற்றித் தெரிந்து வைத்துக் கொள்வ...
எனக்குப் பழக்கம் மிஸ். ஜனார்த்தனி!" என்றான் அவளி...
முகத்தைப் பார்த்து மனதைப் படித்தவனாக.

அவன் கூறியது மெய்யோ? பொய்யோ? அவ...
அறியாள். ஆனால், அவளுக்கு நெஞ்சுக்குள் கொஞ்ச...
திக்கென்று ஆனது மட்டும் உண்மை!

முகம் பார்த்து மனதை அறிபவனிடம் அவ...
எவ்வளவு கவனமுடன் இருக்க வேண்டும்!

அதுவும் வெளியே தெரியாதபடி!

கையிலிருந்த பிரஷ் காய்ந்து விடும் முன்பா...
சட்டென்று திரும்பி, உரிய ரிமூவர் வாட்டரில் கழுவி வைக்...
வேலையில் கவனம் போலப் பார்வையைத் தாழ்த்...
கொண்டாள்.

அவளின் முயற்சி, முறுவலை உண்டாக்கிய போது...
அதை வெளிப்படுத்தாமல், "இந்த வேலை இவ்வ...
லாவகமாகக் கைவர, எப்படிப் பழகினாய்?" என்று ஆர்...
வெளிப்படக் கேட்டான் மனுதர்மன்.

கிராமத்து வீட்டிலே வருடத்திற்கு ஒரு மு...
அனேகமாக அது, பொங்கல் விழாவின் போத...
இருக்கும் - சுண்ணாம்பு அடிப்பது வழக்கம்.

இப்போது சுலபமாக, சுண்ணாம்புத் தூளாக...
கிடைப்பதோடு, பட்டையாக பிரஷ்சும் கிடைக்கிறது.

அவள் ஒரு ஏழு, எட்டாம் வகுப்புப் படிக்...
போதெல்லாம், வீட்டில் கல் சுண்ணாம்பைத்தான் ப...
படுத்தினார்கள்.



எலுமிச்சம் பழம் சைஸிலிருக்கும் சுண்ணாம்புக் கல்லைப் பானையிலே கொட்டி, அதில் கொதிக்க வைத்த தண்ணீரை ஊற்றுவார்கள்.

சில மணி நேரம் கடந்த பிறகு பார்த்தால், கல் எல்லாம் வெந்து பேஸ்ட் மாதிரியாகியிருக்கும்.

அதிலும், சுடுநீர் பட்டவுடன் ஒவ்வொரு கல்லும், நாற்புறமும் விரிசல் ஓடி, ஒரு பூ மலர்வதைப் போல, அழகாக வெடித்து விரிவதைப் பார்த்து மகிழ்வதற்காகவே, காத்திருந்திருக்கிறாள் ஜனார்த்தனி.

ஆசையை அடக்க மாட்டாமல், வெண்ணெயைப் போல நைஸாக இருக்கும் வெந்த சுண்ணாம்பிலே கையை வைத்துக் கலக்கித் துழாவி விளையாடிக் கையிலே புண்ணாகி ஓட்டை விழுந்த அனுபவமும் அவளுக்கு உண்டு.

'அதில் எதற்குக் கையை வைத்தாய்?' என்று கேட்டு, முதுகிலே இரண்டு அடியைக் கொடுத்துவிட்டு, மறக்காமல் ஏதோ களிம்பையும் கையிலே தடவி விட்ட அம்மா.

பெண் தன் மனதிலிருக்கும் ஆசையைத் தயக்க முடனே தெரிவிக்க, லேசாகக் கண்கள் விரியப் பார்த்த பிறகு, "சரி, போய் விளையாடு. பானையை உடைத்து விடாமல், ஏதாவது குச்சியை வைத்துக் கலக்கு. சுண்ணாம்புத் தண்ணி கண்களிலே பட்டுவிடப் போகிறது, கவனம்!" என்று எச்சரிக்கை செய்தும் அனுப்புவார்கள்.

கவனமுடன் இருந்தால், தொடர்ந்து விளையாட அனுமதி கிடைக்கும். இல்லையென்றால், என்ன கெஞ்சி, கொஞ்சிக் கூத்தாடினாலும் அனுமதிக்க மாட்டார்கள்.

பிறகு வளர வளர, லாவகமாகப் பல வேலை களையும், அம்மாவிடமிருந்துதான் கற்றுக் கொண்டா அவள்.

ஒரு நல்ல விஷயத்தைப் பற்றித் தெரிந்து கொள் வாய்ப்புக் கிடைத்தால், பயன்படுத்திக் கொள்ள வேண் மென்பார்கள்.

ஆனால், இவற்றை யெல்லாம் இவனிடம் கூ முடியுமா என்ன?

எனவே, "பழக்கமென்று பெரிதாக ஏதுமில்லை சா கண்கள் கவனமுடன் பார்த்து, மனதிலே பதிய வைத்து கொள்ளும்போது, கைகள் தானாக அந்த வேலைய செய்யும் என்பார்களே! அது மாதிரிதான்!" என்று பதிலளித் விட்டு, வேறு வேலையிருப்பதாகக் கூறித் தன்னிடத்திற் விரைந்தாள்.

அவளுடைய பதில் திருப்தியாக இருந்தபோதிலு விரைந்து சென்றவளைப் பார்த்து, ஏனோ அவனுடை முகத்திலே யோசனை ஒன்றும் தோன்றியது!

பிறகு ஒரு பெருமூச்சோடு, வேறு பக்கம் நடந் கொண்டிருந்த வேலைகளைப் பார்க்கச் சென்றான் அவ

அன்றைய தன் வேலை ரிப்போர்ட்டைத் தயாரித் விட்டு, கை விரல்களுக்குச் சொடுக்கிழுத்தபடியே லேசாக கண்களை மூடி குஷன் நாற்காலியில் தலை சாய்த்தா ஜனார்த்தனி.

அடுத்துச் செய்ய வேண்டிய வேலைகளைப் பற் மனதிலே ஓடவிட்டபோது, மதிய உணவு வேளை வந் விட்டிருந்தது.



சக பெண் பணியாளர்களுடன் சேர்ந்து சாப்பிட்டு விட்டுத் தங்கையை ப்ளஸ் ஒன்னில் சேர்க்க, இங்கே எந்த ஸ்கூல் நன்றாக இருக்குமென்ற தகவலைக் கேட்டறிந்தாள் ஜனார்த்தனி.

சுமார் ஐந்து மணியளவில், தன்னுடைய வேலை ரிப்போர்ட்டை, மானேஜர் ரகுவிடம் கொடுப்பதற்காக எடுத்துச் சென்றாள்.

மானேஜர் ரகு!

அந்த மனிதரை, இந்தக் கால இளைஞர்களுக்கு ஒரு நல்ல உதாரணமாகச் சொல்லலாம்.

கடும் உழைப்பாளி!

இல்லையென்றால், இந்த வயதிலேயே இவ்வளவு பெரிய கம்பெனியில், மானேஜராகி யிருக்க முடியாது. பொதுவாக யாரிடமும் கடுமை காட்டாமல், இன்முகத்தோடு பழகும் ரகுவின் பொறுமை, பல தடவை அவளுக்கு வியப்பை உண்டாக்கியிருக்கிறது.

வழக்கம் போலவே இயல்பாகத் தோன்றிய முறுவலுடன், அறைக் கதவைத் தட்டிவிட்டு உள்ளே சென்றாள்.

ரிப்போர்ட்டை வேகமாகப் படித்து உள்வாங்கிக் கொண்டு கையெழுத்திட்டபடியே, அடுத்த கட்ட வேலையைப் பற்றிச் சில நிமிடங்கள் பேசினான் ரகு.

அலுவலக நேரம் முடிந்துவிட, சக பணியாளர்களைப் போலவே வெளியே வந்து, பஸ் ஸ்டாப்பை நோக்கிச் சென்றாள் ஜனார்த்தனி.

அதே வேளையில், மானேஜர் ரகுவின் அறைக்குள் சென்றான் மனுதர்மன்.

# 5

அடுத்ததாக மனுதர்மனைப் பார்க்க நேர்ந்த சில சந்தர்ப்பங்களையும் எப்படியாவது தவிர்க்கவே முயன்றாள் அவள்.

எதிர்ப்புறம் கண்டுவிட்டால், வேறு பக்கமாகச் செல்வது, வேலையில் ஒன்றிவிட்டதைப் போல முகத்தை வைத்துக் கொள்வது என்று, எதையாவது ஒன்றைப் பின்பற்றினாள்.

ஆனால் அதெல்லாம், அடுத்த ஞாயிறன்று வரைதான் செல்லுபடியானது எனலாம்.

ஏனெனில், ஞாயிறன்று ஷாப்பிங் சென்றபோது விலகிச் செல்ல முடியாதபடி எதிரே வந்து நின்று,

"என்னவாயிற்று ஜனார்த்தனி? ஏன், என்னைப் பார்த்தாலே ஒதுங்கிப் போகிறாய்?" என்று நேராகவே கேட்டான் மனுதர்மன்.

இவனை இப்படி, நேரிடையாக எதிர்கொள்ள வேண்டி வரும் என்பதைச் சற்றும் எதிர்பார்க்காததால், உள்ளூர எரிச்சல் மண்டியது அவளுக்கு.

அவளுக்கு எத்தனையோ காரணங்கள் இருக்கும். அதை யெல்லாம் இவனிடம் சொல்லியே ஆகவேண்டுமென்று கட்டாயம் ஏதுமிருக்கிறதா என்ன?

அலுவலக வேலையைத் தவிர, மற்ற விஷயங்களைப் பற்றிக் கேட்க, இவனுக்கு எந்த உரிமையுமில்லை என்பதை முதலில் நன்றாக உறைக்கும்படி தெரிவித்துவிட வேண்டுமென்று பிறந்த வேகத்தில்,

S.No. 2772



"துஷ்டனைக் கண்டால் தூர விலகி விடுவதுதானே நல்லது!" என்றாள் நேரடிப் பார்வையைத் தவிர்த்து.

புருவம் லேசாக நெரிந்து விலக, "இது தவறான கணிப்பு ஜனார்த்தனி!" என்றான் அவன்.

குரலில் இருந்த தெளிவு, அவள் கூறியதைக் கேட்டும், அதற்காக அவன் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லையென்று காட்டியது.

எவ்வளவு நெஞ்சழுத்தம்!

"முதல் சந்திப்பிலேயே உங்களைப் பற்றி நிறையத் தெரிந்து கொண்டவளாயிற்றே நான்...!" என்றாள்.

"அப்போது என்னைப் பெண்களுடன் கண்டபடி சுற்றித் திரிபவன் என்று முடிவே செய்தாயிற்றா?"

"இதுமாதிரிச் சொன்னதாக எனக்கு ஞாபகமில்லை சார்!" என்று கூறிவிட்டு, எதிரே வந்தவர்களுக்காக வழிவிட்டு ஒதுங்கினாள்.

தானும் நகர்ந்து நின்ற பிறகு, "உன் வார்த்தைகளுக்கு இதைத் தவிர வேறு அர்த்தமில்லையே!" என்றவன், ஒரு சிறு மௌனத்திற்குப் பிறகு,

"என்னைப் பார்த்தால், துஷ்டன் என்று நினைக்கும் அளவுக்கு, அவ்வளவு மோசமானவனாகவா தெரிகிறது?" என்றான் நெற்றியை லேசாக நீவியபடி.

"நீங்கள் நல்லவராகவே இருந்தாலும்கூட, அதனால் எனக்கொன்றும் இல்லை சார்!" என்று கூறிவிட்டு, அப்பாவிற்குப் பிடித்த மாங்காய் ஊறுகாய் பாட்டிலை எடுத்துத், தள்ளுவண்டியில் வைத்தாள்.

"ம்... சென்னையில் நடந்த அந்த விஷயங்க
மனதில் வைத்துக் கொண்டுதானே, இப்படி மு
செய்திருக்கிறாய்?"

"ஆமாம். யார் என்னவென்று தெரிந்து கொள்ளு
அளவிற்குக் கூட, பொறுமையோ நாகரிகமோ இல்லாம
பார்த்ததும், 'ஓட்டல் சூட்டிற்குக் கிளம்பலாமா?' என்று கே
உங்களை, உத்தமப் பண்பாளன் என்றா எண்ண முடியு
என்று சுருக்கெனக் கேட்டுவிட்டாள் அவள்.

முதலாளி என்றால், அது அலுவலகத்தோடு நி
வேண்டும். இல்லை யென்றால், இப்படி வருவதை
எதிர்கொண்டுதான் ஆக வேண்டும் என்பது அவளுக்

இந்த வார்த்தைகளைக் கேட்ட பிறகு, அவனு
முகம் கறுத்து, உதடுகள் இறுகின.

அவளின் வார்த்தை அம்புகள் சரியான இலக்
எட்டிவிட்டன போலும்!

எதிரே இருந்தவளை ஒருமுறை கூர்ந்துநோக்கி வி
வேகமாக வெளியேறிச் சென்றுவிட்டான்.

அதன் பிறகு, மனுதர்மனை நினைவிலிருந்து ஒது
மனதைச் சமன் படுத்தவென்றே, கூடுதலாகச் சற்று நே
நடந்து, வேண்டியதையெல்லாம் வாங்கினாள் ஜனார்த்த

பில் போடுமிடத்தில் நின்றபோதோ, இன்று இவ
பற்றி, முகத்திற்கு நேராகப் பேசியதை மனதில் வைத்
கொண்டு, மீண்டும் அலுவலகத்தில் சந்திக்கும்போ
வேலையில் ஏதேனும் குறையென்று சொல்லிக் கொ
வேண்டுமென்றே திட்டுவானோ அவமதிப்பானோ எ
தோன்றியது.



ஒரு கணம் இதுமாதிரி நினைத்தபோதும், மறுகணமே, அவளையும் மீறி மறுத்தசைத்தது தலை.

'எந்த வேலையையும் விட்டு வைப்பதில்லையா?' என்றவன், நிச்சயம் அதில் குறை காணமாட்டான்.

இவ்வளவு நாளாக, இந்தப் பக்கம் எட்டிக்கூடப் பார்க்காமல் இருந்தானே, அதுமாதிரி மீண்டும் வராமல் இருந்து கொண்டான் என்றால், எவ்வளவோ நன்றாக இருக்கும்தான்.

ஆனால் இந்த எண்ணம் அவனுக்கல்லவா தோன்ற வேண்டும்?

அப்படியொரு எண்ணம், துளியும் அவனுக்குத் தோன்றவில்லை என்பதை நிரூபிப்பது போல, மறுநாள் காலை பத்து மணிக்கெல்லாம் அவனுடைய கறுப்பு நிற டயோட்டா பளபளவென்று மின்னியபடி, ஸைட்டிற்குள் நுழைந்தது.

காரின் கதவைத் திறந்து கொண்டு, இயல்பான வேகநடையுடன் உள்ளே வந்தான் மனுதர்மன்.

சற்று நேரத்திற்குப் பிறகு, வேலை நடப்பதைச் சுற்றிப் பார்க்கவென்று வந்தவன், எதேச்சையாக முன்னால் வந்த ஜனார்த்தனியைப் பார்ப்பதை, மிகச் சுலபமாகத் தவிர்த்து விட்டுப் போனான்.

மற்றுமொரு முறை, கீழே இறங்க லிஃப்ட் பட்டனை அழுத்தியவள், லிஃப்ட் வந்து கதவு திறந்தபோது, உள்ளே தனியாக நின்றிருந்தவன், அவள் உள்ளே வந்ததும், ர்ந்து நின்றதோடு, முகத்தையும் மறுபக்கமாகத் திருப்பிக் கொண்டான்.

முதலில் பெரிதாக ஒன்றும் தோன்றவில்லைதா என்றாலும், இரண்டு, மூன்று நாட்களிலேயே, ஏதே ஒருவிதச் சலிப்பான உணர்வு உண்டானது அவளுக்கு

வழக்கம் போலவே வேலைகளைச் செய்தபோது அதில் புதிதாக ஏதோ இயந்திரத் தன்மை வந்துவி மாதிரித் தோன்றியது.

இந்தச் சலிப்பும், இயந்திரத் தன்மையும் முகத்தி வெளிப்பட்டு விட்டதோ? அப்படித்தானிருக்க வேண்டும்.

இல்லையென்றால்...

"என்ன மேடம், முகமெல்லாம் வாடியிருக்கிறது ஒருவேளை, அருகில் இருந்தபோதும் என்னிடம் பேசா இருப்பதால்தான், இந்த வாட்டம் தோன்றியிருக்கிறதே என்று, எனக்குச் சந்தேகமாக இருக்கிறது?" என்று, சி முறுவலோடே கேட்டிருக்க மாட்டான் மனுதர்மன்.

அவ்வளவு நடந்த பிறகும், என்ன இயல்பாக வந் இப்படிக் கேட்கிறான்?

'ஹூம்... இந்தக் காக்கையாவது நிறம் மாறுவதாவது'

முகத்தில் தோன்றிய வாட்டத்தை மறைத்து, இயல்பா இருப்பதுபோல் காட்டியிருக்க வேண்டும்.

அதைச் செய்யத் தவறியதால்தானே... அவன் கண் கொண்டதோடு, கேட்கவும் செய்கிறான்.

அவளாகவே ஒரு வாய்ப்பைக் கொடுத்த மாதி யல்லவா ஆகிவிட்டது என்று, உள்ளூரத் தோன்றியதை ஒதுக்கி வைத்துவிட்டு நிமிர்ந்தவள்,



"விட்டால் நாள் முழுவதும், உங்களைப் பற்றித்தான் நினைத்துக் கொண்டிருக்கிறேன், என்றுகூடச் சொல்வீர்கள் போல் இருக்கிறதே?" என லேசாக உதடு வளையப் பதிலளித்தாள் ஜனார்த்தனி.

கைகளை ஸ்டைலாக மடக்கி, மார்பின் குறுக்கே கட்டிக் கொண்டு, "சரி... நாள் முழுவதும் இல்லையென்றாலும், ஓரிரு நிமிடங்களாவது, என்னைப் பற்றி நினைக்கவில்லை என்று சொல் பார்க்கலாம்?" எனச் சவால் விடும் குரலில் கேட்டான் அவன்.

எவ்வளவு உறுதியான கர்வம்!

மனதிற்குள் பெரிய மன்மதன் என்ற நினைப்பாக்கும்! அதை உடைக்காது போனால், அவள் ஜனார்த்தனியா?

எனவே...

"சர்வ நிச்சயமாக, உங்களைப் பற்றி நினைக்கவில்லை சார். அதற்கு அவசியமும் இல்லை!" என்று தலைச் சிலுப்பலோடு கூறிவிட்டுச் சென்றாள். எதிரே யோசனையோடு நின்றிருந்தவனின் முகத்திலே, ரகசிய முறுவல் ஒன்று தோன்றியது!

ஒரேயடியாக ஸைட்டிலேயே செலவிட, மனுதர்மனிடம் அதிக நேரமில்லை என்பதால், முன்னில் பாதி நேரம் கூட இருக்காமல், 'தான்' முடிவெடுக்க வேண்டிய வேலை விஷயத்தை மட்டும் பார்த்துவிட்டு, உடனே கிளம்பினான்.

மும்பைத் துறைமுகத்தின் பெரும் பகுதி டெண்டர், மனுதர்மனின் குடும்ப வசம்தான் இருந்தது.

அதிலிருந்த வேலைப் பளுவின் காரணமாகவே, அவனுடைய வருகை நேரம் குறைந்தது எனலாம்.

இவர்கள் சின்னப் பிள்ளைகள்தானே! இன்னு கொஞ்ச காலம் விருப்பம்போல வாழட்டுமே! அலுவலக என்ன எங்கேயாவது ஓடிவிடவா போகிறது? எல்லா அண்ணன் பார்த்துக் கொள்வார் என்ற தைரியத்தில்தானே அவர்கள் சந்தோஷமாக இருக்கிறார்கள். அவர்கள உன்னுடன் பிறந்தவர்களாக எண்ணி, இந்த மகிழ்ச்சி என்றைக்கும் காக்கின்ற பொறுப்பு உன்னுடையதுதானே தர்மா!" என்று கூறித் தொடர்ந்து பேச நினைத்தவ எதையும் பேச விடாமல், அழகாகத் தவிர்த்த சித்தி சாமர்த்தியத்தைப் பார்த்து, மெச்சாமல் இருக்க முடியவில்ல அவனால்.

பாட்டியிடம் சொல்லிச் சிரித்தபோது, "நாயகி சாமர்த்தியத்தை நான் இன்று, நேற்றா பார்க்கிறேன். வெ நான்கு நாள் பழக்கத்திலேயே, என் மகனை மண கொள்ள வைத்தவளாயிற்றே அவள்! போகட்டும்.

ஏன்டா! அவள் பெற்ற பிள்ளைகள் மட்டும், ஜாலி இருக்க வேண்டும் என்று நினைக்கிறாளே! உனக் கோபமே வரவில்லையா?" என்று கேட்டார் பாட்டி.

பாட்டியின் கையைப் பற்றி, சுருங்கியிருந்த தோ பகுதியை மெல்ல வருடி, "உண்மையிலேயே கோ வரவில்லை பாட்டி. என்னைக் குளிர்விப்பதற்காகச் சொ வார்த்தைகள்தான் என்றாலும், சித்தி கூறியது போல தம்பி, தங்கையை மகிழ்ச்சியுடன் வாழ வைப்பது கடமைதானே? அவர்களிடம் பிரியம் காட்டக் காரண எதுவும் தேவையில்லை பாட்டி!" என்று பேரன் வாஞ்சையுடன் அவன் கேசத்தை நீவிவிட்டார் பராசக்தி



அன்று மனுதர்மன் சற்றுக் கூடுதல் நேரம் எடுத்து வேலையில் முனைந்திருந்தபோது, அடிக்கின்ற வெயிலுக்கு இதமாக, ஜில்லென்ற, ஃப்ரூட் சாலட் அலுவலகப் பணி யாளர்களுக்கு வழங்கப்பட்டது.

வாரத்தில் இரண்டொரு நாட்களுக்கு, இது மாதிரி குளிர்ச்சியாகக் கொடுப்பது வழக்கமாகத்தான் இருந்தது.

ஆனால் இந்தச் சலுகை, அலுவலகத்தில் இருப்ப வர்களுக்கு மட்டும்தான் என்பது, எப்போதுமே நெருட லாகத்தான் இருந்தது ஜனார்த்தனிக்கு.

அடுத்தொரு வாய்ப்புக் கிடைத்தபோது, "வெளியே வேலை செய்கின்ற சித்தாள், கொத்தனார்களும்கூட உங்களின் கம்பெனிக்காகத்தானே உழைக்கிறார்கள். அவர்களுக்கு இது மாதிரி எதுவும் வாங்கிக் கொடுப்பது இல்லை போலிருக்கிறதே.. ஏன் இந்த பார்ஷியாலிட்டி சார்?" என, மனதில் நினைத்ததை வெளிப்படையாகவே கேட்டாள்.

"பார்ஷியாலிட்டி பார்ப்பதில் எனக்கு எப்போதுமே விருப்பமில்லை. அவர்களுக்கு இந்த ஐஸ்கிரீம், சாலட், எக்ஸ்ட்ராவெல்லாம் பிடிப்பதில்லை. இதற்குப் பதிலாகப் பணமாகக் கொடுத்தால், மாலையில் குடும்ப நபர்களுக்கு ஏதாவது வாங்கிச் சென்று கொடுக்கலாம் என்பது, பெரும் பாலானவர்களின் எண்ணம்.

"அவர்களின் விருப்பத்திற்கு மதிப்பளித்துத்தான், பணமாகவே கொடுக்கும்படி சொல்லியிருக்கிறேன். இதை விட வேறு ஏதாவது செய்ய வேண்டியிருக்கிறதா என்ன?" என்று லேசாகப் புருவம் உயர்த்திப் புன்னகையுடன் கேட்டான் மனுதர்மன்.

"சா... சாரி!" என்றவளின் மூக்கு நுனியில் கொஞ் சிவந்து போனது.

வேலை செய்கிறவர்களின் மனநிலையைப் புரிந் அதற்கு மதிப்பளித்து நடந்து கொள்பவனிடம் இப்ப கேட்டது பிழைதான்.

எனவே, மீண்டும் "சாரி!" என்றவளிடம்,

"எப்போதும் என்னைப் பற்றித் தவறாகத்தான் க வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறாய் போலும்! ந பழக்கம்!" என்று ஏளனமுடனே வெளிப்பட்டன வார்த்தை

என்னவோ அவள் வேண்டுமென்றே தவறாக எ வதுபோல் பேசுகிறானே!

"இது போல ஒரு விஷயம் செய்து விட் என்பதற்காக, உங்களை ரொம்ப நல்லவரென்று செ வேண்டுமென, எதிர்பார்ப்பீர்கள் போலிருக்கிறதே?" என் நேர்பார்வையுடன்.

"நான் நல்லவன் என்ற வார்த்தையை பார்க்கிறேனா? அதுவும் உன்னிடமிருந்து! அப்படியெ நடந்தால், சூரியன் வேறு திசையில் அல்லவா உதயமா என்று, சிறு தோள் குலுக்கலுடன் கூறிவிட்டுச் சென் அவன்.

அவன் குரலும், அந்தத் தோள் குலுக்க அவளுக்கு ஏனோ மனதினுள் ஒருவித முணுமுணு உண்டாக்கியது.

இனி வார்த்தைகளில் கொஞ்சம் கவன இருக்க வேண்டுமென்று, தனக்குத் தானே அறிவுறு கொண்டாள். ஆனால் அதனைக் கடைப்பிடிப்பது மிக கடினமென்பது விரைவிலேயே அவளுக்குப் புரிந்தது.



# 6

முதல் எரிச்சல் தங்கை சிந்துவிட மிருந்துதான் தொடங்கியது.

வசந்தன் கல்லூரிக்குக் கிளம்பிய பிறகு, அவளுக்கு வீட்டில் போரடிக்கத் தொடங்கியது.

இரண்டு தெருவைத் தள்ளியிருந்த சின்ன பார்க்கில், எவ்வளவு நேரம்தான் பொழுதைப் போக்க முடியும்.

அப்பாவையும் அங்கே இங்கேயென்று அழைத்துச் சென்று, தொல்லை கொடுக்கக் கூடாது என்பதால், பெரும்பாலும் கதைப் புத்தகங்களின் உதவியுடனே, நேரத்தை ஓட்டினாள்.

எப்போதாவது சகோதரியுடன் ஸைட்டிற்கு வருவது உண்டு.

அழகான முக வடிவுடன், துறுதுறுவென்று சுற்றிக் கொண்டிருக்கும் சிந்துவைப் பலருக்கும் பிடித்துப் போனதில் வியப்பேதுமில்லைதான்!

அன்றும் அதுமாதிரி வந்தவள், அழகான டிஸைன்கள் வரையப்பட்டிருந்த, ஜன்னல் கண்ணாடிகளை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தபோது அவள் கண்களிலே அந்தப் பொருள் பட்டது.

அது ஒரு பேங்க்கின் ஏ.டி.எம். கார்டு!

அந்த நீளமான காரிடர் பகுதியிலே, தூரத்தில் செல்லில் பேசியவாறு சென்று கொண்டிருந்த, ஒரே ஒரு நெடிய மனிதனைத் தவிர வேறு யாருமேயில்லை.

ஒருவேளை அவருடையதாகத்தான் இருக்குமோ

"ஹலோ... ஹலோ சார்!" என்றழைத்துப் பார்த்

பதிலின்றிப் போகவும்,

"ஹலோ மிஸ்டர் மனுதர்மன்!" என்று அழை

முடிக்கும் முன்பாகவே, சட்டென்று தலையைத் திருப்

பார்த்தான் அவன்.

திரும்பியவனின் புருவங்கள், சிறு வியப்

மேடேறின!

"இந்த ஏ.டி.எம். கார்டு உங்களுடையதா?" எ

தூக்கிக் காட்டி வினவினாள்.

'ஆமாம்!' என்று தலையாட்டியவன், ஃபோன் பே

முடித்துவிட்டு, விரைவாகத் திரும்பி வந்தான்.

தானும் நடையை எட்டிப் போட்டு முன்னேறிய

கார்டை அவனிடம் கொடுத்தாள்.

"தேங்க்யூ மிஸ்!" என்று நிறுத்திவிட்டு அவ

பார்த்தவனிடம்,

"மிஸ் சிந்து!" என்றாள் சிறுமுறுவலுடன்.

"ம்... நைஸ் நேம்!" என்று பாராட்டியவாறு, கா

வாங்கி பர்ஸில் பத்திரப்படுத்தியவன்,

"ஆமாம். நீ இங்கே என்ன விஷயமாக வந்

இங்கே உனக்குத் தெரிந்தவர்கள் யாராவது இருக்

களா?" என்று கேட்டான்.

"வீட்டில் போரடித்ததால், என் அக்காவுடன் வந்

வந்து, உங்களைப் பெயரிட்டு அழைத்து விட்டேன். அ

காக சாரி அங்கிள்!" என்றாள்.



"என்னது! அங்கிளா?" என்று உண்மையாகவே சற்றுத் திகைத்தவன், பிறகு "இந்த அங்கிளுக்குப் பதிலாக, மனுதர்மன் என்றதே தேவலாம் போலிருக்கிறது!" என்றான் முறுவலுடன்.

"பக்கத்தில் வந்து பார்த்த பிறகுதான், உங்களின் காதோரம் நான்கைந்து வெள்ளி முடிகள், லைட்டாக கண்சிமிட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். எப்படியும் ஒரு நாற்பது வயதாவது இருக்குமே என்றுதான் மரியாதையுடன் 'அங்கிள்' என்றேன்!" என்றாள் சிந்து.

"ஓ! அப்படியா பாட்டிம்மா? முதலில் ஒரு கண் டாக்டரிடம் கண்களைக் காட்டி, நல்ல கண்ணாடியாக வாங்கி மாட்டு. பிறகாவது, அடுத்தவரின் வயதைச் சரியாகக் கண்டுபிடிக்கிறாயா என்று பார்க்கலாம்!" என்று வாரினான் அவன்.

"அப்படியே செய்கிறேன் அங்கிள்!" என்று, அந்த அங்கிளிலே ஒரு அழுத்தம் கொடுத்துப் பதவிசாகப் பதிலளித்தாள் சிந்து.

எதிரேயிருக்கும் இந்தச் சின்னப் பெண்ணுக்கு, ஒரு பதினைந்து வயதிருக்குமா?

'இப்போதே என்னமாக கமெண்ட் அடிக்கிறாள்...!' என்று புன்னகைதான் தோன்றியது அவனுக்கு.

மேலும் சிந்துவின் உயரமும், முக அமைப்பும், சிறு சந்தேகத்தை ஏற்படுத்த,

"யார் உன்னுடைய அக்கா?" என்று வினவினான்.

"மிஸ் ஜனார்த்தனி!" என்றாள் கண்கள் பளிச்சிட.

புன்னகை பெரிதாக, "இப்போதுதானே புரிகி... பேசுவதற்கான பயிற்சியை யாரிடமிருந்து பெற்றிருக்கி... என்பது!" என்றான் அவன்.

"இதை நான் எப்படி எடுத்துக் கொள்வது அங்கீ... பாராட்டாகவா? அல்லது கிண்டலடிப்பதாகவா?" எ... சிரித்தவள், "என் அக்காவை உங்களுக்கு நன்றாக... தெரிந்திருக்கும் போலிருக்கிறதே! நீங்களும் இதே கம்... யில்தான் வேலை செய்கிறீர்களா?" என்று கேட்டாள்.

"ம்..." என்றவன், அடுத்து வந்த செல்ஃபோ... அழைப்புகளைத் தவிர்த்து விட்டு, அந்தச் சின்னப்பெ... ணுடனான பேச்சைத் தொடர்ந்தான்.

இருவருக்குமே பேச்சின் போக்கு சுவாரஸ்யத்... கொடுக்க, சில நிமிடங்கள் இனிமையாகச் சென்றன.

மனுதர்மனைத் தேடி யாரோ ஒரு இளை... வரவும், "ஓ.கே. சிந்து! எனக்கு வெளியே கொஞ்... வேலையிருக்கிறது. பிறகு பார்க்கலாம். பை!" எ... கூறிவிட்டு, அந்த இளைஞனுடன் கிளம்பிச் சென்றான்.

அதன் பிறகு, அக்காவைத் தேடிச் சென்ற சி... "என்னக்கா, இந்த வேலை இப்போதைக்கு முடி... போலிருக்கிறதே?" என்று டேபிள் மேல் விரித்து வைத்தி... ஃபைல்களைக் காட்டிக் கேட்க,

சகோதரி மன்னிப்புக் கேட்கும் தொனியில், மே... முறுவலித்தாள்.

"ஆமாம். இப்படி முகத்தைக் காட்டியே சமாளி... விடு!" என்று கேலி செய்தவள், "போகட்டும். இன்றை...



மட்டும் எக்ஸ்கியூஸ் கொடுக்கிறேன் அக்கா. நாளைக்கும், நீ வெளியே வர இயலாது என்று சொல்லக்கூடாது. பிறகு எனக்குப் பொல்லாத கோபம் வந்துவிடும். சொல்லி விட்டேன்!" என்று தெளிவாகத் தெரிவித்துவிட்டு, வீட்டிற்குக் கிளம்பினாள்.

அன்று மாலை வீடு திரும்பியபோது, சமையல் மேடையின் முன்பாக நின்று, ஏதோ செய்து கொண் டிருந்தாள் சிந்து.

இடையிடையே, அதை எடுங்கப்பா, இதை வையுங்கப்பா என்றும் கேட்டது.

ஜனார்த்தனி குளித்து, உடை மாற்றிக் கொண்டு வந்தபோது வாழைப்பூ வெங்காய பக்கோடா செய்து முடித்திருந்தார்கள் இருவரும்.

"அப்பாவை ஏன் கஷ்டப்படுத்துகிறாய் சிந்து?" என்ற மூத்த மகளிடம், "நானாகவேதான் உதவப் போனேன் ஜனாம்மா! எவ்வளவு நேரம்தான் டி.வி. முன்பாகவே உட்கார்ந்து கிடப்பது... நீ முதலில் இதைச் சாப்பிட்டுப் பார். வித்தியாசமான சுவையுடன் நன்றாக வந்திருக்கிறது!" என்றார் தந்தை.

சுவைத்துப் பார்த்துவிட்டு, "ம்... பிரமாதம் சிந்து!" என்று மூத்தவள் பாராட்ட, "தேங்க்யூக்கா!" என்று சிரித்தாள் சின்னவள்.

"சமைக்கும்போது சின்னக் குட்டியின் கைகள், எவ்வளவு வேகமாகச் செயல்படுகிறது தெரியுமா ஜனாம்மா! அப்படியே உங்கள் அம்மாவின் வேகம்!" என்றார் பெரு மிதமாக.

"சமைப்பதென்பதுதான், இவளுக்கு எப்போது
பிடித்தமான விஷயமாயிற்றே அப்பா!" என்றாள் ஜனா.

"ஆமாம்க்கா! புதிதாக ஏதாவது செய்யும்போது, எனக்
ரொம்பவே சந்தோஷமாகத்தான் இருக்கிறது. ஆனால், ஒ
வாழைப் பூ, அதுவும் மீடியம் சைஸ்தான்.

அதையே பன்னிரண்டு ரூபாய்க்குக் குறைவாக
தரமுடியாது என்று கூறிவிட்டார் கடைக்காரர்.

நம்ம ஊரில், பத்து ரூபாய்க்கே மூன்று, நான்கென்
கிடைப்பது... இங்கே இப்படிக் கொள்ளையடிக்கிறார்க
அநியாயம்!

இவ்வளவு விலையேறிக் கிடக்கும்போது, புதிதாக
செய்வது நன்றாக இல்லாதுபோனால், பண விரைய
தானே? அதனால் செய்வதற்கும் கொஞ்சம் தயக்கமாகவே
இருக்கிறது!" என்று ஆதங்கமுடன் கூறியவள் தொடர்ந்

"ஆனால், இதெல்லாம் இன்னும் சில வருடங்க
தானே? நம் நிலத்தை மீட்ட பிறகு, இஷ்டப்பட்டதையெல்லா
அதில் பயிரிட்டுக் கொள்ளலாம்!" என்றாள் மகிழ்ச்
பொங்கும் குரலில்.

மற்ற இருவரின் முகத்திலும், அதன் எதிரொ
தோன்றியது.

இரவு வேலைகளை முடித்துவிட்டுப் படுக்கையில்
பெட்ஷீட்டை விரித்துப் போட்டபடியே, "அக்கா! உ
ஆஃபீஸிலே இருக்கிறாரே மனுதர்மன் அங்கிள். அ
என்ன போஸ்டிங்கில் உள்ளார்? உன்னைவிட மேலேயா
கீழேயா?" என்று மிக இயல்பான குரலில் தங்கை கே
கவும், சட்டென்று திரும்பி,



"மனுதர்மன் அங்கிளா! இப்படியா அவரை அழைத்தாய்?" என்று சிறு வேகமுடனே கேட்டாள் ஜனார்த்தனி.

ம்... இதை அவனுடன் அன்று, ஓட்டல் கூட்டிற்குப் புன்னகை வழியச் சென்றாளே, அந்தப் பெண் கேட்டிருக்க வேண்டும்.

கேட்ட மாத்திரத்திலேயே, மயங்கிக்கூட விட்டிருப்பான் பாவம்! என்று சட்டென எங்கோ செல்ல முயன்ற நினைவை நிகழ்வுக்குக் கொணர்ந்து,

"சொல்லடி! நீ அங்கிள் என்றழைத்ததைக் கேட்டு, அவர் ஒன்றும் சொல்லவில்லையா? நீ எதற்காக அவரிடம் பேசவேண்டி வந்தது?" என்று மூத்தவளாக விசாரித்தாள்.

நடந்தவற்றை விவரித்த சிந்து, "முதலில் அவருக்கு ஷாக்தான். பிறகு அதையே கிண்டலாக்கி விட்டார். நைஸ் மேன்!" என நற்சான்று வழங்கினாள்.

ஆமாம். அந்த நைஸ் மேனின் இன்னொரு முகம், எப்படிப்பட்டதென்று அவளுக்குத்தானே தெரியும்!

"நான் கேட்டதற்கு முதலில் பதில் சொல்லுக்கா!" என்று தன் கேள்வியிலேயே நின்றாள் சின்னவள்.

"எல்லோருக்கும் மேலே கம்பெனியின் முதலாளியாக இருக்கிறார். போதுமா?" என்று சிறு எரிச்சல் எட்டிப் பார்க்கக் கூறினாள்.

"ஆ...ங்! அவர் உன் பாஸா?" என்று விழிகளை விரித்தாள் சிந்து.

முகத்தில் எதையும் வெளிப்படுத்தாமல், மடித்த துணிகளை அடுக்கியெடுத்து, அலமாரியினுள் வைத்துக்

கதவை மூடிய ஜனார்த்தனி, "இதிலே, நீ இவ்வள வியப்படைவதற்கு என்ன இருக்கிறது?" என்று கொஞ்ச அசட்டையாகவே கேட்டாள்.

"என்னக்கா இப்படிச் சொல்லிவிட்டாய்? கொஞ்சமு பந்தா பண்ணாமல், எவ்வளவு இயல்பாகப் பேசினா தெரியுமா?

இந்தக் காலத்தில் யார் இப்படி யிருக்கிறார்கள் ஓரளவிற்கு வசதி வந்து விட்டாலே, மற்றவர்களை மதி காமல், ரொம்பவும் அலட்டிக் கொள்கிறார்கள். நாமே அப் எத்தனை பேரைப் பார்த்திருக்கிறோம்!" என்றாள்.

மனுதர்மனைப் பற்றி வரிந்து கட்டிக் கொண்டு பேசு தங்கையின் முதுகில், வலிக்க ஒன்று வைக்க வேண்டு போல் தோன்றியது அவளுக்கு.

விட்டால் வார்த்தையினால் பாராட்டு விழாவே எடுத் விடுவாள் போலிருக்கிறதே!

"சிந்து! அவர் பெரும்பாலும் எல்லோரிடமு சாதாரண இயல்புடன்தான் பேசுகிறார். இது பணக்கார களின் இன்னொரு வழி.

எவ்வளவு பெரிய மனிதர், நம்மிடம் சகஜமாக பேசுகிறாரே என்று, அடுத்தவர்களை வியக்க வைத் அவர்களின் நன்மதிப்பைப் பெறுகிற யுக்தி.

'இந்த வேலையைப் பிரமாதமாக முடித்திருக்கிறீர்கள் என்று மனுதர்மன் பாராட்டுவதுபோல் கூறினால், மறுமு இன்னும் நன்றாகச் செய்ய வேண்டுமென்று முடிவெடு பார்கள். அதனைக் கேட்பவர்கள்.



"லாபம் அவருடைய கம்பெனிக்குத்தானே, புரிந்ததா?" என்று கூறிவிட்டுக் கட்டிலிலே படுத்துக் கண்களை மூடினாள் ஜனார்த்தனி.

'ம்... புரிகிறது!' என்றவள், கொஞ்சம் கேலியாகப் பார்த்து, "அவரைப் பற்றி ரொம்பவும்தான் தெரிந்து வைத் திருக்கிறாய் போலிருக்கிறதே அக்கா?" என்று, நகைக் குரலிலே கூறினாள்.

"இது அங்கே பணிபுரிகிற பலருக்கும் தெரிந்த, பொதுவான செய்திதான். இதற்கு மேல் தொணதொணக் காமல், என்னைத் தூங்க விடும்மா, தாயே!" என்று கூறிவிட்டு, பெட்ஷீட்டை இழுத்துப் போர்த்திக் கொண்டாள்.

உண்மையிலேயே அவளுக்குத் தூக்கம் வந்ததா? அன்றி, மேற்கொண்டு மனுதர்மனைப் பற்றிப் பேசுவதைத் தவிர்க்க நினைத்தாளா என்பது அவளுக்குத்தான் தெரியும்!

"ஓ.கே. நீ சொன்னால் சரியாகத்தானே இருக்கும் அக்கா! ஒரு வார்த்தைகூட மறுக்காமல், அப்படியே ஏற்றுக் கொள்கிறேன். குட் நைட்!" என்று கூறி, லைட்டை ஆஃப் பண்ணினாள் சிந்து.

மறுதினம், ஆஃபீஸில் பர்மிஷன் பெற்றிருந்ததால், சொன்னது போலவே சிந்துவை வெளியே அழைத்துச் சென்றாள் ஜனார்த்தனி.

சகோதரிகள் இருவரும் சளசளவென்று பேசியவாறே, தேவையானவற்றை வாங்கினார்கள்.

பாசி வகை மணிகள், உருளையான வளையல், மெட்டல் தொங்கட்டான், டிசைன் பொட்டு, ஐ லைனர், இத்யாதி என்று... தங்கை தேடித் தேடித் தேர்வு செய்த

போதும், பொருளின் விலை கட்டுப்படியாகுமா என்று பார்த் பிறகே, தனியாக எடுத்து வைப்பதைக் கண்டாள்.

இந்தக் காலத்து 'டீன் ஏஜ்' பெண்களில் பெரு பாலானவர்களைப் போல, பிடித்த பொருளின் விலை என்னவாக இருந்தாலும் பரவாயில்லை, அதை வாங்கி ஆகவேண்டுமென்கிற ரகமில்லை சிந்து.

பார்த்துப் பார்த்துச் செலவழிப்பதிலே கெட்டிக்காரி

"அக்கா! இந்தத் தேன் கலர் கிரிஸ்டல் மாலையை பாரேன். உன் சேரி காஸ்டியூமிற்குத் தினமும் அணிந் கொள்ளப் பொருத்தமாக இருக்கும். தங்க மணிகளை போல் அழகாயிருக்கிறது!" என்று ஜனார்த்தனியின் கழு திலே வைத்துப் பார்த்தாள்.

எதிரேயிருந்த கண்ணாடியின் முன்பாகச் சென் நின்றாள் ஜனார்த்தனி.

சுட்டு விரல் நீளத்திற்கு, உளுந்தம் பருப்பு சை அடுத்துப் பட்டாணி, அடுத்துச் சிறிய நெல்லிக்கனி என் சைஸ் வாரியாகக் கோக்கப்பட்டிருந்த மாலையின் விலை இருநூற்றுப் பதினைந்து ரூபாய் என ஒட்டப்பட்டிருந்தது.

அதையும் தனியாக எடுத்து வைத்துவிட்டுச் சிந் பள்ளி செல்வதற்குத் தேவையான சில பொருட்களையு வாங்கினார்கள்.

"இதுவரை ஆயிரத்து நூறுக்குச் செலவு செய்து ளோம். மீதமிருக்கின்ற நானூறுக்கு, உனக்குக் காட்டன் சே ஒன்று வாங்கி விடலாம், அக்கா!

அடுத்த திருப்பத்தில் இருக்கிற துணிக்கடையின் ஷோ கேஸில், கறுப்பு நிறத்தில் தங்கப் பூக்கள் தூவினாற் போல ஒரு சேரியைப் பார்த்தேன்.



உனக்கும் பிடித்தால், அதையே வாங்கிவிடலாம்!" என்றாள்.

"இப்போது புதுத் துணி வாங்க வேண்டிய அவசியமெல்லாம் எதுவுமில்லையே சிந்து. வேண்டாம்!" என்று மறுத்தாள் பெரியவள்.

"அவசியம் ஏற்பட்டால் மட்டும்தான் வாங்க வேண்டுமா என்ன?

வேண்டியதை வாங்கிக் கொள் என்று, இந்தப் பணம் முழுவதையும் எனக்காகத்தானே கொடுத்தாய்?

"அதனால், பேசாமல் என்னுடன் வாக்கா!" என்று கூறி அழைத்துச் சென்றாள்.

தங்கையின் வற்புறுத்தலுக்காகவே சென்றவளுக்குப் பார்த்த மாத்திரத்திலேயே சேலை பிடித்துப் போயிற்று!

அந்த ஜெய்ப்பூர் காட்டனை வாங்கிக் கொண்டு, மீதமிருந்த சில்லறைக்கு, ஆளுக்கொரு கார்னெட்டோ ஐஸ் கிரீமை வாங்கிச் சுவைத்துவிட்டு, ஆனந்தமாக வீடு திரும்பினார்கள்.

வாங்கிய பொருட்களை, ஒவ்வொன்றாக அணிந்து கொண்டு, கண்ணாடி முன்னால் நின்று, திரும்பித் திரும்பி அழகு பார்த்தாள் சிந்து.

"ஹேய்! எவ்வளவு நேரமாகத்தான் பார்ப்பாய்! அந்தி சாய்ந்துவிட்டது. முதலில் சாமி படத்திற்கு விளக்கேற்றி வை!" என்று ஜனார்த்தனி விரட்டிய பிறகுதான், அறையை விட்டு வெளியே வந்தாள்.

# 7

அழகாகத் தொடுத்து முடித்த அரளிப் பூ மாலையை நடுவிலே வைத்துச் சுற்றியும் செவ்வந்திப் பூவை அடுக்கிவிட்டு தீபம் ஏற்றினாள் ஜனார்த்தனி.

எதிர்பார்த்த மாதிரியே, சிந்து நல்ல மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றிருந்தாள்.

கடவுளை வணங்கிவிட்டுக் காலை உணவிற்கு கூடுதலாக, ஜவ்வரிசி பாயசம் செய்து வைத்தாள்.

அடுத்த வாரத்திலேயே, தேவையான சான்றிதழ்களைப் பெற்று வந்து, நல்லதொரு பள்ளியிலே சிந்துவை ப்ளஸ் ஒன் சேர்த்தும் விட்டாயிற்று.

அலுவலகத்திலும், அடுத்தடுத்துப் புது வேலைகள் வந்ததால், நேரம் விரைவாகச் சென்று மறைந்தது.

மறுமுறை, குபேரன் பில்டர்ஸ்ஸிற்குப் போனபோது அங்கே மனுதர்மனைச் சந்தித்தாள் சிந்து.

சிறு தயக்கமுடனே நின்றவளைப் பார்த்து, முதலில் முறுவலித்தது அவன்தான்.

"என்னம்மா சிந்து, யாரையோ எதிர்பார்த்துக் காத்திருக்கிறாய் போலிருக்கிறது!" என்றான் அருகில் வந்தபடி.

உள்ளூரத் தோன்றிய புன்னகையை மறைத்து "நிச்சயமாக உங்களை எதிர்பார்த்து நிற்கவில்லை அங்கிள்" என்றாள் சாது போல!



ஒரு கணம் கூர்ந்து பார்த்த பிறகு, சட்டென்று கண்களின் ஓரம் மடிப்பு விழச் சிரித்து,

"நல்ல வேளை எனக்கு வலுவுள்ள இதயம். இல்லையென்றால், இந்நேரம் நொறுங்கி விட்டிருக்கும். அக்காவும், தங்கையும் வார்த்தையை வெளிவிடும்போது, எதிராளி மீது தயவு தாட்சண்யமென்று எதையும் காட்டுகிற பழக்கமில்லை என்று தெரிகிறது.

இப்படி நறுக்கெனக் கத்தரித்தாற்போல் பேசுவது, உங்கள் இருவருக்கும் பாதுகாப்புக் கேடயமா என்ன? வினாடி நேரம்கூட விட்டு விடாமல், பற்றிக் கொண்டே இருக்கிறீர்கள்?" என்றான்.

"அடடா! அதற்குள் கண்டுகொண்டுவிட்டால் எப்படி அங்கிள். அநியாயத்திற்கு, உங்களின் மூளை இவ்வளவு வேகமாக வேலை செய்யக்கூடாது!" என்றவளுக்கு, அதற்கு மேல் சிரிப்பை அடக்க இயலவில்லை.

"நீங்கள்தான் இந்தக் கம்பெனியின் பாஸ் என்று, அப்போது எனக்குத் தெரியாது அங்கிள். அதனால்..." என்றவளை இடையிட்டு,

"தெரிந்த பிறகும், இப்போது நீ கொடுத்த வரவேற்பை, இந்த ஜென்மத்திற்கும் மறக்க மாட்டேனம்மா!" என்றவனின் தோள்கள் குலுங்கின.

கையில் ஃபைலுடன் அந்தப் பக்கமாக வந்த ஜனார்த்தனி, "எனக்கு உடன் வருவதற்கு நேரமில்லை சிந்து. தைக்கக் கொடுத்திருக்கும் யூனிஃபார்மை வாங்கிக் கொண்டு, நீ வீட்டிற்குக் கிளம்பு!" என்றாள்.

"நானும்கூட ... பக்கமாகப் போக வேண்டுமென்று சொல், சிந்து. ... பண்ணுகிறேன்!" என்றான் மனுதர்மன்.

தமக்கையின் முகத்தைப் பார்த்தவளுக்கு ... தெரிந்ததோ?

"இங்கே பக்கத்தில்தான் அங்கிள். நானே போ... கொள்வேன்!" என்று சிந்து தெரிவிக்க,

திரும்பி நின்று, "என்ன ஜனார்த்தனி! உன் அ... யின்றி உன் தங்கை வர மாட்டாள் போலிருக்கிற... என்றான்.

"நான் மறுத்தெதுவும் கூறவில்லையே!"

"மறுப்பை வார்த்தையால் கூறினால்தானா என்... ஒரே ஒரு பார்வையினாலும் தெரிவித்துவிட முடியு... என்றவன்,

"சின்னவர்கள், மரியாதையின் பேரில் நம்... அனுமதி கேட்கும்போது, நாமும் அதற்குத் தகுந்தாற்... நடந்து கொள்வதுதான் நாகரிகம். இதை இன்னொரு... சொல்லும்படி நீ நடந்து கொள்வது, கொஞ்சம் ... பாகத்தான் இருக்கிறது!" என்றான் ஒரு மாதிரியான கு...

'நம் வீட்டுப் பிள்ளைகளின் மேல் நமக்கு நம்பி... இருந்தால், ராஜ வீதியில் போய், மந்திரி வீதியில் ... வரலாம்' என்று எப்போதாவது அம்மா சொல்வதுண்...

'வயதுப் பெண்ணைத் தனியே அனுப்புகிறா... என்று யாராவது கேட்கும்போது, இது மாதிரிச் சொ... நினைவு.

மெல்லிய மூச்சை வெளியிட்டவள், பிறகு ... பார்த்து முறுவலித்து, "சரி. வீட்டிற்குச் சென்றதும் எனக்கு ஃபோன் பண்ணு...!" என்று கூறிவிட்டுச் சென்றாள்.

சந்தோஷமாகத் தலையாட்டினாள் சிந்து.

நெடுஞ்சாலையின் நெரிசலிலும், அனாயசமாகக் காரை ஓட்டியவன், "ஒரு சின்ன விஷயத்திற்கும், உன் அக்காவிடம் அனுமதி கேட்க வேண்டியிருப்பது, உனக்குச் சலிப்பையோ, எரிச்சலையோ உண்டாக்கவில்லையா?" என்று கேட்டான்.

நொடிப் பொழுதும் தாமதிக்காமல், "கொஞ்சம்கூடக் கிடையாது அங்கிள். எங்களை எப்படி வழி நடத்த வேண்டுமென்பது அக்காவிற்குத் தெரியும்.

இப்போதும், ஒரேயடியாக மறுத்திருந்தார்கள் என்றால், நான் உங்கள் காரில் வந்திருக்கவே மாட்டேன்!" என்று தெளிவாகத் தெரிவித்தவளைப் புருவம் மேடேறப் பார்த்தான் மனுதர்மன்.

எதையோ நினைத்து, இளம் புன்னகை ஒன்று வெளிப்பட்டது அவன் முகத்தில்.

விழிகளை விரித்த சின்னவளிடம், "ம்... ரொம்ப நல்ல வளர்ப்பு முறை!" என்றான், பாராட்டுவது போல.

பிறகு, அவளுக்கு ஆரம்பிக்கவிருக்கிற ப்ளஸ் ஒன் வகுப்புகள், பள்ளியைப் பற்றிய விசாரிப்புகள் என்று பேச்சு ஓடியது.

இதன் இடையே, அவனுக்கு வந்த ஃபோன் அழைப்புகள், சிலவற்றுக்கு அளித்த பதிலைக் கேட்டு,

தவன், "உனக்கு அதைப் பற்றி ஏதாவது தெரியுமா?" என்று கேட்டான்.

"நேரடி அனுபவமெல்லாம் எதுவுமில்லை அங்கிள்! சினிமாவில் துறைமுகத்திற்கு வரும் பொருளைச் சா தியமாகக் கொள்ளையடிப்பதைப் போல் காட்டுவ பார்த்திருக்கிறேன். நிஜத்திலும் அப்படி நடக்குமா?"

மெல்லச் சிரித்து, "அதுதான் சினிமாவில் காட்டுவ என்று நீயே சொல்லிவிட்டாயே! அதெல்லாம் அவ்வ சுலபமான காரியமல்ல! டைட் செக்யூரிட்டி இருக்கும்.

பணம் அதிகமாகக் கைமாறுகிற இடமாயி குறிப்பிட்ட எல்லைக்கு மேல் பாதுகாப்பும் பலமாகத் இருக்கும்.

தன்னுடைய பொருளைத் திருட்டுக் கொடுக்கா காப்பது, அவரவரின் பொறுப்புதான். எனக்கு இது உன் சினிமா காட்சிகள் போன்ற சம்பவம் நடக்கவில் நடக்க வாய்ப்புக் கொடுக்கவும் மாட்டேன்!" என்றவன், அ சொன்ன இடத்தில் காரை நிறுத்தினான்.

டெய்லரிங் கடையிலிருந்து துணிகளை வா கொண்டு திரும்பி வந்தவள், "அடுத்துள்ள பஸ் நிறுத் விட்டுவிடுங்கள் அங்கிள்!" என்றாள்.

அவ்வாறே செய்தவன், அவள் காரின் கத திறந்தபோது, "வீட்டிற்குப் போனதும் எனக்கும் ஃ செய்துவிடு!" என்று தன் கார்டை நீட்டினான்.

"நீ பத்திரமாக வீட்டை அடைந்தாயா என்ற அக்கறை உன் அக்காவிற்கு மட்டும்தான் இருக்க வேண்டுமா?" என்றவனைப் பார்த்துப் பளிச்சென்று முறுவலித்து,

"கட்டாயம் செய்கிறேன் அங்கிள்! தேங்க் யூ பை!" என்று கூறிவிட்டுத் தன் பையுடன் காரை விட்டு இறங்கினாள்.

ஒரு தலையசைவுடன் காரைக் கிளப்பிக் கொண்டு சென்றான் அவன்.

நேரமும் காலமும் அதிவிரைவாகச் சென்று மறைய, தன் புது சைக்கிளில் பையை மாட்டிக் கொண்டு, பள்ளிக்குச் செல்லத் தயாராகினாள் சிந்து.

பஸ்ஸில் இடிபட்டுக் கொண்டு செல்லப் பிடிக்காமல், ஓரிரு நாட்கள் நடந்தே சென்று வரவும் செய்தாள்.

கிட்டத்தட்ட நான்கு கிலோ மீட்டர் தூரம் நடந்து, சோர்வுடன் திரும்பியவளின் முகத்தைப் பார்த்து விட்டுத்தான், உடனே சைக்கிளுக்கு ஏற்பாடு செய்தாள் ஜனார்த்தனி.

தமக்கையிடம் கையசைத்துவிட்டு விரைந்து சென்ற சிந்துவிற்கு, அன்றுதான் 'முதல் வகுப்புத் தேர்வு' ஆரம்பிக்க இருந்தது.

தஞ்சாவூரில் இருந்தபோது, ஏழெட்டுப் பேருடன் செட்டு சேர்ந்து கொண்டு, பள்ளி முழுக்கச் சுற்றிக் கொண் டிருந்தவர்களுக்கு, இங்கே புது ஃபிரண்ட்ஸ் கிடைப்பதற்குச் சில நாட்கள் ஆனது.

அதற்குக் காரணமும் அவளேதான்.

மிகவும் சகஜம்போலக் கண்ணில் படுகின்ற பெரு
பாலானவர்களையும் கிண்டல் செய்து, தங்களுக்கு
சிரித்துக் கொண்டிருந்த 'ஓல்டு ஸ்டூடண்ட்ஸ்' சில
இவளையும் விட்டுவைக்கவில்லை.

முதலில் உண்மையாகவே மிரண்டு போன சிந்
சட்டென்று யாரிடமும் நட்புப் பாராட்ட முடியாமல் ஒதுங்கி
போனாள்.

ஃபிரண்ட்ஸ் என்ற பெயரிலே, எந்தத் தொல்லைகளு
வேண்டாம் என்பது அவளுக்கு.

ஒரேயடியாக ஒதுங்கவும் முடியாமல், கிராமத்துக் கி
என்று நிக் நேம் வைத்தார்கள் அவளுக்கு.

உள்ளூர கோபம் கொதித்தபோதும், காதில் விழு
மாதிரியே காட்டிக் கொள்ளாமல் போனாள்.

வகுப்புகள் தொடங்கி நான்கு நாட்கள் கடந்
சென்றதும், அவள் நன்றாகப் படிக்கிற பெண் என்ப
ஆசிரியர்களுக்கும் வகுப்பில் உள்ளவர்களுக்கும் தெரிந்
போகவும்,

சிலர் தாங்களாகவே வந்து பேசி நட்பானார்கள்.

அன்றையத் தேர்வில் இரண்டாவது மார்க் வாங்
அனைவரின் கைதட்டலையும் பெற்றபோது, பூவாக மலர்ந்
அவளின் முகம்!

பிறகு அவளைச் சுற்றி நல்ல நட்பு வட்டம் உ
டானது.



வழக்கம் போலவே, இரவு உணவு வேளை கடந்த பின்னர், எல்லோருமாக அமர்ந்து, அன்றைக்கு நடந்த விஷயங்களைப் பற்றிப் பகிர்ந்து பேசிக் கொண்டிருந்த போது.

வசந்தனிடமிருந்து ஃபோன் வந்தது.

நலம் விசாரிப்புகள் முடிந்த பிறகு, தனக்கு ஓட்டல் ஒன்றில் பார்ட் டைம் வேலை கிடைத்திருப்பதாகவும், ஓரளவிற்கு நல்ல சம்பளமே என்பதால் போகலாம் என்றிருப்பதாகவும், அதற்கு அவர்களின் அனுமதி வேண்டும் என்றும் கேட்டான்.

சில கண அமைதிக்குப் பிறகு, "என்னடா! திடீரென்று பார்ட் டைம் ஜாப் யோசனை யெல்லாம் உனக்கு ஏன் தோன்றியது? அதற்கு இப்போது என்ன அவசியம் வந்தது?" என்று கேட்டாள் மூத்தவள்.

"அவசியம் ஏற்பட்டால்தான் சம்பாதிக்க வேண்டுமாக்கா? நீ தனியாகவே, எவ்வளவு நாளைக்குத்தான் எல்லாவற்றையும் சமாளிப்பாய்.

இங்கே ஆகின்ற அதிகப்படி செலவிற்காவது அந்தப் பணம் உதவுமில்லையா?

இந்த வேலையால், படிப்பில் எந்தவிதப் பின்னடைவும் ஏற்படாமல் பார்த்துக் கொள்கிறேன். ப்ளீஸ் ஓ.கே. சொல்லுக்கா!" என்றான் விடாப்பிடியாக.

"அடடா! இத்தனை வருடம் கழித்து இப்போதுதான் நல்ல விதமாக யோசித்திருக்கிறான். அதை ஏன் மறுக்கிறாய்?" என்று சின்னவள் வழமைபோல் வாரிவிட,

"என் சார்பாக, அவள் தலையிலே இரண்டு கொட்டு கொட்டுக்கா. மறக்காமல் உடனே கையைக் கழுவி விடு.

இல்லையென்றால், வெளியே வரும் களிமண்ணெல்லா அப்படியே ஒட்டிக் கொள்ளப் போகிறது!" என்று பதிலுக் திருப்பியவனின் கேலியில்,

மிக மிக மிருதுவான புன்னகை ஒன்று வெளிப்பட் அவளிடம்.

மகளின் புன்னகை திருப்தியளிக்க, "இப்படியொ ஐடியா இருக்கிறதுப்பா என்று, போன தடவை வந்தபோ என்னிடம் சொன்னான் ஜனாம்மா.

நல்ல இடமாக இருந்தால், பார்த்துக் கொள்ள விடுடா என்று சொல்லியிருந்தேன். அவனுக்குப் பி திருக்கும் போல் தெரிகிறது.

"செய்துதான் பார்க்கட்டுமேம்மா!" என்றார் பெற்ற

"அதில்லைப்பா! படிக்கிற போதே எதற்கு இந் கஷ்டமெல்லாம் என்று தோன்றுகிறது!" என்று தயக்கமுட கூறினாள்.

"இதை, அவன் கஷ்டமென்று நினைக்கவில்ல யேம்மா. நீ படிக்கிற காலத்திலே, என்னுடன் சேர் தோட்டத்திலே வேலை செய்வாயே, மறந்து போயிற்றா

இதையும் அது மாதிரியே நினைத்துக் கொ உன்னைப் போலவே அவனும் படிப்பில் கவனமு இருப்பான்!" என்றார் தெளிவாக.

வசந்தன் கூறிய வேலையைப் பற்றி, மேலும் விளக்கங்களைக் கேட்டுத் தெளிவான பிறகே, சரியெ சம்மதித்தாள் ஜனார்த்தனி.



அப்போதுகூட, அரை மனதுடனேதான் ஒப்புக் கொண்டது உள்ளம்.

ஏனோ இந்த விஷயத்தில், முழு ஈடுபாடு உண்டாக வில்லை அவளுக்கு!

அப்பா அவ்வளவு தெளிவாகக் கூறிய பின்னரும் கூட, ஒரு சின்ன முணுமுணுப்புத் தோன்றிக் கொண்டே இருந்தது.

உள்ளுணர்வு தெரிவிக்கும் விஷயத்தை எப்போதுமே, சாதாரணமாக எண்ணி விட்டுவிடக் கூடாது. அப்படி விட்டு விடும்போது, சில பல கஷ்டங்களை அனுபவிக்க வேண்டிய தாகி விடுகிறது.

வசந்தனின் 'பார்ட் டைம் ஜாப்'பினால், தன் வாழ்வே தலைகீழாக மாறிப் போகக் கூடும் என்பது, அப்போது அவளுக்குத் தெரியாது போயிற்று!

ஒருவேளை, உள்ளுணர்வு அதைத்தான் சொல்ல முற்பட்டதோ?!

## 8

**அ**வள் கூறியிருந்தபடியே, அடர் சிவப்பு நிறச் செம்மண்ணைக் கொண்டு வந்து, தோட்டம் அமைப்பதற்காகவென்று, மாலின் முன்புறம் ஒதுக்கப்பட்டிருந்த இடத்திலே கொட்டி வைத்திருந்தார்கள்.

தண்ணீர் பட்டதும், நீரை ஆழமாக உறிஞ்சிக் கொண்டு, ஓரிரு நாட்களிலேயே மேல்புறம் உலர்ந்து விடுகின்ற செம்மண்தான், செடிகள் வைக்க ஏதுவானது.

அடிக்கடி மண்ணைக் கிளறிக் களைகள் முளைக்காமல் பார்த்துக் கொள்ள வசதியாக இருக்கும்.

இந்த வசதி களிமண்ணில் கிடைக்கக் கூடுதல் நாளாகும் என்பதால்தான், புல்தரை அமைப்பதற்கு மட்டும் களிமண்ணைப் பயன்படுத்தலானாள் ஜனார்த்தனி.

ஒரு பிடி மண்ணை அள்ளி உதிர்த்து விட்டாள். கோரைப் புல்லின் கிழங்குகள், அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தென்பட்டன.

அப்படியே விட்டால், மீண்டும் மீண்டும் கிழங்குகளை அப்படியே விட்டால், களை வந்து கொண்டேயிருக்கும்.

பட்டாணி சைஸிலிருக்கும் அவற்றைக் கையினால் கிளறிப் பொறுக்கி எடுத்து நேரத்தை வீணடிப்பதைவிட,

இரண்டு ஆட்களை அழைத்து, மணல் சலிக்கும் சல்லடையில் கொட்டிச் சலித்தால், வேலை விரைவாகவும் சுலபமாகவும் முடிந்துவிடும்.

அவ்வாறே செய்தபோது தூசு துப்பு நீக்கப்பட்டு அள்ளிப் பார்க்கவே இதமாக இருந்த மண்ணை, ஜா... களிலும், செடிகள் வைக்கவென்று வட்டமும், நீளமுமாகச் செங்கல் கலவையால் கட்டிவிடப்பட்டிருந்த இடத்திலும் கொட்டச் சொன்னாள்.

அப்போதுதான், ஸைட்டை பார்வையிட்டுக் கொண்டு வந்த மானேஜர் ரகு, அங்கு வந்தான்.

"ம். உங்கள் வேலை ஜரூராக நடக்கிறது போலிருக்கிறது ஜனா!" என்று பேச்சுக் கொடுத்தான்.

இருவருக்கும் இடையே சில கருத்து ஒற்றுமைகள் இருக்கவும், பேச்சு சுவாரஸ்யமாகவே சென்றது.



வெட்டியாக நின்று, அரட்டை அடித்தார்கள் என்று சொல்ல முடியாதபடி, வேலை விஷயமாகத்தான் பேசினார்கள்.

ஆனால் அதையும்கூட, இப்படி நல்லவிதமாகப் புன்னகையுடனே பேசுவதற்கு, எத்தனை பேரால் முடிகிறது!

அப்போது, முழு வேகமுடன் காரை ஸைட்டிற்குள் கொண்டு வந்து நிறுத்திய மனுதர்மன், கதவைத் திறந்து கொண்டு வெளியே வருவதற்குச் சில வினாடிகள் ஆனது.

காரணம், இறுகி விட்டிருந்த அவன் முகம்தான்!

கையெட்டும் தூரத்தில் நின்று பேசிக் கொண்டிருந்த இருவரையும் பார்த்து, ஏனோ உள்ளூர ஆத்திரம் உண்டானது!

அந்த ஆத்திரத்தில் இறுகிப்போன முகத்தைச் சரிப்படுத்திக் கொள்ளத்தான், சில வினாடிகளை எடுத்துக் கொண்டான்.

ஒரே அலுவலகத்தில் பணிபுரிகின்ற இருவர் பேசிக் கொள்வது, சாதாரண விஷயம்தானே! அதற்கு ஏன் தனக்கு இப்படி முகம் இறுகிப் போகிற அளவிற்கு ஆத்திரம் தோன்ற வேண்டும் என்ற கேள்வியும் எழும்பியது அவனுக்கு.

ஆனால் பதில்தான், உறுதியான பதில்தான் கிடைக்கவில்லை!

இதுவே மானேஜர் ரகு, ஜனார்த்தனியைத் தவிர, வேறு யாருடன் நின்று கொண்டு இருந்திருந்தாலும், தனக்கு இப்படித் தோன்றியிருக்காது என்பது மட்டும் நிச்சயம்.

கீழேயிறங்கிக் கதவை அறைந்து மூடிவிட்டுத் தன் அறையை நோக்கிச் சென்றான்.

கதவு மூடிய சத்தத்தில் சட்டென்று திரும்பியவர்கள் ஜனார்த்தனி லேசான உதட்டுச் சுழிப்புடன் நிற்க,

"ஓ! பாஸ் வந்தாயிற்றா? பிறகு பார்க்கலாம் ஜ என்று விட்டு, வேகமாக விரைந்து சென்று கட்டடத்திற் நுழைந்தான் ரகு.

அன்று மாலை 'ரிப்போர்ட்' கொடுக்கச் சென்றபோ அவள் முகத்தைப் பார்த்து வாங்க முடியாத அளவி பிஸியாக இருப்பது போல, ரிப்போர்ட்டை வேகமா படித்துக் கையெழுத்திட்டு அவள் புறம் வைத்தவன், அ வேகமுடன் ஒரு ஃபைலை எடுத்துப் பிரித்தான்.

தன்னுடன் நட்போடு பழகும் இவனுக்கு, இப்போ என்னவாயிற்று?

காலையில்கூட நன்றாகத்தானே இருந்தான்!

இப்போது அவள் முகத்தைப் பார்ப்பதைத் தவி கிறானா? அல்லது, அவளுக்குத்தான் அப்படித் தோன் கிறதா?

"என்ன ரகு சார், ரொம்பவும் பிஸியாக இருக்கிறீர்க போலும்!" என்று சாதாரணம் போலவே கேட்டாள்.

"ஆ...ஆமாம்!" என்று, லேசாகக் குரல் தடுமாற கூறிவிட்டு, ஃபைலிலேயே முகத்தைப் புதைத்துக் கொ பவன் போலக் குனிந்து கொண்டான்.

முகத்தில் சிறு குழப்பம் தோன்றத் தன் கேபினுக் திரும்பினாள் அவள்.

அன்று மட்டும்தான் என்றில்லாமல், அதன் பிற வந்த நாட்களிலுமேகூட, வார்த்தைகளை எண்ணி எண் தான் பேசினான் ரகு.



என்னவென்று நேரிடையாகக் கேட்டு, அதற்கு அவனால் விளக்கம் கூற முடியாது போனால், அனாவசியத் தர்மசங்கடம்தானே உண்டாகும்.

இந்த நல்ல மனிதனுக்கு, பாவம்! அப்படியொரு நிலை எதற்கு?

இதுதான் விஷயமென்று எப்போது தெரிகிறதோ அப்போதே தெரியட்டும். தெரியாமலேயே போனாலும்கூட, அதனால் ஒன்றுமில்லை என்றே தோன்றியது.

ஆனால், உண்மைக் காரணம் தெரிந்தபோது, அதை ஜீரணிக்க முடியாதவளாகக் கொதித்துப் போனாள் அவள்.

அன்று காலை மணி சுமார் பதினொன்று இருக்கும்.

தன் அறைக்கு வரும்படி மனுதர்மனிடமிருந்து அழைப்பு வந்தது.

ஏதும் குறிப்பெடுக்க வேண்டியிருக்குமோ என்று, அதற்குத் தயாராகவே சென்றாள்.

"நீங்கள் சென்று வேலைக்கான திட்டத்தைத் தயாரியுங்கள் ரகு. இரண்டு மாடி முழுவதுமே, விலையுயர்ந்த பொருட்களைக் கொண்டுதான் கட்ட வேண்டும்.

செலவுக் கணக்கிற்குத் தினசரி பில் போட்டு, வாரம் ஒருமுறை செக் வாங்கிக் கொள்ளச் சொல்லியிருக்கிறார்.

வேலை மட்டும் ஐந்து மாதத்திற்குள் முடிந்தாக வேண்டும். ஆட்கள் போதவில்லை யென்றால் தெரிவியுங்கள், சங்கம் மூலமாக ஏற்பாடு செய்து கொள்ளலாம்!" என்று கூறினான் மனுதர்மன்.

ஒரு தலையசைவுடன் வெளியே வந்த ரகு, யிலிருந்த நோட் பேடு பேப்பரை வாசித்தபடியே விரை சென்றான்.

வெளியே இருந்த வட்ட வடிவ சோஃபாவிலிரு எழுந்து சென்று, கதவைத் தட்டிவிட்டு உள்ளே நுழைந் ஜனார்த்தனி.

கண்ணாடிக் கதவைத் தள்ளித் திறந்து கொ வந்தவளைப் பார்த்து, ஒருமுறை இமைகளைத் விழித்தான் மனுதர்மன்.

அவள் உடுத்தியிருந்த கறுப்பு வண்ணச் சேலை அணிந்திருந்த தேன் கலர் மணிமாலையும், அவ மிக அழகாக ஒளிர வைக்க, வெரி நைஸ் என்று மு முணுத்தன அவன் உதடுகள்.

“என்ன விஷயமாக வரச் சொன்னீர்கள் சார்?” எ சில வினாடிகள் காத்திருந்து விட்டுத் தானாகவே கேட் அவள்.

“என்னுடன் நீ வெளியே ஒரு இடத்திற்கு வரவேண் மதிய உணவு வேளைக்குப் பிறகு கிளம்பலாம். தயாரா என்றான்.

“வெளியே என்றால், எங்கே சார்? திரும்பி எவ்வளவு நேரமாகும்?” என்று நேரான பார்வை கேட்டாள்.

லேசாக உதட்டை வளைத்து, “வருவதற்கு பாயோ என்று நினைத்தேன். நல்லவேளை நீ அ செய்யவில்லை!” என்று நல்ல விதமான குர கூறியவன்,



“அடுத்து, என் நண்பருக்காக ஒரு புராஜெக்ட் செய்ய வேண்டி இருக்கிறது. அது சம்பந்தமான சில விஷயங் களை நீ நேரில் பார்த்தால் நன்றாக இருக்குமென்று தோன்றியது.

பிறகு, உனக்கு வேலை ஈஸியாக இருக்கும். எனக்கும் ரிசல்ட் நல்லவிதமாகக் கிடைக்கும். நீ திரும்பவும் இங்கே வர நேரமிருக்காது. உனக்குத் தேவையானதை எடுத்துக் கொள்!” என்றான்.

இன்னமும்கூட, எந்த இடத்திற்குப் போகப் போகிறோம் என்பது பற்றி, அவன் கூறவில்லை என்பது மனதில் பட்டது.

இருந்தாலும், மீண்டுமொரு முறை அவனிடம் அதுபற்றிக் கேட்க வேண்டுமென்று தோன்றவில்லை அவளுக்கு.

போவது அலுவலக வேலையென்பது உறுதியாகி விட்டது. அப்படி எங்கே அழைத்துச் சென்றுவிடப் போகிறான்.

பிடிக்காத இடமாக இருந்தால், அப்போது பட்டென்று சொல்லிவிட்டுக் கிளம்பி விட்டால் போயிற்று.

இப்போதே மறுப்பதால் ஒரு பிரயோஜனமும் இல்லை. அத்தோடு, அவளுக்குமே வேலை ஈஸியாக இருக்கு மென்றுதானே சொல்கிறான்.

எனவே, சரியென்று கூறிவிட்டுத் திரும்பி வந்தாள்.

கூறியது போலவே, மதிய வேளையின்போது தன் கைப்பையுடன், மனுதர்மனுடன் காரில் கிளம்பினாள் ஜனார்த்தனி.

சாலையில் வழுக்கிக் கொண்டு சென்ற, அந்த சொகுசுக் காரின் பயணம் புது அனுபவமாக இருக்க வெளியே வேடிக்கை பார்க்கலானாள்.

சாலையில் பார்வையைப் பதித்திருந்தபோது அவனுடைய முகத்தில், ஏதோ தீவிர யோசனை தோன்றி யிருப்பது போல் அவளுக்குத் தெரிந்தது.

கடற்கரைச் சாலையையும் கடந்து, சற்று உட்புறமாக செல்லவும், "இன்னும் எவ்வளவு தூரம் போக வேண்டும்?" என்றாள் தலையைத் திருப்பி.

"பத்து நிமிடத்தில் சென்றுவிடலாம். போரடித்தா மேகஸின்ஸ் இருக்கும் பார்!" என்று கூறிவிட்டுத் த செல்லை எடுத்துச் சற்று நேரம் ஏதோ அழுத்தியவன், பி யாரையோ தொடர்பு கொண்டான்.

மறுபக்கம் "எஸ் பாஸ்!" என்றது ஒரு குரல்.

"கபில், எனக்கு வருகின்ற கால்ஸ்ஸை, ஒ அவருக்கு உங்களுக்கு டைவர்ட் பண்ணியிருக்கிறே பார்த்துக் கொள்ளுங்கள். ஈவ்னிங் பார்க்கலாம், பை!" என கூறி கட் பண்ணினான்.

மேகஸினின் ஒரு சில பக்கங்களைத் திருப்பியிரு போது, நகரத்தின் சந்தடி வெகுவாகக் குறைந்திரு கிளைப் பாதை ஒன்றினுள் சென்றது கார்.

நெடிய காம்பவுண்டின் கேட்டை அடுத்து, இ புறமும் பாக்கு மரம் எடுப்பாக உயர்ந்து நிற்க, தூ வெண்ணிறத்தில், பிரம்மாண்டமாக இருந்த கட்டடத் முன்பாகச் சென்று காரை நிறுத்தினான் மனுதர்மன்.



போர்டிகோவைத் தாங்கி நின்ற, பெரிய உருளை வடிவத் தூண்கள், அவளின் புருவத்தை உயர வைத்தன.

சுற்றியுமிருந்த வண்ண மலர்த் தோட்டத்தில், ஆங்காங்கே சிலர் கொத்துவதும், கூட்டுவதும், நீர் பாய்ச்சுவதுமாக வேலை செய்து கொண்டிருந்தார்கள்.

"வா ஜனா!" என்று கூறி அவளை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றான்.

இரவு நேர நட்சத்திர ஓட்டலின் பளபளப்புடன் இருந்தது வரவேற்பறை!

சுமார் ஐந்நூறு பேர், தாராளமாக அமரக் கூடிய அளவிற்குப் பெரிதான வரவேற்பறை!

பெரிய விசேஷம் நடத்தவென்று, வெளியே மண்டபம் பிடிக்க வேண்டிய அவசியமில்லாதவாறு, பழைய கால அரண்மனையின் உப்பரிகையைப் போலவே கட்டியிருந் தார்கள்.

வரவேற்பறை நிகழ்ச்சிகளை, மேலே இருக்கின்ற மூன்று மாடிகளின் உப்பரிகையிலிருந்தும் கண்டு களிக்கலாம்.

இந்த வீட்டைக் கட்டியவர்கள், மிக்க ரசிக மனமுடைய வர்களாகத்தான் இருக்க முடியும்.

அகன்ற மாடிப்படிகளும், அழகான வளைவுகளுடன் கடைசல் பிடித்த, தேக்குமரக் கைப்பிடியும் அவளை அசர வைத்தன.

எந்த இடமும் வெறுமையாகத் தெரியாதபடி, ஏதாவது ஒரு பொருளைக் கொண்டு அழகுபடுத்தப் பட்டிருந்தது.

சாக்லெட் கலரில், தொட்டாலே அமுங்கும் சோஃ

செட்.

விலை உயர்ந்த வண்ணச் சித்திரங்கள்!

மரம், கிளை, இலை, பூ என்று தேக்கில் செய்திரு ஃபோன் ஸ்டேண்ட் என, ஒவ்வொன்றும் அவ்வ நேரத்தியான அழகு.

இரத்தினக் கம்பளம் விரிக்கப்பட்டிருந்த மாடிப்படி அருகில் நின்று, பார்வையை நாற்புறமும் வீசியவளை,

மார்பின் குறுக்கே கைகளைக் கட்டிக் கொ பார்த்தான் மனுதர்மன்.

இவ்வளவு அருமையான இடத்தைக் காட்டியதற் அவள் உண்மையிலேயே அவனுக்கு நன்றி தெரிவித் தான் ஆக வேண்டும் என நினைத்தபோது,

சிறுமுறுவலுடன் அவளருகே வந்து, "இவ்வளவு தூ வந்ததற்கு, உனக்குப் பலன் இருக்கிறதுதானே?" என் மனுதர்மன்.

"நிச்சயமாக, நிறையவே இருக்கிறது சார்!" என் கூறியபோது,

அவளிடம் ஒரு காமிராவைக் கொடுத்து, "தேவை பட்டதை ஃபோட்டோ எடுத்துக் கொள் ஜனா!" என் கூறினான்.

'தேங்க்ஸ்' என்று கூறிவிட்டுச் சிலவற்றை காமிரா படமாக்கினாள்.

இந்த வீட்டில் யாரும் வசிக்கிறார்களா என் அப்படியிருந்தால், ஒருவரையும் காணவில்லையே!



முதலில் இது யாருடைய வீடு. யாராவது பணம் படைத்தவன், சமூக அந்தஸ்திற்காகக் கட்டி விட்டிருப் பானோ என்று எண்ணியவள், ஐந்து முக ஷாண்ட்லியர் சர விளக்கை க்ளிக் செய்தாள்.

அப்போது, ஐம்பது வயது மதிக்கத்தக்க பெண்மணி உட்புறமிருந்து வந்து, "உங்களுக்குச் சாப்பாடு எடுத்து வைக்கட்டுமா தம்பி?" என்று மனுதர்மனிடம் கேட்க,

"சாப்பிட்டாயிற்று சைந்தாம்மா. குடிப்பதற்குப் பழச்சாறு போதும். ஜனா, உனக்கு மாதுளை பிடிக்கும்தானே?" என்று கேட்டு, அவள் வெறுமனே தலையாட்டவும், "ம்... அதை மட்டும் இரண்டு தம்ளர் எடுத்து வரச் சொல்லுங்கள்!" என்று கூறினான்.

"சரிங்க தம்பி!" என்று கூறிவிட்டுச் சென்றாள் சைந்தாம்மா.

"என்ன! என்னிடம் ஏதோ கேட்க வேண்டியிருக்கிறது போல் தெரிகிறதே?" என்றான்.

"இது யாருடைய வீடு? உ... உங்களுடையதா?" என்றவளுக்கு, நிச்சயம் குரல் மாறிவிட்டிருந்தது.

அவளை ஆழ நோக்கியபடி, "ஆமாம். இது என்னுடைய வீடுதான்..." என்று தெளிவான குரலிலே கூறினான் மனுதர்மன்!

காதில் விழுந்த வார்த்தைகளைக் கேட்டு, இப்போது அவளின் முகமும் மாறிப் போயிற்று.

# 9

இவ்வளவு நேரமாக, இவனு… சொந்தமான வீட்டையும், பொருட்களை… பார்த்துப் பார்த்து இன்புற்றேன்?

தன் வியப்பைப் பார்த்து, உள்… இவன் என்ன மாதிரியெல்லாம் கர்வப்பட்டிருப்பான்!

என் வீட்டிற்குள் வந்துவிட்ட பிறகு, வியந்து போ… மலிருக்க யாராலும் முடியாது என்றும் நினைத்திருக்க…

இது மாதிரித் தோன்றிய பிறகு, முன்பு போல எ… மனம் லயிக்கவில்லை அவளுக்கு.

மிகுந்த சுவையுடன், ஐஸ் துண்டுகள் மித… கொண்டு வந்து கொடுத்த மாதுளை ஜூஸைக் கடகட… தான் குடிக்க முடிந்தது அவளால்.

ஏதோ யோசிப்பது போல, அவளைப் பார்த்து… நெற்றியைச் சுருக்கினான் அவன்.

தன்னால் இயன்றவரை, இயல்பாக இரு… போலவே காட்டிக் கொள்ள முயன்றாள் ஜனார்த்தன…

உள்ளூரச் சுறுசுறுவென்றது அவளுக்கு. குழம்… னாக்கும்! நன்றாகவே குழம்பட்டும்.

இவன் வீடு என்று தெரியும்போது, அப்… மலைத்துப் போய், ஆவென்று பார்ப்பேன் என நி… திருப்பான்.

இப்போது அப்படியில்லை யென்று ஆனதும் கு… தாக்கும் என ஏளனமாகத் தோன்றியது.



"இங்கே பார்த்தாயிற்று என்றால், மாடியையும் பார்த்து முடித்து விடு. பெரும்பாலும் அறைகள் எல்லாம், ஒரே மாதிரியாகத்தான் இருக்கும்!" என்று கூறி, அவளுடன் ஒரு பணிப்பெண்ணையும் உதவிக்காக அனுப்பி வைத்துவிட்டு,

ஹாலை ஒட்டியிருந்த பெரிய கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றான்.

அது அந்தப் பெரிய வீட்டின் முக்கியமான பகுதி.

மனுதர்மனின் பாட்டி பராசக்தி அம்மாவின் தனிப்பட்ட பகுதி.

பேரனைப் பார்த்து, "வா தர்மா!" என்றழைத்துவிட்டு, டிவியில் ஓடிக் கொண்டிருந்த பழைய காலப் படத்தை நிறுத்தினார் பராசக்தி.

"ரொம்ப நேரமாக விழித்திருக்கிறீர்களா பாட்டி?"

"பரவாயில்லையடா! இன்று ஒரு நாள் மட்டும்தானே!" என்று கூறிவிட்டு, லேசாக முறுவலித்தவர்,

"யாரோ பெண்ணை அழைத்து வரப் போவதாகச் சொன்னாயே! அவள் வந்திருக்கிறாளா?" என்று கேட்டார்.

"ம்... என்றவன், "அது சம்பந்தமாக உங்களுடன் கொஞ்சம் பேச வேண்டும் பாட்டி!" என்றான்.

"ஓ! பேசலாமே!" என்றவரின் குரலில், நிச்சயமாக …ஒருவிதக் கிண்டல் இருந்தது.

அந்தக் கிண்டலில் பாட்டியைக் கூர்ந்து நோக்கியவன், …ந்து, அவளிடம் நீங்கள் கொஞ்சம் நல்லவிதமாக நடந்து கொள்ள வேண்டும்!" என்று கேட்டுக் கொண்டான்.

"நல்லவிதமாக என்றால் எப்படியப்பா? அதை... நீயே சொல்லிக் கொடுத்து விடேன். எனக்கும் வசதி... இருக்கும்!" என்றார் லேசாக உதடு வளைய.

பாட்டியிடம் இப்படிக் கேட்டிருக்கக் கூடாது... அவர்களின் வயதிற்கும், அனுபவத்திற்கும் முன்னால்... ஒரு சாதாரண விஷயமாகவே தோன்றலாம்.

ஆனால், அவனுடைய மனநிலை அப்படியில்லை... அதைப் புரிந்து கொள்ளாமல் வம்படியாகப் பேசி... என்னதான் செய்வது என்று எண்ணியவன், சில... அமைதிக்குப் பிறகு,

"சாரி பாட்டி!" என்றான் முகம் பார்த்து.

"போகட்டும் விடுமா!" என்றவர், "நீ இப்படி அ... கொள்கிற அளவிற்கு ஒன்றுமில்லை என்பதுதான் எ... சரி, நேரமாகிறதே. போகலாமா?" என்று கேட்டு... வாக்கிங் ஸ்டிக்கை ஊன்றி எழுந்தார் பராசக்தி.

நோட் பேடில் என்னவோ எழுதிக் கொண்டி... ஜனார்த்தனி, அவர்களைப் பார்த்து நிமிர்ந்தாள்.

கிட்டத்தட்ட எழுபத்தைந்திற்கு மேல் வயது... ஒரு பாட்டியின் பார்வையில், இவ்வளவு கூர்மை... அளவிடலை, அவள் இதுவரை பார்த்ததில்லை!

"ஜனா! இவர்கள் என் பாட்டி!" என்று ஒரு... கொருவர் அறிமுகப்படுத்தினான் அவன்.

"வணக்கம்!" என்று மரியாதையின் நிமித்தமாகக் ... குவித்தாள் சின்னவள்.

சிறு தலையசைவுடன் அதை ஏற்றுக்கொண்டு, "... நிற்கிறாய்? உட்கார்!" என்றார் பராசக்தி.



அந்தக் குரலின் கம்பீரமும்கூட, அவள் எதிர்பாராத...தாகத்தான் இருந்தது.

தோரணையுடன் அமர்ந்து, ஜனார்த்தனியைப் ...பார்வையினால் அளவிட்டவர், "நீ வேலையிலும் ரொம்பத் ...திறமையானவளாமே! எதையும் நேர்த்தியாகச் செய்து ...முடிப்பாயாம்! தர்மா சொன்னான்...!" என்று கூறி, ...முறுவலிப்பதுபோல உதட்டை நீட்டியவர்,

"உன் சொந்த ஊர் எது? என்ன தொழில் செய்கிறார்கள் உன் பெற்றோர்?" என்று வினவினார்.

"தஞ்சையில், விவசாயக் குடும்பம் எங்களுடையது!" ...என்று கூறிய ஜனார்த்தனிக்கு, உள்ளூர ஏதோ உறுத்தியது.

பாராட்டுவது போல, இந்தம்மா தன்னை மட்டம் ...தட்டுகிறார்களோ?

ஏற இறங்கப் பார்த்த முதல் பார்வை! அதில் தெரிந்த ...அப்பட்டமான பணக்காரத்தனம்!

பிறகு, வேலையிலும் திறமையானவளாமே என்றது. ...தற்கு அந்த 'லும்'? அப்படி வேறு எதிலெல்லாம் அவள்... ...என்ற எண்ண ஓட்டத்தில் இடையிடுவது போல,

"ஓ! பரவாயில்லையே! சாதாரண விவசாயக் ...குடும்பத்தில் பிறந்து வளர்ந்து, இந்தளவிற்கு உயர்ந்து ...வந்திருக்கிறாய்?

வெரிகுட்! சம்பளம் எப்படியும் ஐந்து இலக்கத்தில் ...இருக்குமே!" என்றார்.

சர்வ நிச்சயமாக இது மட்டம் தட்டல் அன்றி வேறு ...என்ன?

விவசாயக் குடும்பம் என்றால், அதைச் சாதா
மென்று இளப்பமாகத்தான் எண்ண வேண்டுமா?

நாட்டிலுள்ள விவசாயிகள் அனைவரும் அ
தொழிலை விட்டுவிட்டால் அப்போது தெரியும்.

'புவ்வா'விற்கு அடுத்த நாட்டிடம்தான் கையேந்தி நி
வேண்டுமென்பது!

இந்தம்மா பெரிய தொழில் குடும்பத்து எஜமா
என்றால், அது அவர்களோடு!

அவளைப் பற்றிச் சரியாகத் தெரியாமல் பே
கிறார்கள் போலிருக்கிறது. அதனாலென்ன, இப்போ
தெரிய வைத்துவிட்டால் போயிற்று!

மெல்லிய தேகம் நிமிர, "ம்... ஐந்து இலக்கத்
சம்பாதித்தால்தானே, தொடர்ந்து இந்த ஊரிலே பிழை
நடத்த முடியும்!" என்று பட்டென்று திருப்பினாள் ஜனார்த்த

ஒரு நொடிதான் என்றாலும், தணலாக ஜொலித்
மீண்டது பராசக்தி அம்மாவின் விழிகள்!

சளைக்காமல் தானும் நோக்கினாள் ஜனார்த்தனி.

மறுநொடியே, அர்த்தம் கண்டுகொள்ள முடியா
ஒருவித முறுவலுடன், "ம்... கொஞ்சமும் விட்டுக் கொடு
காமல் பேசுகிறாய்! பெண்கள் இப்படியிருப்பது, ப
வழிகளிலும் அவர்களுக்கு நன்மைதான்!" எனக் கே
இழையோடக் கூறிவிட்டுப் பேரனைப் பார்த்தாள்.

மூத்தவரின் முகத்திலிருந்த அசதி, அவர்களி
பேச்சில் அவனைக் குறுக்கிட வைத்தது.



"உங்களின் ஓய்வு நேரம் கடந்து விட்டது பாட்டி. எங்களுக்கும்கூட நேரமாகி விட்டது. இப்போது கிளம்பினால் தான், நேரம் சரியாக இருக்கும்!" என்றான் மனுதர்மன்.

ஜனார்த்தனிக்குச் சும்மாவே எப்போது இந்த இடத்தை விட்டுப் போவோம் என்றிருந்ததால், அவன் வார்த்தைகளை ஆமோதிப்பது போல மௌனமாகவே இருந்தாள்.

வணக்கத்தை ஏற்றது போலவே, மீண்டும் ஒரு சின்னத் தலையசைவுடன் விடை கொடுத்தார் பராசக்தி அம்மா.

கார் கேட்டை விட்டு வெளியே வந்த பிறகு, "பக்கத்தில் உள்ள, ஏதாவதொரு பஸ் நிறுத்தத்தில் விட்டுவிட்டாலே போதும் சார். நான் போய்க் கொள்வேன்!" என்றாள் ஜனார்த்தனி.

அவள் கூறியது காதில் விழுந்த மாதிரியே காட்டிக் கொள்ளாமல், "வயதில் பெரியவர்களிடமும், இப்படித்தான் பதிலுக்குப் பதில் பேச வேண்டுமா?" என்றான் அவன்.

"பெரியவர்கள் கேட்கிற கேள்விக்கு, உரிய விதமாகப் பதில் அளிப்பதுதானே மரியாதை சார்!" என்ற குரலில் எள்ளல்!

அந்த எள்ளல் தாங்க முடியாததாகி விட்டதோ? வெகுவாக வேகம் கூடிச் சீறிப் பாய்ந்தது கார்!

"உங்களுக்கு எப்படியோ தெரியாது. ஆனால் எனக்குக் கொஞ்ச காலமாவது, பூமியிலே வாழவேண்டு மென்கிற ஆசையிருக்கிறது. தயவு செய்து வேகத்தைக் குறைக்கிறீர்களா?" என்று கூறினாள்.

ஒரு பெருமூச்சை வெளிவிட்டபடியே, வேகத்தை கட்டுக்குள் கொணர்ந்தவன், முதலாவதாக வந்த ப நிறுத்தத்தில் காரை நிறுத்தாமல் செல்லவும், சட்டென் அவன் முகத்தைப் பார்த்தாள்.

இறுகியிருந்த முகம், வேண்டுமென்றே தா நிறுத்தவில்லை என்பதை உறுதிப்படுத்தியது.

அவளின் அசைவை உணர்ந்து, "உன்னிடம் சில விஷயங்களைப் பற்றிப் பேச வேண்டியிருக்கிறது. அதனா தான் நிறுத்தவில்லை!" என்றான்.

"எனக்கு எந்த விஷயமும் இல்லை!" என்று கூறிவிட்டு பட்டென்று பார்வையை வெளியே வீசினாள்.

ஓடுகின்ற காரிலிருந்து குதித்து விடவா போகிறாள் இப்போது சொல்வதை, வேறு வழியின்றியாவது கேட்டு தானே ஆகவேண்டும் என்ற அவனுடைய எண்ண நன்றாகவே புரிந்தது அவளுக்கு.

இவன் பாட்டி என்னவென்றால், வெளிப்படையாக தெரியாதபடி மட்டம் தட்டுகிறார்கள்!

இவனோ இக்கட்டில் நிறுத்திப் பேச வேண்டு என்கிறான்!

இதையெல்லாம் பார்த்துக் கொண்டு சும்மாயிருக்க அவளொன்றும் அடிமைப்பட்டிருக்கவில்லையே?!

என்றெல்லாம் தோன்றத் தோன்ற மூக்கு நுனிவரை சிவந்து போனது அவளுக்கு!

"விஷயம் என்னவென்று சொல்லும் முன்பாகவே எதற்கு இவ்வளவு கோபம் ஜனார்த்தனி! இதுவே வேற



யாராவது, நம்முடைய மானேஜர் ரகு மாதிரியொருவர் கேட்டிருந்தால், புன்னகை காது வரை நீண்டு செல்ல, சுற்றுப்புறத்தைக்கூட மறந்து பேசியிருப்பாய். அப்படித் தானே?" என்று ஏளனமாகக் கேட்டான் அவன்.

"போதும், நிறுத்துங்கள்!" என்று வெடித்தவளுக்குக் கண்மண் தெரியாத ஆத்திரம் வந்தது.

என்ன தைரியமிருந்தால் அவளிடமே இதுமாதிரிக் கூறுவான்?

அந்த ரகு மட்டும் இதைக் கேட்டிருந்தால், எவ்வளவு சங்கடப்பட்டுப் போயிருப்பான்!

"நீங்கள் யார்? என்னுடைய சொந்த விஷயத்தைப் பற்றிப் பேச? உங்களுக்கு என்ன அதிகாரமிருக்கிறது?

முதலில் உங்கள் எல்லை எதுவரை என்பதைப் புரிந்து, அதுவரை மட்டுமே நில்லுங்கள். அதுதான் உங்களுக்கு மரியாதை!" என்று கடுமையாகக் கூறினாள்.

அவளுக்கிருந்த மன நிலையில், கார் நின்று விட்டிருப்பதே சில கணங்களுக்குப் பிறகுதான் புரிந்தது.

"என் எல்லையின் நீள அகலம் பற்றி, எனக்கு நன்றாகவே தெரியும். நீ சொல்லத் தேவையில்லை!" என்றவன், "ஆமாம். அதென்ன? ரகுவைக் கூறியதும் உன் கோபம் வெடித்துச் சிதறுகிறது!

என்ன அவன் மீது காதல் ஏதுமா? சொல்லி விட்டாயா? அல்லது, இனிமேல்தானா?

பாவம் ரகு. மிரண்டு போகப் போகிறான்!" என்று ஏளனச் சிரிப்புடன்.

"சீ! என்ன மனிதன் நீங்கள். கௌரவமான ஒரு நட்பை அசிங்கப்படுத்திவிட்டீர்களே! ஆனால் அதெல் உங்களுக்கு எங்கே தெரியப் போகிறது.

எதையும் நல்ல விதமாகப் பார்க்க, நல்ல தன் என்று ஏதாவது இருந்தால்தானே முடியும்!" என்றாள் அ வெறுப்புடன்.

அந்த வெறுப்பு, ஸ்டியரிங் வீலிலிருந்த அவன் விரல்களை, முஷ்டியாக இறுக வைத்தது.

அவளின் முழுக் கோபத்தையும் சுலபமாக எதிர்கொண்டவனுக்கு, இந்த வெறுப்பான பார்வை மட் ஏனோ இமயமாகத் தெரிந்தது.

இருந்தாலும், முயன்று அதைப் பின்னுக் தள்ளிவிட்டு, "உன் வார்த்தைகளை நம்பலாம்தானே அதுதான் நல்ல நட்பு என்றாயே அதை?" என்றான், எதி யிருந்த சாம்பல் நிறப் பிள்ளையார் சிலையை வெறித்

"நீங்கள் நம்புவதும், நம்பாததும் எனக் அனாவசியம். கதவைத் திறந்து விட்டீர்கள் என்றால், நா நடந்தே போய்க் கொள்வேன்!" என்றாள் முடிவாக.

அதற்கு மேல் தாமதிக்காமல், அடுத்த ப நிறுத்தத்தில் இறக்கி விட்டவன், ஹார்பர் அலுவலகத் நோக்கிச் சென்றான்.

ஆனால் எவ்வளவு தூரம் சென்றாலும், உள்ளமு கூடவேதானே வருகின்றது. அது அவனை ஒரு நிலையி இருக்க விட்டால்தானே?



பாதி வேலைகள்கூட முடிந்திராத நிலையிலேயே, 'நாளை பார்க்கலாம்' என்று கூறிவிட்டுக் கிளம்பியவனைப் பார்த்து, உதவியாளர்களின் முகம் வியப்புற்றது.

வீட்டிற்குச் சென்றவனுக்கு, நினைவு தெரிந்த நாளில் இருந்து, அவன் உணர்ந்திராத வெறுமை ஒன்று ஆட்டிப் படைத்தது.

வழக்கம் போலவே, சித்தப்பா குடும்பத்தினர் வெளியே சென்றிருந்தனர்.

அவர்கள் வருவதற்கு எப்படியும் நடுநிசிக்குப் பக்க மாகிவிடும்.

வந்த பிறகும் அவரவரின் அறையில் முடங்கிவிடப் போகிறார்கள். நாளைக் காலை வரையுமே, இதே அமைதி தான் தொடரப் போகிறது.

மனநிலையை மாற்றும் முயற்சியாக, உடை மாற்றிக் கொண்டு, நீச்சல் குளத்தை நோக்கிச் சென்றவன்,

கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் ஆழ்ந்து நீந்தினான்.

உடலும், உள்ளமும் இயல்பான நிலைக்குத் திரும்ப ஆரம்பித்தது.

சற்று நேரத்திற்கெல்லாம் பாட்டியின் அறைக்குள் சென்றவன், தன்னுடைய இரவு உணவையும் அங்கேயே கொண்டு வரும்படி கூறினான்.

"என்னப்பா! வேலை வேலையென்று அலுவலக அறையிலேயே அடைந்திருப்பாய்! என்னுடன் சேர்ந்து, ஆர அமர உட்கார்ந்து உண்ணுமளவிற்கு நேரமிருக்கிறதா?" என்று சிறு வியப்புடனே கேட்டார் பாட்டியம்மா.

"இன்றைக்கு எல்லாவற்றையும் ஒதுக்
விட்டேன் பாட்டி!"

"நல்லது. அவ்வப்போது இது மாதிரிச் செய்
அப்போதுதான், நீ மெஷின் அல்ல என்பது உ
நினைவிருக்கும்!" என்ற பாட்டியின் குரலில் ஆ
இருந்தது.

நாலாவது இட்லியையும், முள்ளங்கிச் சட்
தோய்த்து உண்டு விட்டுக் கையைக் கழுவினான்.

பாட்டி சாப்பிட்டு முடிக்கவும், காலிப் பாத்திர
எடுத்துச் செல்ல ஆள் வரவும் சரியாக இருந்தது.

பணியாள் கிளம்பிச் சென்ற சில நிமிடங்களு
பிறகே, "உன் முகம் ஏன் ஒரு மாதிரியாக இருக்
உடம்பிற்கு. ஊஹும்... உடம்பெல்லாம் நல
இருப்பதுபோல்தான் தெரிகிறது.

பிறகு, பிறகு என்னப்பா! இன்று உன் செ
எல்லாமே, வழக்கத்திற்கு மாறாகவே இருக்கிறதே!" எ
கேட்டார் பாட்டி.

ஒரு ஒற்றை சோஃபாவைப் பாட்டியின் அ
நகர்த்தி விட்டு அதிலே அமர்ந்தவன்,

"ஜனார்த்தனியைப் பற்றி நீங்கள் எ
நினைக்கிறீர்கள் பாட்டி?" என்று கேட்டான்.

உள்ளூரச் சுதாரித்த பாட்டி, "உன் ஆ
ஸ்டாஃப்பைப் பற்றி, நான் என்ன நினைக்க மு
தர்மா?" என்றார், அந்த ஆஃபீஸ் ஸ்டாஃப்பிலே அழு
கொடுத்து.



பெரிய தொழில் சாம்ராஜ்யத்தைக் கட்டி ஆள்கிற அவனுக்கு, அந்த அழுத்தம் புரியாமலா போய்விடும்!

இருந்தாலும்,

"இன்று நேரில் பார்த்தீர்களே, அதைக் கொண்டு சொல்லலாமே?" என்றான்.

"ம்... ஆள் பார்ப்பதற்கு நேர்த்தியாக உடுத்தி, அதிக அலங்காரமின்றியே அழகாகத்தான் இருக்கிறாள். ஆனாலும், இதையெல்லாம் பின்னுக்குத் தள்ளுகிற மாதிரி, சரியான லடாங்கியாகவும் இருக்கிறாளே!

துணிந்து திருமணம் செய்கிறவனின் பாடு, எப்படி யெல்லாம் இருக்குமோ? பகவானுக்குத்தான் தெரியும்!" என்றார் முந்தைய குரலிலேயே!

மீண்டும் அழுத்தமாக விழுந்த வார்த்தைகளை நினைத்து, வெண்பற்கள் ஒளிவீச லேசாக முறுவலித்தவன், "அப்படித் துணிந்து மணக்க நினைக்கிறவன், உங்கள் பேரனாக இருந்தால்?" என்று கேட்டான்.

"தர்மா!" என்ற பராசக்தி அம்மாளின் விழிகள், பெரிதாக விரிந்து கூர்ந்தன!

## 10

நேர் எதிரே அமர்ந்திருந்தவனின் முகத்தில் தெரிந்த உணர்வுகள், பெரும் அனுபவசாலியான பராசக்தி அம்மாளையே வியக்க வைத்தன!

சில கணங்களின் அமைதிக்குப் பிறகு, "இது, மாற்றமில்லாத இறுதி முடிவுதானா?" என்று மட்டும் கேட்டார்.

"ஆமாம்!" என்று, தெளிவான உறுதியு... பதிலளித்தான் மனுதர்மன்.

"ம். ஓ.கே.! நீ ஒரு முடிவு செய்து வைத்திருக்கிற... தொழில் முடிவுகளைப் போல், இதிலும் உனக்கு மகிழ்... கிடைக்க வாழ்த்துக்கள்!" என்றார் ஆசிர்வதிப்பது போல...

அவரின் கைகளைப் பற்றி, "தேங்க்யூ பாட்..." என்றான் நெகிழ்ந்து போன குரலில்.

"என்றென்றைக்கும், உன் முகத்தில் இந்தப் புன்னகை... நிலைத்திருப்பதைவிடப் பெரிய சந்தோஷம் என்று எனக்... வேறு என்ன வேண்டும்?" என்று வாஞ்சையுடன் கூறினா... பாட்டியம்மா.

மேலும் பல நிமிடங்கள் பேசிக் கொண்டு இருந்... விட்டுத் தன் அறைக்குச் சென்று பெட்டில் சாய்ந்... அமர்ந்தான்.

இது விஷயமாக ஜனாவிடம் எப்படிப் பேச... போகிறோம் என்று, பல யோசனைகள் தோன்றியது.

கடைசியாக நடந்த சந்திப்பு, கொஞ்சம் கசப்பா... தாகவே இருந்தபோதும், அவள் மனதில், வேறு யாரை... பற்றிய அபிப்பிராயமும் இல்லையென்பது, தெளிவாக... தெரிந்து போனதிலே நிம்மதிதான்.

எந்த விஷயத்தையும் பிறகு என்று தள்ளி... போடுவதைக் காட்டிலும், முடிந்தவரை விரைவாக... செயல்படுத்துவதே அவன் வழக்கம்.

எனவே, மறுநாள் காலையில், அவளுக்கும்... முன்பாகக் கட்ட அலுவலகத்திலே இருந்தான் மனுதர்மன்.



சரியான அலுவலக நேரத்திற்கு உள்ளே வந்து, வருகைப் பதிவேட்டிலே கையெழுத்திட்டுவிட்டுத் தன் கேபினுக்குச் சென்றாள் ஜனார்த்தனி.

அவள், வெளியே இயல்பாக இருப்பது போல் காட்டிக் கொண்டாலும், உள்ளுக்குள் அப்படியில்லை என்பது அவனுக்குப் புரிந்தது.

நேற்றைய விஷயங்களின் பாதிப்பு போலும்!

சில நிமிடங்களிலேயே, அறைக்கு வரும்படி அழைப்பு வந்தது அவளுக்கு.

பற்களைக் கடித்தபோதும், போகாதிருந்துவிட முடியுமா என்ன?

எதிரே வந்து நின்றவளைப் பார்த்து, "முகத்தைப் பார்த்தால் இரவு முழுக்கத் தூங்கவில்லை போல் தெரிகிறது. அப்படித்தானா?" என்றான்.

"இந்தக் கேள்வியும், விசாரிப்பும், அலுவலக வேலையுடன் சேர்ந்ததா சார்? எப்போதிருந்து?" என்று புருவம் உயர எடுப்பாகவே திருப்பினாள் அவள்.

கண்கள் இடுங்கப் பார்த்து, "தேவையென்று வரும் போது, இது அலுவலகம் என்று தயங்கிக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை ஜனார்த்தனி!" என்றான்.

"ஓ! ஆனால், இந்த விதி விலக்கு உங்களுக்கு மட்டும்தான் இல்லையா?" என்றவளுக்கு, அப்படியே பற்றிக் கொண்டு வந்தது.

இவன் அலுவலகம் என்பதால், தேவைப்பட்டபடி நடந்து கொள்ளலாம்.

ஆனால் மற்றவர்கள் மட்டும், ஒருவருடன் ...
சாதாரணமாகப் பழகினாலே தப்பாகத்தான் நினை...

தான் முட்டாள்தனமாக நினைத்ததோடு நில்...
சம்பந்தப்பட்டவர்களையும் அல்லவா, வருத்தமுடன் ...
செல்லும்படி செய்து விட்டான்.

ரகுவை அழைத்து, நிச்சயம் இவன் ...
சொல்லியிருக்க வேண்டும்.

இல்லையென்றால், திடீரென்று ரகுவிடம் இப்ப...
மாற்றம் உண்டாக வழியேயில்லை.

அதுவுமில்லாமல், காதலா? மிரண்டு ...
போகிறான் என்று வேறு உளறினானே!

அந்த வார்த்தைகளுக்கு, இதைத் தவிர ...
அர்த்தம் இல்லையென்பது, விடிய விடியத் ...
தொலைத்து யோசித்தபோது புரிந்தது.

புரிந்ததில் இருந்து, உள்ளூர உண்டான தண...
அவளுக்குத்தானே தெரியும்!

முன்பு பலமுறை நடந்ததைப் போலவே, ...
மனதிலிருப்பதைத் தெரிந்து கொள்ள, எனக்கு அ...
வேறு வழியிருக்கவில்லை ஜனார்த்தனி. அதனால்...
அப்படிப் பேச வேண்டியதாகிவிட்டது!" என்று, அவளு...
கொண்டிருப்பதை அறிந்தவனாக, விளக்கமளிப்பது ...
கூறினான் மனுதர்மன்.

"என் மனதிலிருப்பதைத் தெரிந்து கொண்டு ...
செய்யப் போகிறீர்கள் சார்? அதற்கு உங்களுக்கு ...
அவசியம் வந்தது?" என்றாள் பழைய மாதிரியே.



"அவசியம் வந்துதானிருக்கிறது ஜனா. எப்படி ஆரம்பிப்பது என்றுதான் கொஞ்சம் தயக்கம். இதுபற்றி, வேறு மாதிரியொரு சூழ்நிலையில் பேசவேண்டும் என்றுதான் காத்திருந்தேன்.

ஆனால், நான் நினைத்திருந்த சூழ்நிலை லேசில் அமையவில்லை. இருந்தாலும், இனியும் தாமதிக்க வேண்டாமென்றுதான் உன்னை அழைத்தேன்!" என்றவன்,

அவள் முகத்தில் பார்வையை நிறுத்தி, "நான் உன்னை விரும்புகிறேன் ஜனா. திருமணம் செய்து கொள்ள ஆசைப்படுகிறேன். என் குடும்பம், தொழில் பற்றி உனக்கே தெரியும்.

என்னை மணந்து கொண்டால், உன்னை ராணியாக வாழ வைப்பேன்..." என்று உறுதியான குரலிலே கூறியவனை இடையிட்டு,

"ராணியாக வாழவேண்டுமென்று, ஒரு நாளும் நான் நினைத்ததில்லை..." என்றாள் அவள் இழுத்துப் பிடித்த பொறுமையுடன்.

"நல்ல விஷயத்தை நினைத்துப் பார்ப்பதில் தவறில்லையே! யோசித்து நாளைக்குக் கூடப் பதில் சொல். உடனே மறுத்தாக வேண்டுமென்று ஏதுமில்லையே!" என்றான் நிதானமாக.

அந்த நிதானமே, விஷயத்தைக் கூறியதும், உடனே ஒப்புக் கொள்வாள் என அவன் எதிர்பார்க்கவில்லை என்பதை உணர்த்தியது.

பரவாயில்லை! இந்த வரையிலாவது சரியாக நினைத்திருக்கிறான்.

"மேலும், நல்ல விஷயமாமா? யாருக்கு என்று பு... "அதற்கெல்லாம் அவசியமில்லை சார்!" என்றாள் ஒற்... சொல்லாக.

"அப்படியென்றால்..." என்றவனின் நெற்றி சு... கியது.

"நீங்கள் கூறிய விஷயத்தில் எனக்கு வி... மில்லையென்று அர்த்தம்!" என்றாள்.

சில வினாடி பலத்த மௌனத்தின் பிறகு, "ஏன் என்... எனக்குத் தெரிய வேண்டும் ஜனார்த்தனி!" என்ற குரலி... என்ன இருந்தது?

கடுமையை மீறிய ஆத்திரமா?!

"மறுக்கப்பட்டவர்களுக்கு, அதன் காரணத்தை... தெரிவிக்க வேண்டிய கடமை, மறுத்தவர்களுக்கு இருக்கிற... என்றான் தொடர்ந்து.

"உங்களை மணந்து கொள்வதற்கும், மீளமுடியாத படுகுழியிலே விழுவதற்கும், என் வரையிலே பெரி... வித்தியாசம் ஏதுமில்லை. அதனால், இதற்கு மே... இதுபற்றிப் பேச நீங்கள் முயற்சிக்க வேண்டாம்!" என்றா... முடிவாக.

நெற்றிப் பொட்டிலேயே அடித்து விட்டாற் போ... எப்படிப்பட்ட வார்த்தைகள்! ஏன்?

நினைவு தெரிந்த நாளிலிருந்து, அவன் காதுக... கேட்டறியாத வார்த்தைகள்!

"உன் காரணம்?" என்று ஒருமுறை கண்களை மூடித் திறந்தவன், "அந்த ரேஷ்மியா? அப்படித்தானே?" என... கனத்த குரலிலே கேட்டு, அவளை ஆழ நோக்கினான்.



வார்த்தைகளினால் எதுவும் கூறாது, ஏளனமாக உதட்டை வளைத்து விட்டு வெளியேறினாள் ஜனார்த்தனி.

எஃகிரும்பு மாதிரி இறுகிப் போனான் மனுதர்மன்!

ஜனார்த்தனியிடமிருந்து, இவ்வளவு வலி தரக்கூடிய வார்த்தைகளை அவன் எதிர்பார்க்கவில்லை.

வேண்டாம் சார்! நம்மிடையே இதெல்லாம் சரி வராது என்று சொல்லக்கூடும். பிறகு மெல்லப் பேசிப் புரிய வைத்துவிடலாம் என நினைத்ததற்கு மாறாக,

நாசூக்கு, நாகரிகம் கூடப் பாராமல், என்னமாகக் கேவலப்படுத்தி விட்டாள்!

நரம்புகள் புடைக்கக் கண்களின் ஓரம் கட்டுப்படுத்த இயலாமல் துடித்தது அவனுக்கு.

இந்த நிலை எவ்வளவு நேரம் நீடித்ததோ?

சிறு வயது முதலே, தொழில் முடிவுகள் எடுத்துப் பழக்கப்பட்டவன் என்பதால், முடிந்தவரை விரைவாகவே தன்னைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடிந்தது அவனால்!

அடுத்த சில நிமிடத்திலேயே, குளிர் நீர் அடித்து முகத்தைக் கழுவித் துடைத்துவிட்டு, அவன் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்த ஃபைல்களில் ஒன்றை எடுத்துப் பிரித்தான்.

அடுத்த பக்கத்தைத் திருப்பியவனின் முகம், அதில் அவன், தன்னை முழுமையாக ஈடுபடுத்த ஆரம்பித்து விட்டான் என்பதைக் காட்டியது.

அப்போதைக்கு ஒரு விஷயத்திலிருந்து நம்... வெளிக்கொணர வேண்டுமானால், வேறு ஒன்றில் மன... செலுத்துவதுதான் பலனளிக்கும் என்பது, அவனு... அனுபவப் பாடமாயிற்றே!

முழு மூச்சாக எல்லா ஃபைல்களையும் பார்... முடித்தபோது, மாலை நான்கு மணிக்கு மேல் நே... கடந்திருந்தது.

கையிலிருந்த பேனாவை உரிய இடத்திலே வை... விட்டுத் தன் வேக நடையுடன் வெளியேறிச் சென்றா... மனுதர்மன்.

காரைக் கிளப்பும் முன்பாக, ஒரே ஒரு முறை மட்... அலுவலகத்தைத் திரும்பிப் பார்த்தவன், அதற்கு மே... தாமதிக்கவில்லை. ஆனாலும்...

அடுத்ததாக அவன் வீட்டிற்கோ, துறைமுக அலுவ... கத்திற்கோ செல்லவில்லை.

செல்லை ஆஃப் செய்து பாக்கெட்டில் வைத்தவ... பசி, தாகம் மறந்தவனாக வெகு தூரம் நடந்தான்.

நகரத்தின் சத்தங்களைக் கடந்து, அடர்ந்த இரு... படர்ந்திருந்த காட்டுப் பாதைக்கு வந்தவனுக்கு, ம... கொண்டு நடக்க இயலாமல், கால் பாதங்களில் எரிச்ச... தோன்றியது.

பெரிய கல் ஒன்றின் மேல் அமர்ந்து, 'ஷூ'வை கழற்றிவிட்டுப் பார்த்தபோது, பாதங்களில் அங்குமிங்கும் நீர் கோத்துச் சிவந்திருந்தது.

அப்படியே அமர்ந்து கண்களை மூடிக் கொண்டா...



கிட்டத்தட்ட இந்த இடத்திற்கு இதற்கு முன்பு ஒரே ஒருமுறை வந்திருக்கிறான் மனுதர்மன்.

சரியாகச் சொல்ல வேண்டுமானால், அவனுடைய பதினெட்டாவது வயதில்!

பாட்டிதான் அழைத்து வந்தார்கள்!

அப்போது, பாட்டிக்கு முதல் தடவையாக அட்டாக் வந்திருந்த சமயம்.

"இவ்வளவு தூரம் வர வேண்டுமா? திடீரென்று உங்களுக்கு முடியாமல் போனால் என்ன செய்வது?" என்றதற்கு,

லேசாக முறுவலித்து, "ஒன்றும் ஆகாது கண்ணா!" என்ற பாட்டி, சிறு அமைதிக்குப் பிறகு, "உன்னிடம் கொஞ்சம் மனம் விட்டுப் பேசவே, இவ்வளவு தூரம் ஓட்டச் சொன்னேன். எனக்கு இந்தத் திடீர் அட்டாக் ஏன் வந்தது என்று தெரியுமா தர்மா?

தொழிலிலே பெரிய அளவில் நஷ்டம். கிட்டத்தட்ட பாதாளத்தில் விழுந்துவிட்டது போலத்தான். காரணம், உன் சித்தப்பனின் முட்டாள்தனமான செயல்கள்!" என்றார் கசப்புடன்.

"பாதாளமா? அப்படியென்றால் இனி மீண்டு வரவே முடியாதா பாட்டி. உங்களால் கூடவா?" என்று கண்களிலே கலவரத்துடன் தன் கையைப் பற்றிக் கேட்ட பேரனின் முதுகை வருடி,

"முடியும் தர்மா! மீண்டுவிட முடியும். ஆனால், அதற்கு..." என்று நிறுத்தினார் பாட்டி.

"தயங்காமல் சொல்லுங்கள் பாட்டி. அதற்கு எ செய்ய வேண்டும்!" என்று குரலில் நம்பிக்கை எட்டிப் ப வேகமாகக் கேட்டான் பேரன்.

"நீ சில பல விஷயங்களைத் தியாகம் செ வேண்டும். உன் வயதிற்குரிய வேடிக்கை, விளையா கொண்டாட்டம் என்று பலதையும் ஒதுக்கிவிட்டு, பிசின முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டும்.

உன் சித்தப்பன், சொந்த வருமானத்திலேயே கம் போடுகிற அளவிற்குத் தரம் தாழ்ந்து போய்விட்ட இனி அவனை நம்புவதைவிட, கம்பெனியைக் கவுர விற்றுவிடலாம் என்றுதான் நினைத்தேன்.

ஆனால், கடைசி முயற்சியாக உன்னிடம் பே பார்க்கலாம் என்று தோன்றியது.

இன்றைய நிலைமையைப் புரிந்து கொள்ளக் ஒரே ஆள், நீ மட்டும்தானே!

அதே சமயம், நான் எந்த வகையிலும் உன்ன கட்டாயப்படுத்தவில்லை தர்மா.

இது, நீ ஆனந்தமாக வாழ வேண்டிய வயது என் எனக்கும் தெரியும்.

வேறு எந்த வழியுமே இல்லாததால்தான்..." எ கைகளை விரித்தார் பாட்டி.

மனுதர்மனுக்குப் பாட்டி எப்போதுமே ஒரு அ போலத்தான்!

அந்த அரசியின் வருத்தத்தை அவனால் குறை முடியுமென்றால்... ஏன் கூடாது!



இனி டிஸ்கோதே, ஈவ்னிங் டிரைவ், ஹாலிடே, வீக் என்ட் அவுட்டிங் டிரிப் என்று, எதற்கும் போக முடியாது.

நினைக்கும்போதே ஒரு மாதிரி, கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருந்தது.

இருந்தாலும், இத்தனை ஆண்டுகளாக இதையெல்லாம் அனுபவிக்கவில்லையா என்ன?

இப்போது பொறுப்பான பிள்ளையாக மாறிப் பாட்டிக்குத் தோள் கொடுத்துத் துணை நிற்பது, அவன் கடமையும் கூடத்தானே?!

முன்பெல்லாம் அவ்வப்போது, வேடிக்கை பார்ப்பதற்காகச் சென்று பழகிய இடம்தானே என்றும் தோன்றியது.

இந்த இக்கட்டான நேரத்தில்கூடப் பாட்டி அவனைக் கட்டாயப்படுத்தவில்லை என்பது மனதில் பட, இதமாகப் புன்னகைத்துப் பாட்டியின் இரு கைகளையும் பற்றிக் கொண்டான்.

பேரனின் பற்றுதலில் இருந்த உறுதி, மூத்தவரின் முகத்தை ஒளிர வைத்தது.

அப்போதிருந்து அடுத்த நான்காண்டுகள், பாட்டியின் நிழலாகிப் போனான் அவன்.

இந்தப் பொடிப் பயலை நம்பி, இந்தம்மா என்ன செய்யப் போகிறார்களோ என்ற பலரின் கிண்டல், ஏளனமெல்லாம், மனுதர்மனின் புத்திக் கூர்மையிலும் கடின உழைப்பிலும் அடங்கிப் போயிற்று.

முழுவதுமாக மீண்டு வந்துவிட்ட பிறகும்கூட, இன்று இன்னும் என்று தொழிலை விரிவுபடுத்திக் கொண் சென்றான்.

அனைத்துப் பொறுப்புகளையும் பேரனிடம் கொடுத் விட்டு, நிம்மதியாக ஓய்வெடுத்தார் பாட்டி.

பெரிய தொழில் சாம்ராஜ்யம் ஒன்றையே அழிவிலிருந்து மீட்டெடுத்த அவனா... இன்று ஒ பெண்ணின் மறுப்பை ஏற்க முடியாமல், மனம் போன போக்கில் பாதங்கள் புண்ணாகிற அளவிற்கு நடந்திரு கிறான்.

என்ன மடத்தனம்!

இந்தளவிற்கா மனவலிமையற்றுப் போய் விட்டு அவனிடம்?

நினைத்துப் பார்த்தால், அவனுக்கே கொஞ்ச கேவலமாகத்தான் இருந்தது.

இப்படி மனதின் கட்டுப்பாட்டை இழப்பது உகந் செயல் அல்லவே!

அவனைப் பழித்துக் கூறிய ஒருத்தியை, அவ அவனுக்கு எவ்வளவு பிடித்தவளாக இருந்தாலுமேகூட அவளையும் அவளின் நினைவையும் ஒதுக்கி விடுவதுதா நல்லது. அது கடினமாக இருந்தாலுமே...!

தொலைதூரம் வந்ததும் கூட, ஒரு வகையில் நன்மைக்குத்தான்.

பழைய மனநிலையுடன் வீட்டிற்குச் சென்றிருந்தால் இது மாதிரியொரு தெளிவான முடிவெடுத்திருக்க முடியுமா என்பது சந்தேகமே.



செல்லை எடுத்து டைம் பார்த்துவிட்டு, காரை நோக்கி நடக்கலானான் மனுதர்மன்.

ஆனால், மனிதன் திட்டமிடுகின்ற அனைத்தும், அப்படியே நடந்து விடுகிறதா என்ன?

## 11

தொடர்ந்து வந்த நாட்களில், மனுதர்மனும், ஜனார்த்தனியும் ஒருவரையொருவர் பார்க்கவேயில்லை.

அவசியம் பார்த்தாக வேண்டிய வேலைகள் இருந்தால் மட்டுமே, கட்டடக் கம்பெனி அலுவலகத்திற்கு வந்தான் அவன்.

அதுவும், வேலை நேரம் முடிந்து, அனைவரும் கிளம்பிச் சென்றாயிற்றா என்று தெரிந்து கொண்ட பிறகே வந்ததால், ஜனார்த்தனியைப் பார்க்க வேண்டிய சூழ்நிலையே வரவில்லை.

ஜனார்த்தனியோ, இவை யெதனையும் கண்டு கொண்ட மாதிரியே காட்டிக் கொள்ளவில்லை.

இது அவன் அலுவலகம். வருவதும் வராததும் அவன் இஷ்டம். இதிலே அவளுக்கென்ன வந்தது?

செய்கிற வேலைக்குச் சம்பளத்தை வாங்கிக் கொண்டு, போய்க் கொண்டே இருக்க வேண்டியதுதானே என்பதுதான்.

அந்தத் திருமணம் பற்றிய பேச்சு சாதகமாக அமையாதது, அவனுக்குக் கவுரவக் குறைவாகப் போய் விட்டிருக்கும்.

குடும்பத் தொழில் பெரிய அளவில் இருந்த
அதன் வருமானமும் அதிகமாகத்தான் இருந்தது.

இருந்தபோதிலும், தடையின்றித் தொழி
வளர்க்கவும், வருமானத்தைப் பெருக்கவும், மனுதர்ம
நாளின் பெரும் பகுதி நேரம், அலுவலக வேலை
பார்க்க வேண்டியிருந்தது.

எப்போதும் பார்ட்டி, டூர், கேளிக்கை என்று கொ
டாட்டத்தை மட்டுமே விரும்புகின்ற சித்தப்பா குடும்பத்
இப்படி வாரி இறைத்துச் செலவு செய்கிற ப
திற்காகச் சிறிய அளவிலான வேலையைக்கூடச் செ
மாட்டார்கள்.

செய்ய விரும்பியதுமில்லை!

மனுதர்மன் என்ன சும்மாவா பணத்
கொடுக்கிறான்?

சொத்தில் சமபங்கு அவர்களுக்கும் உண்டுதானே
அதிலிருந்துதானே கொடுக்கிறான்.

அவனென்ன சித்தப்பா குடும்பத்திற்காக என
தனியாக ஒருமுறை சென்றா வேலை செய்கிறான்.

அவனுடைய வேலையுடன் சேர்த்துப் போக
போக்கிலே இதையும் செய்துவிட்டுப் போகிறான்.

இதற்கென்னமோ அந்த மாமியாரம்மா அவ்வள
வைகிறதே?

ஓய்வெடுக்கக்கூட நேரமின்றி, அருமைப் பேர
உழைத்து ஓடாய்த் தேய்கிறானாம்.



சின்ன மகன் குடும்பத்தார், பொறுப்பின்றிப்
பொழுதைப் போக்குகிறார்களாம்.

ஹூம்... உங்கள் அம்மாவிற்குப் பேரன் மட்டும்
தானே எப்போதுமே உசத்தி என்று சித்தி லோகநாயகி
அங்கலாய்ப்புடன் கூறியதை, மனுதர்மனே கேட்க நேர்ந்
திருக்கிறது.

ஆனாலும், இதற்குப் பெரிதாக மதிப்புக் கொடுத்துப்
பேச அவனுக்குத் தோன்றியதில்லை.

அவன் வருகின்ற நேரத்தில், வீட்டில் கூப்பாடின்றி
அமைதியாக இருந்தாலே போதும்.

எதையும் மறைமுகமாகத்தான் பேசிக் கொள்கிறார்கள்
என்பதில் இருந்தே, அவனிடம் நேரடியாக மறுத்துப் பேசு
கின்ற தைரியம், அவர்களுக்கு இல்லையென்பது தெரிந்து
போயிற்றே!

இருந்தாலுமே, பெற்றோரை முன் மாதிரியாகக்
கொண்ட மாதிரி, தம்பி மகிந்தனும், தங்கை கீர்த்தனாவும்,
நண்பர்களுடன் சுற்றித் திரியும் இன்ப வாழ்வையே
பிரதானமாக எண்ணுவதுதான், உள்ளூரக் கொஞ்சம்
எரிச்சலை உண்டாக்கிக் கொண்டிருந்தது அவனுக்கு.

இருவருமே நல்ல பிள்ளைகள்தான். கொஞ்சம்
கண்டிப்புக் காட்டினாலே, வழிக்குக் கொண்டு வந்து
விடலாம்.

ஆனால் அதற்கு இந்தச் சித்தி விட வேண்டுமே?

"உனக்குத்தான் வேடிக்கை, விளையாட்டு என்று
எதிலும் இஷ்டமில்லை. எப்போதும் அலுவலகம், அலுவ
லகம் என்றே இருக்கிறாய்.

இல்லையென்றால், இப்படி எல்லோரும் சென்ற பி... வரவேண்டியதில்லையே?

தன்னுடைய வசதி, வளங்களைப் பார்த்த பிறகு, ... பெண் தன்னை மறுக்கக்கூடும் என்று எதிர்பார்த்திரு... மாட்டான்.

ஜனார்த்தனி வேறுவிதமானவள் என்பது, இப்போ... தெரிந்து விட்டிருக்கும் அவனுக்கு.

எது எப்படியோ போகட்டும். இனி அவன் மூலமா... எந்த விதத்திலும் அவளுக்குக் கோபமோ, எரிச்சலோ உண்டாகாமல் இருந்தால் அதுவே போதும் என்... நினைத்தாள் அவள்.

அவள் நினைத்தது போலவேதான் நடந்தது.

குடும்பத்தினருடன் இனிமையாகவே சென்றன நாட்க...

அலுவலகத்தில் இருந்து மாலை வீடு திரும்பியது... அன்றைக்குப் பள்ளியில் நடந்ததை விவரிப்பா... சின்னவள்.

இணைந்து உரையாடியவாறே வழக்கமா... வேலைகளைச் செய்வார்கள்.

விடுமுறையின்போது வசந்தன் வந்ததால், பொழு... இன்னும் வேகமாகவே சென்றது அவர்களுக்கு.

தன்னுடைய முதல் சம்பளத்தில், எல்லோருக்கும் புது... துணியும், இனிப்புகளும் வாங்கிக் கொண்டு வந்தா... வசந்தன்.

செலவுகள் போக மீதிப் பணத்தை மூத்தவளி... கொடுத்த போது, உள்ளூர நெகிழ்ந்து போனாள் அவ...



'தம்பி உடையான் படைக்கு அஞ்சான்' என்பதை, யாரோ அனுபவித்துதான் எழுதி வைத்திருக்க வேண்டும் என்று தோன்றியது அவளுக்கு.

தோள் கொடுத்துப் பொறுப்பாக உதவி செய்யத் தம்பி ஆயத்தமாகி விட்டான். படிப்பு முடிந்து நல்லதொரு வேலையைத் தேடிக் கொண்டால், இன்னும் பல மடங்கு சம்பாதிப்பான்.

அதன் பிறகு, அவர்களின் பல ஆண்டுக் கனவு, ஏக்கம் எல்லாம் விரைவில் நிறைவேறும்.

அந்தத் தருணத்தைவிட, வேறு என்ன வேண்டும் அவளுக்கு!

உள்ளம் பூரித்து, லேசாகக் கண்களையும் கூடப் பனிக்கச் செய்தது.

அவள் கையில், கிட்டத்தட்ட ஐந்தாயிரம் ரூபாயிருந்தது.

"உன் முதல் சம்பாத்தியம் வசி. உன் விருப்பம் போல் செலவு செய்து கொள்!" என்று முறுவலுடன் கூறி, அவனிடமே பணத்தை நீட்டினாள் ஜனார்த்தனி.

"ஆ....ங்! இவ்வளவுமா அக்கா! அம்மாடியோவ்! இவ்வளவு ரூபாயையும் வைத்துக் கொண்டு என்னடா செய்யப் போகிறாய் வசி?" என்று வியப்பான குரலிலே கேட்டுக் கண்களைப் பெரிதாக விரித்தாள் சிந்து.

"ம்... இந்தப் பணத்திற்கு, ஒன்றிரண்டு வீடுகள் கிடைத்தால் வாங்கிப் போட்டு வைக்கலாம். நல்ல வழியில்

முதலீடு செய்த மாதிரியிருக்கும்!" என்று வசந்தன் கிண்டலாக மொழிய,

"ஆகா! இந்தப் பணத்திற்கு, ஒன்றுகூட அல்ல இரண்டு வீடுகள் கிடைக்க வேண்டுமாமாம்! வேண்டுமானால் அக்காவின் அலுவலகத்திலேயே முயற்சி செய்து பார்... கிடைத்தாலும் கிடைக்கும்!" என்று பதிலுக்குக் கீழ் உதட்டைப் பிதுக்கி அழகு காட்டினாள் சின்னவள்.

சின்னதாக முறுவலித்து, "விட்டால் குமரேசன் பில்டர்ஸைப் போண்டியாக்கி விடுவாய் போலிருக்கிறதே!" என்றவாறே, ஃபிரிட்ஜைத் திறந்து காய்களை எடுத்தாள் ஜனார்த்தனி.

"உன் பாஸ், அப்படியே போண்டியாகத்தான் விட்டு விடுவாராக்கும். முதலாளி வந்தாலும் இல்லையென்றாலும் தான், அனைவரும் கர்ம சிரத்தையுடன் வேலை செய்பவர்களாக இருக்கிறீர்களே!" என்றாள் சிந்து.

"இதெல்லாம் உனக்கெப்படித் தெரியும்?" என்று வசந்தன் கேட்க,

"ரொம்பவும் போரடிக்கும்போது, அக்காவின் அலுவலகத்திற்குச் சென்றிருக்கிறேன்டா... எல்லாம் அப்போது கவனித்ததுதான்!"

"ஒரு இடத்தையும் விட்டு வைத்து விடாதே!" என்று முணுமுணுத்தவன், "அக்கா, சிந்து கேட்ட மாதிரி, இவ்வளவு ரூபாயை வைத்துக் கொண்டு நான் என்ன செய்யப் போகிறேன்? இரண்டு மாதத்தில் ஃபீஸ் கட்ட வேண்டியிருக்குமே, அதற்குப் பயன்படும். நீயே வைத்திரு!" என்று சகோதரியிடமே கொடுக்க முயன்றான்.



"சொன்னால் கேட்க மாட்டாயா வசி?" என்று ஒரு மாதிரியான குரலிலே கேட்டவள், "நம்முடைய முதல் சம்பாத்தியத்தை, இஷ்டம்போலச் செலவு செய்வது, ஒருவித இனிய அனுபவம்டா. என்னிடம் அம்மா நடந்து கொண்டது போலத்தான், இந்த விசயத்தில் நானும் உன்னிடம் நடந்து கொள்ள வேண்டுமென்று நினைக்கிறேன்!" என்று ஆனந்தமாகக் கூறி, அழகாக முறுவலித்தாள் தமக்கை.

அக்கா, தங்களுக்கு இன்னொரு அம்மாவேதான் என்று, அவர்கள் நினைத்துக் கொண்டிருப்பது எவ்வளவு சரியான விஷயம்!

தான் அனுபவித்து மகிழ்ந்த மாதிரி, தன் சகோதரனும் மகிழ்ச்சியடைய வேண்டுமென்று எண்ணுகின்ற அக்கா கிடைக்க, அவர்கள் நிச்சயம் புண்ணியம் செய்தவர்களாகத் தான் இருக்க வேண்டும்.

சகோதரி எதிர்பார்த்த மாதிரியே, புன்னகை வெளிப்பட பணத்தை பர்ஸிலேயே வைத்தான் சின்னவன்.

அன்று மாலையில் வீடு திரும்பியபோது, அவளுக்குப் பிடித்த டார்க் மெரூன் கலரில், டிஸைன் கற்கள் பதித்த ஹேண்ட் பேகும், ஸ்லிப்பரும் இருந்தன. பக்கத்திலேயே புதிய வாக்கிங் ஸ்டிக்கும் கூட!

"எல்லாமே நல்லாயிருக்கு தானேக்கா! செலக்ட் பண்ணுவதற்கு என்னையல்லவா அழைத்துச் சென்றான்!" என்று பெருமையாகக் கூறியவாறே டீயைக் கொண்டு வந்து கொடுத்தாள் சிந்து.

"உனக்கு என்ன வாங்கிக் கொடுத்தான்?" என்று கேட்டு விட்டு டீயைப் பருகினாள் ஜனார்த்தனி.

"சமீபத்தில்தானே நிறைய வாங்கினேன். அதனால் சின்னதாக ஒரு பர்ஸ் மட்டும்!" என்று கூறி, எடுத்து வந்து காட்டினாள்.

அழகிய வேலைப்பாடுடன், கைக்கு அடக்கமாக இருந்தது பர்ஸ்.

"நைஸ் செலக்ஷன்!" என்றாள் முறுவலுடன்.

"தேங்க்ஸ்கா!" என்று சின்னவள் குதித்த போது முகத்தைக் கழுவித் துடைத்தபடி வந்தான் வசந்தன்.

எல்லோருமாகப் பேசிச் சிரித்துக் கொண்டிருந்தபோது நடைப் பயிற்சிக்குச் சென்றிருந்த அப்பாவும் வந்துவிட, அங்கே சிரிப்பொலி மேலும் சற்று நேரம் தொடர்ந்து சென்றது.

சூரியன் உதயமாவதும், பிறகு மறைவதும், மி வேகமாக நடப்பது போலிருந்தது அவர்களுக்கு.

ஒரு வகையில் அதுவும் உண்மைதான்.

அப்படி, இப்படி என்று ஏழெட்டு மாதங்களுக்கு மேல் ஓடிவிட்டதே!

இத்தனை நாட்கள், மாதங்களில் மனுதர்மனை ஒருமுறை கூட அவள் பார்க்க வேண்டி நேரவில்லை.

ஆனால், ஒரு நாள் மழை பெய்தபோது, வழியிலே பார்த்துவிட்டுச் சிந்துவை அழைத்து வந்து வீட்டின் அருகிலே விட்டுவிட்டுச் சென்றானாம் மனுதர்மன்.

சிந்து கூறக் கேட்டுவிட்டு, "பரவாயில்லையே அவ்வளவு பெரிய தொழில் செய்கிற மனிதர், உன்னிடம்



இந்தளவிற்குச் சாதாரணமாக நடந்து கொண்டிருக்கிறாரே!" என்று, தன் வியப்பை வெளிப்படையாகவே காட்டினார் அப்பா.

"ஆமாம்பா. அவர் எப்போதுமே அப்படித்தான் நடந்து கொள்வாராம். முன்பு ஒருமுறை அக்காவே சொல்லியிருக்கிறார்கள்!" என்று, தங்கை சொன்னது காதில் விழுந்தது.

இந்தச் சிந்து, கொஞ்ச நேரம் வாயை மூடிக் கொண்டிருந்தால் தேவலாம் போலிருந்தது ஜனார்த்தனிக்கு.

ஆனால், அவள் நினைத்ததுதான் லேசில் நடக்கும் போல் தோன்றவில்லை!

அந்த நேரம் தோன்றிய சிறு கோபத்தைப் பிசைந்து கொண்டிருந்த சப்பாத்தி மாவிடம் காட்டினாள் ஜனா.

இடையில், ஒருமுறை அப்பா சொந்த ஊருக்குச் சென்று வந்தார்.

வேலை அதிகமானதால், ஜனார்த்தனியினால் உடன் செல்ல முடியாமல் போயிற்று.

இதனிடையே, ஜனார்த்தனிக்குச் சிறு பதவி உயர்வு ஒன்றும் கிடைத்தது.

அதற்காக, முன்பைவிட அதிகமாக உழைக்க வேண்டியுமிருந்தது.

இதுவும்கூட, அவளுடைய நாட்கள் வேகமாகச் சென்று மறைய ஒரு காரணமாக இருக்கலாம்.

வசந்தனும் வேலையிலே கெட்டிக்காரன் என்ற பெயரை வாங்கிவிட்டதாகத் தெரிவித்தான்.

நிர்வாகியின் மதிப்பைப் பெற்ற வசந்தன் ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கோ, அன்றி வ களுக்கோ, பணம் எடுத்துச் செல்கின்ற பொறுப்புகளு அவ்வப்போது கொடுக்கப்பட்டதாம்.

தம்பியின் நாணயம் பற்றிப் பெருமையாக இரு போதும், 'பணம் சம்பந்தப்பட்ட விஷயத்தில், எப்போ கவனமுடன் இரு!' என்றும் சொல்லத் தவறவில் மூத்தவள்.

"நிச்சயமாகக் கவனமுடனே இருக்கிறேன் அக் என்று உறுதியளித்தான் வசந்தன்.

ஜனார்த்தனியின் குடும்பம், தெள்ளிய நீரோ மாதிரிச் சென்று கொண்டிருந்த இந்தச் சமயத்தில்தா உடனடியாக வரும்படி வசந்தனிடமிருந்து ஃபோன் வந்

அவனுடைய குரல் சரியில்லை என்பது பு "என்னடா ஏதாவது பிரச்சனையா?" என்று விசாரித் ஜனார்த்தனி.

"நேரில் வாக்கா! வீட்டில் யாருக்கும் தெ வேண்டாம்!" என்றவனின் தொண்டை இறுகிப் போயி

மறுமுனையில் அதை உணர்ந்தவளாக, கொண்டு எதுவும் கேட்காமல், எவ்வளவு விரைவாகச் செ முடியுமோ, அவ்வளவு விரைவாகத் தம்பி இருக்கு நோக்கிப் பயணப்பட்டாள் அவள்.

"என்னம்மா திடீரென்று கிளம்புகிறாய்?" என்று அப்பாவிடம்,

"அலுவலக வேலைப்பா! கட்டாயம் போக வேண் என்று சொல்லியிருக்கிறார்கள்!" என்று கூறி அப்பாவை



வைத்தவள், செல்லும் வழியில்தான் சொந்த வேலை என்று அலுவலகத்திற்கு விடுப்புக் கூறினாள்.

ஜனார்த்தனி சும்மா அடிக்கடி விடுப்புக் கேட்கிற ஆள் அல்ல என்பதால், நிர்வாகம் உடனே சரியென்றது.

தடதடக்கும் மனதுடன் அவன் சொன்ன இடத்திற்குச் சென்றவள், ஒரு கணம் அப்படியே ஸ்தம்பித்துப் போய் விட்டாள் என்றுதான் சொல்ல வேண்டும்.

அந்த நீளமான காரிடரில் கிடந்த நாற்காலியில், கைகளை இறுகக் கட்டிக் கொண்டு, குறுகிப் போய் அமர்ந்திருப்பது அவளின் தம்பியேதானா?!

எப்போதுமே ஸ்மார்ட்டாக இருக்கும் அவனா இப்படி...

கசங்கிய உடையும், ஷேவ் செய்யாத முகமுமாய்... நெஞ்சை வலிக்கச் செய்தது அவளுக்கு...

தமக்கையைப் பார்த்ததும், ஓடிவந்து அவளின் கைகளைப் பற்றிக் கொண்டவனின் கலக்கமான விழிகளைப் பார்த்ததுமே, விஷயம் ரொம்பவும் பெரியது என்பது புரிந்து போயிற்று.

தம்பியின் கைகளை ஆதரவாகத் தட்டிக் கொடுத்து. "விஷயம் எப்படிப்பட்டதாக இருந்தாலும், எதிர்கொண்டுதானே ஆகவேண்டும், வசி. நானிருக்கிறேன். தைரியமாயிரு. எதுவானாலும் முடிந்தவரை சமாளிக்கலாம்!" என்று, தனக்குமே சேர்த்துத் தைரியமூட்டிக் கொண்டாள்.

"எனக்கென்னவோ சமாளிக்க முடியுமென்று தோன்றவில்லை அக்கா. எதிர்காலமே கேள்விக்குறியாகி, இருண்டு விடும்போல் தெரிகிறது!" என்றவனின் தோள்கள் குலுங்கின.

கண்களில் பனித்த நீரை உள்ளே இழுத்துக் கொ
"முதலில் விஷயம் என்னவென்பதைச் சொல்லு
என்றாள்.

ஒரு பெருமூச்சோடு தம்பி சொன்னதைக் கே
வளுக்குத் தலையிலே இடி விழுந்தாற் போலானது!

அவ்வளவு அதிர்ச்சி!

கண்களிலே பூச்சி பறப்பது போலிருக்க, இருமு
இமைகளை அழுந்த மூடித் திறந்த பிறகும்கூட, அ
அதிர்ச்சியிலிருந்து கொஞ்சமும் மீள முடியவில்ல
அவளால்!

ஜனார்த்தனியையுமே சேர்த்துக் கலக்கமடைய வைக்
அளவிற்குப் பிரச்சனை பெரியதுதான்.

வசந்தனின் வசம் கொடுத்தனுப்பப்பட்ட, ஓட்டல் பண
பத்தரை லட்சத்தை, யாரோ திருடிச் சென்று விட்டார்கள

"தொலைத்ததற்கு நீதானே பொறுப்பு. அடுத்த ப
நாட்களுக்குள் பணத்தை ஓட்டல் நிர்வாகத்திற்குக் கட்டி
வேண்டும். இல்லையென்றால், நிர்வாகம் எடுக்கவிருக்
நடவடிக்கையின் விளைவு, விபரீதமாக இருக்கும் என்
எச்சரித்திருக்கிறார்கள்!" என்று, எழும்பாத குரலி
கூறினான் வசந்தன்.

பத்தே நாட்களில் பத்தரை லட்சமா? வாய்ப்
இல்லையே! கடவுளே! அவள் என்ன செய்யப் போகிறா



## 12

"அவ்வளவு பணத்தை வைத்திருக்கும்போது, எவ்வளவு கவனமுடன் இருந்திருக்க வேண்டும். எப்படித் தொலைந்தது?" என்று விசாரித்தாள்.

"பணமிருந்த பையை பைக்கிலே மாட்டிக் கொண்டு, எப்போதும் போகிற சாலை வழியாகத்தான் சென்று கொண்டிருந்தேன் அக்கா. ஒரு தெருமுனையில் திடீரென்று கார் வந்து மோதி விட, நான் முடிந்தவரை அடி படாதிருக்க நொடித்துத் திருப்பினேன். பைக் கீழே சாய்ந்து என்னை இழுத்துச் சென்றது.

காரிலிருந்த இரண்டு பேர் வேகமாக என்னிடம் வந்து, எழுந்து நிற்க உதவி செய்தபடியே, 'சாரி தம்பி. தப்பு எங்கள் மேல்தான். யாராவது வரக்கூடும் என்ற எண்ணமில்லாமல் சட்டென்று திருப்பி விட்டோம். மன்னித்து விடுங்கள். அடியேதும் பலமாகப் பட்டிருந்தால் சொல்லுங்கள், மருத்துவமனைக்குப் போகலாம்!' என்று அக்கறையுடன் கேட்டார்கள்.

"அதெல்லாம் வேண்டாம் என்று கூறிவிட்டுப் பை இருக்கிறதா என்று பார்த்துவிட்டு பாங்கிற்குச் சென்று பையைத் திறந்தால், அதில் வெறும் நியூஸ் பேப்பர்கள் மட்டும்தான்..." என்றவனின் குரல் உடைந்து போயிற்று.

செருமிக் கொண்டு, "பணமில்லாத வெறும் பையுடன் வெளியே வந்தபோது, அப்படியே எல்லாமே இருண்டு விட்டதைப் போலாகிவிட்டது அக்கா.

அந்த கார்க்காரன்கள் என்னிடம் பேசிய இடைவெளியில்தான், யாரோ பணத்தைத் திருடியிருக்க வேண்டும்.

இல்லை. அந்த விபத்தே திட்டமிட்டு நடத்த[ப்]பட்டதுதானோ என்னவோ? நான் சொன்னதை யாரு[ம்] முழுமையாக நம்பியதைப்போல் தெரியவில்லை அக்கா[.]

இதுவரை என்னை அடித்து இம்சிக்காமல் இருப்ப[து] கூட, மானேஜர் சாரின் புண்ணியத்தினால்தான் இருக்கு[ம்]. இல்லையென்றால் நீ வருவதற்குள், எனக்கு என்ன வெல்லாம் நடந்திருக்குமோ தெரியாது.

ரொம்...பவும் கஷ்டமாயிருக்கிறது அக்கா!" என்றா[ன்] தம்பி.

அவளுக்குமே, அடுத்து என்ன செய்யப் போகிறோ[ம்] என்று தெரியவில்லைதான். இருந்தாலும், அப்போதைக்கு தம்பியின் முதுகைத் தட்டிக் கொடுத்தாள்.

சற்று நேரத்திற்கெல்லாம் அவர்களை உள்ளே அழைத்துச் சென்றார்கள்.

அந்த ஓட்டல் முதலாளிக்கு அப்பாவின் வயதிருக்கு[ம்].

"நீதான் பையனின் அக்காவாம்மா?" என்றவ[ர்] "உட்காரம்மா. பையன் சொல்லியிருப்பானே. நடந்த[து] என்னவாகவோ இருந்துவிட்டுப் போகட்டும். நஷ்டப்ப[ட்]டிருப்பது என் பணம். ஐந்தாயிரம், பத்தாயிரம் அல்ல பத்....தரை லட்சம்!

எனக்கு என் பணம் திரும்ப வேண்டும். பத்[து] நாட்களில் கொடுக்கப் பாரு. இல்லையென்றால் நான் வே[று] மாதிரி முடிவெடுக்க வேண்டியிருக்கும்.

படிக்கிற பையன் என்பதால்தான் பொறுமையே[ாடு] இருக்கிறேன். இல்லையென்றால்... சரி, அதை வி[டு]



இப்போது இந்தப் பத்திரத்தில் இருவரும் எனக்குக் கையெழுத்திட்டுத் தாருங்கள். தாராளமாகப் படித்துப் பாருங்கள்!" என்றார் அவர்.

பார்வை வேகமாக அதிலே பதிய, "என்ன சார், திருட்டுப் போன பணத் தொகையை நாங்கள் உங்களிடமிருந்து கடனாக வாங்கியிருப்பதாக எழுதியிருக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"சொன்னபடி பத்து நாட்களில் பணம் தரவில்லை என்றால், இதை வைத்துதானே உன் தம்பி மீது போலீஸில் புகார் கொடுக்க முடியும்!" என்று, சாதாரணமாகப் பேசுவதுபோல் கூறினார்.

"சா...ர்..." என்று, முன்பைவிட மேலாக அதிர்ந்து போனாள்.

"வெறும் வாய் வார்த்தையை மட்டும் நம்பி, இவ்வளவு பணத்தை விட்டு வைக்க முடியுமா? நாளைக்குக் காவல் துறையில் புகார் அளிக்க வேண்டி வந்தால் ஆதாரம் வேண்டுமில்லையா?"

"அந்த நிலை வராது சார்."

"வராமல் இருந்தால் எனக்கும் சந்தோஷம்தாம்மா. சொந்த ஊரிலே ஏதோ சொத்து பத்தெல்லாம் இருப்பதாக மானேஜர் சொன்னார். அதை வைத்துப் பணத்தை வாங்கிவிடலாம் என்ற எண்ணத்தில்தான், இந்த ஏற்பாடு செய்தேன். இதை ஏற்பதும், ஏற்காததும் உங்கள் இஷ்டம்..." என்றார் முடிவுபோல.

'சும்மாவே அந்தச் சொத்து, லட்சக்கணக்கான கடனில் தான் இருக்கிறது...' என்ற நினைவே, அவர்களைத் தொய்வடையச் செய்தது.

"சார், உங்கள் பணத்தை நீங்கள் கே நியாயமான விஷயம்தான். அதே சமயம் எங்க நிலையையும் கொஞ்சம் புரிந்து கொள்ளுங்கள் ப்ளீ

"இந்தத் தொகை எங்களுக்கு மலை மாதிரி. பண்ண நாள் பிடிக்கும். எதற்கும் இந்தத் திருட்டுச் சம்ப பற்றிக் காவல்துறையில் ஒரு புகார் கொடுத்து வைப் நல்லதென்று தோன்றுகிறது. அவர்களால் கண்டுபி முடிந்தால், எல்லாப் பிரச்சனையும் தீர்ந்துவிடுமே!" எ கூறினாள்.

இதை இவர் எந்தளவிற்கு ஏற்றுக் கொள்ளக் கூ என்றும் தோன்றத்தான் செய்தது.

"இதோ பாரம்மா. போலீசுக்கு ஆயிரத்தெட்டு வே இருக்கும். இதுவும் அதில் ஒன்றாகக் கிடக்கும். ந கணக்குத் தெரியாமல், சும்மா காத்துக் கிடக்க என்னா முடியாது. உங்களுக்குக் கூடுதலாக இரண்டு நாட்க தவணை வேண்டுமானால் தருகிறேன். இதற்கு மே எதையும் எதிர்பார்க்காதீர்கள்!" என்று தீர்மானமாக கூறினார்.

அதற்கு மேல் எதுவும் பேச முடியாமல், அக்கா தம்பியும் வெளியே வந்தார்கள்.

சகோதரியின் முகத்தைப் பார்த்து, "என்னுடைய த நம் குடும்பத்தின் நிம்மதியையே அழித்துவிடும் போலிரு கிறதேக்கா. வேலை யெல்லாம் இப்போது வேண்டா என்று நீ சொன்னதை மீறியதற்கு, நல்ல தண்டனை கிடைத்து விட்டது!" என்று, நொந்து போனவனாக கூறினான் வசந்தன்.



"வசி..." என்று இதமாக அழைத்து, "இதோ பாரடா, நடந்ததை இல்லையென்று ஆக்க முடியாது. அதையே நினைப்பதைவிட, மீண்டு வர என்ன வழியென்று யோசிக்கலாம். அவர் சொன்னதுபோல, ஊரிலிருக்கும் சொத்தைக் கொண்டுதான் இந்தப் பிரச்சனையிலிருந்து வெளிவர முடியும்!" என்று ஏக்கமான பெருமூச்சுடன் கூறினாள்.

"எப்போது சொந்த ஊருக்குப் போவோம் என்று, எவ்வளவு ஆசையுடன் இருந்தோம். இப்போது அதையெல்லாம் அடியோடு இழக்க வேண்டும் என்றால், சிந்து, அப்பாவிற்கெல்லாம் எவ்வளவு கஷ்டமாக இருக்கும். இந்த விஷயம் பற்றி, அவர்களிடம் எப்படிக்கா சொல்லப் போகிறோம்?" என்று, குரல் கரகரக்கக் கூறினான் சின்னவன்.

"சொத்தா, நீயா என்று வரும்போது, எங்களுக்கு நீதானே முக்கியம். நான், முதலில் நிலத்தை விற்பது பற்றி சிவசு மாமாவிடம் பேசி முடிக்கிறேன். அதுவரை, இந்த விஷயம் நமக்குள்ளே மட்டும் இருக்கட்டும்!" என்றாள்.

தமக்கையை நினைத்துக் கொண்டே, தன் வேலைகளை இயந்திரம் போல் செய்தான் வசந்தன்.

இது ஃபோனில் பேசி முடிக்கிற விஷயமல்ல என்று, சொந்த ஊருக்குச் சென்று சிவசு மாமாவை நேரிலேயே சந்தித்தாள் ஜனார்த்தனி.

ஆனால், அவர் சொல்லச் சொல்லக் கேட்டவளுக்குத் தலை கிர்ரென்று சுற்றுவது போலிருந்தது.

"இது ஒன்றும் டவுன் பகுதி கிடையாதேம்மா. வீட்டு மனை போட்டு விற்பவர்கள் கூட, இவ்வளவு லட்சம்

கொடுத்து வாங்குவது சாத்தியமில்லை. காரணம், நம் தோட்டத்திற்கு வருகின்ற சாலையின் அகலம் ரொம்பவும் குறைவு. டிராக்டர் மட்டும்தான் போக முடியும்.

மனை போட வேண்டுமானால், குறைந்த பட்சம் பன்னிரண்டு அடி சாலையாவது அரசாங்கத்தில் காட்ட வேண்டும். அதற்கு வாய்ப்பே இல்லை. அதனால் விவசாயத்திற்கு மட்டும்தான் விற்க முடியும்.

எனக்குத் தர வேண்டிய தொகை போக, மீதி இரண்டிலிருந்து மூன்று லட்சம்தான் கிடைக்கும். நீ கேட்பதோ மிகவும் பெரிய தொகையாயிற்றே. என்னம்மா செய்வாய்?" என்று அவளிடமே திருப்பிக் கேட்டார் சிவசு மாமா.

உள்ளூர நொடிந்து கொண்டிருந்தது அவள் உள்ளம்.

"மாமா! உங்களின் கடனை வருடம் இவ்வளவு என்று திருப்பி விடுகிறேன். தயவு செய்து என் வார்த்தையை நம்புங்கள். உங்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்" என்று கெஞ்சாத குறையாகக் கேட்டாள்.

"இது சரி வராதும்மா. நிலம் இருக்கிற தைரியத்தில்தான், நீங்கள் கேட்டபோதெல்லாம் கொடுத்தேன். என் பிள்ளைகள் அந்தப் பணம் எப்போது வரும் என்று அடிக்கடி கேட்டு நச்சரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

"இப்போது நிலத்தையும் மற்றவர்களுக்கு விற்றுவிட்டு பணமும் பிறகுதான் கொடுக்க முடியும் என்றால், அவர்கள் ஒருபோதும் சம்மதிக்க மாட்டார்கள் அம்மா.

"வயதான காலத்திலே, அவர்களின் விருப்பத்திற்கு மாறாக நான் என்னம்மா செய்ய முடியும்? அதனால், வெளி



ஆளுக்கு விற்றாலும் பரவாயில்லைம்மா. என் பணம் முழுவதையும் செட்டில் பண்ணிவிடு. இல்லையென்றால், என் பிள்ளைகள் ஒத்துக் கொள்ள மாட்டார்கள்!" என்று எதையும் மூடி மறைக்காமல் வெளிப்படையாகவே தெரிவித்தார் சிவசு.

மூளை அப்படியே மரத்துப் போயிற்று அவளுக்கு.

இவர்களின் கடன் போக மீதிப் பணத்துடன், அவளிடம் இருக்கும் சேமிப்பையும், சிறு சிறு நகைகளையும் சேர்த்தால், ஒரு லட்சம் வருமா?

எல்லாம் சேர்ந்தே, நான்கு லட்சத்தைத் தாண்டாதே! மீதிக்கு என்ன வழி என்று, வீட்டிற்குத் திரும்பிய பிறகும்கூட யோசித்து யோசித்து, அவளின் மனதோடு மூளையுமே களைத்துப் போயிற்று என்றுதான் சொல்ல வேண்டும்.

"என்னடா ஜனாம்மா. எப்போதும் ஏதோ சிந்தனையாகவே இருப்பதுபோல் தெரிகிறது. வேலையில் ஏதும் பிரச்சனையாடா?" என்று பரிவோடு வினவினார் தந்தை.

அப்பாவின் காலடியிலே அமர்ந்து, அவரின் கைகளைப் பற்றிக் கொண்டு, சற்று நேரம் கண்களை மூடிக் கொண்டாள்.

அப்போதைக்கு எதுவும் கேட்காமல், மகளின் தலையை வருடினார் பெற்றவர்.

தந்தையின் இதமான வருடல், நைந்து போயிருந்த அவளின் உள்ளத்திற்கு ஆறுதலாக இருந்தது. அவளே எதிர்பாராத அளவிற்கு.

சற்று நேரத்திற்கெல்லாம், அப்படியே கண்ணயர்ந்து போனாள் மகள்.

அவள் ஓய்வெடுத்தது சில நிமிடங்கள்தான் என்றாலும், அந்த நேரத்தில் பெரிய வரமாகத் தோன்றி அவளுக்கு.

பிறகு கண் விழித்தவள், எழுந்து சென்று மு கழுவிக் கொண்டு வந்தபோது, சூடாக டீ தயார் வைத்திருந்தார் அப்பா.

சிறு புன்னகையுடன் டீயைப் பருகி முடித்தாள்.

மகளின் முகம் கொஞ்சம் இயல்பிற்குத் திரும் யிருப்பதைக் கண்டு, "என்னம்மா. இப்போதாவது எ கேள்விக்குப் பதில் சொல்லலாம் இல்லையா?" என்றா

"பிரச்சனையென்று எதுவும் இல்லை அப்பா. வேலை சம்பந்தமாக ஒரு முக்கியமான முடிவெடுக்க வேண் யிருந்தது. அதைப் பற்றித்தான் நினைத்துக் கொ டிருந்தேன். வேறொன்றும் இல்லை!" என்றாள்.

மகளின் வார்த்தைகளை, அந்தத் தந்தை என்ற குமே சந்தேகித்ததில்லையே!

"சரிம்மா..." என்ற விட்டு, வாக்கிங் ஸ்டிக்கு வெளியே சென்றார் அவர்.

ஓட்டல் முதலாளியின் செல் நம்பருக்குத் தொட கொண்டு, "இப்போது நான்கு லட்சம் கொடுத்துவிடுகிறே சார். மீதியை வருடத்திற்கு இரண்டு லட்சமாகத் திரு விடுகிறோம். கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். ப்ளீஸ் சா என்று, கம்மிய குரலிலே கேட்டாள் ஜனார்த்தனி.



அவள் கேட்ட நேரம் சரியில்லையோ? அன்றி அந்த மனிதரின் சுயரூபம் வெளிப்பட்டதோ? எதுவென்று தெரிய வில்லை.

"என்னம்மா, விளையாடுகிறாயா? நான் என்ன உங்களிடம் வட்டிக்கா பணம் கொடுத்து வசூலிக்கிறேன். வருடக்கணக்கில் தவணை கொடுக்க. பண விஷயத்தில் நான் ரொம்பவும் பொல்லாதவன். தெரிந்து கொள். ஏதோ நல்ல குடும்பத்துப் பிள்ளைகள் என்று மானேஜர் சொன்னதால்தான் உடனே நடவடிக்கை எடுக்காமல் விட்டு வைத்திருக்கிறேன். நான் சொன்னது மாதிரி நடந்து கொள்ளுங்கள். இல்லையென்றால், பணம் திருடப்பட்டதாக நாடகமாடுகிறான் என்று, உன் தம்பி மீதே புகாரளித்துக் கம்பியெண்ண வைத்து விடுவேன். ஜாக்கிரதை..." என்று, கடுமையான குரலிலேயே கூறிவிட்டுத் தொடர்பைத் துண்டித்தார்.

இந்த மனிதர், வெறும் வாய் வார்த்தை மிரட்டலுக்குச் சொல்லவில்லை என்பது நன்றாகவே புரிந்தது.

அப்படியேதும் நடந்தால்... கடவுளே!

தம்பியின் படிப்பு, வாழ்வு எல்லாமே பாழாகிப்போய் விடுமே!

மேலும், அவளின் அருமைத் தம்பி போய் ஜெயிலிலா? மரியாதையான அவர்களின் குடும்பம் எப்படி இதைத் தாங்கும்?

செய்யாத தவறுக்கு வசந்தன் தண்டனை பெறுவதா? என்ன அநியாயம்!

மன வேதனை தொடர்ந்து அதிகரித்து, ...
முட்டுவது போல் இருக்கவும், ஜன்னல் அருகே சென்று
கதவுகளைத் திறந்து விட்டாள்.

முகத்தில் மோதிய காற்றின் வேகம், லேசாகச் சில்லிட
வைத்தது.

அவளுக்குத் தெரிந்த வழிகளில் எல்லாம் முயன்று
பார்த்தாயிற்று. இனி அடுத்தென்ன செய்வது? நாட்கள்
கழிந்தாலும் பிரச்சனை அப்படியே, அதே நிலையில்தான்
இருக்கிறது.

வெளியே சென்றிருந்த தந்தை, தூரத்தில் மெல்ல
நடந்து வருவது தெரிந்தது.

விஷயம் தெரியும்போது அப்பாவிற்கு இந்த ந...
சாத்தியம்தானா? ஒரேயடியாக வீழ்ந்து விட்டால்?

நடக்காது என்று உறுதியுடன் கூற முடியாதே!

சிட்டுக்குருவிபோல் சுற்றித் திரியும் சிந்துவின் மனது
பெரிய அளவிலே பாதிக்குமே!

எல்லாவற்றையும்விட, வசந்தன் ஒவ்வொரு நிமிடமும்
ரண வலியை அல்லவா அனுபவிப்பான்!

அம்மாவின் இழப்பிற்குப் பிறகு, அன்று தான்...
மாட்டாத மாதிரி கண்களில் இருந்து கண்ணீர் வழிந்து
நனைத்தது.

அதைத் துடைக்கக் கூடத் தோன்றாமல் அப்படியே
நின்றாள்.

எவ்வளவு நேரம் வெறித்த பார்வையுடன் நின்றாளோ
பலமான ஹாரன் சத்தத்துடன், ஏதோ வண்டி சாலையை

...கலாம் ...

...த்து செல்லச் சட்டென்று இயல்பிற்குத் திரும்பியவள்,
...ன்றி அடித்து முகத்தைக் கழுவினாள்.

அடுத்த சில நிமிடங்களிலேயே தந்தை வந்துவிட,
...த்தில் எதையும் காட்டாமல் வீட்டு வேலையில்
...ழ்ந்தினாள்.

சற்று நேரத்திற்கெல்லாம், "அக்கா! எப்போது வந்தாய்?"
என்றவாறே, ஓடி வந்து கட்டிக் கொண்டாள் சிந்து.

செல்லப் பூனைக்குட்டி மாதிரிச் சிரிப்புடன் தன்னைச்
சுற்றி வந்த தங்கையின் முகத்தைப் பார்த்துக் கொண்
...ருப்பது, இதமாக இருந்தது அவளுக்கு.

இரவு தூங்குவதற்கு முன்புவரை, ஓயாமல் பேசிக்
கொண்டிருந்தாள் சிந்து.

"பிறகு, என்னக்கா, பயணக் களைப்பா? நான் வேறு
அதைப் பற்றி நினைக்காமல், உன் தூக்கத்தைத் தொல்லை
பண்ணிக் கொண்டிருக்கிறேன் பார். இனி நிம்மதியாகத்
தூங்கு. குட் நைட்!" என்று கூறிவிட்டுத் தலையோடு
போர்த்துக் கொண்டாள் சிந்து.

நிம்மதியான தூக்கமாம்! இனி அது அவளுக்கு
எங்கே கிடைக்கப் போகிறது?

அப்படியும், இப்படியுமாகத் திரும்பிப் படுத்தவள்,
தங்கையின் தூக்கம் கெடாதவாறு மெல்ல எழுந்து, மொட்டை
மாடிக்குச் சென்றாள்.

மும்பை நகரின் இருளைப் பகலாக்க முயன்றன
விளக்கின் ஒளிகள்.

எந்தப் பக்கம் திரும்பினாலும் பளிச்சிடும் வெளிச்சம் தெரிந்தது.

அந்த நடுநிசியிலே, தெய்வத்தையும், தெய்வமாகிவிட்ட தாயையும், தம்பியைக் காப்பாற்றும்படி மனதார வேண்டிக் கேட்டாள்.

உள்ளூர ஒரு சிறு கடுகளவு அமைதி கிடைத்தது.

ஏதோ வழி தென்படப் போவதுபோலக் கொஞ்சம் படபடத்தது. கூடவே, என்ன வழி, என்ன வழியென்று நெற்றியும் சுருங்கியது.

தொலை தூரத்தில் தெரிந்த கடலிலிருந்து பெருத்த ஓசை கேட்டது.

ஜெகஜ்ஜோதியாய் ஜொலித்தவாறு, துறைமுகத்தை நோக்கி வந்து கொண்டிருந்தது, ஒரு பிரம்மாண்டமான சரக்குக் கப்பல்.

துறைமுகம்.

இந்த ஒற்றை வார்த்தையில், அவளுக்கு ஏதோ வழியிருக்கிற மாதிரியொரு உணர்வு.

கண்களை இறுக மூடியவளின் புருவ முடிச்சு பட்டென்று அவிழ்ந்தது.

கடைசியாக இது... இதுதான் அவளுக்கு மீளக் கிடைத்திருக்கும் வழியா?

கடவுளே...

அவளால் எப்படி முடியும்?

நினைத்துப் பார்க்கக் கூட இயலவில்லையே என்று தவித்தது மனது.



அப்போது கையிலிருந்த செல்போன் அழைக்க, நம்பரைப் பார்த்தாள்.

அழைப்பு தம்பி வசந்தனிடமிருந்துதான்.

## 13

“எல்லோரும் தூங்கி விட்டார்களா அக்கா...” என்று கேட்ட பிறகே, “ஊருக்குச் சென்ற விஷயம் என்னவாயிற்றுக்கா?” என்றான்.

“விலை நிலவரம் என்னவென்று விசாரித்துவிட்டு, இரண்டு நாட்களில் சொல்வதாகச் சொல்லியிருக்கிறார். விஷயம் நல்லவிதமாகவே முடியுமென்று நம்பு, வசி...” என்றாள் தமக்கை.

“நம்பிக் கொண்டுதான் இருக்கிறேன் அக்கா. ஆனால், ஒவ்வொரு நிமிடமும் செல்லும் விதம், ரொம்பவே சகிக்க முடியாத சித்ரவதையாக அல்லவா இருக்கிறது. ஒருவேளை, சொன்ன நாளைக்குள் பணத்தைக் கொடுக்க முடியாமல் போனால்...

அவர்கள் எல்லாம் எந்தளவிற்கு வேண்டுமானாலும் நடந்து கொள்வார்கள் என்று, மானேஜரே சொல்கிறார். நரகத்திலே மாட்டிக் கொண்ட மாதிரியிருக்கிறது அக்கா...” என்று, மனதிலிருப்பதைக் கொட்டினான் தம்பி.

சகிக்க முடியாத சித்ரவதை!

நரக வேதனை!

இந்த மாதிரிக் கொடுமையான வார்த்தைக... யெல்லாம், அவளின் அன்பான தம்பி சொல்ல, கேட்க... அவள் எவ்வளவு துர்பாக்கியவதியாகிப் போனாள்.

ஈரேழு தலைமுறைக்கும் போதுமான அவஸ்தை...

அந்த நிமிடம்தான் அவளின் மனது, தன் சுய வி... வெறுப்பை ஒதுக்கித் தள்ளிவிட்டு, உறுதியான ஒ... முடிவெடுத்தது.

தம்பியிடம் ஆறுதலாகப் பேசிவிட்டுக் கடல் இருக்கு... திசையைப் பார்த்தவளுக்குக் காரணம் கண்டுபிடிக்க முடியா... படி பெருமூச்சு ஒன்று வெளிப்பட்டது.

மறுநாள் காலையில் கிளம்பி வழக்கம்போ... வெளியே சென்றவள், கட்டடக் கம்பெனி அலுவலகத்... விடுத்துத் துறைமுகத்தை ஒட்டியிருந்த மனுதர்மனி... அலுவலகத்தை அடைந்தாள்.

அவனைப் பார்க்கவென்று வந்திருந்தவர்கள்... எண்ணிக்கை, அவள் எதிர்பாராத அளவிற்கு அதிகமாக... இருந்தது.

இத்தனை பேரின் வேலையும் முடியும்வரை, அவ... காத்திருக்கத்தான் வேண்டும்.

மற்றவர்களைப் போலவே, அங்கே போடப்பட்டிருந்... சோஃபாவில் அமர்ந்தாள்.

"உங்களின் அப்பாயிண்ட்மெண்ட் எப்போது" எவ்வளவு நேரம் மேடம்?" என்று வினவினாள் வரவே... பிலிருந்த பெண்.



"வந்து, அப்பாயிண்ட்மெண்ட் வாங்கவில்லை. நான் ...மோன் பில்டர்ஸ்ஸிலிருந்து வந்திருக்கிறேன் என்று ...சொல்ல முடியுமா? ப்ளீஸ்..." என்றாள்.

"ஒரு நிமிடம்!" என்று கூறிவிட்டு, "உங்களின் பெய... ...ன்ன?" என்றபடியே இண்டர்காம் நம்பரை அழுத்தினாள்.

"ஜனார்த்தனி..." என்றாள் மெல்லிய குரலில்.

அடுத்த நிமிடமே, மனுதர்மனின் வலது கை 'கபில்' ...அவளை நோக்கி வந்தான்.

"மேடம், மதியம் இரண்டு மணிவரை அப்பாயிண்ட் ...மெண்ட் இருக்கிறது. அதுவரை காத்திருக்க முடியுமென்றால், உள்ளேயிருக்கும் சோஃபாவில் அமர்ந்திருங்கள். இல்லை யென்றால், இப்போது சென்றுவிட்டு இரண்டு மணிக்கு வாருங்கள்..." என்றான்.

"பரவாயில்லை. காத்திருக்கிறேன்!" என்று கூறிவிட்டுக் ...யில் காட்டிய இடத்திற்குச் சென்றாள் ஜனார்த்தனி.

வரவேற்பிலிருந்த பெண், ஒரு தம்ளர் ஜூஸ் கொணர்ந்து கொடுத்துவிட்டுச் சென்றாள்.

ஒவ்வொரு நிமிடமும் கழிந்த விதம், அவளுக்குத்தான் தெரியும். பசியென்பதே மரத்துப் போயிற்று.

சொன்னது போலவே சரியாக இரண்டு மணிக்கு அவளுக்கு அழைப்பு வந்தது.

மனதைத் திடப்படுத்திக் கொண்டு, கதவைத் தட்டிவிட்டு உள்ளே சென்றாள்.

"உட்கார்!" என்றவனின் பார்வையைப் பல மாதங்களுக்குப் பிறகு, நேருக்கு நேராகச் சந்திக்க வேண்டிய சூழ்நிலை.

"முன்பே அப்பாயிண்ட்மென்ட் வாங்கியவர்களை தவிர்க்க முடியாது. அதனால்தான் காக்க வைக்கும்படி யாயிற்று..." என்றவன், "இவ்...வளவு நேரம் காத்திருந்து பார்க்கும் அளவிற்கு, அப்படியென்ன அவசியம்?" என்று கேட்டபிறகு, ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்து ஜன்னலருகே சென்று, திரைச்சீலையை விலக்கிவிட்டு புகையை வெளிப் பக்கமாக ஊதித் தள்ளினான்.

சட்டென்று பேச இயலாமல் நாக்கு மேலே ஒட்டிக் கொள்ளச் சிரமப்பட்டு வழிக்குக் கொணர்ந்தவள், ஆழ மூச்சிழுத்துவிட்டு, "வந்து... என்னைத் திருமணம் செய்து கொள்ள விரும்புவதாகச் சொன்னீர்களே... எனக்கு சம்மதம்!" என்று, மெல்லிய குரலிலேயே தெளிவாகக் கூறினாள்.

சட்டென்று திரும்பியவனின் கண்களில் இருந்த வியப்பு, அவள் முகத்தைப் பார்த்ததும் நொடிக்குள் மா... புருவம் மேடேறியது.

நிதானமான காலடிகளுடன் திரும்பி வந்தவன் கையிலிருந்த சிகரெட்டை, டேபிள் மேல் இருந்த சது... கண்ணாடி ஆஷ்ட்ரேயில் வைத்து, நெருப்புக் கங்கை அழுத்தி அணைத்தான்.

பிறகு தன் இருக்கையில் அமர்ந்து கொண்டு, "... முடியாத படுகுழி என்று தெள்ளத் தெளிவாகத் தெரிந்த பிறகுமா சம்மதமென்கிறாய்? ஆச்சரியமாகத்தானிருக்கிறது...



அன்றைக்கு அப்படிப் பேசினாயே! இப்போது மட்டும் ... இன்னொருத்தியுடன் சுற்றியதைப் பற்றி உனக்கு ...றில்லையா?" என்று நேராகக் கேட்டான் மனுதர்மன்.

அவனின் வார்த்தைகளைக் கொண்டே திருப்பியடிக் ...தான்.

இப்படி யெல்லாம் திரும்பி வரும் என்றுதான், ...டக்கம் வேண்டுமென்று ஏட்டிலே எழுதி வைத்தார்கள் ...போலும்.

இனியாவது அதற்கு முயற்சி செய்யலாம் ...துபோல, அமைதியையே பின்பற்றினாள் அவள்.

"என்ன அவசியமென்று கேட்டேன்..." என்று மீண்டு ...முறை கேட்டுவிட்டு, இருக்கையிலே வசதியாகச் ...ந்து கொண்டான் மனுதர்மன்.

"என்னை விரும்புவதாகவும், வசதியாக வாழ ...வைப்பதாகவும் கூறினீர்களே..." என்றாள்.

கூர்மையான பார்வையால் அளவிட்டு விட்டுக் ...கண்களை மூடித் திறந்தவனின் உதட்டோரம், ஏளன ...ளைவு ஒன்று தோன்றியது.

நேராக நோக்கி, "இப்போதும் எனக்கு அதே ...ணமிருக்கும், அப்படியே கூறுவேன் என்று, உனக்கு ...ன்ன நிச்சயம்?" என்று கேட்டான் அவன்.

சட்டென்று முகம் சிவந்து போயிற்று அவளுக்கு.

உண்மைதானே!

மனுதர்மன் இன்னமும் பழைய எண்ணங்களுட ...ேயே இருக்க வேண்டுமென்று கட்டாயமோ, அவசியமோ இல்லையே...

இத்தனை மாதங்களில் ஒரு முறைகூட அவ பார்வையில் அவள் படவேயில்லையே!

அப்படியிருக்கையிலே, எந்த தைரியத்தில் அவனை சந்திக்க வந்தாள்?

ஒருவேளை அவன் மறுக்கக் கூடுமோ என்று, ஒ தடவையாவது நினைத்துப் பார்த்தாள் இல்லையே.

என்ன அசட்டுத்தனமாக நடந்து விட்டாள்.

இது எவ்வளவு பெரிய தலையிறக்கம். இனி இவ எப்படி நிமிர்ந்து பார்ப்பாள். கடவுளே... எனக் குன் போனது அவளின் உள்ளம்.

மேற்கொண்டு ஏதும் கூறாது, அவளின் முகமா தையே உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தான் மனுதர்ம

படுகின்ற பாடெல்லாம் போதாதென்று, இவ முன்னே வந்து கேவலப்பட்டதுதான் மிச்சம்.

ஆனாலும் மனுதர்மனைத் தேடிச்சென்று பா வேண்டுமென்று, தனக்கு எப்படித் தோன்றியது?

இந்த யோசனையும்கூட, எல்லா வழிகளை முயற்சித்துவிட்டு முடியாது போன பிறகு, கடைசியா தானே... போகட்டும்.

ஆனால் இப்போது இதுவும் மூடப்பட்டுவிட் இனி வசந்தனின் நிலை? நான் என்ன செய்வேன் எ உள்ளே ஓடிய நினைவலைகள், அவள் முகத்தைக் கச போட்டன எனலாம்.



முடிந்தவரை தன் துயரத்தை, இவன் முன்னே காட்ட வேண்டாம் என்பது சமயத்தில் நினைவு வர, சட்டென எழுந்து "ஸாரி. இப்போதைய உங்களின் மனநிலையைப் பற்றித் தெரிந்து கொள்ளாமல் வந்து, உங்களின் நேரத்தை வீணாக்கிவிட்டேன். மன்னித்து விடுங்கள் என்று கூறிவிட்டு, வேகமாக வெளியேற முற்பட்டாள் அவள்.

"பேச வந்த விஷயம் பற்றி முழுவதுமாகப் பேசாமல், பாதியிலேயே வெட்டிக் கொண்டு போவது நாகரிகமில்லையே!" என்று இடையிட்டது அவன் குரல்.

"மேற்கொண்டு பேசுவது அவசியமற்றது எனும்போது, திரும்பி விடுவது தானே உசிதம்!" என்றாள்.

"ம்... கிட்டத்தட்ட சரிதான். ஆனால் நான் இன்னமும் முழுதாக எதையும் சொல்லி முடிக்கவில்லையே!" என்றான்.

இன்னமும் இவன் கூறுவதற்குப் பாக்கியாக என்ன இருக்கிறதாம் என்பது மாதிரி பார்த்தாள்.

இருக்கிறது என்பது போல, "திருமணம் செய்ய இஷ்டமில்லையே தவிர, உன் மீது என் விருப்பம் அப்படியேதான் இருக்கிறது. அதாவது, முன்பு நான் சொன்ன மாதிரியே, வசதியான வாழ்வு உனக்கு நிச்சயமாகக் கிடைக்கும் என்கிறேன்!" என்று, தோள் குலுக்கலுடன் அவன் கூறி முடிக்கும் முன்பே,

மனுதர்மன் என்று அதட்டலாக இரைந்தவளின் உடல், சட்டென்று பற்றி எரிவதுபோலத் தகதகத்தது.

லேசாக உதட்டோரம் வளைந்ததே தவிர, அதற்கு மேல் பெரிதாக அவன் அலட்டிக் கொள்ளவேயில்லை.

ராஸ்கல்!

என்ன மாதிரி அர்த்தத்தில் சொல்கிறான்!

எல்லாம் அவளின் தவறு. இங்கே வந்தது உ... அனுபவித்துத்தானே தீர வேண்டும். ஆனாலும்... தே... வந்தது அவளாகவே இருக்கட்டும். அதற்காக என்ன வேண்டுமானாலும் சொல்லி விடுவானா என்று உறுத்து விழித்தவள்,

"இவ்...வளவு தரமிறங்கிப்போய் மட்டமாகப் பேசுவீர்கள் என்று, நான் சற்றும் எண்ணவில்லை. வந்தது எவ்வளவு பெரிய பிசகென்று இப்போது புரிகிறது!" என்று ஆத்திரமுடன் கூறிவிட்டு வேகமாகத் திரும்பினாள்.

அவள் கூறி முடிக்கும்வரை, சளைக்காது பார்த்துக் கொண்டிருந்தவன்,

"அடுத்தவரை - அடுத்தவர் என்று என்ன நாசூக்கு... என்னை மட்டம் தட்டிப் பேசியபோது மட்டும், பேசுவதற்கு உனக்கு ரொம்பவும் இனி...மையாக இருந்ததாக்கும்" என்று, வெட்டுவதுபோல் கேட்டது அவன் குரல்.

சட்டென்று முகத்தை மட்டும் திருப்பி அவனை பார்த்தாள்.

"முகத்திற்கு நேராக ஒருவரை அவமதித்துப் பேசும் கலையை, எனக்குத் தெள்ளத் தெளிவாகச் செய்து காட்டியவள், அதே மாதிரியான வார்த்தைகள் உன்னை நோக்கி வரும்போது மட்டும், தவிர்த்துவிட்டு ஓடிவிட நினைப்பது நியாயமில்லையே ஜனார்த்தனி..." என்றான்.

அவளின் உதடுகள் அழுந்த மடிந்தன.



முன்பு தான் பேசியது, இவனைக் காயப்படுத்தியிருக்கிறது என்பது, இப்போது நன்றாகவே புரிந்தது.

நடந்து முடிந்ததை இல்லையென்றாக்க அவளால் இயலாதுதான். ஆனால்... இன்று...

நன்றாகத் திரும்பி நின்று, "அன்றைக்கு நான் கூறியது உங்களைப் பாதித்திருந்தால், அதற்காக மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்!" என்று சிறு தயக்கமுமின்றித் தெளிவாகக் கூறினாள்.

"காலம் கடந்து கேட்கும் மன்னிப்புதான் என்றாலும், ம்... இது கொஞ்சம் பரவாயில்லை. ஓ.கே. தென், நான் கேட்டபோது மறுத்தவள், நீயாக வந்து மணக்கச் சம்மதம் என்பதற்காக, உண்...மைக் காரணம் என்னவென்று தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் எனக்கிருக்கிறது ஜனார்த்தனி..." என்று கூறினான் மனுதர்மன்.

திருமணம் செய்வதில் இஷ்டமில்லை என்றுவிட்டு, எதற்காக மீண்டும் வினவுகிறான் என்று தோன்றியது.

அவன் பார்வை அவளிடமேயிருந்தது.

பதிலுக்காக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறானாம்.

"முன்பே கூறியதுதான்... வளமாக வாழ வைப்பதாக..." என அவள் முடிக்கும் முன்பே,

"போதும் ஜனார்த்தனி. இந்தக் காரணத்தை நான் நம்புவேன் என்று, உண்மையிலேயே நீ நினைக்கிறாயா?" என இடையிட்டது அவன் குரல்.

"ஏன், ஏன் நம்ப முடியாது என்கிறீர்கள்?" என்றாள்.

"நீ அப்படி எதற்கும் ஆசைப்படுகிறவள் அல்ல என்று சாதாரணக் காரணம்தான்!" என்றான் வெகு இயல்பாக.

ஏனோ அவளின் கண்கள் பனிக்க முயல, உதட்டைக் கடித்துக் கொண்டு அமைதியாக நின்றவளைப் பார்த்து,

"அப்படி எவ்வளவு பணம் தேவைப்படுகிறது ஜனார்த்தனி. எதற்காக?" என்று கேட்டான் மனுதர்மன்.

சரியான காரணத்தைப் பிடித்துவிட்டானே!

அதனால்தான், இந்...த இடத்தில் இருக்கிறாள் போலும்! அவளின் விழிகள் விரிந்தன.

## 14

எதையும் மறைக்காமல், முழுவதையும் கூறினாள்.

"ஆக, உன் பாசமிகு தம்பியைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகத்தான் இவ்...வளவுமா? உன்னை இப்படியொரு இக்கட்டில் மாட்டி வைத்து விட்டானே என்று, அவன் மீது கோபம் வரவில்லையா உனக்கு?" என்று கேட்டான்.

"இல்லை. வசந்தனை எப்படியும் காப்பாற்றிவிட வேண்டுமென்ற பரிதவிப்பு மட்டும்தான்..." என்றாள்.

"புரிகிறது..." என்றவன், "கடைசியாக ஒன்று. உன் தம்பி எடுத்துச் சென்ற பணம் உண்மையிலேயே திருடுதானே போய்விட்டது? ஏன் கேட்கிறேன் என்றால் பத்து லட்சத்தை முழுதாகப் பார்க்கிறபோது, சின்ன



பையன்தானே, மனம் தடுமாறிவிட வாய்ப்பிருக்கிறது. நீ முறைப்பதால் நான் அப்படி நடுங்கிவிடப் போவதில்லை ஜனார்த்தனி. சொல், உன் தம்பி அந்தப் பணத்தைத் தவறாகப் பயன்படுத்தவில்லை என்பது உனக்கு உறுதி தானே?" என்று கேட்டான்.

"அடுத்தவரின் பொருளுக்கு ஆசைப்படுகின்ற புத்தி, எங்கள் குடும்பத்தினரிடம் கிடையாது. வசந்தன் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவன். அவனிடம் பழகியிருந்தால், உங்களுக்கு இப்படியொரு கேள்வியே தோன்றியிருக்காது.

அவனைச் சந்தேகித்தால், நீங்கள் என்னையே சந்தேகிப்பதுபோலத்தான்!" என்றாள் கோபமுடன்.

"உன்னையே சந்தேகிப்பது போலவா? ம்... இப்போது இன்னமும் நன்றாகப் புரிகிறது. சாரி ஜனார்த்தனி..." என்றான் உண்மையாக.

ஆனாலும் அவளின் கோபம் சற்றும் குறையவில்லை என்பது முகத்தில் தெரிந்தது.

"தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காக, யாரை வேண்டுமானாலும் சந்தேகித்து விடுவீர்களா?" என்று சூடாகக் கேட்டுவிட்டு, மீண்டும் கதவை நோக்கித் திரும்பினாள்.

"என் முடிவை நாளைக்குச் சொல்கிறேன்..." என்றான் மனுதர்மன்.

"அது உங்களின் விருப்பம்..." என்று சொல்லிவிட்டு வெளியேறினாள் அவள்.

அன்றிரவு முழுக்கத் தூக்கமின்றியே கழிந்தது அவளுக்கு.

மறுநாள் காலையில், இதற்கு மேலும் விடுப்பெடுக்க முடியாதென்று, அலுவலகம் செல்லத் தயாரானாள்.

அப்போது அவர்களின் வீட்டின் முன்னால் வந்து நின்றது மனுதர்மனின் கார்.

அதிலிருந்து இறங்கிய பராசக்தி அம்மாளை இருபுறமும் கைப்பற்றி அழைத்து வந்தார்கள் மனுதர்மனும் அவனின் வலது கை என்று பெயர் பெற்ற கபிலும்.

அந்த அம்மாள் ஏதோ சொல்ல, இளைஞர்கள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்து லேசாக சிரித்தார்கள்.

உள்ளே என்ன ஓடினாலும், வீடு தேடி வந்தவர்களை 'வாருங்கள்' என்று வரவேற்பதுதான் மரியாதை என்பதை உணர்ந்தவளாக, அறையிலிருந்து ஹாலுக்கு விரைந்தாள் ஜனார்த்தனி.

தினசரியில் ஆழ்ந்திருந்த தந்தையிடம், வருவது இன்னார் என்பதை மட்டும் கூறினாள்.

மனுதர்மனின் திடீர் வருகையால் அடுத்தென்ன நடக்கப் போகிறது என்பது அவளுக்கே உறுதியாகத் தெரியாதெனும்போது, மேற்கொண்டு அவளால் மேலே என்ன சொல்ல முடியும்?

"வாருங்கள்..." என்று கூறிவிட்டுத் தலைவராக அப்பா அழைக்க, இருக்கிறதா இல்லையா என்றே தெரியாத சிறு முறுவலுடன் கரம் குவித்தாள் ஜனார்த்தனி.

பூ, பழங்கள் கொண்ட வெள்ளித் தட்டை எடுத்து வந்து, டீபாய் மீது வைத்துவிட்டுப் போனான் மனுதர்மனின் கார் டிரைவர்.



அப்பாவின் நெற்றி சுருங்கியது. மகளின் முகத்தைப் பார்த்தவரின் முகத்தில் குழப்பம்.

வயதில் மூத்தவராகப் பராசக்தி அம்மாள் பேச ஆரம்பிக்க, அங்கே சென்றது அப்பாவின் கவனம்.

அவர்களுக்குப் பானம் கொண்டு வருகிற சாக்கிலே உள்ளே சென்றாள் அவள்.

அந்தப் பாட்டியம்மாவின் பேச்சைக் கேட்கக் கேட்க, ராஜனின் முகம் தெளிந்தது.

பின்னே, மகள் பெரிய தொழில் குடும்பத்திலே வாழப் போகிறாள் என்றால், அது அவருக்கு எவ்வளவு சந்தோஷம்.

தன் மகள் இது பற்றி ஒரு வார்த்தை மூச்சு விடவில்லையே என நினைத்துவிட்டு, பாவம்! குடும்ப பாரம் முழுவதையும் சுமக்கிறவளால், தன் விருப்பம் பற்றிக் கூறத் தயக்கமாக இருந்திருக்கும் எனச் சமாதானமும் செய்து கொண்டார்.

"என்னம்மா ஜனார்த்தனி, அன்றைக்குப் பதிலுக்குப் பதில் பேசியவளா, இப்போது இவ்வளவு அமைதியாக நிற்கிறாய்? என்னால் நம்பவே முடியவில்லை!" என்று பாட்டி கூற,

சட்டெனப் பாட்டியின் பேச்சிலே இடைபுகுந்து, "நாம் சொல்லாமல் வந்ததால் இனிய அதிர்ச்சியாக இருக்கும் பாட்டி!" என்றவன், "அங்கிள்! நான் ஜனாவிடம் சற்றுத் தனியாகப் பேச வேண்டும்!" என்று அனுமதி கேட்டான்.

வீட்டின் பின் பக்கத்து வராண்டாவிற்குச் சென்றவளைப் பின் தொடர்ந்தவன், "முகத்தை ஏன் இப்படி

வைத்திருக்கிறாய் ஜனார்த்தனி. கொஞ்சமாவது சிரித்தா போலிருந்தால் என்ன?

"எல்லோரும் நம்மைச் சந்தேகிப்பதுபோல் பார்க்க வேண்டும் என்பதுதான் உன் விருப்பமா?" என்று கோபப்பட்டான்.

"என்னவென்று சந்தேகித்துவிடப் போகிறார்கள்?" என்றாள் வெடுக்கென.

"இருவரும் ஒருவரையொருவர் விரும்பியே மணக்க போகிறோம் என்று சொல்லியிருக்கிறேன். அதற்கான அறிகுறி கொஞ்சமும் இல்லாமல் நீ நின்றால், பார்ப்பவர் களுக்குச் சந்தேகம் வராதா?" என்றான் பழைய மாதிரியே

உண்மைதான்.

அப்பாகூட முதலில் குழப்பமாகத்தானே பார்த்தார்.

போடுகிற வேஷத்தை ஒழுங்காகப் போடவில்லை என்றால், அது பல்லை இளித்துக் கொண்டு போய்விடும் தான்.

ஆனால், உடனே ஒத்துக் கொள்ள மனமில்லை அவளுக்கு.

"நேற்று என்னிடம் அப்படி அளந்துவிட்டு, இப்போது எப்படிப் பழத்தட்டுடன் வந்திருக்கிறீர்கள்? இதிலே, உங்கள் பாட்டியின் கிண்டல் வேறு!" என்றாள் எரிச்சலுடன்.

"உன் முதல் கேள்விக்கான பதில், நீ எவ்வளவு தூரத்திற்கு வளைந்து கொடுக்கிறாய் என்று நான் தெரிந்து கொள்ள வேண்டாமா?



நேற்று என்னிடம் நீ, திடீர்க் காதல் என்று சொல்லி ...ருந்தால், நிச்சயமாக இப்போது வந்திருக்க மாட்டேன். ஆனால், உண்மைதான் உன் இயல்பு ஜனார்த்தனி. ...ய் வராது. அந்த நல்ல பண்பிற்காக என்று வைத்துக் ...ள்றேன்!" என்று கூறி லேசாக முறுவலித்தவன்,

"அடுத்த கேள்விக்குப் பதில், பாட்டியின் மனதிலே ...ன்ன ஓடுகிறது என்பதை அவ்வளவு துல்லியமாக யாராலும் கண்டுபிடித்துவிட முடியாது. அதே சமயம், யாருடைய ...சொந்த விஷயத்திலும் எல்லை மீறி நுழைய மாட்டார்கள். நம்முடைய திருமண விஷயத்திலும் அப்படித்தான்.

எப்போதாவது உனக்குப் பிடிக்காத மாதிரிப் பேசினால், நீ கொஞ்சம் பொறுத்துப் போய்விடு. வயதில் மூத்தவர் என்பதோடு, எல்லோரின் மதிப்பு, மரியாதைக்கும் உரிய ...வர்கள்!" என்றான் பேரன்.

"எப்போதாவது பேசினால் சரி, ஆனால் எப்போதுமே பேசுவதை எப்படிப் பொறுத்துப் போக முடியும்?" என்று திருப்பினாள் அவள்.

இப்போது எரிச்சலுடன் பார்த்தது அவன்.

"அத்தோடு, இந்தத் திருமணத்திலே அவர்களுக்கு அவ்வளவாக விருப்பமில்லை என்பதை, ரொம்பவும் நாகரிக வார்த்தைகளைக் கொண்டு தெரிவித்திருக்கிறீர்கள். சரிதானே?" என்றாள்.

"நீ நினைத்தால் பாட்டியின் மனதை மாற்றி ... பெற முடியும் ஜனார்த்தனி.

பிறகு தெரிந்து கொள்வாய், அவர்கள் எவ்வளவு உயர்ந்தவர்கள் என்று!" விட்டுக் கொடுக்காது கூறினான் மனுதர்மன்.

"அப்படி யாரிடமும் உருகி வழிந்து, அன்பைப் பெற வேண்டிய அவசியம் எனக்கில்லை!" என்றாள்.

"உருகி வழிவதா? அப்படி யாராவது நடந்தால், சும்மா நடிக்காதே என்று, முகத்திற்கு நேராகவே சொல்லி விடு வார்கள். நீ இயல்பாக இரு. அதுவே போதும். ஒருவேளை அதுவே அவர்களின் மனதையும் கூட மாற்றலாம்!" என்றான்.

பராசக்தி அம்மா அவளை ஏற்றாலும், இல்லை யென்றாலும், அதைப் பற்றி அவளுக்கு ஒன்றுமில்லை.

நிம்மதியாக மூச்சு விடக்கூட முடியாமல், அவளையும் வசந்தனையும் ஆட்டுவித்துக் கொண்டிருந்த பணப் பிரச்சனை தீரப் போகிறது. அதுதானே அவளுக்கு முக்கியம்.

எனவே, மேற்கொண்டு எதுவும் கூறாமல் அமைதி யானாள் ஜனார்த்தனி.

அவளுக்கு மேலும் நிம்மதியைக் கொடுப்பதுபோலத் தன் சட்டைப் பாக்கெட்டில் இரண்டாக மடித்து வைத்திருந்த செக்கை எடுத்து அவளிடம் கொடுத்தான் மனுதர்மன்.

அவள் கூறிய முழுத் தொகையும் எழுதிக் கையெழுத் திடப்பட்டிருந்தது.

"தேங்க்ஸ்!" என்று கூறி வாங்கிக் கொண்டாள்.

"எதற்கு நன்றி? நான் ஒன்றும் சும்மா தூக்கிக் கொடுத்து விடவில்லையே!" என்றான் குரலில் அழுத்த முடன்.

அந்த அழுத்தம் பல விஷயத்தை அவளிடம் சொல்லாமல் சொல்லியது.

இப்போது எதற்கு அதைப்பற்றி எல்லாம் நினைக்க வேண்டும். முதலில் வசந்தனை அந்த நரக வேதனையில் இருந்து வெளியே கொண்டு வர வேண்டும்.

அவனுமே அதைத்தான் தெரிவித்தான்.

"செக்கை வாங்கிச் செல்ல உன் தம்பியை வரவழைக் கிறாயா? அல்லது நான் கபில் வசம் கொடுத்தனுப்பட்டுமா?" என்றான்.

"இல்லை, வசந்தனே வரட்டும். எப்படியும் இந்தத் திருமண விஷயம் பற்றி அவனிடம் சொல்லித்தானே ஆக வேண்டும். நேரில் பார்த்துப் பேசினால்தான் சரியாக இருக்கும்!" என்றாள்.

சிறு கேலி முறுவலுடன், "என்ன காரணம் சொல்வாய்? உண்மையையா?" என்றான்.

முறைத்தாள் அவள்.

"இந்தப் பார்வை இனிச் செல்லுபடியாகாது ஜனா. என்னைக் கொஞ்சமாவது ஆசையுடன் பார்ப்பது எப்படி யென்று கண்ணாடி முன்பாக நின்று பார்த்துப் பழகிக் கொள்.

"இனி அதுதான் தேவைப்படும்!" என்றவன், "போக லாமா?" என்று கூறிவிட்டுத் திரும்பி நடந்தான்.

"இங்கே வா!" என்றழைத்துத் தட்டிலிருந்து பூவை எடுத்து, ஜனார்த்தனியின் தலையிலே சூட்டினார் பராசக்தி அம்மாள்.

"இந்த நிமிடத்தில் இருந்து நீதான் என் பேரன் மனுதர்மனின் மனைவியாகப் போகிறவள்!" என்று கூறி விட்டுக் கபிலைப் பார்க்க, தன் பாக்கெட்டிலிருந்து சிறு பெட்டி ஒன்றை எடுத்துக் கொடுத்தான் அவன்.

அழகான தங்கச் செயினில் தொங்கிய, ஓவல் டிஸைன் டாலரில் பதிக்கப்பட்டிருந்த மாணிக்கக் கல் ஒளி வீசியது.

அதையும் ஜனாவின் கழுத்திலே அணிவித்தார் பாட்டி.

"திருமணத்தை எளிமையாகக் கோவிலில் நடத்திவிட்டு வரவேற்பைச் சிறப்பாகச் செய்துவிடலாம் என்பது எங்களின் எண்ணம்.

இதிலே ஏதாவது மாற்ற வேண்டுமென்றால் சொல் லுங்கள்," என்றார்கள்.

"இதுவே வசதிதான்!" என்றுரைத்த ராஜன், சிறு தயக்கமுடன், "அம்மா! வந்து சீர் வகைகள் பற்றி நீங்கள் ஒன்றும் சொல்லவில்லையே!" என்றார்.

சட்டென முகம் சிவந்து போயிற்று ஜனார்த்தனிக்கு.

மகள் எதற்காக இந்தத் திருமணத்திற்குச் சம்மதித்து இருக்கிறாள் என்பது தெரிந்தால், பாவம்! அப்பாவால் இப்படிக் கேட்க முடிந்திராது.

மற்ற யாரும் எதுவும் கூறும் முன்பாக, "ஜனாவை விடப் பெரிய சீர் வரவு, வேறு என்ன இருக்க முடியும் அங்கிள்?" என்று முறுவலுடனே கூறினான் மனுதர்மன்.

வேகமாக நிமிர்ந்து அவனைப் பார்த்தவளுக்கு, அவன் பார்வை எச்சரிக்கை செய்வது போலிருக்கவும், தலையைக் குனிந்து கொண்டாள்.

"தர்மா சொல்வது சரிதான்..." என்றபோதும், இந்தப் பார்வைப் பரிமாற்றம் பராசக்தி அம்மாவை என்னவோ சரியில்லை என்று யோசிக்க வைத்தது. பிறகு,

"என் இளைய மகன், குடும்பமாக வெளிநாட்டிற்குச் சுற்றுப் பயணம் சென்றிருக்கிறான். அடுத்த முகூர்த்தம் எப்போது என்று பார்த்துவிட்டுத் தெரிவிக்கிறோம். உங்களுக்குத் தேதி சரியென்றால், முதலில் நாம் திருமணத்தை நடத்தி விடலாம். அவர்கள் ரிசப்ஷனுக்குள் வந்து சேரட்டும். அவர்களுக்காக இவர்களைக் காக்க வைப்பது நியாயம் ஆகாதே!" என்ற பராசக்தி அம்மாள், மேலும் சிலவற்றைப் பேசி முடித்துவிட்டு, "நாங்கள் கிளம்புகிறோம்!" என்று எழுந்தார்.

மறு வாரத்திலேயே ஒரு முகூர்த்தம் இருப்பதாகச் சொன்னார்கள். அதுவே முடிவாயிற்று.

அவர்கள் கிளம்பிச் சென்ற பிறகு, அப்பா கேட்ட கேள்விகள் பலதிற்கும் பதில் அளிப்பதற்குள் ஜனார்த் தனிக்குப் போதும் போதுமென்றாகி விட்டது.

"உன் விருப்பம்தான் அப்பாவிற்கு முக்கியம் ஜனாம்மா. நீ அவர்களிடமே வேலை பார்ப்பதால், மற்ற வர்களைவிட உனக்கு அதிகம் தெரிய வாய்ப்பிருக்கிறது. எனக்கு அவர்கள் குணமுள்ள மனிதர்களாகத் தெரிந்த தால்தான், வீடு தேடி வந்த சம்பந்தத்தை ஏற்றுக் கொண்டேன்.

உனக்கும் ...
நீ சந்தோஷமாக வாழ்வாயதானே? ...
தெளிவுபடுத்திக் கொண்டார்.

“நிச்சயமாக அப்பா!” என்றாள் மகள்.

விஷயம் தெரிந்து சிந்து குதித்த குதியில் வீடு
அதிர்ந்தது. அவளுக்கு அவ்...வளவு சந்தோஷம்.

அக்காவை நன்றாகக் கோட்டா செய்தாள். மறுபடி
மனுதர்மனை நேரில் சந்தித்தபோது, அவனையும் வி...
வில்லை அவள்.

தங்கையின் மகிழ்ச்சியைக் கெடுக்க மனமின்றி
வெறுமனே வெட்கம்போலத் தலைகுனிந்து கொண்டா...
ஜனா.

ஆனால், மனுதர்மன் உண்மையிலேயே சிந்துவின்
கேலி, கிண்டல்களை ரசித்துச் சிரித்தான்.

அன்றிரவு வசந்தனுக்கு போன் செய்து, ஜனாவின்
திருமணம் பற்றித் தெரிவித்தார் அப்பா.

அவன் கேள்வி மேல் கேள்வி கேட்க, அப்பா
பொறுமையாகப் பதில் சொல்வது தெரிந்தது.

ஜனார்த்தனியின் கைக்கு போன் வந்ததும், தம்...
கேட்ட முதல் கேள்வியே, “உண்மையிலேயே உன் பா...
நீ விரும்பித்தான் மணக்கிறாயாக்கா?” என்பதுதான்.

“ஆமாம் வசி...” என்ற சின்ன வார்த்தைகளை
சொல்வதற்குள் அவளுக்கு ஒரு மாதிரியாகிப் போயிற்று.

“நீ விரும்பிய வாழ்வு அமைந்தால், எனக்...
ரொம்பவே சந்தோஷம்தான் அக்கா. வாழ்த்துக்...
என்றவன்,

...ள்தானே உள்ளது. அதற்குள் ஊரிலிருந்து சாதகமான
...தில் வருமா? வரும்தானேக்கா?” என்று தவிப்புடனே
கேட்டான்.

“பணம் ரெடியாகிவிட்டது, வசி. இனிக் கவலைப்படத்
தேவையில்லை. நீ அவர்களிடம் கூறிவிட்டு, உடனே கிளம்பி
வா...” என்றாள் மூத்தவள்.

நேரில் சந்தித்தபோது, “அப்பாவின் முகத்திலிருக்கும்
சந்தோஷத்தைப் பார்த்தால், நீ இன்னமும் விஷயத்தைச்
சொல்லவில்லை போல் தெரிகிறதே. அப்பாவின் கையெழுத்
தில்லாமல் எப்படி...?” என்றவனிடம்,

“அதற்கு அவசியமில்லை, வசி. நம் நிலத்தை
விற்றாலுமே தேவையான பணம் கிடைக்க வாய்ப்பில்லை!
என்று சொல்லி விட்டார்கள்.”

“பின்னே பணம் ரெடி என்றாயே, எப்படி?”

“மனுதர்மன் கொடுத்திருக்கிறார்.”

“நினைத்தேன். நான் பெரிய பிரச்சனையில் மாட்டிக்
கொண்டிருக்கும்போது, உனக்குத் திருமணம் முடிவாகிவிட்டது
என்று அப்பா சொன்னபோதே, ஏதோ உறுத்தியது. இந்தச்
...த்தில், நீ ஒருவரை விரும்புகிறேன் என்று சொல்வது
...த்தியமில்லையே என்று தோன்றியது. என்னைக்
...ற்ற அவரிடம் பணம் கேட்டாயா? அதற்குத்தான் இந்த
... காதல் திருமண ஏற்பாடா? நான் இன்னமும் சின்னப்
...ன் இல்லக்கா. உண்மையைச் சொல். என் சந்தேகம்

றபாடுகளை

“உளறாதே!” என்று, சட்டென்று கோபப்பட்டுக் கடிந்தாள் னார்த்தனி.

தனக்கு ஏன் இவ்வளவு கோபம் வந்தது என்று அவளுக்கே தெரியவில்லை!

“உண்மையைக் கண்டுபிடித்துவிட்டேன் என்பதால் உளறுகிறேன் என்கிறாயா?” என்று, தானும் சளைக்காமல் கேட்டான் தம்பி.

“என்ன மண்ணாங்கட்டி உண்மையைக் கண்டுபிடித்து விட்டாய் நீ? மனுதர்மன் முன்பே என்னைத் திருமண செய்யக் கேட்டிருந்தார். குடும்பப் பொறுப்பை நீ ஏற்று காண்டபிறகுதான் என் விருப்பத்திற்கு மதிப்பளிக்க வேண் மன்று நினைத்துத் தவிர்த்து வந்தேன்.

என் கவலையான தோற்றத்தைப் பார்த்துவிட் ன்ன பிரச்சனையென்று கேட்டு, அவரே தீர்க்க மு ந்தார். இருக்கும்போது திருப்பிக் கொடுத்துவிட ன்பதால் சரியென்றேன்.

“என் விருப்பமின்றி எதுவும் நடக்கவில்லை!” என் தெளிவான குரலிலேயே கூறினாள்.

சிறு மௌனத்திற்குப் பிறகு, ஒரு பெருமூ வெளியிட்டுவிட்டு, “சாரிக்கா... உன்னிடம் இதுவரை, இ ன் பேசியதில்லை. என்னை நினைத்துத் தப்பும் தவ ஏதாவது முடிவெடுத்து விட்டாயோ என்ற பயத்தி

டேன். ரொம்பவே சாரி...”

ட்டான் தம்பி.

தம்பியின் கையைப் பற்றி அழுத்தி, “விடு வசி. என் மீது உள்ள அன்பினால்தானே பேசினாய். இனி எந்தப் பிரச்சனையுமின்றி சந்தோஷமாக இருக்க வேண்டும். புரிந்ததா?” என்று முறுவலித்தாள்.

தானும் முறுவலித்தான் சின்னவன். “ஹப்...பா! இப்படி நிம்மதியாக மூச்சு விட்டு எத்...தனை நாளாகிவிட்டது!”

“இருந்தாலும்... நான் அவரை, மனுதர்மன் சாரைப் பார்க்க வேண்டும் அக்கா!” என்றான்.

“ம்... பட்டெடுக்க அழைத்துச் செல்ல வருவதாகச் சொல்லியிருக்கிறார்.”

தமக்கை கூறியது போலவே, அன்று மதிய வேளையின்போது மனுதர்மனின் கார் வந்தது. சத்தத்தைக் கேட்டதுமே கொஞ்சம் வேகமுடன் வந்து, பெல்லை அடிக்கும் முன்பாக மலர்ந்த முகத்துடன் கதவைத் திறந்து, “வாருங்கள்!” என்று புன்னகையுடன் வரவேற்றாள் ஜனார்த்தனி.

அவள் முகம் நிலவாக ஒளி வீசியது.

இந்த மாதிரியான புன்னகையைச் சற்றும் எதிர்பார்க்காத மனுதர்மன், “ஆஹா, இப்படி மலர்ந்....த முகத்துடன் நீ வரவேற்பாய் என்று தெரிந்திருந்தால், மற்ற வேலைகளை ஒதுக்கிவிட்டு, முன்பே வந்திருப்பேனே ஜனும்மா...” என்று பளீரென்ற புன்னகையுடன் கூறினான்.

ஜனும்மாவா?! இது எப்போதிருந்து?

கதவு நிலையிலே ஸ்டைலாகச் சாய்ந்து நின்று கைகளை மார்பின் குறுக்கே கட்டிக்கொண்டு, "தினமும் இ மாதிரி வரவேற்புக் கிடைத்தால்... ம்ம்.... எவ்....வ... ஆனந்....தமாக இருக்கும்!" என்றான் மாறாத முகத்துட

அந்த நிமிடம், அவன் முகம் அப்படியே மன பதிந்து போனது அவளுக்கு!

## 15

ஆனால் மறுகணமே, தன்னை தானே தட்டி விழித்துக் கொண்டாள்.

ஏதேது, விட்டால் இவன் பாட் இப்...படியே பேசிக் கொண்டு போவான் போல எ நினைத்தாள்.

அவன் பார்வை லேசாக இடுங்கியது. "அதுசரி, யா நம்ப வைப்பதற்காக இந்த நாடக ஒத்திகை?" என் கேட்டான்.

முகம் மாறாதிருக்க, அவள்தான் இப்போது சிரம வேண்டியதாயிற்று.

இவன் கண்களில் இருந்து, எதுவுமே தப்பாதுபோ

"பிறகு அவனே, உன் தம்பி வந்திருக்கிறா ரொம்பவும் குடைகிறானோ? என்னுடன் ஒத்துழைத் சுலபமாகவே அவனை நம்ப வைக்கலாம். வா!" என்றவ அவளை ஒட்டியே நடந்தான்.

இருவரின் கை விரல்களும் உரசுகிற அளவி



ஹாலை அடைந்ததும், "ஹலோ வசந்தன்!" என்று கை நீட்டினான் மனுதர்மன்.

"ஹலோ சார். வாருங்கள்..." என்று கூறிக் கையைப் பற்றிக் குலுக்கினான் வசந்தன்.

அறையிலிருந்து அப்பா வரவும், சமையலறைப் பக்கம் திரும்பினாள். "ஜனு.... எனக்காக டீ, காபி என்று தயாரித்து கஷ்டப்படுத்திக் கொள்ள வேண்டாம். ஒரு டம்ளர் தண்ணீர் மட்டும் போதும்..." என்று கூறினான் மனுதர்மன்.

"ம்..." என்று தலையாட்டிவிட்டுச் சென்றாள் அவள்.

மூவருமாகச் சேர்ந்து பலவற்றையும் பற்றி அலசி னார்கள்.

மனுதர்மனுடன் உரையாடத் தொடங்கிய சற்று நேரத்திற்கெல்லாம், அவன் மீது மரியாதை தோன்ற ஆரம்பித்துவிட்டது வசந்தனுக்கு.

அதற்கு மனுதர்மனின் தோற்றமும், அடுத்தவர்களிடம் நடந்து கொள்கிற தன்மையுமே முக்கியக் காரணமென்று சொல்லலாம்.

வெயிலுக்கு இதமாக, வெள்ளரிப் பழ ஜூஸ் எடுத்து வந்தாள் ஜனா.

கண்களால் நன்றி கூறி எடுத்துப் பருகியவன், சீக்கிரமாகக் கிளம்பி வாம்மா என்று அவளிடம் தெரிவித்து விட்டு, "ஷாப்பிங்கிற்கு நீயும் வருகிறாயா வசந்தன். ஜாலியாக ஒரு டிரிப் போய் வரலாம்!" என்றழைத்தான்.

"இல்லை, இது உங்களுக்கான ஸ்பெஷல் ஷாப்பிங். நீங்கள் இருவர் மட்டுமாகப் போய் வருவதுதான் சரி..." என்று நாகரிகமாகப் பதிலளித்தான் வசந்தன்.

"மைத்துனன் என்றால், இப்படியல்லவோ இருக்க வேண்டும்!" என்றுரைத்துச் சிரித்தான் மனுதர்மன்.

ஜனார்த்தனி கிளம்பி வர, வழியனுப்புவதுபோல உடன் வந்து, "எனக்கு ரொம்பப் பெரிய உதவி செய்திருக்கிறீர்கள் சார். உயிருள்ளவரை மறக்க முடியாத உதவி. ரொம்...ப நன்றி. படிப்பு முடிந்தபிறகு, அந்தத் தொகையைக் கொஞ்சம் கொஞ்சமாகத் திருப்பி விடுகிறேன்!" என்றான் வசந்தன்.

"ஷ்.... நன்றியெலலாம் எதற்கு வசந்தன்? நீங்கள் எல்லோருமே எனக்கு முக்கியம்தான். அத்தோடு, என்னை இனியும் சார் என்றழைக்காதே. உறவு முறையையே சொல்லை..." என்றுவிட்டுக் கிளம்பினான்.

தெருமுனையைத் தாண்டியதும், "உன் தம்பியைச் சொன்னதும், அன்று உனக்கு அப்படிக் கோபம் வந்ததே, அது முற்றிலும் தகும் ஜனா. உங்கள் குடும்பத்தில் பிள்ளைகளை நல்...ல முறையில் வளர்த்திருக்கிறார்கள். இதில் உன் தனிப்பட்ட பங்குமிருப்பதை நினைத்தால், சந்தோஷமாக இருக்கிறது!" என்றுரைத்தான் மனுதர்மன்.

அப்படித் தொடங்கிய அவர்களின் ஷாப்பிங், முடிந்து வீடு திரும்புகிற வரையும் இதமாகவே தொடர்ந்தது.

முதலில், முகூர்த்தத்திற்கும், ரிஸப்ஷனுக்கும் பட்டு வகைத் துணிகளைத் தேர்வு செய்தார்கள்.

இளம் ரோஜா வண்ணத்திலே, தங்க ஜரிகையிட்ட சேலையை முகூர்த்தத்திற்கும், வெண் தந்தத்திலே தங்கத்துடன் வெள்ளி ஜரிகையும் இணைந்து, பூவும் கொடியுமாக ஓடியிருந்த சேலையை ரிஸப்ஷனுக்குமாகத்



தேர்வு செய்தார்கள். தந்தச் சேலையின் ஓரத்தில் குங்கும நிறத்திலேயே கையகலத்திற்கு இருந்த பார்டரில் செய்திருந்த டிஸைன்தான் சேலையின் ஹைலைட்டாக இருந்தது.

தொடும்போதே, அவ்...வளவு மிருதுவான மென்மையுடன் இருந்தது மட்டுமில்லாமல், வெயிட்டும் குறைவாயிருந்தது.

மொத்தத்தில் பிரமாதம்!

திருப்பிப் பார்ப்பதுபோல விலையைப் பார்த்தவளுக்கு, மயக்கம் போடாத குறை.

ஒன்றின் விலை அரை லட்சமும், மற்றதின் விலை முக்கால் லட்சமுமாக இருந்தது.

"இந்த மிருதுவான மென்மை, சாதாரணமாகக் கிடைத்து விடவில்லையோ?"

"விலையை விட, நமக்குப் பிடித்திருக்கிறதா என்பதுதான் முக்கியம்!" என்றான் அவன்.

ஆமாம்... ஆமாம்... விலையைப்போய் இவன் ஏன் பெரிதாக நினைக்கப் போகிறான்.

அதெல்லாம் பட்ஜெட் போட்டு வாழ்க்கை நடத்துபவர்களுக்குத்தானே! அதையெல்லாம் இவனிடம் சொல்வதால் ஒரு பயனும் இல்லையெனும்போது வாயை மூடிக் கொண்டிருப்பதுதான் உசிதம்.

"வீட்டிலே அணிந்து கொள்கிற மாதிரி சாதாரண வகையிலே கொஞ்சம் டிரஸ் வாங்கிக் கொள்!" என்று கூறி, மற்றப் பிரிவிற்கு அழைத்துச் சென்றான்.

ஷிஃபான், விபுல், ஜார்ஜெட், கிரேப், சிம்லர் என்று மொத்தம் பத்துச் சேலைகள் தேர்வாயின.

"இங்கு மொத்தமே பதினெட்டாயிரம்தான்."

"ம்... முன்னதோடு ஒப்பிடும்போது, இதைக் கொஞ்சம் பரவாயில்லை என்றுதான் சொல்ல வேண்டும்."

"உன் அப்பா, தம்பி, தங்கைக்கும் என் சார்பாக டிரஸ் எடு. மீதியை உன் செலவிற்கு வைத்துக்கொள்!" என்று கூறி, ஐந்நூறு ரூபாய்க் கட்டு ஒன்றைக் கொடுத்தான்.

"வேண்டாம். அவர்களுக்கு வாங்கவென்று நானே பணம் கொண்டு வந்திருக்கிறேன்!" என்று கூறி மறுத்தாள்.

"ஏன்? அவர்களுக்கு வாங்கிக் கொடுக்க எனக்கு உரிமையில்லையா?" என்றவன், அவள் அமைதியாகவே நிற்கவும், "சர்வ நிச்சயமாக இருக்கிறது. அதனால், தயக்கமின்றித் தாராளமாகவே வாங்கு!" என்றான்.

அதற்கு மேல் மறுக்க முடியவில்லை அவளால்.

எல்லோருக்கும், ஒரு செட் உடை அவன் கொடுத்த பணத்திலும் இரண்டு செட் தன்னுடைய பணத்திலுமாக வாங்கினாள்.

அடுத்ததாக அவன் அழைத்துச் சென்ற இடம், பெரிய நகைக் கடை.

வாங்கிய சேலைகளுக்கு ஏற்ற மாதிரி, நவரத்தினங்களினால் செய்யப்பட்டிருந்த மாலைகள் தேர்வாயின. அதன் நடுவில் இணைக்கப்பட்டிருந்த விசிறி மாடல் டாலர் மிக அழகாயிருந்தது.

பிறகு மெலிதான ஒரு வைர செட்.

தினமும் பயன்படுத்துகிற மாதிரி, வெயிட்லெஸ் கலெக்ஷன் சிலதும் வாங்கப்பட்டது.

ஒவ்வொன்றையுமே அவன் ரசித்துப் பார்ப்பதைக் கண்டு, "அடிக்கடி நகை வாங்குகிற பழக்கம் உண்டோ?" என்று வியப்பை மட்டுப்படுத்திக் கொண்டு கேட்டாள்.

"அப்படியெல்லாம் இல்லையே... ஏன் கேட்கிறாய்?" என்றான்.

"ரொம்பவும் நேர்த்தியாக, பார்த்துப் பார்த்துத் தேர்வு செய்கிறீர்களே. அனுபவமோ என்று தோன்றியது."

"ம்...ம்... அதுவா... அடுத்ததாகத் தங்க நகைத் தொழிலிலேயே ஈடுபடலாம் என்றொரு ஐடியா. அது சம்பந்தமாக விஷயம் அறிந்து கொள்ளவென்று, நேரம் கிடைக்கும்போதெல்லாம் பெரிய கடைகளுக்குச் செல்வேன். நிறையத் தகவல்கள் அப்படிக் கிடைத்ததுதான்!" என்றான்.

"இருப்பது போதாது என்பதுபோல, நகைத்தொழில் வேறா?" என்றாள் ஒரு மாதிரியாக.

"இதுதான் உன் ஸ்பெஷல். இதுவே ஒரு சராசரிப் பெண்ணாக இருந்திருந்தால், நகைத் தொழில் என்றதும், ஆஹா, எப்போது என்றுதான் கேட்டிருப்பாள்!" என்று சிலாகித்தவன்,

"தொழிலைப் பொறுத்தவரை, போதுமென்ற சொல்லே இருக்கக் கூடாது ஜனு. அதன் எல்லை விரிந்து கொண்டேயிருக்க வேண்டும்!" என்றான் ஆழ்குரலிலே.

'எல்லாம் சரிதான். ஆனால் இந்த ஜனு என்ற செல்லச் சுருக்கத்தை. இன்னும் ஏன் தொடர வேண்டும்.

இங்குதான் அவர்களைத் தவிர வேறு யாருமில்லையே? என உள்ளூரத் தோன்றியபோதும், வாய் திறந்து அவன் எதுவும் கேட்கவில்லை.

அவளை வீட்டில் இறக்கி விட்டுவிட்டு, வேலையிருப்பதாகக் கூறி உடனே சென்றுவிட்டான் மனுதர்மன்.

வாங்கிக் கொண்டு வந்திருந்த பொருட்களைப் பற்றிப் பேசியவாறே, அன்றையப் பொழுது கழிந்தது.

இன்று, நாளை என்று நேரம் கடக்க, விடிந்தால் திருமணம் என்ற நிலையில், ஜனார்த்தனியின் வீட்டிற்கு வந்தார்கள் மனுதர்மனின் சித்தப்பா குடும்பத்தினர்.

அவன் சித்தப்பா, தம்பி, தங்கை எல்லோருடனும் உரையாட,

ஜனாவின் அருகே வந்து, "நீ மிகவும் அழகாயிருக்கிறாய்!" என்றாள் சித்தி.

சிறுமுறுவலுடன், "நீங்கள் எப்போது திரும்பி வந்தீர்கள்? ரிஸப்ஷனின்போதுதான் வருவீர்கள் என்று சொன்னார்களே!" என்று, ஏதாவது பேச வேண்டுமே என்பதற்காகவே வினவினாள்.

"திருமணத் தகவல் வந்ததே கொஞ்சம் தாமதமாகத்தான். உடனே அங்கே புக் செய்திருந்தவற்றையெல்லாம் நீக்கிவிட்டு, ரிட்டர்ன் டிக்கெட்டிற்கு ஏற்பாடு செய்தால், அதுதான் இப்படி இழுத்தடித்துவிட்டது.

"இருந்தாலும் தர்மாவின் திருமணத்தில், முக்கிய உறவினர்களான நாங்களே கலந்துகொள்ள முடியாமல்



...னால் எப்படி? அதனால்தான் அடித்துப் பிடித்துக் ...ண்டு என்பார்களே, அதுமாதிரி எப்படியோ வந்து ...ந்துவிட்டோம்!" என்றாள்.

மறுதினம் பட்டும், பொன்னுமாக மின்னியபடி வந்த ஜனார்த்தனியின் கழுத்திலே, மாங்கல்யத்தைக் கட்டினான் மனுதர்மன்.

மிக நெருக்கமானவர்களுக்கு மட்டுமே அழைப்பு ...ப்பட்டிருந்ததால், மொத்தமே இருபது பேருக்குள்தான் ...ந்தார்கள்.

ஆனால், அடுத்து நடந்த வரவேற்பு விழா முற்றிலும் ...றுவிதமாக - கோலாகலமாக இருந்தது.

உணவு வகைகள், கலை நிகழ்ச்சி, லைட் செட்டிங், மேடையலங்காரம், வந்தவர்களை வரவேற்கிற விதம், உபசரிப்பு என்று அனைவரையுமே பிரமிக்க வைத்தது.

அந்த வெண் தந்தப் பட்டிலே அவளும், வழக்கமான ...ரஸ்ஸை விடுத்து, டிஸைன் செய்யப்பட்டிருந்த கோட் மாடல் ...ரஸ்ஸிலே அவனும், எல்லோரையுமே கவர்ந்தார்கள் என்று ...ர்வ நிச்சயமாகச் சொல்லலாம்.

வந்திருந்தவர்களில் கிட்டத்தட்ட அனைவருமே, பராசக்தி அம்மாவிடம் வந்து நலம் விசாரித்துத் தங்களின் மகிழ்ச்சியைத் தெரிவித்துவிட்டுச் செல்வதைக் கண்டாள் ஜனார்த்தனி.

இடையிடையே மேடையைப் பார்த்தவரின் முகத்திலே பூரிப்பும், மகிழ்ச்சியும் தோன்றியபோதும், அவ்வப்போது ஒருவிதக் கூரிய பார்வையும் வெளிப்பட்டது.

மனுதர்மனின் சித்தி தன் பரிசாக, நான்கு மரகத வளையல்களை ஜனார்த்தனியின் கைகளிலே போட்டு விட்டாள்.

கிட்டத்தட்ட எல்லோரும் கிளம்பிச் சென்ற பிறகே, சற்று நேரம் அமர்ந்து கால்களுக்கு ஓய்வு கொடுக்க முடிந்தது மணமக்களால்.

தன் குடும்பத்தினர் முகத்திலிருந்த மகிழ்ச்சியைப் பார்க்க, இதமாக இருந்தது ஜனார்த்தனிக்கு.

விழா நல்லவிதமாக முடிந்து, மாமனார் குடும்பத்தை அவர்களின் வீட்டிற்குக் காரில் அனுப்பி வைத்துவிட்டு, பிறகு புது மனைவியுடன், தன் குடும்பத்தினரை அழைத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தான் அவன்.

மனுதர்மனுடைய அறையின் உட்புறமாக இருந்த மற்றொரு அறையே ஜனார்த்தனிக்காகத் தயார் செய்யப் பட்டு, அவளுடைய உடைமைகள் அங்கே வைக்கப் பட்டிருந்தன.

அன்றைய அலைச்சல் களைப்பில், எப்போதடா படுத்துக் கண்களை மூடுவோம் என்றிருந்தது ஜனார்த் தனிக்கு. ஆனால் மனுதர்மனுக்கு அப்படியெதுவும் இல்லையோ? அவன் உற்சாகமான மனதுடன் விசிலடித் தவாறு, டிவி ரிமோட்டை அழுத்தி சேனலை மாற்றிக் கொண்டிருந்தான்.

கழுத்திலிருந்த நகைகளைக் கழற்றி, உரியவிதமாக அதனதன் பெட்டியிலே வைத்து மூடிவிட்டுக் குளிக்கச் சென்றாள் ஜனார்த்தனி.

வெதுவெதுப்பான சுடுநீர் பூஞ்சிதறலாக விழ, களைப்புத் தீருகின்றவரை குளித்தாள்.



உடை மாற்றிக் கொண்டு வெளியே வந்தவள், சற்று ... பால்கனியில் நின்று தலைமுடியை உலர்த்திக் ...ருந்தபோது, கதவு தட்டப்பட்டது.

சட்டென உடல் விரைத்தது அவளுக்கு.

இதுவரை தன் அறையிலிருந்தபடி மட்டுமே பேசி ...ன். இன்றைக்குக் கதவைத் தட்டுகிறான் என்றால்...

மீண்டும் கதவு தட்டப்பட்டதுடன், "ஜனா! கதவைத் ..." என்று அவன் கூறுவதும் கேட்டது.

இதற்கு மேலும் நின்றால், இன்னும் பலமாக ஓங்கித் ...வானோ?

சொல்லப் போனால் இதுவரை அவன் அவளுக்குப் ...க்காத மாதிரி நடந்து கொள்ளவில்லை.

அதிகாரமோ உரிமையோ காட்டவில்லை.

இருந்தாலும் எவ்வளவு நேரம்தான் இங்கேயே இருந்துவிட முடியும்?

கதவைத் திறந்துவிட்டு, மறுபக்கமாகச் சென்று நின்றவளைப் பார்த்தபோது, மனுதர்மனின் கண்கள் இடுங்கின.

இவள் மனதிலே என்னதான் நினைத்துக் கொண் டிருக்கிறாள்? அவன் பொறுமையை ரொம்பவும்தான் சோதிக்கிறாள்.

ஒரு பெருமூச்சை வெளியிட்ட பிறகு, "இன்னும் எத்தனை நாளைக்கு, இந்த வெறித்த பார்வையைத் தொடரலாம் என்றிருக்கிறாய் ஜனா?" என்று, நேராகப் பார்த்துக் கேட்டான்.

திருமணமான நாளிலிருந்து அவளுக்கு உதவிட பார்வையை, இன்றைக்குத் தொடர முடியாதோ?

வெறுமனே அமைதியாக நின்றவளைப் பார்க்கப் பார்க்க, உள்ளூர எரிச்சல் அதிகமானது அவனுக்கு.

"என்னைப் பார் ஜனா. ஏன் விலகி நின்று வெறிக்கிறாய்? நாம் சேர்ந்து வாழ்வதிலே உனக்கு இஷ்டமிருக்கிறதா இல்லையா என்று இப்போது எனக்குத் தெரிந்தாக வேண்டும்!" என்றான் கணவனாக.

"மறுக்கிற உரிமையோ தகுதியோ எனக்கில்லை என்பது மட்டும் தெரியும்!" என்றாள் மனைவி.

"அப்படி யென்றால் வேறு வழியில்லை யென்று சம்மதிக்கிறாயா?"

மீண்டும் அமைதியானாள் அவள்.

"நான் தாலி கட்டிய மனைவி, வேறு வழியில்லை என்று என்னுடன் குடும்பம் நடத்தச் சம்மதிப்பதைவிட பெரிய கேவலம் வேறு என்ன இருக்க முடியும் எனக்கு? என்றான் ஆத்திரமுடன்.

"இதோ பாருங்கள், நானாக வாயைத் திறந்து உங்களிடம் ஏதாவது கேட்டேனா? உங்கள் கேள்விக்கு பதில் சொன்னேன். அவ்வளவுதான்."

"உன் பதில் எந்தளவிற்கு என்னைக் காயப்படுத்துகிறது என்பது உண்மையிலேயே உனக்குத் தெரியாதா?"

"இப்போது நான் என்னதான் செய்ய வேண்டும் என்கிறீர்கள்? சொல்லுங்கள், அப்படியே நடந்து கொள்கிறேன்!" என்றாள் எரிச்சலைச் சற்றும் மறைக்காமல்.



"உனக்குத் தேவையானதை, நீ கேட்டதை முழு மனதுடன் நான் தந்தேன்தானே! அது மாதிரி நீ நடந்து கொண்டாயா?" என்று குற்றம் சாட்டினான்.

"அவரவர்க்குத் தேவையானதைப் பெறுவது, அவரவரின் சாமர்த்தியம். அதற்கு நான் ஒன்றும் செய்ய முடியாது!" என்றாள்.

அவன் முகத்திலே நம்ப மாட்டாத வியப்பு ஒன்று தோன்றி நிலைக்க, "ம்... பிரமாதம். உன்னிடமிருந்து நான் கற்றுக் கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது ஜனா. குட்நைட்!" என்று கூறியவன், உடனே வெளியேறித் தன்னுடைய தனியறைக்குச் சென்றுவிட்டான்.

அதுவரை நின்றதே பெரிய விஷயம் என்பதுபோலத் தொப்பென்று பெட்டிலே அமர்ந்தாள் அவள்.

## 16

மறுநாள் காலையில் அறையை விட்டு வெளியே வந்தவளைப் பார்த்துக் கிண்டலாகச் சிரித்துவிட்டு, அவள் பக்கமாக டீ கோப்பையை நகர்த்தி வைத்த மனுதர்மன்,

"நான் இப்போது ஜாகிங் போகப் போகிறேன். வருகிறாயா?" என்று கேட்டான்.

தனக்கு வேண்டிய அளவு டீயை ஊற்றியவளுக்கு அவனுடைய வெகு இயல்பான நடைமுறைப் பேச்சு, வியப்பாகத்தான் இருந்தது.

நேற்றிரவு நடந்த சம்பாஷணையைப் பற்றி, இவனுக்கு ஒன்றுமே யில்லையா? அல்லது கிணற்றுத் தண்ணீர் எங்கே போய்விடப் போகிறது என்ற அலட்சியமா?

"ஒரு சின்னக் கேள்விக்குப் பதில் சொல்ல இவ்வளவு நேரமா?" என்றுவிட்டு, பேப்பரை மடித்து டீபாய் மீது வைத்தான்.

"ஜாகிங் போகிற பழக்கமெல்லாம் எனக்கில்லை."

அவளை மேலும், கீழுமாகப் பார்த்துவிட்டு, "அதிசயம்தான். பிறகு எப்படி வெயிட் போடாமல் அப்படியே இருக்கிறாய்?" என்றான்.

"வீட்டில் இருக்கிற வேலைகளைத் தினமும் செய்தாலே போதும். அதற்காக மெனக்கெட வேண்டியதில்லை!" என்றாள்.

"உன்னைப் போலவே எல்லோரும் நினைக்க ஆரம்பித்து விட்டால், டயட் கிளாஸ், ஜிம் வைத்து நடத்து கிறவர்களின் வருமானமெல்லாம் அம்பேல்தான்!" என்று கூறிவிட்டு, ஸ்போர்ட்ஸ் ஷூவைக் காலிலே மாட்டினான்.

இதற்குமேல் இங்கே தனியாகத்தான் உட்கார்ந்திருக்க வேண்டும். வெளியே பரந்திருக்கும் தோட்டத்தைப் பார்த்துவிட இளம் வெயிலில் நடந்தால் நன்றாகத்தான் இருக்கும்.

தோன்றியதுமே, 'ஒரு நிமிடம்' என்றுவிட்டு உள்ளே சென்று, கூந்தலை ஒழுங்குபடுத்திக் கட்டிக் கொண்டு அவனுடன் சென்றாள்.

தோட்டத்திலிருந்த பெரும்பான்மையானவை, ஆர்க்கி வகையைச் சேர்ந்த அலங்காரச் செடிகள்தான்.



விதவிதமான வடிவத்திலும், வண்ணத்திலும், பார்ப் போரின் விழிகளுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தன.

ஆங்காங்கே பறந்து திரிந்த தேன் சிட்டுகளின் மெல்லிய சத்தம், அவளின் முகத்தருகே வந்துவிட்டுச் சட்டென்று விலகிப் பறந்த மஞ்சள் நிறத்துப் பட்டாம்பூச்சி, இவையெல்லாம் அவள் முகத்திலே, இதமான புன்முறுவல் ஒன்றைத் தோன்ற வைத்தன.

தொடர்ந்து கீச்சிட்டுப் படபடத்த மற்ற வகைப் பறவைகள், அவள் அருகே சென்றதும், ஒரு கணம் அமைதியாகக் கூர்ந்து பார்த்துவிட்டு, மறுபடியும் தங்கள் வேலையைத் தொடர்ந்தன.

மனுதர்மன் ஓடி முடித்துவிட்டு, வீட்டிற்குச் சென்று குளித்துக் கொண்டிருந்தபோதுதான், அவள் மாடிக்குச் சென்றாள்.

இங்கே அவள் செய்வதற்கென்று எந்த வேலையும் இல்லாததால் கொஞ்சம், கொஞ்சமென்ன... ரொம்பவே போரடிக்கத்தான் செய்தது.

நான்கைந்து நாட்களுக்கே இப்படியென்றால் அடுத்து வருகிற நாட்களுக்கெல்லாம் இன்னும் எப்...படியிருக்குமோ?

பொதுவாக அந்த வீடு எப்போதுமே அமைதியாகத் தான் இருந்தது.

மனுதர்மனின் சித்தப்பாவும், சித்தியும் அந்த வீட்டிலே, ஒரு நேர உணவு வேளைக்கு இருப்பதே அதிசயம்.

எந்நேரமும் அவர்களின் பொழுதைப் போக்க, ஏதாவது ஒரு நிகழ்ச்சியாவது கட்டாயம் இருக்கும்.

இணை பிரியாத பறவைகள் என்று அவர்களுக்கு ஒரு செல்லப் பெயரே இருந்தது.

அப்போதுதான் படிப்பை முடித்திருந்த தம்பி மகிந்தன், அப்படியே பெற்றோரை முன்மாதிரியாகக் கொண்டிருந்தான்.

பெரும்பாலும் நண்பர்கள் கூட்டம்தான் உலகம்.

தங்கை கீர்த்தனா கல்லூரிக்குச் சென்ற நேரம் போக, ஷாப்பிங்கும், பியூட்டி பார்லரும் சென்றாள்.

அவரவரின் வசதிக்கேற்ப, அவ்வப்போது பகல் நேரத்திலும் வீட்டிற்கு வருவார்கள்.

வலியத் தேடி வந்து பேசிக் கொள்கிற அளவிற்கு, அந்த வீட்டிலே யாருக்கும் நேரமிருந்ததில்லை.

அவ்...வளவு பிஸி!

நேருக்கு நேராகப் பார்க்க நேரிடும்போது, சின்னப் புன்னகையுடன் இரண்டு வார்த்தைகள் பேசிவிட்டு, அவரவரின் வழியே சென்றார்கள்.

சின்னவர்கள் அண்ணி என்று மரியாதையுடன் அழைக்க, பெரியவர்கள் மருமகளே என்றார்கள்.

சின்ன மாமியார் லோகநாயகி, சற்றுக் கூடுதலாக ஓரிரு நிமிடங்கள் எப்போதாவது பேசுவதுண்டு.

ஜனார்த்தனியை இரு முறை அவள் அப்பாவின் வீட்டிற்கு அழைத்துச் சென்றான் மனுதர்மன்.

அப்பாவையும் உடன் பிறந்தவர்களையும் பார்த்து வெகு நாட்கள் ஆகிவிட்டதைப் போலத் தொண்டையை அடைத்தது அவளுக்கு.



அவர்களும் அதே நிலையில்தான் இருந்தார்கள். என்னதான் தினமும் போனில் பேசினாலும், நேரில் ...து போலாகுமா?

மனுதர்மன், தினமும் சில நிமிடங்களாவது தன் ...டன் உரையாடுவதை வழக்கமாகக் கொண்டிருந்...ன்.

அநேகமாக அந்த உரையாடல், அவன் அலுவல ...த்திலிருந்து திரும்பி வந்த பிறகே இருந்தது.

மிகவும் தாமதமாக வருகின்றபோது, மறுநாள் ...லையில் சந்தித்தான். அவ்வப்போது மனைவியையும் ...டன் அழைத்துப் போவது உண்டு. ஆனால், திரும்பி ...ரும்போது, ஏன் சென்றோம் என்றாகிவிடும் அவளுக்கு.

ஏனெனில் அந்தம்மா, அவளை மறைமுகமாக மட்டம் ...ட்டுவதை இன்னமும் விடவில்லை.

"என்னம்மா ஜனார்த்தனி, உனக்கு இங்கே எல்லாம் சௌகரியமாக இருக்கிறதா? முக்கியமாக உணவு முறைகள் பிடித்திருக்கிறதா?

இங்கேயுள்ள பழக்கம் ஒத்துவரவில்லை என்றால், உனக்குப் பிடித்ததைச் சொல். செய்து தருவார்கள்" என்றார்.

"நீ வீட்டிலேயே இருக்க வேண்டிய அவசியமில்லை. வெளியே சென்றால், ஷாப்பிங் பண்ண ஆயிரமாயிரம் விஷயம் இருக்கிதே. நன்றாகச் சம்பாதிக்கிற புருஷனை மணந்துகொண்டு, இப்படி வீட்டிலேயே அடைந்து கிடக்கிற உன்னை நினைத்தால் வியப்பாக இருக்கிறது.

இந்நேரம் நகை, நட்டென்று வாங்கி அடுக்கியிருக்க வேண்டாமா? இனியாவது நான் சொன்னதுபோலச் செய்.

"ரத்தினங்கள் வாங்கும்போது மட்டும் இவனையும் அழைத்துப்போ. அதில் உனக்கு அனுபவம் குறைவாக இருக்கும்பட்சத்தில், நல்ல ஜாதி ரகம் எப்படியிருக்கும் என்று இவன் சொல்லித் தருவான் இல்லையா?" என்பார் பராசக்தி அம்மாள்.

"இப்படியா என் பர்ஸிற்கு வேட்டு வைப்பீர்கள் பாட்டி?" என்று, அவன் பாட்டியிடம் கேலி செய்ய,

ஜனார்த்தனிக்குப் பற்றிக் கொண்டு வந்தது.

அந்தம்மா சொன்னது நல்ல விஷயமாகவே இருந்தாலும், சொல்லப்பட்டதென்னவோ அவளைக் குட்டுவதற்காகத்தான் என்பது மட்டும் நிச்சயம்.

உனக்கு ரத்தினங்கள் வாங்கிய அனுபவம், பழக்கம் எங்கேயிருக்கப் போகிறது என்பதுதானே...! இருக்கட்டும்.

நீங்கள் இருக்கிற திசைக்கே ஒரு கும்பிடு என்று முடிந்தவரை அந்தம்மா இருக்கிற பக்கம் செல்வதையே தவிர்த்தாள் ஜனார்த்தனி.

"அடிக்கடி இப்படி முகத்தைத் திருப்பிக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை ஜனா. நன்றாகப் பேசிச் சிரிக்கவும் செய்யலாம்!" என்றான் கணவன்.

"சிரித்துப் பேசுவதா? அதற்கு நான் உங்களின் காதலி இல்லையே?"

"மனைவியும் அப்படி நடந்து கொள்வதுதான் நடைமுறை."

"எனக்கு அதில் உடன்பாடில்லை!" எனப் பட்டென்று கூறிவிட்டுச் சென்றாள்.



அன்று அவனுடைய செல்ஃபோன் தொடர்ந்து இருமுறை அடித்தபோதும் அவள் எடுத்துப் பேசவில்லை.

செல்லை இங்கே வைத்துவிட்டு ஏன் அலுவலக அறைக்குச் சென்றான். மறந்து விட்டானோ?

மறுநிமிடம் இண்டர்காம் அழைக்க, எடுத்து ஹலோ என்றாள்.

"தர்மா எங்கேயிருக்கிறான்?" என்று கேட்டது பராசக்தி அம்மாள்.

அலுவலக அறைக்குப் போயிருக்கிறார் என்றாள்.

செல்லை எடுத்துச் செல்லவில்லையா?

இல்லை. இங்கேதான் இருக்கிறது.

அவன் நம்பருக்கு அழைத்தேனே. ஏன் நீ எடுக்கவில்லை? என்றார்.

மற்றவர்களின் செல்லை எடுத்துப் பேசுவது, எனக்குப் பழக்கமில்லாதது என்றாள் சாதாரணமாக.

மறுமுனையில் சிறு அமைதி தோன்றியது. பிறகு?

தர்மாவிடம், அலுவலகம் செல்லும் முன்பாக என்னை வந்து பார்க்கச் சொல் என்றுவிட்டு போனை வைத்தார்.

தன் முன்னே, முகத்தைச் சாதாரணம்போல் காட்டிக் கொண்டு அமர்ந்திருந்த பேரனைப் பார்த்தபோது, அந்த மூதாட்டியின் உள்ளம் துடித்துப் போயிற்று.

மனுதர்மன் பெரிதாக எதற்காகவும் அலட்டிக் கொள்ளாதவன் என்பது, அவனை வளர்த்து ஆளாக்கிய அவருக்கு நன்றாகவே தெரியும்.

அப்படிப்பட்டவனை இது மாதிரிப் பார்ப்பதென்றால்... ம்ம்....

"என்ன தர்மா, உன் மனைவி, உலகில் கிடைத்தற்கரிய அந்த மனைவி என்ன சொல்கிறாள்?" என்றார்.

இதுவரை தன் திருமண வாழ்க்கையைப் பற்றி, நேரிடையாக எதுவும் கேட்காத பாட்டி, இன்று முதல் தடவையாக விசாரிக்கவும், அவன் கண்கள் சட்டெனக் கூர்மையாயின.

"என்ன சொல்ல வேண்டுமென்று நினைக்கிறீர்கள் பாட்டி?" என்று, திருப்பிக் கேட்டுச் சமாளிக்க முயன்றான் அவன்.

ஒரு மௌனத்தைக் கடந்த பிறகு, "பதில் சொல்லாமல் எதிர்க் கேள்வி கேட்கும்போதே தெரிகிறது, உன்னிடம் பதில் இல்லையென்று. ஆமாம், உன் பெண்டாட்டி முகத்தில் மருந்திற்குக் கூடச் சிரிப்புத் தோன்றாதா?

பெரும்பாலும் சிடுசிடுவென்றே முகத்தைக் காட்டும் அவளை, உனக்குப் பிடித்துப் போனதுதான் எனக்கு வியப்பாக இருக்கிறது! அப்படியென்ன பொல்லாத காதலோ?" என்று வெளிப்படையாகவே கூறினார் பாட்டி.

பாட்டியை நேராக நோக்கி, "நீங்கள் நினைக்கிற அளவிற்குப் பெரிதாக எதுவுமில்லை பாட்டி. நாளடைவில் எல்லாம் சரியாகிவிடும். அதை நான் பார்த்துக் கொள்கிறேன் விடுங்கள்!" என்றான் மனுதர்மன்.

சரியாகத்தான் வேண்டும் என்று முணுமுணுத்தவர்,



"என்னடா, சிடுசிடுவென்றே இருந்தாலும், புதுப் ...ண்டாட்டி என்பதால் விட்டுக் கொடுக்காமல் பேசுகிறாயா?" ...று கேட்டார்.

...லேசாக உதடுகள் விரியச் சிரித்து, "பழைய ...ண்டாட்டியாக ஆகும்போதும்கூட, இப்படியேதான் ...வள் பாட்டி!" என்று கண் சிமிட்டிக் கூறினான் அவன்.

"நீ இப்...படி மயங்கிப் போகிற அளவிற்கு, அப்படி ...என்ன அவள் உலக மகா அழகியா?" என்று ஆற்றாமை ...டனே வெளிப்பட்டது பாட்டியின் குரல்.

"என்ன பெரிய உலக அழகிகள் பாட்டி. என் ஜனா ...த்துப் புன்னகைத்தால், எப்படிப்பட்ட அழகியாக இருந் ...லும் கண் சிமிட்டாமல் பார்த்துக் கொண்டு நிற்பார்கள்.

பார்த்துக் கொண்டேயிருக்கலாம்போல, மனதிற்கு அவ்வளவு இதமாக இருக்கும். கூடிய விரைவில் நீங்களும் அதைப் பார்க்கத்தான் போகிறீர்கள். அப்போது தெரிந்து கொள்வீர்கள்!" என்றவன், மேலும் சற்று நேரம் உரையாடி ...விட்டு, அலுவலகத்திற்குக் கிளம்பினான்.

ஒரு பெருமூச்சோடு கண்களை மூடினார் பாட்டி.

## 17

கணவன் வீட்டு வழக்கம், மெல்ல மெல்லப் பழகலாயிற்று ஜனார்த்தனிக்கு. பட்டியல் இடுவது போல அன்றாட வேலைகள் நடந்தன.

எப்போதுமே பணியாளர்களுடன், நல்ல மாதிரியாகப் பழகுகிற ஜனார்த்தனியை அனை வருக்குமே பிடித்துப் போனது.

ரொம்பவும் போரடிக்கிறபோது, சமையலறைக்கு சென்று ஏதாவது உதவி செய்வாள்.

இல்லையென்றால் செடிகளுக்கு நீர் விடுவாள்.

பிறகு, டிவி, கதைப் புத்தகம் என்று, பொழுதை நெட்டித்தான் தள்ள வேண்டியிருந்தது.

வாரத்தில் இருமுறையாவது அப்பா வீட்டிற்குச் சென்று வந்தாள்.

இடையில், வசந்தன் ஒரு தடவை வந்துவிட்டு போனான்.

எல்லாமே ஓரளவிற்குச் சுமுகமாகச் சென்றது.

ஜாகிங் போகிற மனுதர்மன், மனைவியுடன் சேர்ந்து சில சமயம் நடந்து போவதும் உண்டு.

அன்று அப்படி நடந்தபோதுதான், "வந்து... நான் மீண்டும் அலுவலகம் போகிறேனே?" என்று கேட்டாள்.

"எதற்காக?" என்றான் அவன்.

"எனக்குப் பணம் சம்பாதிக்க வேண்டிய தேவை யிருக்கிறது. அதற்காக!" என்றாள்.

"பணம் சம்பாதித்து என்ன செய்யப் போகிறாய்?" என்று, அனாவசியக் கேள்வியெதுவும் கேட்கவில்லை அவன்.

ஏனெனில் அவள் குடும்பத்திலே, அவளின் சம்பளம் தான் வருமானமாக இருந்தது என்பது அவனுக்குத் தெரியுமே.

"இனி, நீ அலுவலகத்திற்குச் செல்வது சரியாக வராது ஜனா. வேண்டுமானால் வீட்டிலேயே என்னுடைய கணக்கு



...களைச் சரிபார்த்து, ஒழுங்குபடுத்துகிற வேலையைச் ... எனக்கும் வேலை குறையும், உனக்கும் வருமானம் ...க்கும்!" என்று கூறினான்.

தன்னுடைய பழைய வேலையைத் தொடர முடியாமல் ...னதில், கொஞ்சம் கஷ்டமாக இருந்தாலும், இவன் ...ன்ன மாதிரி வருமானத்திற்குத்தான் வேறு வழியைக் ...ட்டிவிட்டானே, அதுவரையில் நிம்மதிதான்.

"வந்து... ரொம்ப தேங்க்ஸ்..." என்றாள்.

"தேங்க்ஸ் ஓ.கே. ஆனால் அந்த வந்து யாரம்மா?" ...ன்றான்.

"அது, சும்மா உங்களை அழைக்கவென்று..." என்று ...சொல்லத் தொடங்கியவள், அவன் வேண்டுமென்றே ...கேட்கிறான் என்பது புரிந்து பாதியிலேயே நிறுத்த...

"என்...னை அழைக்கவென்றா? ஏன், எனக்குப் ...பெயர் எதுவும் இல்லையா? மற்றவர்களைப் போலத் தர்மா ...என்றழைக்கப் பிடிக்கவில்லை என்றால், மனு, மனோ ...என்பதை எடுத்துக் கொள்!" என்றான் இளம் புன்னகையுடன்.

அவன் குரலும், புன்னகையும் அவளைத் தலையாட்ட வைத்தது.

கணக்குகளை எப்படிப் பார்க்க வேண்டுமென்று சொல்லிக் கொடுத்தவன், "செலவினங்கள் அனைத்திற்கும் ...பில் அல்லது வவுச்சர் இருக்கிறதா என்பதைக் கட்டாயம் ...குறித்துவிடு.

இந்த வீட்டிலிருப்பவர்களின் செலவுகள், பெரும்பாலும் கிரெடிட் கார்டு மூலமாகத்தான் இருக்கும். ஒவ்வொரு

பில்லையும் பார்த்துவிட்டுத்தான் கார்டுக்குப் பணம் கட்ட வேண்டும்.

அவ்வப்போது தோன்றுகிற சந்தேகங்களைக் கேட்டு தெளிவுபடுத்திக் கொள்!" என்றான் மனுதர்மன்.

அன்றிலிருந்து ஜனார்த்தனியின் பொழுது, நெடு தள்ளத் தேவையின்றித் தானாகவே சென்றது.

மனுதர்மனுடைய தனிப்பட்ட கணக்குகள் எல்லாமே நேர்கோடு போல ஒரு ஒழுங்கு முறையுடன் பின்பற்றப் பட்டிருந்தன.

அலுவலக அறையின் வெளிப்பக்கத்தில் வைக்கப் பட்டிருந்த சித்திர மரப்பெட்டியில்தான், அவரவரின் செல விற்கான பில்லைப் போட்டு வைப்பது நடைமுறைப் பழக்கம்.

தினமும் குறைந்தது ஐந்தாறு பில்லாவது இருக்கும். சில நேரத்தில் எண்ணிக்கை இரண்டு, மூன்று மடங்காக உயரவும் செய்யும்.

அதையெல்லாம் தினமும் எடுத்து, அந்தச் செல யாருடையது என்று பெயரைப் பார்த்து, அவர்களின் கணக்கில் பதிவு செய்ய வேண்டும்.

சில சமயம், ஒன்றிரண்டில் பெயர் இருக்காது. அ யாருடையது என்று கேட்பதற்காக, அவள் தன் சின்ன மாமியார் லோகநாயகியைப் பார்க்க வேண்டியிருந்தது.

எப்போதாவது, "அது என்னுடையது அண்ணி. பெயர் எழுத மறந்துவிட்டேன்!" என்று, சின்னவர்கள் அவர்களாகவே வந்து சொல்வதும் உண்டு.



இந்த நிலையில்தான், அவள் அந்த உரையாடலை செயலாகக் கேட்க நேர்ந்தது.

"என் லோகா, பெரிய பரிசெல்லாம் நீ அவ்வளவு க யாருக்கும் கொடுத்துவிட மாட்டாயே. திருமணத்தின் னுதர்மாவின் மனைவிக்கு எப்படிக் கொடுத்தாய்?" என்று டார் லிங்கநாதன் - மனுதர்மனின் சித்தப்பா.

"காரணம் இல்லாமல் செய்வேனா டியர். எப்படியும் அந்தப் பெண்ணுக்கு இப்போது நான்தானே மாமியார். மாமியார் என்ற கெத்திற்காவது, பெரிதாக ஏதாவது செய்துதானே ஆக வேண்டும். உங்கள் அம்மா செல்லப் ரனின் மனைவிக்கு, என்னவெல்லாம் கொடுத்திருக் கிறார்களோ?

அவர்களுக்கு முன்னால் அந்தப் பெண் என்னை மட்டமாக நினைத்துவிட்டால்? பெரிய அவமரியாதை இல்லையா?!

அதுவுமில்லாமல், அவளையும் நாம் தாஜா பண்ணி வைக்க வேண்டிய தேவையிருக்கிறது. புதுப் பெண்டாட்டி சொன்னால்தான், பெரும்பாலான கணவன்மார் மறுப்பதே இல்லையே!

அதனால், இந்த ஜனார்த்தனியின் மூலம், நாம் தர்மாவிடம் பெரிய காரியம் ஒன்றிரண்டாவது சாதித்துக் கொள்ளலாம் பாருங்கள்.

சாதாரண நடுத்தரக் குடும்பத்தில் இருந்து வந்திருப்பதால், நான் கொடுத்த பெரிய பரிசு அவளுக்கு மகிழ்ச்சியைத் தந்திருக்கும். அதனால் நான் சொல்வதைக்

கேட்டு நடப்பாள். அதற்காகவும்தான் இதெல்லாம்!" என்று, நீளமாகக் கூறி முடித்தாள் லோகநாயகி.

"தொலைநோக்குப் பார்வையுடன் செயல்பட்டிருக்கிறாய் என்று சொல்லு. இது நமக்குப் பயன்பட்டால் சந்தோஷம் தான்!" என்றார் லிங்கம்.

"பயன்படாமல் எங்கே போய்விடும்? நிச்சயமாகப் பயன்படும்!" என்று, சர்வ நிச்சயமாகப் பதிலளித்தாள் நாயகி.

ஜனாவின் உதடுகள் ஏளனமாக வளைந்தன.

பெரீய்...ய புத்திசாலிகள்தான்!

தன்னைப் பற்றி முழுதாகத் தெரியாமல் போனது தான் பரிதாபம்!

சாதாரணக் குடும்பத்தில் இருந்து வந்தால், விலை உயர்ந்த நகையைப் பார்த்ததும் அப்படியே 'ஆ' வென்று வாயைப் பிளந்து கொண்டு விடுவார்களாமா? அவளுக்கென்று தனித்தன்மையெதுவும் இருக்காதாமா? அதைப் பற்றி யெல்லாம் யோசித்த மாதிரியே தெரியவில்லையே!

எல்லாம் தன்னைக் கொண்டு அடுத்தவரை மதிப்பிடுகிற புத்தி!

பராசக்தி அம்மாள் ஒருவிதமென்றால், அவர்களின் மருமகள் வேறொரு ரகம்!

ம்.மாமியாருக்கேற்ற நல்...ல மருமகள்தான்!

நல்லவேளை! இந்தம்மா கொடுத்த நகையைத். திரும்பப் போட வேண்டுமென்று அவளுக்குத் தோன்றியதே யில்லை!



...ளித் தோன்றப் போவதுமில்லை!

...ன்னைப் பற்றிக் குறைவாக மதிப்பிட்டுவிட்டார்கள்

...ம்.

...இருக்கட்டும். அது தவறான மதிப்பீடென்பதை, ஒரு ...க்குத் தெரிந்து கொள்வார்கள் என்றெண்ணிக் ...று, விலகி நடந்தாள் ஜனார்த்தனி.

அந்த நாளும் விரைவாகவே வந்தது.

தன் சித்தி பெயரிலிருந்த, ஒன்றரை லட்சத்திற்கான ...ட் கார்டு' ஸ்டேட்மெண்ட் ஒன்றை அவளிடம் கொடுத்து, ...ந்த 'பில்' வந்துவிட்டதா என்று பார்த்துவிட்டுக் கணக்கில் ...த்துவிடு ஜனா!" என்றான் மனுதர்மன்.

அப்படியொரு 'பில்' வராததால்,. மாமியாரை நேரில் ...த்துக் கணவன் கூறியதைத் தெரிவித்தாள்.

அந்தம்மாவிற்கு, ஜனார்த்தனி கணக்கு வழக்குகளைப் ...ர்க்க ஆரம்பித்ததே சுத்தமாகப் பிடிக்கவில்லை. ...ருந்தாலும் இதுவரை அதை வெளிக்காட்டியதில்லை.

இப்போது வந்து, 'நீங்கள் பில்லைக் கொடுத்தால்தான், ...ரியாக இருக்கிறதா என்று பார்த்துவிட்டு, நான் அவரிடம் ...சொல்லமுடியும்!' என்று, சற்றுக் கறாராகக் கேட்ட மருமகளை ...எரிச்சலுடன் பார்த்துவிட்டு, 'தேடி எடுத்துத் தருகிறேன்!' ...என்றாள் லோகநாயகி.

அந்த நிமிடத்திலிருந்து லோகநாயகிக்கு, ஜனார்த்தனியைப் பிடிக்காமல் போயிற்று. அவளைப் பொறுத்த வரையில், நான்கு மரகத வளையல்களும் சரியாக வேலை செய்யவில்லை! முழுக்க வேஸ்ட்!

ஆனால் மனுதர்மனுக்கு மனைவி செய்து கொண்டிருந்த வேலை மிகவும் திருப்தியாக இருந்தது.

அந்தத் திருப்திக்குக் காரணம், அவள் வேலையிலிருந்த நேர்த்தி!

"இதையெல்லாம் நீ பார்க்க ஆரம்பித்த பிறகு எனக்குப் பெரிய தலைவலி ஒன்று குறைந்திருக்கிறது ஜனா!" என்றான் ஒருமுறை.

கணவன் வேலை செய்கிற வேகத்தையும், நேரத்தையும், நேரடியாக வீட்டிலும் பார்த்தபோதுதான், அதன் பளு எவ்வளவு என்பது புரிந்தது.

உண்மையிலேயே எப்படித்தான் சமாளிக்கிறானோ என்று, உள்ளூர வியப்பாகித்தான் போயிற்று!

அன்று வழக்கத்தைவிடச் சற்று முன்னதாகவே வீடு திரும்பியபோதும், தன் எதிரே ஊஞ்சலில் வந்தமர்ந்த பேரனின் களைத்த தோற்றத்தைப் பார்த்து, "என்னப்பா டயர்டாக இருக்கிறதா? கவலை அதிகமா?" என்று பரிவுடன் விசாரித்தார் பாட்டி.

நெற்றியை நீவிவிட்டபடியே, "இன்றைக்கெல்லாம் கிட்டத்தட்ட மூச்சு முட்டிப் போயிற்று!" என்றான் பேரன்.

தன் பணியாளை அழைத்து, "எலுமிச்சை ஜூஸில் சர்க்கரையுடன், துளி உப்பும் சேர்த்து எடுத்து வா!" என்று கூறி அனுப்பினார் பாட்டி.

அதை ஒரே மூச்சில் பருகிவிட்டுத் தம்ளரை டீபாயின் ஓரமாக வைத்தான்.



"இனியும் தாமதிக்கத் தேவையில்லை தர்மா. உன் ...ப்பா குடும்பத்திற்குச் சேர வேண்டியதை, அவர்களிடமே ...டைத்து விடுப்பா!" என்றார் பராசக்தி அம்மாள்.

"சரியாக வருமா பாட்டி. இந்த வயதிற்கு மேல் ...ப்பா வேலைக்கு வளைவாரா?"

"ஓரளவிற்காவது வளைந்துதான் ஆக வேண்டும். ...ப்படியே விட்டால், பிறகு உன் தம்பியும் அவன் தகப்...னைப் போலவே ஆகிவிடுவான். எவ்வளவு காலத்திற்கு ...ந்தக் குடும்பத்தை நீயே சுமப்பாய்?" என்று பாட்டி கூறி...டிக்கையிலேயே, ஆரவார ஒலியுடன் மகிந்தனின் ...ஸ்போர்ட்ஸ் கார்' கேட்டைத் தாண்டி விரைந்து சென்றது.

ஆழ மூச்சிழுத்து விட்டு, "அவர்களையோ அவர்...களுக்குச் செய்வதையோ சுமையென்று ஒருநாளும் நான் ...நினைத்ததில்லையே பாட்டி!" என்றான்.

தெரியும் கண்ணா. ஆனால் அவர்களுக்கும் பொறுப்...பென்று ஒன்று, இனியாவது வரவேண்டுமில்லையா?

இப்படியே இஷ்டப்படி சுற்றிக் கொண்டு, ஊதாரித்...தனமாக இருந்தால், சின்னப் பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடுமே.

வளர்ந்த பயிரை நாற்றாங்காலிலேயே விட்டு வைப்பதால் என்ன பயன்? வேரோடு பிடுங்கியெடுத்து வயலிலே நட்டு வைத்தால்தான் நெல் விளையும்.

அதுவுமில்லாமல் உனக்கு மனைவியென்று ஒருத்தி வந்தாயிற்று. இனிமேல் குடும்பம் பெருகும்.

அவர்களுக்காகச் செலவிட நீ கட்டாயம் நேரம் ஒதுக்கியாக வேண்டும். அதுதானே நியாயம்!

எனவே, இதற்காக நீ சற்றும் வருத்தப்பட வேண்டியதில்லை தர்மா. இதையெல்லாம் முன்பே செய்திருக்க வேண்டும். பரவாயில்லை. இனியாவது நடக்கட்டும்."

விஷயத்தைச் சொல்லும் போது, குரலில் கொஞ்சம் கறார் தன்மை அதிகமாகவே இருக்கட்டும் என்று, திட்டவட்டமாகக் கூறினார் பாட்டி.

மறுநாள் காலையில் சித்தப்பா குடும்பத்தினரை அழைத்து, "சித்தப்பா, மகி! இன்று முதல் உங்களுடைய பங்கிற்கான அலுவலகப் பொறுப்புகளை, நீங்களே ஏற்றுக் கொள்ளுங்கள். அதற்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டு உங்களிடம் தெரிவிக்கிறேன். உடனே கிளம்பி வாருங்கள். இந்த விஷயத்தில் இனி எந்த மாற்றமும் இல்லை!" என்று, தெளிவாகக் கூறிவிட்டுப் போனான் மனுதர்மன்.

இந்தத் திடீர் ஷாக்கில் இருந்து விடுபடவே அவர்களுக்குக் கொஞ்சம் நேரமானது.

அவரவரின் பாதிப்புகள் பற்றித் தனித்தனியாக முணுமுணுத்தார்கள்.

கடைசியாக லோகநாயகி, "இதெல்லாம் உங்கள் அம்மாவும், தர்மாவின் பெண்டாட்டியும் செய்கிற வேலை!" என்று அடித்துப் பேசினாள்.

"அவர்களுக்குத்தானே நாம் சந்தோஷமாக இருந்தாலே ஆகாது. வீட்டுப் பொறுப்பிலிருந்து ஒதுங்கி ஓரமாகப்



...ட்ட பிறகும், ஏன் இப்படி உள்ளே புகுந்து ...யைக் குழப்ப வேண்டும்?

என்ன பொறுக்காத மனமோ!

சும்மாவே செல்லப் பேரனின் ரத்தத்தை, நாம் ...ணி மாதிரி செலவிடுகிறோம் என்றவர்கள் தானே!

வயதாகிவிட்டாலே அடுத்தவரின் சந்தோஷத்தைக் ...ப் பொறுக்காதே.

அவர்கள் தான் சொன்னார்கள் என்றால், இந்த ...மாவிற்குப் புத்தி எங்கே போயிற்று?

திடுதிப்பென்று அலுவலகத்திற்கு வந்து வேலையைப் ...ருங்கள் என்றால் என்ன அர்த்தம்.

நமக்கு எத்தனையோ 'கமிட்மெண்ட்ஸ்' இருக்கும். ...தைப் பற்றியெல்லாம் யோசித்தானா?

அடுத்த பதினைந்து நாட்களுக்கு, அருமையாக ஒரு ...ர் ஃபுரோகிராம் போட்டு வைத்திருந்தேன். போயிற்று. எல்...லாம் போயிற்று!" என்று புலம்பினாள் லோகநாயகி.

இடையிடையில், ஜனார்த்தனியின் பெயரும் கூட, அந்தப் பேச்சில் அடிபட்டது.

அதற்காக அவளொன்றும் அலட்டிக் கொள்ளவில்லை. மாறாக, மாலையில் வீடு திரும்பிய கணவனைப் பார்த்ததும், அடக்க மாட்டாத சிரிப்பு வந்துவிட்டது.

"நீ இப்படிச் சிரிப்பதைப் பார்க்க எவ்வளவோ குளிர்ச்சியாகத்தான் இருக்கிறது ஜனு. இருந்தாலும் காரணத்தைச்

சொன்னால், இன்னும் நன்றாக இருக்குமே!" என்றாள் முறுவலுடன்.

ஹோஸ் பைப்பை அடுத்த செடிப்பக்கம் திருப்பியபடி "இன்றைக்கு அலுவலகத்திற்கு வந்த புதுமுதலாளிகளுக்கு நேரம் எப்...படிப் போனதாம்?" என்றாள் மர்ம முறுவலுடன்.

புருவம் நெரிய, "ஏன் கேட்கிறாய்? இங்கே வீட்டில் யாராவது, சித்தி... சித்தி ஏதாவது சொன்னார்களா உன்னையா?" என்றான் வேகமுடன்.

"ம்... நீங்கள் கிளம்பியதும் ஒரே புலம்பல் எதிர்பாராமல்தான் கேட்க நேர்ந்தது. இப்படியெல்லாம் நடப்பதற்கு உங்கள் பாட்டியும், நானும்தான் காரணமாம். புதிதாக வந்த நான், உங்களைச் சேலை முந்தானையில் முடிச்சிட்டுக் கொண்டு, விருப்பம் போல ஆட்டி வைக்கிறேனாம்!" என்று புருவம் உயரக்கூறித் தொங்கட்டான் அசைந்தாடக் கலகலவென்று சிரித்தாள் ஜனார்த்தனி.

எப்போதும் போலப் பார்க்கத் தெவிட்டாமல் உடன் சேர்ந்து சிரித்து, "எந்த முந்தானையில் முடிச்சிட்டாயாம் இதிலா?" என்று அவள் சேலையைத் தொட்டுக்காட்ட,

அவர்களிடையே மீண்டும் பொங்கியது புன்னகை.

அங்கேயே நின்று பேசிக் கொண்டிருந்தவர்களை நோக்கி வந்த பணியாள், இருவரையும் பாட்டியம்மா அழைப்பதாகத் தெரிவிக்க, அங்கே சென்றார்கள்.

பாட்டியின் அறைக்குள் செல்ல, ஜனாவிற்கு எப்போதும் போலத் தயக்கம்தான். இருந்தாலும் அவளுக்குப் பின்பு போகாதிருக்கவும் முடியாதே.



...நீயும் வாம்மா' என்றழைத்து இருவருக்குமாகத் ...று பூசிவிட்டு, "நூறாண்டு காலம் மகிழ்ச்சியோடு ...ங்கள்!" என்று ஆசிர்வதித்தார் பாட்டியம்மா.

"ஓ! இன்று என் பிறந்த நாள். மறந்தே போயிற்று ...!" என்றவனிடம்,

"நீ என்றைக்குத்தான் அதைப் பெரிதாக நினைத் ...க்கிறாய். என்ன நேரமோ, காலையில் நானும் சற்றுத் ...மாகத்தான் விழித்தேன்!" என்றார் பாட்டி.

"பிறந்த நாள் வாழ்த்துகள் ம...மனோ!" என்று ...றினாள் ஜனார்த்தனி.

"தேங்க்ஸ் ஜனு!" என்று, இளநகை புரிந்தான் ...னவன்.

லேசாக முகம் சிவக்க, "இரவு உணவின் போது ...ஸிப்புச் செய்யச் சொல்கிறேன்!" என்று கூறிவிட்டு வெளி ...றினாள் ஜனா.

சென்றவளைப் பார்த்திருந்த பாட்டி, "அன்று நீ சொன்னது முற்றிலும் சரிதான் தர்மா. உன் மனைவி ...ப்பதைப் பார்த்தால், யாரும் ரசிக்கத்தான் செய்வார்கள். நீ தலை சுற்றிப் போனதில் வியப்பேயில்லை. இன்று உங்கள் இருவரையும் பார்த்து என் கண்ணே பட்டு ...ட்டிருக்கும்.

அந்தக் கடவுள் உங்களை, இன்று போலவே, என்றைக்கும் வாழ வைக்கட்டும்!" என்றார்.

அன்றிரவு உணவுவேளை முடிந்த பிறகு, தங்களின் அறைக்கு வருகிற வழியிலே, "பாயசத்திற்கு நன்றி ஜனா!" என்று மகிழ்வுடன் கூறினான் மனுதர்மன்.

மெல்லிய முறுவலுடன் அதை ஏற்றவள், "உங்களை போல் பிசினஸ் வட்டாரத்தில் இருப்பவர்கள், பிறந்தநாள் விழாவைப் பெரிய 'பார்ட்டி'யாகக் கொண்டாடுவது தானே வழக்கம்.

ஆனால் நீங்கள், ஞாபகம் கூட வைத்திருக்கவில்லை என்கிறீர்களே, ஏன்?" என்று கேட்டாள்.

ம். ஒருவேளை என் பெற்றோர் உயிருடன் இருந்திருந்தால், ஞாபகம் வைத்திருந்து செய்திருந்திருப்பார்கள். பாட்டிக்கிருந்த பலவேலைகளின் இடையே, இதையெல்லாம் கொண்டாட முடியாதென்பது எனக்கே தெரியும். என் பெயரில் ஒரு அர்ச்சனை செய்வது மட்டும் நடக்கும்.

அதுவுமில்லாமல் எனக்குமே இதிலெல்லாம், பெரிதாக விருப்பம் ஏதுமில்லையென்று நினைக்கிறேன். உன்னுடைய பாயசமே எனக்குப் பெரிய விஷயமாகத்தான் தோன்றுகிறது ஜனா!" என்றவன் –

அவள் விழி விரிக்கவும், அருகே வந்து அவளின் கைகளைப் பற்றி, "எனக்கு நினைவு தெரிந்து, நான் பிறந்த நாள் கொண்டாடியதுமில்லை, யாரிடமும் எந்தப் பரிசும் வாங்கியதுமில்லை. ஆனால்...

இன்று மாலையில் உன்னுடன் சிரித்ததில் இருந்து மனதிற்குள் ஏதேதோ ஆசை தோன்றி என்னை ஆட்டுவிக்கிறது ஜனு.

இதுவரை நம்மிடையே என்ன வேண்டுமானாலும் நடந்திருக்கலாம். கோபம், மனவருத்தம் என்று பலதும்...

ஆனால் அதையெல்லாம் இப்போது, இந்த நிமிடம் ஒதுக்கி வைத்துவிடலாமே. ப்ளீஸ்...



இன்று முழுக்க நீ என்னுடன் இருக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். இதுதான் நான் உன்னிடம் கேட்கும் பரிசு. நிறைவேற்றுவதோ மறுப்பதோ உன்னிடம் தான் இருக்கிறது!" என்று மிக ஆழமான குரலிலே, நிதானமாகத் தெரிவித்தான் அவள் கணவன்.

கணவன் இன்றைக்கு இப்படிக் கேட்கக்கூடும் என்று, அவள் சற்றும் நினைக்கவில்லையே!

இதற்கு என்னவென்று பதிலளிப்பாள்?!

அவனிடமிருந்து தன் கையை உருவ முயன்றாலே போதும், அவளுக்கு விருப்பமில்லையென்பது புரிந்து விலகிப் போய்விடுவான் தான்.

யாரிடமும் இது வேண்டுமென்று கேட்டு, இவனுக்குப் பழக்கமில்லை என்பது நன்றாகத் தெரிந்தது.

இப்போது விட்டுவிட்டுப் பதிலுக்காகக் காத்திருக்கிறான்.

ஏனோ, அன்று அவளின் மனம் கணவனுக்காக இளகியதோ? இல்லை யென்றால் அவள் முகத்தில் புன்னகை பூத்திருக்க வழியில்லை.

நம்ப மாட்டாத பிரமிப்புத் தோன்ற, ஆவலுடன் மனைவியைக் கைகளிலே ஏந்தினான் மனுதர்மன்!

# 18

அடுத்து வந்த நாட்களில் எல்லாம் அவர்களின் வாழ்க்கை, ஆனந்தமுடனே தொடர்ந்தது.

இயல்பான கணவன் மனைவியின் கேலி, கிண்டலுடன் உற்சாகமாகவே சென்றது பொழுது.

இரவு உணவிற்குப் பிறகு, தோட்டத்து நடைபாதையில் உரையாடியவாறு நடப்பது, இருவருக்குமே பிடித்த விஷயமாயிற்று.

மனுதர்மனைத் தன் மனது ஏற்றுக்கொண்டுவிட்டதை நினைத்தால், இப்போதும் அவளுக்கு வியப்பாகவே இருந்தது!

சும்மா எடுத்தவுடனே இது நடந்துவிடவில்லை. மெல்ல மெல்லத்தான். ஆனாலும்...

எல்லாம் சரியாகிவிட்டதைப் போல் தோன்றினாலும், ஏனோ அது வெளிப்பார்வைக்கு மட்டும் தான் என்று சொல்லாமல் சொன்னது உள்ளம்.

இது சாதாரணமாக ஒரு தம்பதியரின் வாழ்க்கை முறையே தவிர, அன்யோன்யமானவர்களைப் போல, அவர்கள் கருத்தொருமித்து வாழவில்லை என்பது அவளுக்கு நிச்சயமாகத் தெரியும்.

இருந்தாலும்... ஊஹூம்... மேலும் மேலும் இதைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தால், இருக்கிற சந்தோஷமும் தொலைந்துதான் போகும்.



பதிலாக அலுவலக அறைக்குச் சென்று வேலையைப் பார்த்தாலாவது, நேரம் பயனுள்ள விதத்திலே செல்லும் என்றெண்ணியவள், அவ்வாறே செய்தாள்.

அப்படிப் பார்த்துப் பார்த்துச் செய்த வேலையின் மூலமாகவே, அவளின் அமைதி கெட்டதோடு, தலையிலே இடி விழக் காத்திருப்பதும் தெரியாது போனது!

எப்போதும் போல, முடிந்துபோன செக் புத்தகங்களை டேபிள் மீது வைத்தவன், முறுவலுடன் மனைவியின் கன்னத்தில் முத்தமிட்டுவிட்டு, "மாலையில் திரும்பிவர நேரமாகலாம் ஜானு!" என்றுரைத்துவிட்டுப் போனான் மனுதர்மன்.

அடுத்துவந்த ஒருவார காலமுமே, மாலையில் அவன் திரும்பிவரத் தாமதமானது.

என்னவென்று கேட்டவளிடம், 'ஆடிட்டிங் கணக்குகளைச் சரிபார்த்துக் கொண்டிருக்கிறோம்,' என்றான்.

அன்றைக்கு மற்ற வேலைகள் முடிந்துவிட, கணவனின் பர்சனல் செக் புக்கை எடுத்து, செலவினங்களில் பதிவு செய்ய ஆரம்பித்தவளின் நெற்றியைச் சுருங்க வைத்தன, வெறும் தொகை, இரண்டு பெரும் தொகை மட்டுமே எழுதப்பட்டிருந்த செக்குகளின் விவரங்கள்.

பெயர் எழுதப்படவேண்டிய இடத்திலே, வெறும் 'ஆர்' என்று மட்டும் குறிக்கப்பட்டிருந்தது.

முழுப் பெயரையும் எழுத ஆரம்பித்து, ஏதோ வேலையில் மறந்து விட்டிருப்பானோ என்று எண்ணி முடியாதவாறு, அடுத்தடுத்த இரண்டு செக் நம்பரிலுமே, 'ஆர்' மட்டும் தான் இருந்தது!

இது, யாருக்கு எந்தத் தேதியில், எந்த செக் நம்பரில், எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டது என்பதற்காக குறிப்பேடுதான்.

ஆனால் அசல் செக் கொடுத்தபோது, நிச்சயம் முழு பெயரையும் எழுதித்தானே கொடுத்திருப்பான்?!

அதை இந்தக் குறிப்பிலும் எழுதி வைக்க வேண்டியது தானே. எவ்வளவு நேரம் ஆகிவிடும்? இதற்கு முன்பு செய்ததில்லை என்று பல கேள்விகள் தோன்றின.

அடுத்த நாள்தான், அதுபற்றிக் கணவனிடம் கேட்க முடிந்தது அவளால்.

“வெறும் ‘ஆர்’ என்று மட்டும் எழுதியிருந்தால், நான் என்னவென்று கணக்கு வைப்பது மனோ. முழுப் பெயரும் என்னவென்று சொல்லுங்கள்,” என்றாள்.

அவன் முகத்தில் சின்னதாக, மிகச் சின்னதாக ஒருவிதத் திடுக்கிடும் உணர்வு தோன்றி மறைந்ததோ?

அல்லது அவளின் கற்பனையா?

“அப்போது ஏதாவது குறுக்கீடு நேர்ந்திருக்கும் ஜனும்மா. என்னவென்று பார்த்துவிட்டு உனக்குச் சொல்கிறேன்,” என்றான் கணவன்.

அவன் குரல் அவளை நம்ப வைத்தது.

நம்பினாள்.

அவள் தலையிலே இடி விழும் வரையும் நம்பினாள்.

‘குபேரன் பில்டர்ஸ்’ஸில் என்ன சம்பளம் வாங்கி னாளோ, அதே சம்பளத்தை இப்போதும் கொடுத்தான் ... கணவன்.



மேலும் ஒரு கவரைக் கொடுத்து, ‘இது உன் செலவிற்காக!’ என்றான்.

“முன்பு நீங்கள் கொடுத்ததே இருக்கிறது மனோ!” ... ு மறுத்தாள் மனைவி.

“பணம் கொடுப்பது செலவு செய்யத்தான் ஜனு. பூட்டி வைத்து அழகு பார்ப்பதற்கல்ல. இனியாவது இதை நினைவில் வைத்துக் கொள்!” என்று கிண்டலாகக் கூறி, அவள் கன்னத்தை வருடினான் கணவன்.

மறுதினம் அப்பா வீட்டிற்குச் சென்று நலம் விசாரித்து முடித்தவள், “இதைச் செலவிற்கு வைத்துக் கொள்ளுங்கள் அப்பா!” என்று தன் சம்பளத்தைக் கொடுக்க,

“உனக்கு ஏதும்மா இவ்வளவு பணம். மா... மாப்பிள்ளையிடமா வாங்கினாய்? இங்கே தருவதற்காகவா? இது தவறும்மா. திருப்பிக் கொடுத்துவிடு. இங்கே இருப் பதைக் கொண்டு சமாளித்துக் கொள்ளலாம்!” என்று மகளின் மனது நோகாத குரலில், ஆனால் உறுதியாகவே கூறினார் தந்தை.

“இதுதான் அப்பா என்பது!” என்று உள்ளூரப் பூரிக்க, “என்னப்பா திருமணத்திற்குப் பிறகு உங்கள் பெண்ணின் ‘மேல்மாடி’ காலியாகிப் போயிற்று என்று நினைக்கிறீர்களா?” என்று தன் தலையைத் தொட்டுக் காட்டி முறுவலுடனே கேட்டாள் மகள்.

“சேச்சே! நிச்சயமாக அப்பா அப்படி நினைக்கவே மாட்டார் அக்கா. இல்லாத ஒரு பொருள் காலியாகிப் போயிற்று என்று யாராவது நினைப்பார்களா? நீயே சொல்!” என்று, சத்தமில்லாமல் நின்று சாதுவாகக் கூறிவிட்டுக் ‘களுக்’ என்று சிரித்தாள் சிந்து.

"ஏய் வாயாடிக் கழுதை. என்னையே வாருகிறாயா" என்று எழுந்த ஜனார்த்தனி,

நாக்கை நீட்டி அழகு காட்டிவிட்டு, நில்லாமல் ஓடி முயன்ற தங்கையைப் பிடித்து, அவள் முதுகிலே செல்லமா இரண்டு அடிவைத்துவிட்டுச் சின்னவளை அணைத்து முத்தமிட்டாள்.

"என்ன பெண்ணடா நீ? திடீரென்று வந்து நின்று உண்மையைப் போட்டு உடைத்தால், பாவம் அக்கா மயங்கியேதும் விழுந்துவிட்டால் என்னாவது என்று யோசிக்க வேண்டாம்!" என்று, தன் பங்கிற்கு வாரினார் அப்பா.

"இப்போது நீங்களுமாப்பா!" என்ற போது மூவருக்குமே சிரிப்பை அடக்க இயலாமல் போயிற்று.

"ஹப்...பா! இப்படி அடக்கமாட்டால் சிரித்து எவ்வளவு நாளாகி விட்டது!" என்று, மூவரும் நினைத்ததை வெளிப்படை யாகக் கூறினாள் சின்னவள்.

"அது சரி. என்ன இவ்வளவு சீக்கிரமாகத் திரும்பி வந்து விட்டாய்? பள்ளிக்கு மட்டமேதும் போட்டுவிட்டாயா?"

"மாடல் எக்ஸ்ஸாம் நடக்கிறதுக்கா?" என்றபடி உட்பக்கமாகச் சென்றாள் சிந்து.

அப்பாவின் அருகேயமர்ந்து, "நான் வீட்டில் இருந்து வேலை செய்கிறேன் அப்பா. மனோவிற்கும் கஷ்டம் குறைந்திருக்கிறது. எனக்கும் பணம் கிடைக்கிறது. அதை இதை நீங்கள் தாராளமாக வாங்கிக்கொள்ளலாம்!" என்று கூறிவிட்டு, பீரோவில் வைத்துப் பூட்டினாள்.



"திருமணமானபிறகும், நீ இந்தக் குடும்பத்திற்காக உழைக்க வேண்டியிருக்கிறதேடா. நினைக்கும் போதே எனக்கு வருத்தமாக இருக்கிறது!" என்று, வாட்டமான குரலிலே கூறினார் பெற்றவர்.

"என்னப்பா நீங்கள்? என்னைப் படிக்க வைப்பதற்காக எவ்வளவு கஷ்டப்பட்டீர்கள். கூடவே இருந்து பார்த்து வளர்ந்தேனே. அந்தக் கடுமையான வயல் உழைப்புடன் என்னுடையதை ஒப்பிடக்கூட முடியாதே!" என்றாள் மகள்.

"படிக்க வைப்பது பெற்றோரின் கடமைடா!" என்றார்.

"சம்பாதித்துக் கொடுப்பது பிள்ளைகளின் கடமைப்பா!" என்று முறுவலித்தாள் மகள்.

"திருமணம் ஆகிறவரை சரிதான். இப்போதும் என்றால்... எனக்கு மனமே ஒப்பவில்லைம்மா."

"ஏம்பா?! திருமணமாகி இன்னொருவர் வீட்டிற்குப் போய்விட்டால், இங்கே உங்களிடம், எனக்கு உரிமையோ கடமையோ இல்லையா?" என்று கேட்ட மகளின் குரலில் என்ன இருந்தது?!

"சேச்சே! என்னடாம்மா இப்படிக் கேட்டுவிட்டாய்? இப்போதும் வேலை செய்கிறாயே என்ற ஆதங்கத்தில் நான் சொன்னால், நீ அதற்குப் போய் இப்படிக் கேட்பதா?" என்று மகளின் தலையை வருடிச் சமாதானம் செய்தார் பெற்றவர்.

பிறகே, மகளின் முகம் இயல்பிற்கு மாறியது!

தங்கையுடன் சேர்ந்து சில பல வேலைகளைச் செய்தவளுக்கு, நேரம் சென்றதே தெரியவில்லை.

தங்கை தயாரித்துக் கொண்டுவந்த 'டீ'யைப் பருகி முடித்த பிறகு, சில நிமிடத்திற்கெல்லாம், டிரைவர் காருடன் வந்துவிட, முறுவலுடன் தலையசைத்து விடைபெற்றுக் கொண்டு கிளம்பினாள் ஜனார்த்தனி.

அன்றிரவும் கணவன் வருவதற்குத் தாமதமாக, டீ.வி.யைப் போட்டுவிட்டு சோஃபாவில் சாய்ந்தவள், பிறகு அப்படியே தூங்கிவிட்டிருந்தாள்.

காலையில் கண் விழித்தபோது படுக்கையில் இருந்தாள்.

கணவன் ஜாகிங்கிற்குத் தயாராகிக் கொண்டு இருந்தான்.

மனைவியின் அசைவை உணர்ந்து திரும்பியவன், "காத்திருக்க வேண்டாம் என்றால் கேட்கமாட்டாயா ஜாது தினமும் இப்படி முடக்கிக்கொண்டு சோஃபாவில் படுத்தால் கழுத்து வலி வராதா? இனி அப்படிச் செய்யாதே" என்று செல்லக் கண்டிப்புடன் கூறிவிட்டு, மனைவியின் நெற்றியிலே முத்தமிட்டுச் சென்றான்.

செங்கமலமாக முகம் சிவக்க, மிக இதமாக இருந்த அந்த மனநிலையை, மேலும் சற்று நேரம் அனுபவித்து பிறகே, எழுந்து குளிக்கச் சென்றாள் ஜனார்த்தனி.

ஜாகிங்கை முடித்துவிட்டுத் திரும்பிய மனுதர்மன், வியர்வை அடங்குகிறவரை அமர்ந்து, அவளிடம் உரையாடவோ அல்லது பத்திரிகையைப் பார்க்கவோ செய்வான்.

கையிலிருந்த புத்தகத்தை மூடிவைத்துவிட்டு, எதிரே அமர்ந்த மனைவியிடம், "உன் அப்பா, சிந்து எப்படி யிருக்கிறார்கள்?" என்று விசாரித்தான்.



"ம், நலமாக இருக்கிறார்கள்!" என்று கூறியபோது, "நீ கொடுத்த பணத்தை வேண்டாமென்று மறுத் திருப்பாரே?" என்றான்.

"ஏ... எப்படித் தெரியும் மனோ?" என்று கேட்டவளிடம், "உன் அப்பாவின் மனநிலையை, அவரிடத்தில் இருந்து பார்த்தேன்!" என்றவன், "எல்லாம் சரியாகிவிடும் ஜானம்மா. நீ அதையே நினைத்துக் கொண்டிருக்க வேண்டாம்!" என்று கூறிவிட்டுக் குளிக்கச் சென்றான்.

அலுவலகம் செல்லத் தயாராகி வந்தவன், அவளிடம் செல்லக் கண்டிப்புடன் தலையசைத்து விடைபெற்றுச் சென்றான்.

அழகிய முறுவல் ஒன்று தோன்றி நிலைக்க, தன்னுடைய சில வேலைகளைச் செய்து முடித்தவளுக்கு, மேற்கொண்டு செய்ய எதுவுமில்லாது போனது.

எனவே, தைப்பதற்குக் கொடுக்க வேண்டுமென்று, எடுத்து வைத்திருந்த துணிகளை எடுத்துக்கொண்டு, தையற் கடைக்குச் சென்றாள்.

அந்தக் கடை இருக்கிற இடத்திற்குச் செல்ல வேண்டும் என்றால், சின்னதாக இருக்கும் குறுக்குச் சந்து ஒன்றைக் கடந்துதான் போக வேண்டும். காரில் செல்ல முடியாது.

டிரைவரிடம், "காரை இங்கேயே நிறுத்துங்கள். நான் பத்துப் பதினைந்து நிமிடத்தில் திரும்பி வந்து விடுவேன்," என்று கூறிவிட்டுப் பையுடன் சென்றாள்.

கடையிலே துணியைக் கொடுத்துத் தைக்கும் விதம் பற்றிக் கூறி, பில்லை வாங்கிக் கொண்டு திரும்பி வந்தாள்.

எதிரே காவியணிந்து பஜனை பாடியவாறு சின்னக் கும்பல் வரவும், அடுத்தடுத்த சந்தில் நுழைந்து பெரிய தெருவிற்குச் சென்றுவிடலாம் என்றெண்ணியவள், வேகமாக நடையை எட்டிப்போட்டுக் கடந்து, ஹப்...பா என்று மூச்சுவிட்டபோது தான் அதைக் கவனித்தாள்.

எதிரே, சற்று உட்புறமாக அமைந்திருந்த 'ஜூஸ் ஷாப்'பில், முதுகு காட்டியபடி அமர்ந்திருப்பது... அவளின் கணவன் மனுதர்மன் அல்லவா?

அவனேதான்!

அவனுக்கு எதிரே அமர்ந்திருக்கும் அவள், அவள் அந்த 'ரேஷ்மி?!'

மூச்சுவிடக் கூட மறந்தவளாக அப்படியே அதிர்ந்து போனாள் ஜனார்த்தனி!

# 19

கண் முன்னே பார்த்துக் கொண்டிருந்த காட்சி, அவளைத் தலைசுற்ற வைத்தது.

கீழே விழுந்துவிடுவோமோ என்ற பயத்திலேயே, அருகேயிருந்த சுவரைப் பிடித்துக்கொண்டு நின்றாள்.

அவளின் சக்தி யெல்லாம் சட்டென்று வடிந்து போயிற்றோ? கால்கள் அப்படியே தொய்ந்து மடிய



முற்பட்டன. பல்லைக் கடித்துக்கொண்டு பிடிவாதமுடன் நிமிர்ந்தபோது,

அவளின் கணவன், அந்த ரேஷ்மியின் கையைப் பற்றித் தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தான்!

அத்தோடு நில்லாமல், "நான் இருக்கும்போது நீ எதற்கும் கவலைப்பட வேண்டாம் ரேஷ்மி. முதலில் கண்களைத் துடைத்துக் கொள்!" என்று கூறியதும் காதில் விழுந்தது.

மனுதர்மன், இந்தளவிற்கு அயோக்கியத்தனமாக நடந்து கொள்ளக் கூடும் என்று, அவள் ஒருபோதும் நினைத்ததில்லையே!

துரோகி! நம்பிக்கைத் துரோகி!

இந்த ரேஷ்மியுடன் இன்னமும் தொடர்பு வைத்திருப்பான் என்று, அவளுக்கு சந்தேகிக்கக் கூடத் தோன்றாத வாறு, எவ்வளவு கவனமுடன் செயல்பட்டிருக்கிறான்.

ஒரு பக்கம் இவளுடன் கூத்தடித்துக் கொண்டேதான், மறுபக்கம் தன்னுடன் அப்படிக் குழைந்தானா?!

ஜனு, ஜனும்மா என்று, என்...ன... உருக்கமுடன் அழைத்துக் கெஞ்சினான்.

அத்தனையுமே வெறும் நடிப்புதானா?

கணவனுடனான குடும்ப வாழ்வை நினைத்தாலே, உடலெல்லாம் அவமானத்தால் கூசிப் போயிற்று.

அக்கம் பக்கத்தில் யாராவது பார்க்கக்கூடும் என்ற எண்ணம், அவர்களுக்குத் துளிகூட இருப்பதாகத் தெரியவில்லை!

இதற்கு மேல் நிற்பதற்கு, உடலிலும், மனதிலும் வலிமையில்லை அவளிடம்.

எப்படிக் காருக்குத் திரும்பி வந்தாள் என்பது அவளுக்கே தெரியவில்லை!

"என்னம்மா, உடம்பிற்கு ஏதும் முடியவில்லையா? டாக்டரிடம் போகலாமா?" என்று பதட்டமுடனே கேட்டார் டிரைவர்.

முகம் காட்டிக் கொடுத்துவிட்டது புரிந்தது.

"அதிக வெயில் என்பதால் வியர்த்துவிட்டது. வேறு ஒன்றுமில்லை!" என்று கூறிவிட்டு, வாட்டர் பாட்டிலை எடுத்துத் தண்ணீரைக் குடித்தாள்.

அப்படியே முகத்திலும் நீர் அடித்துக் கழுவிய பிறகுதான், கொஞ்சம் தெளிந்தாற் போலிருந்தது.

வீடு திரும்புகிற வழியெல்லாம், வெடித்து விடுகிற மாதிரி தலைவலி. கண்களை இறுக மூடிக்கொண்டு இருக்கையில் சாய்ந்து கொண்டாள் ஜனார்த்தனி.

கைகளின் மேல் வெதுவெதுப்பான நீர் படவும், சட்டென்று கண்களைத் திறந்தாள்.

வெதுவெதுப்பான கண்ணீர்த் துளிகள்!

அழுதாளா! அவளா?

கொஞ்சமும் தகுதியற்ற அந்த நயவஞ்சகனுக்காகவா?

சீச்சீ! என்ன கேவலம்!

இந்த அளவிற்கா அவள் பலவீனமாகிவிட்டாள்?



புன்னகையோ? கண்ணீரோ? இவையிரண்டும் தகுதியில்லாதவர்களுக்காக வெளிப்படக் கூடாது என்று அம்மா சொல்வார்களே!

அம்மா!

மனித உயிர்களின் மிகப் பெரிய சக்தி!

அந்த அம்மா மட்டும் உயிருடன் இருந்திருந்தால், அவள் இந்த ஊருக்கே வந்திருக்க மாட்டாளே!

இங்கே வராது இருந்திருந்தால், ஒருவேளை இந்த வஞ்சகனை மணக்க வேண்டி நேர்ந்திருக்காதோ?

ஆனால், இதையெல்லாம் இப்போது நினைத்து ஒரு பயனும் இல்லையே.

ஒழுக்கத்திலேயே அவன் என்ன லட்சணம் என்பதைத்தான், சென்னையில் கண்கூடாகவே கண்டாளே!

தெரிந்தபோதும் மணக்க நேர்ந்தது அவளின் துர்பாக்கியமே அன்றி வேறென்ன சொல்ல முடியும்.

ரேஷ்மியுடனான உறவைக் கணவன் மீண்டும் தொடரக்கூடும் என்று, ஒருமுறைகூட அவள் நினைக்கவே இல்லையே!

மீண்டும் தொடங்கினார்களா? அல்லது பழைய உறவை விடவே இல்லையா?

ரேஷ்மியுடன் ஆதரவு இருக்கிற திமிரில்தான், தன்னுடைய முகத் திருப்பலைப் பெரிதாக நினைக்காமல் அசட்டையாக இருந்தானோ?

அப்படித்தான் இருக்க வேண்டும்.

ஆனால் அப்படியேயாவது இருந்து தொலை திருக்கக் கூடாதா?

பிறந்தநாளைச் சாக்காக வைத்து அவளை ஏ ஏய்க்க வேண்டும்?

என்னவோ அவளை நினைத்து உருக்க் கொண் டிருப்பது போல, அன்றைக்கு அப்படிப் பேசினானே!

அவன் கண்களிலும், குரலிலும் வெளிப்பட்ட ஆத மென்மை, உருக்கம் எல்லாமே, வெறும் நடிப்பு என்பது புரிந்துகொண்டாலும்,

நம்புவதற்கு இப்போதும் கூடக் கஷ்டமாகத்தா இருக்கிறது.

பிறந்த நாளை முன் நிறுத்தி நூல் வி பார்த்திருக்கிறான்.

நம்பி ஏமாந்துவிட்டாள். கண்களால் பார்க்கிறவ ஏமாந்து கொண்டேதான் இருந்திருக்கிறாள்.

வீட்டை அடைந்து, தங்களின் அறைக்கு வ சோஃபாவில் விழுந்தவளுக்கு, எல்லாமே வெறுமை விட்டதைப் போல் தோன்றியது.

ஆசை அறுபது நாள் என்றெல்லாம் சொல்வார் அதுகூடவா அவள் விஷயத்தில் பொய்த்துப் போ வேண்டும்.

இன்று காலையில் கண் விழித்தபோது க முத்தமிட்டதும், கிளம்பியபோது கண்சிமிட்டிச் சிரித்த

இனி அதுமாதிரியெல்லாம் எதுவுமே, அவள் வாழ் இருக்கப் போவதில்லை என்று நினைக்கும் போதே, கண் மடைதிறக்க, கன்னங்களில் நீர் வழிந்தது.



தன்னை இங்கே வேதனையில் துடிக்க வைத்துவிட்டு, அந்த ரேஷ்மியிடம், 'நான் இருக்கும் போது, எதற்குக் கவலைப்படுகிறாயாம்?'

இனி அவள் ஏன் கவலைப்படப் போகிறாள்?

வருடிக் கொடுத்துத் தைரியமூட்டுவதோடு, அவன் லட்சம் லட்சமாக செக் வெட்டுகிறானே!

வெறும் 'ஆர்' மட்டும் குறிக்கப்பட்டிருந்த, இரண்டு பெரிய தொகைக்கான 'செக்' விளக்கம், 'ரேஷ்மி' என்பது இப்போதுதானே புரிகிறது.

அதுபற்றிக் கேட்டபோது, கொஞ்சம் திடுக்கிட்டதைப் போல் தெரிந்தானே. அப்போதே சந்தேகித்திருக்க வேண் டுமோ?

இவன் கண்டவளுடனும் சுற்றிவிட்டு வீடு திரும்ப, தான் காத்திருந்ததெல்லாம் எவ்வளவு மடத்தனம்!

உள்ளூர எவ்வளவு ஏளனமாக வெல்லாம் நினைத்தானோ?

நெருப்பின் மேல் நிற்பதுபோலத் தகித்தது அவளுக்கு.

ஒருவேளை, நூறில் ஒரு வாய்ப்பாக இந்த விஷயத் திற்கு, வேறு விளக்கம் ஏதாவது இருக்கக் கூடுமோ?

ஒரே ஒருமுறை இப்படி நினைத்துவிட்டு, அதற்காகத் தன்னைத்தானே மட்டி என்று திட்டியும் கொண்டாள் ஊர்த்தனி.

கண்கூடாகவே பார்த்த பிறகும் இப்படி நினைத்தால், அவளை வேறு எப்படிச் சொல்ல முடியும்.

இருந்தாலுமே ஒரு முயற்சியாகக் கணவனுக்கு ஃபோன் செய்து, 'இன்றைக்கும் வீடு திரும்ப நேரமாகுமா?' என்று கேட்டுப் பார்த்தால் என்ன?

குறைந்தபட்சமாக, இப்போது எங்கேயிருக்கிறீர்கள் என்றாவது...

அவள் நம்பரைப் பார்த்ததும் உடனே ஆன் செய்து, "என்ன ஜானு. ஏதாவது முக்கியமான விஷயமாடா?" என்று, அவ்...வளவு அக்கறையும் அன்புமாகக் கேட்கவும்,

அவளுக்குத் தான் கேட்க நினைத்ததே மறந்துவிடும் போலானது!

இருக்கட்டும். இன்னும் எத்தனை நாளைக்குத்தான் இந்தக் கெட்டிக்காரத்தனம் என்று பார்க்கலாம்.

எதிர்பார்த்தது போலவே, "நிற்க நேரமில்லாத அளவிற்கு வேலைம்மா!" என்று தான் பதில் வந்தது.

வேலையாம் வேலை. உன் வேலை என்னவென்று, எனக்கு நன்றாகவே தெரியுமடா ஏமாற்றுக்காரா என்று, அவன் சட்டையைப் பிடித்து உலுக்க வேண்டும் போல ஆத்திரம் வந்தது அவளுக்கு.

அடுத்தென்ன செய்வது என்று, யோசித்துதான் முடிவு பண்ண வேண்டும். அதுவரை... எதுவும் தெரியாத மாதிரி பொறுமையுடன் இருப்பதுதான் சரி.

ஆனால், அடுத்தென்ன செய்யப் போகிறோம் என்பது பற்றி, அவ்வளவு லேசில் எதுவும் தோன்றுவதாகத் தெரியவில்லையே!

பலதையும் நினைத்துப் பார்த்துவிட்டு, அப்படியே சோர்வுடனே சோஃபாவில் சாய்ந்து கண்களை மூடினாள்.



எவ்வளவு நேரம் தூங்கினாளோ?

அறையினுள்ளே மனுதர்மன் வந்தது கூடத் தெரியவில்லை.

'தினமும் சொல்ல வேண்டுமா?' என்று நினைத்த போதும், மனைவியின் அருகே சென்று, அவள் விழித்துக் கொள்ளாதவாறு கைகளிலே ஏந்திக்கொண்டு, அடுத்திருந்த அறையை நோக்கிச் சென்றான்.

சற்று தூரமே அவன் சென்றிருந்தபோது, தூக்கத்தின் இடையே ஜனார்த்தனியின் முகம், கணவனின் தோள் பகுதியில் சாய்ந்து அழுந்த, அந்த ஸ்பரிசம் சட்டென்று அவளை விழிப்படையச் செய்தது.

என்ன தைரியமிருந்தால் அவளைத் தொட்டுத் தூக்கிச் செல்வான். சீ!

பிடிவாதமான மனதுடன், அவன் கைகளில் இருந்து துள்ளிக் குதித்தபடி கீழேயிறங்கினாள்.

சற்றும் எதிர்பாராத விதமாக மனைவி இப்படிச் செய்ததோடு, எட்ட நின்று அருவருப்புடன் முகம் திருப்பிய போதும் கூட, அவன் பெரிதாக எதுவும் எண்ணாமல்,

"என்னடா. கனவு ஏதாவது கண்டாயா? பிடிக்காத கனவா?" என்று பரிவுடன் தான் கேட்டான்.

கனவா? அவள் கண்களால் கண்டது எல்லாம், வெறும் கெட்ட கனவாக இருந்திருந்தால் எவ்வளவோ நன்றாக இருந்திருக்கும்தான். ஹ்ஹ்...ம்.

ஆனால் அதற்குத்தான் வழியே யில்லாமல், அத்தனையும் நிஜமாயிற்றே!

இப்படி ஏக்கமுடன் நினைப்பது, திரும்பத் திரும்ப அவளின் மடத்தனத்தைத்தானே காட்டுகிறது.

"பயந்துவிட்டாயா ஜனு. நன்றாகத் தூங்கினால் எல்லாம் சரியாகிப் போகும்மா. வா!" என்று, மென்மையாகக் கூறியபடி கணவன் அருகே வரவும்,

மேலும் இரண்டடி விலகிச் சென்றவளின் முகம், அப்பட்டமாக அவளின் மனதைக் காட்ட, "போதும். உங்களின் நடிப்புத் திறமை இனிமேல் செல்லுபடியாகாது. எல்லாவற்றையும் இத்துடன் நிறுத்திக் கொள்ளுங்கள்!" என்று வெறுப்புடன் கூறிவிட்டு, 'படார்' என்று கதவை அறைந்து சாத்திக்கொண்டாள்.

நடிப்புத் திறமையா? அவனுடைய அன்பை இப்படிச் சொல்ல வேண்டுமானால், அவளுக்கு எவ்வளவு தீர் இருக்க வேண்டும். அதுவும் இப்போ...து.

முகத்திலேயே அறைவது போல் அல்லவா கதவைச் சாத்துகிறாள்?

பழைய ஜனார்த்தனி திரும்புகிறாளாக்கும்!

எஃகிரும்பாக முதுகு விரைக்க, 'கதவைத் திற ஜனார்த்தனி!' என்றான் ஆத்திரமாக.

பதில் இல்லை.

பலமாக ஓங்கித்தட்டி, "ஏன் இப்படிப் பேசினாய் என்ற எனக்குத் தெரிய வேண்டும் ஜனார்த்தனி. வெளியே வா!" என்றான் மீண்டும்.




"உங்கள் மனச்சாட்சியிடம் கேட்டுப் பாருங்கள், காரணம் சொல்லும். அதாவது மனச்சாட்சி என்று ஒன்று இருந்தால்..." என்றாள் கொதிப்புடன்.

மனச்சாட்சி இல்லாதவனா? அவனா?

இவள் பாட்டில் உளறிக்கொண்டே இருந்தால், அவன் வேறு வழியின்றிக் கேட்டுக்கொண்டே இருக்க வேண்டியது தானா?

"வார்த்தைகளை இறைக்காதே ஜனார்த்தனி. திரும்பப் பெறமுடியாது!" என்றான் எச்சரிப்பதுபோல.

"நல்லது. திரும்பப் பெறமுடியவில்லையே என்று, ஒருபோதும் நான் வருத்தப்படப் போவதில்லை. அத்தோடு, இனி உங்களுடன் பேசுவதற்கும் எனக்கு ஒன்றுமில்லை!" என்று ஏகத்தாளமாகவே பதில் வந்தது.

கதவைப் பூட்டிக்கொண்டு, என்ன அழிச்சாட்டியம் பண்ணுகிறாள்?!

இந்தக் கதவை உடைத்தெறிந்துவிட்டு உள்ளேபோக, அவனுக்கு எவ்வளவு நேரமாகிவிடும் என்று யோசிக்க வேண்டாமா?

காரணம் தெரியாமல் தண்டிக்கப்படும்போது, மனிதனுக்கு எவ்வளவு ஆத்திரம் வரும் என்பதை, அவனைப் பார்த்தால் நன்றாகவே தெரிந்து கொள்ளலாம்!

ஆத்திரம் தாங்காமல், தரையை ஓங்கி உதைத்து விட்டுக் கணவன் திரும்பிச் செல்வது நன்றாகவே தெரிந்தது அவளுக்கு.

# 20

இரவு முழுக்கப் பொட்டுத் தூக்கமின்றி விழித்திருந்தவர்களுக்கு, மறுநாள் விடியலும் சுகப்படவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

எப்படிச் சுகப்படும்?!

வழக்கத்தை விடத் தாமதமாகவே எழுந்து வெளியே வந்தாள் ஜனார்த்தனி.

இறுகிய முகத்துடன் சோஃபாவில் அமர்ந்திருந்த கணவனைப் பார்க்கத் துளியும் விருப்பமில்லை அவளுக்கு.

அவனோ, "ம். பரவாயில்லையே! பூட்டிய அறைக்குள்ளேயே எப்போதும் இருந்துவிட முடியாது என்பது, புரிந்துவிட்டது போலிருக்கிறது!" என்றான் ஏளனமாக.

'சுள்'ளென்று தோன்றிய கோபமுடன், "உங்களுடன் பேசுவதற்கு எனக்கு ஒன்றுமேயில்லை என்று சொன்னது, தலைக்குள்ளே போகவில்லை போல!" என்றாள்.

"ஏன் போகவில்லை? எல்லாம் நன்றாகவே வந்து சேர்ந்திருக்கிறது. ஆனால் உன் உளறல்களை, நான் அப்படியே ஏற்க வேண்டிய அவசியம் ஏதுமில்லை என்பது தான் விஷயம்!" என்றான் அவன்.

அவள் உளறினாளாமா? ஏன் சொல்லமாட்டான்?

வெட்டென முகத்தைத் திருப்பிக் கொண்டவளைப் பார்த்து, "சும்மா சும்மா இப்படி முகத்தைத் திருப்பாதே ஜனார்த்தனி. எனக்கு ரொம்பவே கஷ்டமாக இருக்கிறது.



...ரிய பெரிய வார்த்தைகளை எல்லாம், ரொம்பவும் ...ரணமாகப் பயன்படுத்துகிறாய். நீ இப்படியெல்லாம் ...வதற்குக் காரணம் கேட்டால், மனச்சாட்சியிடம் கேள் ...கிறாய். நான் என்னவென்று நினைப்பது?

எதையும் வெளிப்படையாகப் பேசினால் தானே தீர்வு ...டைக்கும்!" என்றான் மனுதர்மன்.

'வெளிப்படையாகப் பேசினால் அப்போது தெரியும். ...ந்த முகத்தைப் பிறகு எங்கே கொண்டுபோய் வைத்துக் ...ள்வாய் என்று!' என அவள் நினைத்தபோது, 'டீபாய்' ...ல் இருந்த அவனுடைய செல்ஃபோன் அழைக்க, அதிலே ...ன்னியது, 'ஆர்' என்ற ஆங்கில ஒற்றை எழுத்து மட்டும்!

அப்படியே அந்த செல்லை எடுத்து, சுவரிலே அடித்து ...நொறுக்க வேண்டும் போல் தோன்றியது அவளுக்கு!

வேகமாக எடுத்து 'ஆன்' செய்தபடியே, அறையை அடுத்திருந்த 'பால்கனி'க்குச் சென்றான் அவன்.

அப்பப்...பா என்ன வேகம்! ஃபோன் வந்ததும் பேசிக் கொண்டிருந்த விஷயமும், ஆளும் இரண்டாம்பட்சமாகி ...விட்டார்கள். அப்படித்தானே?

இந்த விஷயத்தை இப்படியே விடக்கூடாதா?

"ஓ! தேங்க் காட். இனி எல்லாம் உன் விருப்பம் போல, நல்லபடியாக நடக்கும் ரேஷ்மி. உன் விஷயம் பற்றி நான் பாட்டியுடன் பேசி முடித்துவிட்டேன். தாராளமாக உன்னுடைய விருப்பப்படி செய்துகொள் என்று சொல்லி விட்டார்கள். சந்தோஷம் தானே?" என்று பேசிமுடித்து

விட்டுத் திரும்பிய மனுதர்மன், அங்கே காதில் விழுகிற தொலைவிலே, மனைவி நிற்பதைக் கண்டு முகம் சுழித்து,

"இதென்ன பழக்கம் ஜனா, பின்னாலிருந்து கேட்டுக்கொண்டு?" என்று எரிச்சலுடன் கேட்டான்.

ஆகக் கணவனின் இந்த கேவலமான போக்கிற்கு, அந்தப் பாட்டியம்மாவின் முழு ஆதரவும் இருக்கிறது!

உன் விருப்பப்படி தாரா...ளமாக, என்ன வேண்டுமானாலும் செய்துகொள் என்று சொல்லிவிட்டார்களாமே!

என்ன கேவலமான பிறவிகள்!

ஒழுக்கம் கெட்ட பேரனுக்கேற்ற பாட்டி.

இருக்கட்டும். அந்தம்மாவையும் அவள் சும்மா விடப் போவதில்லை.

"தேவையென்று வரும்போது, யார் பேசுவதையும் கேட்டுத்தான் ஆகவேண்டும். ஆமாம் ஃபோனில் பேசியது யார்? சென்னையில் உங்களின் தோளில் சாய்ந்துகொண்டு போனாளே, அந்த ரேஷ்மி தானே.

அங்கே கூத்தடித்ததெல்லாம் போதாதென்றுதான், இங்கேயும் வரவழைத்தீர்களோ?" என்று இகழ்ச்சியாகக் கேட்டாள்.

பார்வை கூர்மையான போதும், நெற்றியை நீவிய படியே, "என்னையும், ரேஷ்மியையும் சேர்த்து எங்கேயாவது பார்த்தாயா? சந்தேகப்பட்டுத்தான் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறாயா?" என்றான்.



"ம். கண்கள் குளிரப் பார்த்தேன். நேற்றுதான். ஆமாம், அவளை எங்கே தங்க வைத்திருக்கிறீர்கள்? ஓட்டல் ரூமா? தனி வீடு ஏதுமா?" என்றாள் உதட்டோரம் வளைய.

"இந்தப் பேச்சு உனக்குத் தகுதியில்லை ஜனா. உன்னைத் தரம் தாழ்த்திக் கொள்ளாதே!" என்று பல்லைக் கடித்தான்.

"என் தரமெல்லாம் சரியாகத்தான் இருக்கிறது. நீங்கள் தான் தராதரமின்றித் தரங்கெட்டவளுடன், ஊர் பார்க்கச் சுற்றுகிறீர்கள்!" என்றாள் ஆத்திரமாக.

"அடுத்தொரு பெண்ணைப் பற்றி இப்படிப் பேச, உனக்கு எந்...த உரிமையும் இல்லை. அதை முதலில் தெரிந்துகொள்!" என்று கடுமையாகக் கூறினான் கணவன்.

"அவளைச் சொன்னால் ரொம்பவும் தான் சுடுகிறதோ. அந்தளவிற்கு அவள் முக்கியமாகிவிட்டாளா?" என்றாள் கொதிப்புடன்.

மனுதர்மனுக்கு வெறுத்து விட்டிருந்ததோ?!

"ஆமா...ம்! அவள் எனக்கு முக்கியம்தான்!" என்று, 'சுள்'ளென்று தோன்றிய கோபத்துடனே, முகத்திலடிப்பது போல் கூறிவிட்டு, வேகமாகக் கீழேயிறங்கித் தோட்டத்தை நோக்கிச் சென்றான்.

பிரமிப்புடன் அப்படியே நின்றுவிட்டாள் ஜனார்த்தனி.

கணவன் தன்னிடமே இப்படி கூறக் கூடுமென்று, அவள் நினைக்கவே இல்லையே!

எவ்வளவு ஆணவத்துடன் கூறிவிட்டுப் போகிறான்.

எல்லாம், என்னைக் கேட்க யார் இருக்கிறார்கள் என்ற அகம்பாவம்.

கேட்க வேண்டிய பாட்டியம்மாவே 'பச்சைக் கொடி' காட்டினால், எல்லாம் மாறத்தான் செய்யும்.

பெயரைப் பார் - பராசக்தி என்று!

தன் சுண்டு விரல் நுனியில், மற்றவரை ஆட்டி வைத்தே பழக்கப்பட்ட பராசக்தி.

முக்கியமாகத் தன் கணவரிடம், எப்படி ஆதிக்கம் செலுத்துவார் என்பது அவள் அறியாததா?

அவர்கள் செய்த காரியத்திற்கு...

சற்றும் தணியாத கோபமுடன் நேரே பாட்டியின் பகுதிக்குச் சென்று, 'நீங்களும் ஒரு பெரிய மனுஷியா? கண்ட கீழ்த்தரமான விஷயத்தில் எல்லாம் அவருக்கு ஆதரவளிக்க, உங்களுக்குக் கேவலமாக இல்லை?' என்று எடுத்தெறிந்து கத்திப் பேசினாள்.

காட்டுக் கத்தல்!

பணிப்பெண் ஓடிவந்து தயக்கமுடன் பார்க்க,

"கதவைச் சாத்திவிட்டுப் போ கல்யாணி!" என்று, தன் கம்பீரக் குரலில் பெரியவர் கூறவும், அவ்வாறே செய்துவிட்டுப் போனாள் கல்யாணி.

"கேவலமானவளிடம் சண்டை போட வந்த நியாயவாதிக்குப் பணியாட்கள் காதில் வீட்டு விஷயம் விழாத படி, கதவைச் சாத்த வேண்டுமென்று தோன்றவில்லை போலிருக்கிறது.



இன்னும் பிறந்த இடத்தின் நடுமட்டப்பழக்கங்களும் மாறவில்லை. இதற்குத்தான் உன் சகவாசம் வேண்டாமடா என்று அவனிடம் சொன்னேன். கேட்டானா? இப்போது அவஸ்தைப்படுகிறான். படட்டும். பட்டால்தானே புத்தி வரும்!" என்று, தெள்ளத் தெளிவான அலுப்போடு பேசினார் பராசக்தி.

நடு மட்டம்! அவஸ்தைப் படுகிறானாமா அவன்?!

"ஓ! உங்கள் பேரன் படும் அவஸ்தையைப் பார்க்க முடியாமல்தான், அந்த ரேஷ்மியோடு ஊர் சுற்ற அனுமதி வழங்கினீர்கள் போல?" என்றாள் எகத்தாளமாக.

"என்னது ரேஷ்மி... ரேஷ்மியோடு சுற்றுகிறானா? ம்... சுற்றச் சொன்னது நானல்லடி பெண்ணே. ஆனால், பேரப் பிள்ளைக்கு இந்...தளவிற்குப் புத்தியிருக்கிறதே. பிழைத்துக் கொள்வான்!" என்று திருப்தியாகக் கூறி, மர்மமாகப் புன்னகைத்தார் பராசக்தி.

அப்படியே பற்றிக் கொண்டு வந்தது அவளுக்கு.

இந்த வயதிலும் கூடப் பணக்காரத் திமிர் குறைய வில்லையே!

"உங்களைப் போலக் கேடுகெட்ட ஒரு பிறவியை, இதுவரை நான் பார்த்ததில்லை. என்ன ஜென்மம் நீங்கள். உங்களையெல்லாம் என்னவென்று சொல்வது. சீச்சீ!" என்று வெறுப்புடன் ஜனார்த்தனி கூற,

அதே வேளையில் கதவைத் திறந்துகொண்டு, கடுங்கோபத்துடன் உள்ளே வந்து, "என்னடி சொன்னாய்? பாட்டி வயதில்... பெரியவர்கள் என்ற மரியாதை கூட

இன்னமும் கணவனுடன் பேசுவதற்கு விஷயமிருந்த போதும், பாட்டியைப் பார்க்க வேண்டும் என்று தோன்றியது அவளுக்கு.

அவளின் முகம் பார்த்து யூகித்தவனாகக் கீழே அழைத்துச் சென்றபோதும், உள்ளே போகாமல், மனைவியின் தோளில் தட்டிக் கொடுத்து, 'நீ போ!' என்று கூறினான்.

கதவை மெல்லத் தட்டித் திறந்துகொண்டு உள்ளே சென்றவள், ஏதோ பலத்த யோசனையில் இருப்பது போல, தன் சாய்வு நாற்காலியிலேயே அமர்ந்திருந்த பாட்டியைப் பார்த்தாள்.

அவர்கள் இன்னமும் இவளைக் கவனிக்கவில்லை!

அல்லது... கவனித்துப் பார்க்கப் பிடிக்கவில்லையோ? கணவன் சும்மா அவளைத் தேற்றுவதற்காகத்தான், 'பாட்டி நிச்சயம் மன்னிப்பார்கள்!' என்று கூறினானோ?

நினைவே அவள் கண்களைப் பனிக்க வைத்தது.

அப்போது எதேச்சையாகத் திரும்பிய பராசக்தி அம்மாவின் விழிகள் விரிந்தன!

தன் கையை நீட்டி 'வா' என்று சைகை செய்தார் பாட்டியம்மா! புன்னகையோடுதான்!

ஓடிச்சென்று அவரின் கைகளைப் பற்றிக்கொண்டு மண்டியிட்டு அமர்ந்தவள், "நான் செய்த எல்லாத் தவறுகளுக்காகவும், என்னை மன்னித்துவிடுங்கள் பாட்டி!" என்று கண்ணீருடன் தொண்டையடைக்க வேண்டினாள்.



பரிவோடு அவள் தலையை நீவி, "உன் தவறுகளுக்குத் தான் சரியான காரணமிருக்கிறதே. அதனால் பெரிதுபடுத்தாமல் விடுகிறேன்.

ஆனால், பரிபூரணமாக மன்னிக்க வேண்டுமானால், நீ கையிலே பிள்ளையுடன் வரவேண்டும். புரிந்ததா?" என்று பாட்டி கூற,

அழகாக முகம் சிவந்தாள் ஜனார்த்தனி.

அவளை எழுப்பி, அருகே யிருந்த ஒற்றை சோஃபாவிலே அமர வைத்து, "ஆமாம். உன் புருஷன் எங்கே? காவல்காரன் போல வெளியே நின்றுகொண்டு இருக்கிறானா? வரச்சொல்!" என்றார் இலகுவாக.

'மனோ!' என்ற மனைவியின் அழைப்பையடுத்து, உள்ளே வந்தவனின் முகத்திலே இளநகை ஒன்று தோன்ற, மனைவியை ஒட்டி அதே ஒற்றை சோஃபாவின், கைப் பகுதியிலே அமர்ந்தான் மனுதர்மன்.

பாட்டியின் புன்னகை மேலும் பிரகாசமாக, "என்னடா! உன் கழுத்து நெரிபடாமல் தப்பிவிட்டது போலிருக்கிறது!" என்றார் கிண்டலாக.

கேலியும், கிண்டலுமாகச் சற்றுநேரம் கழிய, "இன்றைய இதே ஒற்றுமையுடனும், புரிதலுடனும், என்றைக்கும் மகிழ்ந்திருங்கள்!" என்று மனதாரக் கூறி அனுப்பி வைத்தார் பாட்டி.

இருவரும் மீண்டும் மாடிக்குச் சென்றபோது, எல்லாவற்றிற்கும் மறைமுகக் காரணகர்த்தாவான, ரேஷ்மியிடமிருந்து ஃபோன் வந்தது.

ஃபோனை ஸ்பீக்கரில் போட்டுவிட்டு, மனைவியைப் பார்த்துக் கண் சிமிட்டியவன், அவளைத் தன் கை வளையத்திற்குள் கொணர்ந்தான்.

"ஹலோ தர்மா. வீனஸ் கிட்டத்தட்ட குணமாகிவிட்டார். உங்களைப் பார்த்துப் பேச வேண்டும் என்கிறார். உங்களுக்கு எப்போது நேரமிருக்கும் என்று சொல்கிறீர்களா?" என்று கேட்டது ரேஷ்மி.

"உன் கணவருக்கு முழுக்க குணமாகட்டும் ரேஷ்மி. ஏனென்றால், தொடர்ந்து நிறைய வேலை செய்ய வேண்டியிருக்கிறது. ஒரு பத்து நாட்களுக்குப் பிறகு, நானே அழைக்கிறேன் என்று வீனஸிடம் சொல்லிவிடு. பை!" என்று கூறித் தொடர்பைத் துண்டித்தான் மனுதர்மன்.

"அவள் கணவருக்கு என்னவாயிற்று மனோ?"

"பெரும்புள்ளி ஒருவரை நம்பி, நிறையப் பணத்தை ஏமாந்துவிட்டார்கள். தொழிலை இழுத்து மூட வேண்டிய நிலை. மனிதருக்கு 'அட்டாக்'கே வந்து நிலைமை மோசமாகிவிட்டது.

ஒரு பக்கம் வீனஸ், மறுபக்கம் கடன் கொடுத்தவர்கள் என்று நெருக்கடியான நேரத்தில்தான், ரேஷ்மி என்னைத் தேடி வந்து உதவி கேட்டது.

நான் பாட்டியுடன் பேசிவிட்டுத் தொழிலிலே உதவி செய்வதாகக் கூறினேன். அதற்கு முன்பாகவே கொஞ்சம், கொஞ்சம் நிறையவே பண உதவியும் செய்தேன்!" என்று தெரிவித்தான் கணவன்.

"இது எல்லாம் சரிதான். அன்றைக்குச் சென்னையிலே, ரேஷ்மியை அழைத்துக்கொண்டு அவ்வளவு வேகமாக வெளியேறினீர்களே! புன்னகையும் ஆறாக ஓடியதே! பிறகு



ஏன் 'எதுவுமே' நடக்கவில்லை?" என்று நேரிடையாகவே கேட்டாள் மனைவி.

"நல்ல மனைவி! யாரும் புருஷனிடம், இப்படியொரு கேள்வியை இதுவரை கேட்டிருக்க மாட்டார்கள்!" என்று கேலியாகக் கூறியவன், "எல்லாம் உன்னைப் பார்த்ததால்தான். ரேஷ்மி எப்படிப்பட்ட அழகியென்பது உனக்கே தெரியும். ஆனால் அவளை வேண்டாம் என்று என் மனம் ஒதுக்குகிறது என்றால், நீ அங்கே நிலைத்துவிட்டாய் என்பது புரிந்தது. அதனால் வந்த புன்னகைதான் அது.

அவளை வேக வேகமாக வெளியே அழைத்துச் சென்று அனுப்பிவிட்டு வந்தால், அதற்குள் நீ காணாமல் போயிருந்தால், மனது என்னமாகத் தவித்துப் போயிற்று தெரியுமா?

மீண்டும் இங்கே பார்த்தபோது, நீ ரொம்பவே அலட்சியமாக நடந்துகொண்டாய். "துஷ்டனைக் கண்டால் தூர விலகிவிடுவது நல்லது என்றாயே?

அன்றைக்குத் தோன்றியது, விலகிப் போவதுதான் துஷ்டனான எனக்குமே நல்லதென்று.

ஆனால் ஆசை எங்கேவிட்டது! அது ஒரேயடியாக உன்னிடம் அடிமையாவதில்தானே குறியாக இருந்தது.

உன்னை மணந்தால், பெரிதாகக் காதல் வாழ்க்கையை எதிர்பார்க்க முடியாது என்பது, சர்வ நிச்சயமாகத் தெரிந்த போதிலுமே, உன்னை விட்டுவிடவோ, விலகிப் போய்விடவோ வேண்டுமென்று, எனக்கு உறுதியாகத் தோன்றியதேயில்லை ஜானு. அந்தளவிற்கு நீ என்னைக் கட்டிப் போட்டிருந்தாய்!

இல்லாது போய்விட்டதா?" என்று, மனைவியின் கன்னத்தில் 'பளார்' என அறைந்தான் மனுதர்மன்.

அன்று வரை அவள் அறிந்திராத மனுதர்மன்!

"எவ்வளவு திமிர் இருந்தால், பாட்டியின் முன்னே நின்று அவர்களையே அவமதித்துப் பேசுவாய். என்ன தெரியும் உனக்கு? முதலில் அவர்களிடம் மன்னிப்புக் கேள்!" என்று கர்ஜித்தான் அவன்.

விழுந்த அறையில், அவளுக்கு எல்லாமே திகைப் பாகித்தான் போயிற்று!

அத்தோடு, வயதிற்குரிய மரியாதையைக் கூடக் கொடுக்காது பேசியது பெரும் பிழைதானே!

தன்னுடைய தவறை உணர்ந்து, 'மன்னித்து விடுங்கள்' என்று தலைகுனிந்து கூறிவிட்டு வெளியேறினாள்.

பேரன் மனைவியின் நடையில், என்றுமில்லாத தடுமாற்றத்தைக் கண்டு, 'பெண் என்றும் பாராமல், இப்படித் தான் உன்னிஷ்டத்திற்குக் கை நீட்டுவதாடா? எங்கிருந்து கற்றாய் இதையெல்லாம்?' என்று சாடினார் பராசக்தி.

"தப்பேயில்லை பாட்டி. இப்போதெல்லாம் இவளின் வார்த்தைகள், அளவு மீறிக் கொண்டிருப்பதாகத்தான் நினைத்தேன். இன்று உங்களிடமே எனவும்தான்... தாங்க வில்லை!" என்றான் பேரன்.

"விடுடா. உன் மீது கொண்ட அன்பினால்தானே. இப்படியெல்லாம் கோபப்பட்டுப் பேசிவிட்டாள்."



"அன்...பா!" என்றவன், "நானென்றால் தான் இப்போது அவளுக்கு வேப்பங்காய் ஆயிற்றே!" என்று, முணுமுணுப்பாகக் கூறி உதட்டை வளைத்தான்.

"வேப்பங்காய் எப்படிப் போனால் அவளுக்கென்னடா? சொல்லப் போனால் தொல்லை விட்டதென்ற நிம்மதியடைந் திருக்க வேண்டும்.

பிறகு ஏன் உன்னுடைய நடவடிக்கைகள் பற்றிக் கவலைப்பட்டு, என்னிடம் சண்டை போட வேண்டும்?" என்று கேட்டு, மீண்டும் மர்மமாகவே புன்னகைத்தார் பாட்டி.

"சும்மா விளையாடாதீர்கள் பாட்டி. அவளாவது என்னை நினைத்து உருகுவதாவது. அதெல்லாம் நடக்கிற காரியமா?

இருப்பதெல்லாம் போதாதென்று, நீங்கள் வேறு ஏன் வெறுப்பேற்றுகிறீர்கள்?" என்றான் மனுதர்மன்.

சற்றும் மாறாத முகத்துடன், "விவாதிப்பதைவிட, பரிசோதித்துப் பார்த்தால் உண்மை தெரிந்துவிடப் போகிறது!" என்றார் பாட்டி.

"ம். என் பெண்டாட்டி என் கழுத்தை நெரிப்பதைப் பார்க்க வேண்டும் என்பது, உங்களின் ரொம்ப நாள் ஆசை போலிருக்கிறது. இப்போது போனேன் என்றால், நிச்சயமாக அது நிறைவேறிவிடும். உங்களுக்கு சந்தோஷம்தானே?" என்றான்.

"நெரித்தால் என்ன, தாங்கிக் கொள்ளேன். நீ அறைந்தபோது அவள் தாங்கவில்லை. அதற்கும் இதற்கும், கணக்குச் சரியாகிவிடும். என்னடா, உன் பெண்டாட்டிக் காகவும் பேசுகிறேனே என்று தோன்றுகிறதா. எல்லாம்,

அவளும் என்னைப் போல இந்தக் குடும்பத்தில் வாழ வந்தவள் என்பதால்தான்!" என்றார்.

மனுதர்மன் தங்களின் தனியறைக்குள் சென்ற போது, எந்தவிதக் கோபமும், பரபரப்பும் இல்லாமல், ஒருவித வெற்றுப் பார்வையுடன் தன் உடைகளை எடுத்து, 'கிட் பேக்'கில் அடுக்கிக் கொண்டிருந்தாள் ஜனார்த்தனி.

அவன் எதிர்பாராதது, மனைவியின் கண்களில் இருந்த வெறுமையைத்தான்.

இதே வெறுமையை, ஒரு காலத்தில் அவனும் அனுபவித்தது நினைவு வந்தது. கால்களில் புண்ணாகிற வரை நெடுந்தூரம் நடந்தானே...

அன்றைக்கு அனுபவித்த வேதனையைப் பற்றி, அவனுக்குத்தானே தெரியும்.

அதே வெறுமையான வேதனையையா, இப்போது அவன் மனைவியும் அனுபவித்துக் கொண்டிருக்கிறாள்...

நெஞ்சினுள் ஊடுருவிய வலியை மறைத்துக் கொண்டு,

"எங்கே கிளம்பிக் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டான்.

"என் அப்பா வீட்டிற்கு!" என்று சுருக்கமாகப் பதில் வந்தது.

"ஏன்? அங்கே சென்று அவர்களின் நிம்மதியையும் கெடுக்க வேண்டுமா?" என்றான்.

"சரி. அங்கே போகவில்லை. வேறு எங்கேயாவது கண் காணாத இடத்திற்குப் போய்த் தொலைகிறேன். போதுமா?"



"கண்காணாத இடமா? சரி. எந்த இடமென்று முடிவு செய்துவிட்டுச் சொல். இருவரும் சேர்ந்தே போகலாம்!" என்றான் கணவன்.

"என்ன? என் நிலையைப் பார்த்தால் கிண்டலாக இருக்கிறதா?" என்றாள் ஒரு மாதிரியாக.

"உண்மையாகத்தான் சொல்கிறேன் கண்ணம்மா. நீ இல்லாமல், ஒவ்வொரு கணமும் ரணவலியை அனுபவித்துக் கொண்டிருக்க, நிச்சயமாக என்னால் முடியாது!" என்றான் மனுதர்மன்.

கணவனின் வார்த்தைகளில் இருந்த ஆழமான நேசம், அவன் சொல்வது நிஜமென்று தெரிவிக்க, உள்ளூர ஒருவிதமான உணர்வு தோன்றியது அவளுக்கு!

இருந்தாலுமே... இந்த நிஜத்தை மட்டும் வைத்துக் கொண்டு அவளென்ன செய்யப் போகிறாள்...

எனவே... "ரணவலியா? அதையெல்லாம் அனாவசியமாக ஏன் அனுபவிக்க வேண்டும். அவள் - அந்த ரேஷ்மியைத்தான் 'முக்கியம்' என்றுவிட்டீர்களே... அழைத்து வந்து வீட்டிலேயே வைத்துக் கொள்ளுங்கள்.

எந்த வித வலியும் வராதவாறு, அவள் பார்த்துக் கொள்வாள்!" என்று கூறியவளின் குரலிலே என்ன இருந்தது!

"ம். வீட்டிற்கே அழைத்து வந்துவிடட்டுமா? ரொம்பவும் தாரா...ளம் தான். ஆனால் உன்னுடைய இந்தத் தாராள குணம், ரேஷ்மியின் கணவனுக்கும் இருக்க வேண்டுமே!" என்று சாதுவாகக் கூறினான் மனுதர்மன்.

ஜனார்த்தனியின் இதயத் துடிப்பு படபடவென்று கூடி, கால்கள் வெலவெலத்துப் போகவும், சட்டென்று கட்டிலில் உட்கார்ந்தவள், கணவனைப் பார்த்து,

"அவள், அவளுக்குத் திருமணமாகி விட்டதா?" என்றாள்.

"ம். நம் திருமணத்திற்கு முன்பாகவே!" என்றான்.

மின்னல் கீற்றாகக் கண்களில் ஒரு ஒளி தோன்ற,

"அப்படியென்றால்... உங்கள்... உங்களுக்குள் இப்போது, எது... எதுவுமேயில்லை அப்படித்தானே? சொல்லுங்கள் மனோ?" என்று, உயிரைக் கண்களில் தேக்கி என்பார்களே, அது மாதிரிக் கேட்டாள் அவன் மனைவி.

அவளுக்கு நூறு சதவீத உறுதியிருந்தது. திருமண மான அவளுடன், தன் கணவனுக்குத் தவறான பழக்க மிருக்க வாய்ப்பேயில்லை.

மனோ எக்காலத்திலும், அந்தளவிற்குத் தரம் தாழ்ந்து போய்விட மாட்டான்!

மனைவியின் 'மனோ' என்ற அழைப்பிலேயே அவள் உள்ளம் புரிய, 'இப்போது' மட்டுமல்ல கண்ணம்மா. 'அப்போது' அந்தச் சென்னை சந்திப்பிலும் கூட, எதுவும் நடக்கவில்லை!' என்றான் கணவன்.

கண்களில் ஒளி பல மடங்காகக் கூட, பிரமித்துப் போய்ப் பார்த்தவளின் முகம் பூவாக மாற, நேர்மாறாக வழிந்த கண்ணீருடன், கணவனை நோக்கிக் கைகளை நீட்டினாள் ஜனார்த்தனி!

மறுகணம், கணவனின் இறுகிய அணைப்பிற்குள் இருந்தாள் அவள்!



## 21

மனதின் அழுத்தமெல்லாம் விலகி, இப்போது எவ்வளவு இதமாக இருக்கிறது என்று இருவருக்குமே தோன்றியது.

"இன்னமும் இந்தக் கண்ணீருக்கு, ங்கேயென்ன வேலை?" என்று, கன்னங்களைத் துடைத்து ட்டவனின் கையைப்பற்றி,

"என்னை மன்னித்து விடுங்கள் மனோ!" என்று, னதாரக் கேட்டாள் மனைவி.

அவள் நெற்றியிலே முத்தமிட்டு, "இந்தத் தவிப்பிற் கெல்லாம் அவசியமேயில்லைடா. விட்டுவிடு!" என்றான் னுதர்மன்.

"உங்களை ரொம்பவும் வேதனைப்படுத்திவிட்டேன் இல்லையா? ஆனால் மனோ... நேற்று உங்களையும், ரேஷ்மியையும் ஒன்றாகப் பார்த்தபோது... அப்போது நீங்கள் அவள் கையை இறுகப் பற்றிக் கொண்டு இருந்தீர்கள்.

எனக்கு... எனக்கு எப்படி இருந்தது தெரியுமா?" என்றவளுக்கு, இப்போதும் தொண்டையை அடைத்தது.

"வாழ்க்கையே இருண்டு விட்டதைப் போல இருந் திருக்குமே!" என்றான் கணவன். அனுபவம் போலும்!

வியப்புடன் பார்த்து, "ஆமாம். அப்படித்தான் தோன்றியது. இனி எதுவுமே யில்லை, எல்லாமே தொலைந்து போயிற்று என்ற தாங்கமாட்டாத ஆத்திரத்தில் தான்..." என்றவளை இடையிட்டு.

"என்னை வார்த்தையினாலேயே கிழித்தாயாக்கும்!" என்றவன், கூறு பார்த்துவிட்டாயே. பார்த்தது தான் நேரிடையாகவே என்னிடம் விளக்கம் கேட்க வேண்டியது தானே? நடுரோட்டிலும் கூட, என் சட்டையைப் பிடித்துக் கேள்வி கேட்கிற உரிமை, உன்னைத் தவிர வேறு யாருக்கு இருக்கிறது?" என்றான் கணவனாக.

"ஒருமுறை' உலுக்க வேண்டும் போல் தோன்றவும் தான் செய்தது!" என்றவள், "எதற்கும் கேட்டுப் பார்க்கலாம் என்றுதான், உங்களுக்கு ஃபோன் செய்தேன். அதிலும் ஏமாற்றம் தான் கிடைத்தது!" என்றாள்.

மனைவியின் தலையை வருடி, "தவறாக எதுவுமில்லை என்றாலுமே, 'ரேஷ்மி' என்ற பெயரைக் கேட்டாலே, உனக்குத் தேவையற்ற பழைய விஷய மெல்லாம் நினைவு வந்து, உன்னைக் கஷ்டப்படுத்தி விடுமோ என்று எனக்குப் பயமாக இருந்தது ஜனு. அதனால்தான் சொல்லத் தோன்றவில்லை!" என்று தெரிவித்தான்.

அவளுக்காகப் பார்த்துப் பார்த்து அவன் செய்திருக்க, கடைசியில் அவனை எந்தளவிற்கு நோகடித்து விட்டாள். இவனை மட்டுமா நோகடித்தாள்...

"பாட்டி எவ்வளவு மரியாதையானவர்கள். வயதிலே மூத்தவர்கள். எதையும் யோசிக்காமல், நான் நினைப்பதே சரியென்ற மாதிரி, ரொம்ப...வே கேவலமாக நடந்து கொண்டு விட்டேனே மனோ? அவர்கள் என்னை மன்னிப்பார்களா?

எப்போதுமே, என்மீது பெரிய அபிப்பிராயம் எதுவும் அவர்களுக்குக் கிடையாது. இப்போது... என்னைச்



சுத்தமாகப் பிடிக்காமல் போயிருக்கும் தானே. அவர்கள் முன்னே சென்று மன்னிப்புக் கேட்கிற தகுதி கூட எனக்கில்லையே!" என்று, மிகவும் வருத்தமுடனே கூறினாள் மனைவி.

"முதன்முதலில் நீ இங்கே வந்தபோது, "குட்டி சரியான அடாங்கியாக இருக்கிறாளே. எதற்கும் மீண்டும் ஒருமுறை யோசித்து, இவளேதானா என்று உறுதிசெய்து கொள்!" என்ற சொன்ன அதே பாட்டிதான், நீ இவ்வளவு பேசிய பிறகும், உனக்காக என்னிடம் வாதிட்டார்கள்.

ஆரம்பத்தில் உன் மீது அபிப்பிராயமின்றிப் போன தற்குக் காரணம், 'நீ என்னைக் கஷ்டப்படுத்துகிறாய்' என்ற ஆதங்கத்தில் தான்.

இப்போதுதான் நிலைமையே தலை கீழாக மாறிவிட்டதே! நீ என்ன மனநிலையில் அப்படிப் பேசினாய் என்பது, பாட்டிக்கு நன்றாகவே புரியும்.

அவர்கள் உயர் ஜாதி வைரமென்பதால், நிச்சயம் மன்னிப்பார்கள்!" என்று நம்பிக்கையோடு கூறியவன்,

"அதற்கு முன்பாக, அரக்கத்தனமாக நான் உன்னை அறைந்தேனே. ஒரு கணவன் செய்யக் கூடாத மகா மட்டமான விஷயம். அதற்காகத் தயவு செய்து மன்னித்து விடும்மா. ப்ளீஸ்!" என்றவன், "இன்னமும் சிவப்பாகவே இருக்கிறதே. வலிக்கிறதாடா. மருந்து தடவி விடட்டுமா?" என்று, அவள் கன்னத்தை மென்மையாக வருடியபடி, குரல் கரகரக்கக் கேட்டான்.

இந்த மருந்தே போதும் என்பதுபோல, அவன் உள்ளங்கையிலே இதழ் பதித்தாள் மனைவி.

தென்றலாக நீ வருவாயா!

தனிமையில் உன்னைப் பற்றி நினைத்துக் கொண்டிருப்பது, எவ்...வளவு சுகமான அனுபவம் தெரியுமா. மனதோடு உடலும் சேர்ந்து, எங்கேயோ பறந்து செல்வதைப் போலிருக்கும்.

இதமாகப் புன்னகைத்தபடி நீ அமர்ந்திருந்த அந்த முதல் சந்திப்பை, என்னால் ஒருபோதும் மறக்க முடியாது, கண்ணம்மா!" என்று கூறி, ஒற்றை விரலை நீட்டி, அவளின் முகத்தை நிமிர்த்தி முத்தமிட்டு, வசீகர முறுவலோடு கண் சிமிட்டினான் மனுதர்மன்.

விழிகள் விரியப் பிரமித்துப் பார்த்தாள் அவள்.

"என்னடா! அப்படிப் பார்க்கிறாய்?" என்றான் கணவன்.

"இது... நாம் இருவரும் இப்படியிருப்பதுபோல், ரொம்ப முன்னாலேயே ஒருமுறை எனக்குக் கனவு வந்தது மனோ.

ஒருநாளும் நடக்காத, சற்றும் சம்பந்தமில்லாத இந்தக் கனவு ஏன் வந்தது என்று அப்போது தோன்றியது. ஆனால்... அந்தக் கனவு இப்படி நனவாகும் என்று, ஒரு கணமும் நான் நினைத்ததில்லை!" என்று, புன்முறுவலோடு கூறினாள் அவன் மனைவி.

"ஆஹ்...ஹா! நானும் இந்தளவிற்கு உன்னுள் பாதிப்பை எற்படுத்தியிருக்கிறேன் என்பதைக் கேட்பதற்கே, எவ்வளவு குளிர்ச்சியாக இருக்கிறது தெரியுமா ஜனும்மா!" என்று காதலோடு ஆசை பொங்கக் கூறி, மனைவியின் முகத்தைக் கைகளிலே ஏந்தினான் மனுதர்மன்.

அதே ஆசையும், காதலுமாகக் கணவனைப் பார்த்து, நாணத்தோடு முகம் சிவந்தாள் ஜனார்த்தனி.